
எழிலகம்

# பெரும்பாணாற்றுப்படை விளக்கவுரை



புலவர் கா. கோவிந்தனார்

பத்துப் பாட்டு விளக்கம் - வரிசை - எண் : 3

# பெரும்பாணாற்றுப்படை-

## விளக்கவுரை

ஆசிரியர் :

புலவர் கா. கோவிந்தனார் எம். ஏ.

வெளியீடு :

**எழிலகம்**

46, செல்வ விநாயகர் கோயில் தெரு

திருவத்திபுரம் (செய்யாறு)

604 407.

எழிலகம் வெளியீடு எண் : 18
முதற்பதிப்பு : டிசம்பர் 1996
உரிமை : பதிப்பகத்தாருக்கு

விலை : ரூ. 35-00

ISBN - 81 - 85703 - 17 - 5

வெளியீடு :

**எழிலகம்**
46, செல்வ வினாயகர் கோயில் தெரு
திருவத்திபுரம் (செய்யாறு)
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்
604407

**சென்னை முகவரி :**
17/12, பீட்டர்ஸ் சாலைக் குடியிருப்பு
இராயப்பேட்டை, சென்னை-600014

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம்,
91, டாக்டர் பெசன்ட் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.

# பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டு தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில், நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக, செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக, என பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்,

**புலவர் கா. கோவிந்தனார்** அவர்கள்.

"தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் **அண்ணா** அவர்களால் பாராட்டப் பெற்ற பேறு பெற்றவர், பைந்தமிழ்ப் புலவராய் உயர்ந்து, சங்கத் தமிழ் ஏடுகளிலெல்லாம் திளைத்து, வரலாற்றுக் கண் கொண்டு ஆய்ந்து, தொல்காலத் தமிழர் வாழ்வை இக்காலத்தவரும் தெளிந்திடுமாறு தேன் தமிழ்ச் சுவடிகளாக வரைந்து வழங்கிய பெருமை உடையவர்,

**புலவர் கா. கோவிந்தனார்** அவர்கள்.

புலவர்களுள் பெரும் புலவராய் விளங்கி, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தாரின் **'புலவரேறு'** பட்டம், தமிழக அரசின் **'திரு. வி. க. விருது'**, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் **'தமிழ்ப் பேரவைச் செம்மல்'** பட்டம் போன்ற சிறப்புகளைப் பெற்ற புலவர் அவர்க **தமிழ்ப்பணி** பொன்விழாக் கண்ட பெருமையினையுடை

"என் தமிழ்ப்பணி" என்ற தலைப்பில், புலவர் எழுதிய கடைசி கட்டுரையில், "என் எழுத்துப்பணி தொடரும். குறள் பற்றி, சங்க இலக்கியங்கள் பற்றி பல தலைப்புகளில் நூல் எழுதக் குறிப்பு எடுத்து வைத்துள்ளேன். "கல்வி கரையில, கற்பவர் நாள் சில." காலம் இடம் தந்தால் என் எழுத்துப்பணி தொடரும்" என்று அவர் தம் தமிழ்ப் பணியைத் தொடர வேண்டும் என்ற தணியா ஆவலை வெளியிட்டுள்ளார். ஆனால், காலம் இடம் தரத் தவறி விட்டதனால், முற்றுப் பெறாத நிலையிலே அவருடைய எழுத்துப் பணி எச்சமாகவே நின்று போயிற்று! காலம் செய்த கொடுமை அது!

தமிழால் உயர்ந்து, தம் தமிழ்ப்பணி மூலம் தமிழுக்கும் உயர்வு தேடித் தரும் வகையில், எழுத்துலகம் நினைவு கொள்ளும் வண்ணம் நூற்பணியாற்றிய **புலவர்** அவர்கள், 'செத்தும் பொருள் கொடுத்த சீதக்காதி வள்ளல்' போலத் தம் மறைவிற்குப் பின்னும் தமிழுக்கு அணி செய்யும் வகையில் பல இலக்கியப் படைப்புகளைத் தம் கையெழுத்து வடிவிலே அளித்துச் சென்றுள்ளார்.

அந்த எழுத்துச் சுவடிகளையெல்லாம் அச்சு வடிவில் வெளியிடுவதைத் தன் தலையாய கடமையாக **எழிலகம்** ஏற்று,

**"வள்ளுவர் சொல்லாட்சி மாட்சி"**
**"மனையுறை புறாக்கள்"**

ஆகிய இலக்கிய நூல்களையும்,

**தமிழக வரலாறு—வரிசை** என்ற பெயரில்,
**'தமிழக வரலாறு-சங்க காலம்-அரசர்கள்'**
**'தமிழக வரலாறு-கோசர்கள்'**
**'தமிழக வரலாறு-கரிகாற் பெருவளத்தான்'**

ஆகிய வரலாற்று நூல்களையும் வெளியிட்டுள்ளோம்.

பத்துப்பாட்டு விளக்கம்—வரிசை எண்-2 என நெடுநல்வாடை விளக்கவுரையை 'மனையுறை புறாக்கள்' என்ற தலைப்பில் வெளியிட்ட நாங்கள் இன்று,

பத்துப்பாட்டு விளக்கம் — வரிசை-எண் 3

'பெரும்பாணாற்றுப்படை—விளக்கவுரை'

என்ற இந்த நூலைத் தமிழ்கூறு நல்லுலகத்தின் முன் படைக்கிறோம்.

> "மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
> தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

என்ற புறநானூற்று மொழிகளுக்கேற்ப, புகழுடம்பு பெற்றுவிட்ட புலவர் பெருந்தகை, இறவாத புகழுடைய இலக்கியங்கள் பலவற்றைத் தமிழன்னைக்கு அணி செய்ய அளித்துவிட்டுச் சென்றுள்ளார். புலவர் அவர்களின் முன்னைய படைப்புகளுக்குத் தமிழகத்துப் பெரியோர்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும், ஆதரவையும் தொடர்ந்து அளித்திட வேண்டுகிறோம்.

"தமிழுக்குத் தொண்டு செய்வார் சாவதில்லை" என்றார் பாவேந்தர். தம் வாழ்நாள் முழுவதும், காலம் கரம் பிடித்து அழைத்துப் போன அந்தக் கடைசி நொடி வரை, தமிழ்ப்பணி ஆற்றிய புலவர் அவர்கள் வாழ்வார்; அவர் தமிழ் உலகிற்கு அளித்துச் சென்றுள்ள இலக்கியச் செல்வங்கள் உள்ளவரை என்றென்றும் நிலைத்து வாழ்வார்; தமிழறிந்தோர் நெஞ்சமெல்லாம் நிலைத்து வாழ்வார் என்பது உறுதி!

—எழிலகம் பதிப்பகத்தார்

# முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. "இனிமையாய் இயன்ற இளமகளிர்" என்ற பொருள்பட வந்த "தமிழ் தழீஇய சாயலவர்" என்ற தொடரில் வரும், "தமிழ்" என்ற சொல்லே, இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக் கூறித், தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார், சீவகசிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்கதேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடையவாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள். அவ்வாறே உரைத்தும் வந்தார்கள். செந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாம்.

"உள்ளத்தில் உண்மைமொழி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் ஒரு பெரியார். தமிழர் வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது உண்மை என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் படப்பிடிப்பினைக் காணும் வாய்ப்பினைப் பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம் பெரும் மூதாதையர் தம் பண்பாட்டுப் பெருமையினை, இற்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் மக்கள், ஆயிரம் ஆயிரம் பாக்களைப் பாடிச் சென்றார்கள். ஆனால்

அவர்கள் பாடிச் சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக் காக்கத் தவறி விட்டார்கள்.

விழிப்புணர்வு இருந்தவர்கள். அழிந்தன போக, அழியா திருந்த அப்பழம் பாக்களையெல்லாம் அரிதின் முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்று கூடி இருந்தும், அப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள் வளம், அப்பாக்களின் அடி அளவு ஆகியவற்றை அளவு கோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத் தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம் கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்ட காரணத்தால், அவ்வரிசை யுள் முதற் கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை **"நற்றிணை விருந்து"** என்ற தலைப் பிலும், "நல்ல குறுந்தொகை" எனச் சிறப்பிக்கப் பெற்ற தான குறுந்தொகையினை, **"குறுந்தொகைக் கோவை"** என்ற தலைப்பிலும், ஆறாவது இடம் அளிக்கப் பெற்றது ஆயினும், "கற்றறிந்தார் போற்றும் கலி" என்ற சிறப் பினைப் பெற்றதான கலித்தொகையினைப் **'பாலைச் செல்வி'**, **'குறிஞ்சிக் குமரி'**, **'மருதநில மங்கை'** **'முல்லைக் கொடி'**, **'நெய்தற்கன்னி'** என்ற ஐந்து தலைப்புகளில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

அவ்வெட்டுத் தொகை வரிசையுள் நான்காவதாக நிற்பதும், **'ஒத்த பதிற்றுப்பத்து'** என்ற பாராட்டினைப் பெற்றதுமாகிய பதிற்றுப்பத்தின் விளக்கத்தினை அளிக்க முன் வந்து முதலும் ஈறும் இல்லாமல் போக, இடையில்

எஞ்சி நின்ற எட்டுப் பத்துக்களில் முதல் ஐந்து பத்துக்களை" முறையே, 'புண் உமிழ்குருதி', 'அடு நெய் ஆவுதி', 'கமழ் குரல் துழாய்', 'சுடர்வீ வேங்கை', 'வடு அடும் நுண் அயிர்' என்ற தலைப்புகளில் வெளியிட்டேன். எஞ்சிய பத்துக்களின் விளக்கங்கள் ஏட்டளவாய் உள்ளன. விரைவில் வெளிவரும்.

சங்க இலக்கியப் பாக்களின் தொகுப்புகளாகிய, பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, வரிசையிலே, எட்டுத் தொகையின் சில நூல்களை திறனாய்வு செய்து வெளியிட்ட எனக்கு, அவ் வரிசையில் முதற்கண் வைத்துப் போற்றப்படும் பத்துப் பாட்டுப்பாக்களின் திறனாய்வு செய்ய வேண்டும் என்ற வேட்கை எழுந்தது இயல்பே.

அவ்வேட்கையால் உந்தப்பட்ட நான் 782 அடி முதல் 103 அடி வரை உள்ள அவ்வரிசையுள் அடியளவில் சிறிய தாய "முல்லைப் பாட்டினை", முதற்கண் திறனாய்வு செய்து "முல்லை" என்ற தலைப்பில் கழக வெளியீடாக வெளியிட்டேன். அடுத்து பத்துப் பாட்டுள் ஏழாவதாகத் திகழும் 'நெடுநல்வாடை' பாடல் வரிகளை திறனாய்வு செய்து "மனையுறை புறாக்கள்" என்ற தலைப்பிலும், பத்துப் பாட்டுள் நான்காவதாகத் திகழும் "பெரும் பாணாற்றுப்படை" பாடல் வரிகளை "பெரும்பாணாற்றுப் படை விளக்கவுரை" என்ற தலைப்பிலும் எழிலகம் பதிப்பக வெளியீடாக வெளியிட முன் வந்துள்ளேன்.

என் முன்னைய படைப்புகளுக்கு நல்லாதரவு தந்த, தந்து வரும், தமிழ் கூறு நல்லுலகம் இவற்றையும், இவற்றைத் தொடர்ந்து வரும் பத்துப் பாட்டு வரிசை விளக்கவுரை நூல்களையும் ஆதரித்து ஊக்கம் அளிக்க வேண்டுகிறேன்.

**கா. கோவிந்தன்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | iii |
| | முன்னுரை | vi |
| | பாடிய புலவர் | 2 |
| | பாட்டுடைத் தலைவன் | 6 |
| 1. | புலவர் பண்பாடு | 12 |
| 2. | ஆற்றுப்படை இயல்பு | 17 |
| 3. | திரையன் அளிக்கும் பரிசிற் பெருமை | 33 |
| 4. | போக்கும் வரவும் மிக்க காட்டு வழி | 47 |
| 5. | விருந்து ஓம்பும் எயினர் | 62 |
| 6. | மறவர் வீர வாழ்க்கை | 81 |
| 7. | ஆயர் மகளிர் அறிவும் அன்பும் | 86 |
| 8. | புன்செய் நில உழவர் பெருமை | 98 |
| 9. | வலைஞர் வழங்கும் விருந்து | 118 |
| 10. | தாமரைக்குளம் | 124 |
| 11. | நீர்ப்பாயல் துறைமுகப்பட்டினம் | 133 |
| 12. | தண்டலை உழவர் தரும் விருந்து | 146 |
| 13. | பாம்பணைப் பள்ளியானைப் பரவுக | 153 |
| 14. | திரையன் ஆற்றிய கன்னிப்போர் | 164 |
| 15. | தொண்டை நாட்டு மலை மாண்பு | 190 |
| | இணைப்பு : பெரும்பாணாற்றுப்படை | 194 |

பாடிய புலவர்

## கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பத்துப்பாட்டினுள், பெரும்பாணாற்றுப்படை, பட்டினப் பாலை ஆகிய இரு பாட்டுக்களைப் பாடிய பெருமை பெற்ற புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவர். இவ்விரு பெரும்பாக்களே அல்லாமல் நெடுந்தொகை, குறுந்தொகை ஆகிய இரு நூல்களிலும் ஒவ்வொரு செய்யுள் இவர் பாடியன வாகக் காணப்படுகின்றன. பட்டினப்பாலையினைப் பாடக் கேட்ட திருமாவளவன், இவர் பெருமையறிந்து பதினாறு நூறாயிரம் பொற்காசு பரிசளித்தான் எனப் பாராட்டுவர் கலிங்கத்துப்பரணி ஆசிரியர் சயங்கொண்டார்.

கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாராட்டப் பெற்றோர் தொண்டைமான் இளந்திரையனும் சோழன் கரிகாற் பெருவளத்தானுமாவர். இவ்விருவர் குறித்தும் பாராட்டி எழுந்த பாடல்கள் முறையே பெரும்பாணாற்றுப் படையும், பட்டினப்பாலையுமாம்.

உருத்திரங்கண்ணனாருக்குரிய கடியலூர் யாண்டுளது என்பது தெளிவாகத் தெரிந்திலது. கடியலூர், பாண்டி நாட்டு ஊர்களுள் ஒன்று; அது திருநெல்வேலி மாவட்டத் தில் உளது என்பர் சிலர். இவரால் பாடப் பெற்றோர் இரு வரும் சோணாட்டினும், அதற்கு வடக்கின் கண்ணதாய தொண்டை நாட்டினும் அரசோச்சியராதலின், உருத்திரங் கண்ணனார் சோணாட்டைச் சேர்ந்தோராவர் எனக் கூறுவர் வேறு சிலர். அவர் எந்நாட்டினராயினும், சோணாட்டின் இயல்புகளைச் சிறக்க அறிந்தவர் என்பது அவர் பாடல்களால் புலனாகும்.

உருத்திரங்கண்ணனார், உருத்திரன் என்பாரின் மகனா வர். இவர் அந்தணர். இது, "ஊரும் பேரும்"

என்ற தொல்காப்பியம் மரபியற் சூத்திரத்திற்கு உரை கண்ட பேராசிரியர், "கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்கு உரியன" எனக் கூறுவதால் தெளிவாம். "இரு நிலம் கடந்த திருமறுமார்பின் முந்நீர் வண்ணன்" எனத் திருமாலையும், "காந்தளம் சிலம்பில், களிறுபழந்தாங்குப் பாம்பணைப்பள்ளி அமர்ந்தோனாங்கன்" என திருவெஃகாவையும், "நின்ற வுருவின் நெடியோன் கொப்பூழ், நான்முக ஒருவற் பயந்த பல்லிதாழ்த் தாமரைப் பொருட்டு" என திருமாலின் திருவுந்திக் கமலத்தையும் பாராட்டியிருத்தலின், அவர் திருமாலை வழிபடும் சமயத்தினராவர் எனக்கோடல் பொருந்தும்.

"திரையன், திருமாலை முதல்வனாகக் கொண்ட குடியிற்பிறந்தவன்; திரைதருமரபின் வழி வந்தவன். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு நாடாண்டவன். வேள்வி வேட்கும் அந்தணர்கள் நிறைந்த வேங்கடமலையும் அவன் ஆட்சிக்குப்பட்டதே. தொண்டையர் குடிவந்தவன்" என **இளந்திரையன்** வரலாறு பற்றிய குறிப்புகளை அளித்துள்ளார்.

**"திரைதரு மரபின் உரவோன் உம்பல்"**

**"அல்லது கடிந்த அறம்புரி செங்கோல் பல்வேல் திரையன்"**

**"கச்சியோனே கைவண் தோன்றல்"**

**"தொண்டையர் மருக"**

—பெரும் பாணற்றுப்படை-(29-37; 319-420; 498-500; 450-454)

திருமாவளவன் சிறையினின்றும் வெளிம்போந்த நிகழ்ச்சியும், அவன் ஒளியர், அருவாளர், ஆகியோரை அடக்கியதும், நாடு வளம் பெறச் செய்ததும், கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் பட்டினப்பாலையில் விளங்க உரைக்கப்பட்டுள்ளன.

நீரில்வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
... ... ... ... ... ...
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு.

—பட்டினப்பாலை-185-193

புகார்த்துறையில், உரிய சுங்கத்தினைப் பெற்றுப் பெறப்பட்ட பொருள்கள் மீது, பெற்றதற்காம் அறிகுறி யாகத் தங்கள் அரச இலாஞ்சனையாகிய புலியைப் பொறித்துப் போகவிடுவர் என பட்டினப்பாலையிலும், உள்நாட்டுப் பெருவழிகளில் வண்டிகளில் கொண்டுவரப்படும் பொருள்கள் மீது சுங்கம் கொண்டனர் என பெரும் பாணாற்றுப்படையிலும் அக்கால அரசர்கள் மேற்கொண்ட நடைமுறைகளை புலப்படுத்தியுள்ளார்.

உல்கு செயக் குறைபடாது
... ... ... ... ... ...
புலிபொறித்துப் புறம்போக்கி

—பட்டினப்பாலை-120-135

''அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழி''

—பெரும்பாணாற்றுப்படை-79-82.

சோணாட்டின் செழிப்புக்குக் காரணமான காவிரியை, அதன் பிறப்பிடம் கூறிப் பாராட்டும் புலமை நலம் போற்றற்குரியது.

''வான் பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்''

—பட்டினப்பாலை-5-7

கடியலூர் உருத்திரங்கண்ணனார் புலமை நலம் சான்ற பெரியராவர். அவர் பாக்கள் அரிய நயம் பல செறிந்து தோன்றும். அவர் எதைக் கூறினும் ஏதேனும் ஓர் அரும்பொருளை உள்ளடக்கியன்றிக் கூறார். அவர் அழகிய உவமைகளை எடுத்து ஆளவேண்டிய இடம் அறிந்து ஆளும் அறிவினராவார்.

"முழவின் அன்ன முழுமா உருளி"

—பெரும்பாணாற்றுப்படை-47

தான் தனித்திருக்கப் பொருள் தேடிப்போன தலைவனை, பகற்காலமெல்லாம் தான் வாழ்ந்திருந்த மரத்தைத் தனியேவிட்டு பழந்தேடிப்போகும் வௌவாலோடு ஒத்திட்டு, கணவனைப் பிரிந்திருக்கும் தலைவி கூறுவதுபோல உருத்திரங்கண்ணனார் இயற்றியப் பாடல் ஒன்று குறுந்தொகையுள் இடம் பெற்றுள்ளது.

"பகல் உறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுள் மாலை..."

—குறுந்தொகை-352.

பொருள் தேடிப்போகும் தலைவன் கூற்றாக அமைந்த பாடல் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

வயங்குமணி பொருத வகையமை வனப்பிற்
... ... ... ... ... ... ...
போர்மடி நல்லிறைப் பொதியி லானே.

—அகம்-167

## பாட்டுடைத் தலைவன்

# தொண்டைமான் இளந்திரையன்

தமிழ் நாடாண்ட பேரரசர் மூவரோடும் ஒருங்கு வைத்து மதிக்கத்தக்க மாண்புடையான் திரையன்; பட்டினப்பாலை பாடித் திருமாவளவனைப் பாராட்டிப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் பெற்ற பெரும் புலவராய கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாராட்டப் பெறும் பெருமை உடையவன் திரையன். அவன் வெற்றி தரும் வேற்படையுடையான்; வேங்கட நாடாண்ட விழுச்சிறப்புடையான்; அழியாப் புகழ் உடையான்; அழகிய அணிகலன் அணிந்த ஆண்மையாளன்; பூஞ்சோலை பல சூழ்ந்த பவத்திரி எனும் ஊர் உடையான் எனப் பிற புலவர்களும் அவனைப் பாராட்டியுள்ளனர்,

> **''வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை''**
>
> —அகம்-85

> **''செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்**
> **பல்பூங்கானல் பவத்திரி''**
>
> அகம்-240

திரையன் ஆண்ட நாடு, நிலவளம், நீர்வளம், மக்கள் வளம், மண்வளம் ஆய, வளம் பல பெற்று விழுமிய நாடாக விளங்கிற்று. தொண்டை நாட்டு மக்கள், இயல்பாகவே, நல்லறிவும், நற்பண்பும் உடையராவர். நாட்டு மக்கள் நல்லோராய் வாழ்வதற்கு அந்நாட்டு நல்லாட்சியே காரணமாம். திரையன் நாட்டு மக்கள் மனவளம் மிக்க மாண்புடையராதற்குத் திலரயன் ஆட்சி நலனே காரணமாம்.

"நண்ணார்
செறிவுடைத் திண்காப்பு ஏறிவாள் சுழித்து
உருகெழுதாயம் ஊழின் எய்தி"

—பட்டினப்பாலை-220-227

பல்ஒளியர் பணிபொடுங்கத்
தொல் அருவாளர் தொழில்கேட்ப
வடவர் வாடக், குடவர் கூம்பத்
தென்னவன் திறல் கெட
... ... ... ... ... ...
இருங்கோ வேள் மருங்குசாய"

—பட்டினப்பாலை 274-82

கடியலூர் உருத்திரங்கண்ணனார், தொண்டைமான் இளந்திரையனையும், கரிகாற்பெருவளத்தானையும் பாட முற்பட்டுத் தமிழ்நாட்டின் இயற்கை வளமும், செல்வ வளமும் ஒருங்கே விளங்கப் பாடியுள்ளார். அந்தணர், ஆயர், உமணர், உழவர் முதலாம் உள்நாட்டு மக்கள் குறித்தும், பரதவர் வணிகர் முதலாம் கடற்கரை நகர்வாழ் மக்கள் குறித்தும் அவர் கூறுவன அக்காலத் தமிழ்நாட்டு நிலையினைத் தெளிய உணரத் துணைபுரிவனாம்.

"வளைவாய்க் கிள்ளை மறைவினி பயிற்றும்
மறை காப்பாளர் உறைபதி"

—பெரும் பாணாற்றுப்படை-300-301.

"நெய்விலைக் கட்டிப் பசும்பொன்கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலக்குடி"

—பெரும் பாணாற்றுப்படை-163-66

சங்கத் தமிழர்களின் கடல் வாணிகத்தின் சிறப்பை பட்டினப்பாலையில் படம் பிடித்துக் காட்டுகிறார்.

திரையன், அல்லன கடிந்து நல்லன ஓம்பும் அறநெறி அறிந்தவன்; அதனால், அந்நாடு அரசரான் அழிவுறுவ தில்லை. திரையன் நாடு காவல் செறிந்த நாடு; அதனால், வழிப் போவாரை வருத்தி, அவர் கைப்பொருளைக் கவர்ந்து செல்லும் ஆறலை கள்வரை அந்நாட்டில் எங்கும் காணல் அரிது. அவன் அறம் விரும்பும் பெருங்கோலன்; அதனால், அவன் நாட்டு மக்களை, இடியும், இடித்துத் துயர் தருவதில்லை. பாம்புகளும் பிறரைக் கடித்துத்துயர் செய்யா. காட்டு வாழ் புலி முதலாம் கொடு விலங்குகளும், மக்களுக்குக் கொடுமை செய்வதில. அதனால், அவன் நாடு நோக்கி வரும் பதியோர், தாம் வேண்டும் இடத்தே வேண்டியாங்கு இருந்து இளைப்பாறிச் செல்வர். என்னே அவன் நல்லாட்சி!

**அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்**
**பல்வேல் திரையன் படர்குவி ராயின்**
**... ... ... ... ... ... ...**
**வேட்டாங்கு**
**அசைவழி அசைஇ, நசைவழித் தங்கிச்**
**சென்மோ''**

பெரும்பாணாற்றுப்படை—39-45

நாடு நலமெலாம் பெற்று நனி சிறந்து விளங்க நாடாண்ட நல்லோனாய திரையன் வரலாற்றினை விளங்க உணரும் வாய்ப்பு வாய்த்திலது; அவன் நாடு, அந்நாட்டு வளம், அவன் ஆட்சித்திறம் ஆகியவற்றை விளங்க விரித் துரைத்த புலவர்களும், அவன் வரலாற்றினை விரித்துரைத் தாரல்லர்.

திரையன் திருமாலை முதல்வனாகக் கொண்ட குடியிற் பிறந்தவன்: திரைதரு மரபின் வழிவந்தவன்; திரையன் எனும் பெயருடையான்; சேர, சோழ பாண்டியர் மூவரினும் சிறந்தவன்; கடலிற் பிறந்த வளைகள் பலவற்றுள்ளும் வலம்புரிச் சங்கு சிறந்ததாதல் போல், அரசர் அனைவரினும்

*சிறந்தவன்; அல்லது கடிந்து அறம் விளங்க நாடாண்டவன். வேற்படை பல்வுடையான்.*

**இருநிலம் கடந்த திருமறு மார்பின்**
**முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்**
**திரைதரு மரபின் உரவோன் உம்பல்;**
**மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும்**
**முரசுமுழங்கு தானை மூவருள்ளும்**
**இலங்கு நீர்ப்பரப்பின் வளைமீக் கூறும்**
**வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்**
**அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்**
**பல்வேல் திரையன்''**

*பெரும்பாணாற்றுப்படை*—29-37

*நீர்ப் பேர் எனும் பெயருடையதொரு பேரூர் இவனுக்கு உரித்து. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு காவல் மேற் கொண்டவன்.*

**''நீர்ப் பெயற்று எல்லை போகி''**

—*பெரும் பாண்*-319

**''கச்சியோனே கைவண் தோன்றல்''**

—*பெரும் பாண்*-420

*யானைகள் கொணரும் விறகினால் வேள்வி வேட்கும் அந்தணர் நிறைந்த வேங்கட மலையும் அவன் ஆட்சிக்கு உட்பட்டதே.*

**''செந்தீப் பேணிய முனிவர், வெண்கோட்டுக்**
**களிறுதரு விறகின் வேட்கும்**
**ஒளிறிலங்கு அருவிய மலைகிழ வோனே''**

—*பெரும் பாண்*-498-500

பகைவர் பணிந்து திறைதர முன்வரினும் அதை ஏற்றுக் கொள்ள எண்ணாராய், அவரை அழித்து அவர் பொருள் அனைத்தையும் கைப்பற்றி உண்ணும் ஆற்றல் வாய்ந்தவர்.

''பகைவர், கடிமதில் எறிந்து குடுமிகொள்ளும்
வென்றியல்வது, வினையுடம் படினும்,
ஒன்றல் செல்லா, உரவுவாள் தடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக''

—பெரும் பாண்-450-54

தன் பாட்டுடைத் தலைவன் திரையன் வரலாறாகக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுவன இத்தனையவே.

திரையன் வரலாறு குறித்துப் பல்வேறு கருத்துக்களைக் கூறுவர் ஆராய்ச்சியாளர். "நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாக கன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வேன் என்ற பொழுது, தொண்டையையே அடையாள மாகக் கட்டிக் கடலிலேவிட, அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பன் என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரை தருதலின் திரையன் என்று பெயர் பெற்றான்'' என நச்சினார்க்கினியர் கூறும் செய்திகளை ஏற்றுக் கொண்டு, அச் சோழன் கிள்ளி வளவனாவன், நாககன்னி பீலிவளையாவள் என்று கொள்வர் சிலர்.

பல்லவன், அசுவத்தாமனுக்கும், மதனி என்ற அரமகள் ஒருத்திக்கும் பிறந்தவனாவன்; அசுவத்தாமன் துரோணரின் மகன்; துரோணர், கங்கை, நீரிற் பிறந்தவளாய 'க்ருதாசி' என்ற நீரரமகளுக்கும், பாரத்வாஜ முனிவருக்கும் பிறந்தவர். இதனால், பல்லவர், திரைதரு மகளிர் மரபினராதல் தெளி வாம்; இப் பல்லவரைக் குறிக்க வழங்கும் **தொண்டையர்** என்ற பெயரின்கண் வரும் தொண்டை என்ற சொல்

துரோணர் என்ற சொல்லின் மரூஉ முடிபாம் என்று கூறித் திரையன் வரலாறு குறித்து நச்சினார்க்கினியர் கூறியதை மறுத்து வேறு கூறுவர் சிலர்.

தொல்காப்பிய மரபியலில் 83-ஆம் நூற்பாவின் உரையிற் பேராசிரியர் "மன் பெறு மரபின் ஏனோர் எனப் படுவார் அரசுபெறுமரபிற் குறுநில மன்னர் எனக் கொள்க: அவை பெரும் பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளும் காணப் படும்" என எழுதியுள்ளமையால் தொண்டையர் நம் பண்டை மரபினர் எனக் கொள்ளலாம்.

பெரும்பாணாற்றுப்படைத் தலைவனாகிய திரையன் மன்னன், வீரன், வள்ளல் என்னும் சிறப்புக்கள் மட்டுமன்றி, பாடல் இயற்றும் திறன் பெற்ற காவல பாவலனாகவும் திகழ்ந்தான். அவன் பாடிய பாடல்கள் நற்றிணையில் மூன்றும், புறநானூற்றில் ஒன்றும் (புறம் 183) இடம் பெற்றுள்ளன.

# பெரும்பாணாற்றுப்படை

## விளக்கவுரை

## 1. புலவர் பண்பாடு

"பண்புடையார் பட்டு உண்டு உலகம்" என்றார் வள்ளுவர். (குறள்-996) "தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையான் உண்டால் அம்ம! இவ்வுலகம்" என்றான் பாண்டி நாடாண்ட பாவல்ல காவலன் ஒருவன். (புறம்-182) அத்தகைய பண்பாடறிந்த பெரியார் பலர் பண்டு வாழ்ந்திருந்தமையால் நம் பைந்தமிழ் நாடு இன்றும் பெருமை குன்றாமல் நின்று வாழ்கிறது. அப் பண்பாட்டு நெறியைப் போற்றி வளர்த்தவர்கள் நம் பைந் தமிழ்ப் புலவர்கள். அத்தகைய புலவர்களுள் ஒருவர்பால் கண்ட பண்பாடு இது:

வெள்ளை நூலை விரித்து வைத்தாற்போல் நரைத்து முதிர்ந்த தலை; கையிற் கொண்ட கோலே காலாக, அடி மேல் அடியிட்டுப் பையப் பைய நடக்கும் தளர்ச்சி. மனை யின் முன்புறத்தையும் அறிந்து செல்லமாட்டாதபடி மாசடைந்து பார்வை இழந்த கண்கள். உடலும் உள்ளமும் தளர்ந்து போகவும் உயிர் போகாமை கண்டு, 'இவ்வளவு

காலம் வாழ்ந்தேன்; இன்னமும் உயிர் போகவில்லையே!' என்று வாழ்நாளை வெறுக்கும் வாய். பெற்றெடுத்த பெருமைக்குரிய தாயின் நிலை இது.

"வாழும் நாளோடு யாண்டுபல உண்மையின்
தீர்தல் செல்லாது என் உயிர் எனப் பலபுலந்து,
கோல் காலாகக் குறும்பல ஒதுங்கி
நூல் விரித்தன்ன கதுப்பினள், கண்துயின்று
முன்றில் போகா முதர்வினள் யாய்."

(புறம் 159)

வறுமைத் துன்பத்தால் வாடிய மேனி. இளம் மகவு இடைவிடாது உண்டு உண்டு உலர்ந்து போன கொங்கைகள். குப்பைமேட்டில் தாமே முளைத்திருக்கும் கீரைத் தண்டுகளில், முன்பு கொய்த இடத்தில் தளிர்த்த புதிய தளிர்களைக் கொய்து வந்து, உலையில் உப்பு இடாமல் இட்டு ஆக்கிய கீரையல்லது, சோறும் மோரும் காணா உணவு. அழுக்கேறி அளவின்றிக் கிழிந்து போன ஆடை; தன்னையும் தன் குடும்பத்தினரையும் வறுமையில் வாடவிட்ட தெய்வத்தை வைது கொண்டேயிருக்கும் வாய். மனைக்கு மங்கலமாய் மாட்சி தர வந்த மனைக் கிழத்தியின் நிலை இது.

"பசந்த மேனியொடு படரட வருந்தி,
மருங்கில் கொண்ட பல்குறுமாக்கள்
பிசைந்து தினவாடிய முலையள், பெரிது அழிந்து
குப்பைக்கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்து கொண்டு உப்பின்று
நீர் உலையாக ஏற்றி, மோர் இன்று
அவிழ்பதம் மறந்து, பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த உடுக்கையள், அறம்பழியாத்
துவ்வாளாகிய என் வெய்யோள்".

(புறம் 159)

உண்பொருள் எதுவும் இன்மையால் வீட்டை மறந்து வெளியிடங்களிலேயே அலைந்து திரிவதால் மயிர் உதிர்ந்து காய்ந்து போன தலை, ஒரோவொருகால் வீட்டிற்கு வருங் கால் கூழும் சோறும் வேண்டிக் கூப்பாடு போடும் ஓயா அழுகை. அழுகை ஓய்ந்து அறைதனுள் அடுக்கிவைத்திருக்கும் கலங்களை ஒவ்வொன்றாகத் திறந்து நோக்கி, எதிலும் எதுவும் இன்மை கண்டு கலங்கி நீர் சொரியும் கண்கள். தன் அழுகையை அடக்க வேண்டி, 'புலி புலி' என அச்சங்காட் டியும், அம்புலி அழைத்து அன்பு காட்டியும் அழுகை ஓயா தாக, மனம் நொந்து 'மைந்த' வருந்தும் உன் முகத்தைத் தந்தை வந்தால் அவர்க்குக் காட்டு'' என்று கூறி வெறுக் கினும் தாய் முகமே நோக்கும் நோய் நோக்கு. பொன்போற் புதல்வன் எனப் போற்றத் தகும் புதல்வன் நிலை இது.

''இல் உணாத் துறத்தலின் இல் மறந்து உறையும்
புல் உளைக்குடுமிப் புதல்வன் பன்மாண்
பால்இல் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழும் சோறும் கடைஇ ஊழின்.
உள்இல் வறுங்கலம் திறந்து அழக்கண்டு
மறப்புலி உரைத்தும் மதியம் காட்டியும்
நொந்தனளாகி நுந்தையை உள்ளிப்
பொடிந்த நின் செல்வி காட்டென,''

(புறம் 160)

இவ்வாறு வறுமையின் வாழிடமாய்க் காட்சி அளித்தது பழந்தமிழ்ப் புலவர் ஒருவரின் இல்லம். ஆனால், அந்நிலை நெடிது நிற்கவில்லை. புலமையின் பெருமையறிந்து வாரி வழங்கவல்ல வள்ளல் ஒருவனைச் சென்று கண்டார் புலவர். அவன் புகழைப் பாடிப் பாராட்டினார். குன்றத்தனை இரு நிதியைக் கொடுத்துப் புகழ் கொண்டான் அக்கொடையாளி. இல்லாமையின் இருப்பிடமாய் இருந்த புலவர் இல்லம் பொன்னாலும் பொருளாலும் நிறைந்து விட்டது.

பெருஞ் செல்வம் பெற்ற அந்நிலையில், "இத்துணைக் காலம் வறுமையில் கிடந்து உழன்றோம். இறுதியில் கிடைத்தது இப் பெருவளம் இது தொலைந்து விட்டால் இது போலும் இருநிதியை மீண்டும் எய்துவது எக்காலமோ? ஆகவே, இதை நம் வாழ்நாள் வரையும் வைத்து வயிறார உண்டு நாமே வாழ வேண்டும்" என்று போக்கில் போகவில்லை புலவர் உள்ளம். மாறாக மனைக்கிழத்தியை அழைத்தார், அம்மாநிதிப் பெருக்கத்தை அவளுக்குக் காட்டினார். காட்டிய பின்னர் "பெண்ணே! இவ்வளவும் நம் உடைமைகள்தாம். ஆனால் இவற்றை நாம் மட்டுமே தனித்திருந்துண்ண எண்ணல் கூடாது. வறுமையில் கிடந்து உழன்று உழன்று, வறுமை நோய் எத்துணைக் கொடிது என்பதை அறிந்திருக்கிறோம் நாம். அவ் வறுமையில் கிடந்து உழல்வோரையே மிகப் பலராகக் கொண்டது இம் மண்டிலம். அவர்கள் எல்லோரும் வருந்த நாம் மட்டும் வளமார் வாழ்வில் வாழ்வது முறையாகாது ஆகவே, வல்லாங்கு வாழ்த்தும் என எண்ணாது, எல்லார்க்கும் நீயும் கொடுப்பாயாக! என்று கூறிக் கொடையுரிமையை அவர்க்கும் கொடுத்துத் தாமும் கொடையாளியாகிப், புலமையோடு, குன்றாக் கொடைப் புகழையும் ஈட்டிக் கொண்டார். பழந்தமிழ்ப் புலவர்களின் பண்பாடு இது.

**"இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ்சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி, மனைகிழவோயே!"**

(புறம் 163)

அப்பண்பார் நெறியில் வந்தவர் பெரும்பாணாற்றுப்படை பாடிய புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், காஞ்சியாண்ட காவலன் திரையனைக் கண்டார். அவன் அவர் பெருமையறிந்து பாராட்டிப் பரிசு பல அளித்தான். அவன் கொடுத்த பொருட் குவியலால் அவன் கொடைவளத்தைக்

கண்டு கொண்ட புலவர், அவன் ஆளும் தொண்டை நாட்டைச் சுற்றிப் பார்த்து, அந்நாட்டு வயல் வளத்தையும், அவ்வளம் பெருகத் துணை புரியும் திரையன் செங்கோல் நலத்தையும் நேரிற் கண்டு கொண்டார். பொன்னும் பொருளும் அளித்துப் புலவர்களைப் புரக்கும் திரையன் பெருமையையும் பாராட்ட வேண்டும். அத்தகைய வள்ளி யோன் ஒருவன், வருவார்க்கு வழங்கத் தன் வாயிலைத் திறந்து வைத்துக் கொண்டு காத்துக் கிடக்கவும், அதை அறிந்து கொள்ள மாட்டாமையால் வறுமையிற் கிடந்து வாடும் புலவர்களுக்கு அவன் இருப்பதை நினைவூட்டி, அவர் களை அவன்பால் போக்கி அவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற பேருள்ளம் கொண்டார். அவ்விரு பெரும் வேட்கைகளின் விளைவால் உருப் பெற்றதே பெரும் பாணாற்றுப்படை. அஃதனால், திரையன் பெருமை பார் உள்ளளவும் அழியா நிலை பெற்றதும், புலவர்களின் வறுமைத் துயர் வாடியதும் ஒருபுறம் இருக்க, தமிழர்க்குத் தன்னேரில்லா இலக்கியக் கருவூலம் ஒன்றும் கிடைத்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய தொண்டை நாட்டு நலங்களை, இன்றும் என்றும் நேர் நின்று காணத் துணை புரியும் ஒரு தொலை நோக்கிக் காலக் கண்ணாடி, தமிழர் களின் அறிவுக் கண்களில் கிடந்து அணி செய்யும் பெறற்கரிய பேறும் வாய்ந்துளது.

# 2. ஆற்றுப்படை இயல்பு

திரையன் புகழ் பாடவும், தம்போலும் புலவர் பல்லோர்க்கு வாழும் நெறிகாட்டவும் ஒரு சேர விழைந்த புலவர், தாம் திரையனைக் கண்டது, அவன் பொருள் வழங்கியது, ஆகிய நிகழ்ச்சிகளை, அப்புலவர்க்குத் தாமே கூறுவது அத்துணை நயம் பயப்பதாகாது என்று எண்ணி னார் போலும்! அதனால், புலவர் புதுவழி ஒன்றை வகுத்துக் கொண்டார். புலவர் கண்ட அப்புது வழிக்கு ஆன்றோர் இட்டு வழங்கிய பெயரே ஆற்றுப்படை.

பண்டைத் தமிழகத்தில் பாக்கள் புனைந்து, பாராண்ட காவலரை நாவார வாழ்த்தியதோடு பைந்தமிழ் வளர்க்கும் பெரும் பணியும் புரிந்து வந்த புலவர்களே யல்லாமல், ஆடியும் பாடியும், அரசர்களையும் அவர் தம் குடிமக்களையும் மகிழ்வித்ததோடு ஆடல்பாடல்களாகிய அருங்கலைகளை அழியவிடாமல் பேணிப்புரக்கும் பெருந் தொண்டும் புரிந்துவந்த பாணர் பொருநர் கூத்தர் போலும் இரவலர்களும் வாழ்ந்து வந்தனர். இவர். தம் ஆடல் பாடல் களைக் கண்டும் கேட்டும், மன்னர்களும் மக்களும் மகிழ்ந்து வழங்கும் பொன்னும் பொருளுமல்லது, இவர்களுக்கு வாழத் துணை புரியும் விழுநிதி வேறு கிடையாது. புலவர்களைப் போலவே நாடு பல புகுந்து ஆங்காங்கு ஆட்சி மேற் கொண் டிருக்கும் அரசர்களையும் அரசர் நிகர் செல்வர்களையும் கண்டு பரிசில் பெற்றுத் தம் வறுமையைப் போக்கிக்

கொண்டு தம் வறுமை தீர்ந்ததும், பிறரைப் பற்றிய கவலை யற்று அடங்கி விடாது, தமக்குப் பொருள் அளித்த புரவலனை வறுமையால் வாடும் தம்போல்வார் பிறர்க்கும் அறிமுகம் ஆக்கி, அவர்களை அவன்பால் போக்கும் பெரும் போக்கினராய் வாழும் பெருமை அவர்பாலும் பொருந்தி யிருந்தது.

இரவலர்களின் இவ்வியல்பை அறிந்தவர் புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். அதனால் இவ்விர வலருள் இருபத்தொரு நரம்புகளைக் கொண்ட பேரியாழ் இசைக்கவல்ல பெரும்பாணர் குடியில் வந்தான் ஒருவனைத் தேர்ந்து அவன் வாய் வழியாகத் திரையனை அவன் சென்று கண்டது போலவும், திரையன் அவனுக்குப் பொருள் வழங் கியது போலவும், அப்பொருவளத்தோடு வீடு நோக்கி வருங் கால், வழியில் வறுமையால் வாடும் தன் இனப் பிறிதொரு பாணன் சுற்றத்தோடு எதிர்பட, அவனுக்குத் திரையனை அறிமுகம் செய்து, அவனை அவன்பால் போக்கியதாகவும், அவ்வாறு போக்கும் வகையால் திரையன் நாட்டுப்புரையில் பெருமைகளை முறையே எடுத்து மொழிந்தது போலவும், ஐந்நூறு வரிகளைக் கொண்ட இப்பாடலைப் பாடி முடித் தார். அதனால், இது பெரும்பாணாற்றுப்படை எனும் பெயர் பெறலாயிற்று.

> "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
> சென்று பயன் எதிரச் சொன்னபக்கமும்."
>
> —தொல் புறத்திணையியல் பாடாண்திணை

## 2-1 பேரியாழ் பண்பு

தமிழகத்தின் வடவெல்லை நாடாக விளங்கிய தொண்ட நாட்டைக் கச்சியைத் தலைநகராகக் கொண்டு

காத்து வந்தான் திரையன், அவன்பால் பரிசில் பெற்றுத் தன் ஊர் நோக்கி வந்து கொண்டிருந்தான் பெரும்பாணன் ஒருவன். அவ்வாறு வருவோன் இடைவழியில் தன்போலும் பாணன் ஒருவன், பசியால் வருந்தும் பெரிய சுற்றத்தாரோடு தளர்நடையிட்டு வருவதைக் கண்ணுற்றான். பாணர் குடியில் வந்தவனாதலின் அவன் கண்கள் எதிரே வரும் பாணன் கையில் இருந்த யாழ்மீதே முதற்கண் சென்றன. யாழ் இசைக்கும் குடியில் வந்து, யாழின் இயல்பெல்லாம் அறிந்திருந்தவனாதலின், அவ்வியாழின் பல்வேறு உறுப்புக்களின் அமைதியை நோக்கினான். அதிலும் வருவோன் வைத்திருப்பது யாழ்வகையுள் சிறந்ததான பேரியாழ். ஆகவே, அதன் ஒவ்வோர் உறுப்பையும் தனித்தனியே ஊன்றி நோக்கி, அவற்றின் அமைதியின் அழகை அறிந்து மகிழத் தலைப்பட்டு விட்டான்.

யாழ் வல்லான் பெருமை, அவன், அவ்வியாழைப் பேணி வைத்திருக்கும் வகையினாலேயே புலனாகும். யாழின் அருமை அறிந்தவன் அப்பெரும்பாணன் அதனால் காட்டு வழியில், யாழிற்குச் சிறுகேடும் நேராவாறு காப்பதில் பெரு விழிப்புடையவனாய் விளங்கினான். யாழ் மரத்தைத் தோலால் ஆன போர்வையால் நன்றாக மூடியிருந்தான். பரிசில் பெற்று வரும் பாணன் கண்களுக்கு முதற்கண் அத்தோற் போர்வையே தென்பட்டது. மேலும் தொலைவில் வந்து கொண்டிருந்த அவன் கருத்தை, அவ்வியாழ் நோக்கி ஈர்த்தது, அப்போர்வையின் கண்ணொளிக் கெடுக்கும் செந்நிறம். அவன் கண்களைக் கூசப்பண்ணி வியப்பிற்குள்ளாக்குமளவு சிவந்து விளங்கிய அச்செந்நிறம், அதைக் கண்ணுற்ற பாணனுக்கு வந்த வழியில் மலர்ந்து கிடந்த பாதிரி மலரை நினைப்பூட்டிற்று. பாதிரிப்பூவைப் பிளந்தால், அதன் உள்ளகம் காட்டும் செந்நிறத்தையொத்திருந்தது, அத்தோற்போர்வைக்கு ஊட்டப்பட்டிருந்த செந்நிறம்.

தோலின் செந்நிறத்திற்கு உவமை காணும் முகத்தான் பாதிரிமலரை நினைந்து கொண்ட பாணன் கருத்தில், பாதிரி மலரும் வேனிற்பருவம், வளமான மலர்களை வேனிற் பருவத்தில் மலர்வான் வேண்டி, அப்பருவம்வரும் முன் பாதிரி தன் இலைகளை உதிர்த்து விடுவது, தொடக்கத்தில் இலை களை உதிர்த்துக் கேடு செய்வது போல் தோன்றிப், பின்னர் மணமும் மனம்மகிழும் நிறமும் உடைய மலர்களை மலர்த்தும் மாண்புமிக்க வேனிலுக்கு வெம்மை ஊட்டும் வெய்யில், அவ்வெய்யிலைக் காலும் ஞாயிறு, வெய்யிலால் வெம்மை ஊட்டிக் கொடுமை புரிவதுபோல், தோன்றினும், உலகோர் வெறுக்கும் இருளைப் போக்கி, விரும்பி வர வேற்கும் ஒளியை அளிக்கும் ஞாயிற்றின் பெருமை, அஞ்ஞாயிறு உலாவரும் வான்வெளி, அவ்வெளியின் பரப்பும் அகலமும், இலைகளை உதிர்ப்பதும் இருளை ஒழிப்பதுமாகிய அழிவுத்தொழில் மேற்கொண்டு கொடுமையுடையதுபோல் தோன்றினும், அத்தொழில்களைத் தொடர்ந்து மலர்களை மலர்த்துவதும், ஒளியைத் தருவதுமாகிய ஆக்கத்தொழில் மேற்கொண்டு நல்லனவே புரியும் தன்னாட்டு இயற்கை களாகிய வேனிலும் ஞாயிறும் போலவே, கொடுங்கோல் கொன்று செங்கோல் வளர்க்கும் திரையன் ஆட்சி நலம் ஆகியவைகளை நினைப்பூட்ட, அந்நினைவலைகளால் சிறிது நேரம் அசைவற்றிருந்தான். இத்தனை எண்ணக் கோர்வை கள் எழுதற்குக் காரணமாயிருந்தது தோலின் செந்நிறம்.

தோலின் செந்நிறச் சிறப்பில் சிந்தையைப் பறிகொடுத்த பாணன் சிறிது நாழிகை சென்றதும், அத்தோலை இணைக்க, தோலின் விளிம்புகளில் இட்டிருக்கும் துளைகளை உற்று நோக்கினான். ஒத்த வடிவுடையவாய், ஒரு சேர ஒழுங்காக, நெடுங்க இடப்பட்டிருந்த அத்துளைகள், பாக்கு மரத்தின் விரியாத இளம் பாளையைப் பிளந்து நோக்கியபோது, அதனகத்தே கமுகங்கரு, இடையிடையே சிறுசிறு இடைவெளிகள் மட்டும் இடம்பெற, நெருங்க அடுக்கி

வைத்திருக்கும் காட்சியை நினைவூட்டின. இயற்கையின் விளைவாம் அதுபோலும் இணைப்பைச் செயற்கையால் செய்துகாட்டிய, போர்வை புனைந்தவனின் கைத்திறன் அந்த அளவோடு நின்றுவிடவில்லை. துளை பல இட்டுத் தைக்கப்பெற்றிருப்பினும், அத்துளை காண்பவர் கண்களுக்கு அத்துளை எளிதில் புலனாகிவிடா. துளைகளின் ஊடே நுழைத்துத் தைத்திருக்கும் வார்கள் புலப்படாதபடி இணைப்புறும் இரு விளிம்புகளையும் உருக்கி ஒன்றாக்கி இணைத்தாற்போல், ஊசியிட்டுத் தைத்திருந்தான். இத் திறமெல்லாம் அமைய ஆக்கப்பெற்ற அத்தோற் போர்வையின் பெருமையை எண்ணி எண்ணிப் பெருமிதம் உற்றான் அப்பெரும் பாணன்.

**"அகல் இருவிசும்பில் பாய் இருள் பருகிப்**
**பகல் கான்று எழுதரு பல்கதிர்ப் பருதி**
**காய்சினம் திருகிய கடுந்திறல் வேனில்**
**பாசிலை ஒழித்த பராஅரைப் பாதிரி**
**வள் இதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்**
**உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சைப்**
**பரியரைக் கமுகின் பாளைஅம் பசும்பூக்**
**கருவு இருந்தன்ன கண்கூடு செறிதுளை**
**உருக்கி அன்ன பொருத்துறு போர்வை"**

(1-9)

அகல் இரு விசும்பில்—அகன்ற பெரிய வானத்தில், பாய் இருள் பருகி — பரந்து கிடக்கும் இருளைப் போக்கி, பகல் கான்று — ஒளியைப் பரப்பியவாறே, எழுதரு — எழுகின்ற; பல்கதிர்ப் பருதி — ஒளிக்கதிர்கள் எண்ணிலாதன உடைய ஞாயிற்றின், காய்சினம் திருகிய — காயும் வெய்யில் கொளுத்துவதால், கடுந் திறல் வேனில் — அழிவாற்றல் மிகுந்த வேனிற் பருவத்தில், பாசிலை ஒழித்த — பசுமை நிறம் வாய்ந்த

இலைகளை உதிர்ந்துவிட்ட, பராஅரைப்பாதிரி — பருத்த அடிமரத்தையுடைய பாதிரி மரத்தின், வள்இதழ் மாமலர் — வளமான இதழ்களைக் கொண்ட பெரிய மலரை, வகுத்ததன் உள்ளகம் புரையும் — இரண்டாகப் பிளந்தால் அதன் உட்புறத்தை யொக்கும், ஊட்டுறு பச்சை — செந்நிறம் ஊட்டப்பெற்ற தோலில், பாரிஅரைக் கமுகின் — பருத்த அடியின்னயுடைய பாக்கு மரத்தின், பாளைஅம் பசும்பூ — பாளையாகிய அழகிய இளம் பூ. கருவுஇருந்தன்ன — விரியாமல் கருவாய் இருக்கும் காட்சிபோல், கண்கூடு செறிதுளை — நெருங்க இடப்பெற்ற துளைகள், உருக்கி அன்ன — உருக்கி ஒன்றாக இணைத்தாற்போன்று. பொருத்துறு போர்வை — வேறுபாடு தெரியாவாறு பொருத்தப் பெற்ற போர்வை.)

நல்லன ஆற்றுமுன் நல்லன அல்லனவற்றை அழிக்க வேண்டுவதன் இயல்பை உணர்த்தவே, வள்ளிதழ் மலர்களை மலர விடுவதன் முன்னர். பாதிரி பாசிலைகளை உதிர்த்து விடுவதைக் குறிப்பிட்டார் ஆசிரியர். இச்சிறப்பல்லது, அத்தொடரில் வேறு பொருள் காண இடமில்லையாகவும் "பாதிரி மரமாவது பாடலிமரம்; அது, இலையுதிர்ந்து நிற்கும் நிலையைக் கூறியது, இத்திரையன் காலத்தில் பாடலி அரசர் வலி குன்றியதனைக் குறிப்பால் உணர்த்தியதாம்" என்று விளக்கம் காண முயன்றுள்ளார் ஒருவர்.

பாலாற்றங்கரைப் பல்வேல் திரையனுக்கும், கங்கைப் பேரியாற்றுப் பாடலி அரசர்க்கும், அக்காலை எவ்விதத் தொடர்பும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லையாதலின் அவ்வாறு தொடர்பு படுத்தி வலிந்து பொருள் கொள்வது தேவையற்ற ஒன்று.

போர்வையின் பண்பு நலம் கண்டு பாராட்டிய பாணன் பார்வை, பின்னர்ப் பேரியாழின் உறுப்புக்களை அடைவே

நோக்கவிரும்பி, முதற்கண் வாய் எனும் உறுப்பின் வனப்பைக் கண்ணுற்றது. யாழ் நரம்புகளை இயக்கிய விடத்து எழும் இசை, தெளிந்த ஒலியுடையதாக வெளிப் படுவது வாய் எனும் அவ்வுறுப்பின் வழியே யாம். யாழ் உறுப்புக்களுள் ஓசையை எழுப்புவது நரம்பேயல்லது வாய் எனும் அவ்வுறுப்பன்று. அதனால் உயிர்களின் வாயகத்தே ஒலியெழும்பும் உள்நாக்கு அமைந்திருத்தல்போல், யாழ் உறுப்பாம் வாயகத்தே உள்நாக்கு அமைந்திராது. மேலும் அது, அதற்குத்தேவையுமில்லை. ஆகவே, இவ்வாய், தொழிற்படாவெறும் வாயே யாம். வாய்போல் அகம் குடைந்து அங்காந்திருக்கும் உருவொப்புமை கண்டு வாயெனப்பட்டதல்லது, தொழில் ஒப்புமையால் அப்பெயர் பெற்றதன்று.

அவ்வாயின் குடைந்து குவிந்த அகத்தை நோக்கிய புலவர்க்கு. ஆங்கு இடங்கொண்டிருந்த இருட் செறிவு, வரும் வழியில், நீர்வேட்கை மிகுந்தபோது நெடிது அலைந்து கண்ட சுனைகள் எல்லாம் நீர் இன்றிக்கிடந்தமையால், நிழல் தோற்றுவிக்காது இருண்டு காட்டிய காட்சியைக் காட்டுவ தாயிற்று. சுனையைக் கண்ணுற்றதும் நீர் நிறைந்து வழியும் எனும் நினைவினராய் நோக்குவார், ஆங்கு நீர் இல்லாமல் இருள் நிறைந்திருக்கக்கண்டு ஏமாந்து நெடுமூச்செறிவது போல், வாய் எனும் பெயருடையதாதலின், ஒலி எழுப்பும் உள்நாக்கு இதனகத்தும் அமைந்திருக்கும் எனும் அறிவினராய் அதன் அகத்தே நோக்குவார், ஆங்கு அதைக் காணாமை மட்டும் அன்று, மாறாக இருள் செறிந்த வெற்றிடத்தையே காண்பர். வாய் எனும் உறுப்பின் வனப்பு இத்தகைத்து.

வாய் எனும் அவ்வுறுப்பை அடுத்து பாணன் கண்கள் கடை. எனும் உறுப்பில் சென்று நின்றன. ஏற்றியும் இறக்கியும் யாழ் நரம்புகளின் அமைப்பைச் சீர்செய்யப் பயன்படுவது அவ்வுறுப்பு. நரம்பினை ஏற்றவேண்டின்,

அதைவலமாகத் திருகவேண்டும். இறக்கவேண்டின் இடமாகத் திருகவேண்டும். அச்செயலை எளிதாக்குவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அதைக் கை எளிதில் பற்றித் திருகிச் செயற்படுத்துவதற்கு ஏற்ப, மூன்றாம் பிறைபோலும் வடிவினதாய், வெண்ணிறத் தந்தத்தால் வனைந்து பிறையைக் கவிழ்த்து வைத்த நிலையில் பொறுத்தி. யாழ் நரம்புகளை, அதில் வரிசையாக முடுக்கி வைத்திருப்பர், கடையின் பண்பும் பயனும் இது.

கடையின் வடிவழகும் வெண்ணிறமும் கண்டு வியந்த அவன் விழிகளை வார்க்கட்டு ஈர்த்தது. வார்க்கட்டை நோக்குவார் எவரும், அதற்கு இடமளிக்கும் யாழின் தண்டைக் காணாது, வார்க்கட்டைக் காண்பது இயலாது ஆதலின், வார்க்கட்டைக் கண்ணுறும் கண்கள், தம்மை அறியாமல் தாமாகவே தண்டையும் கண்ணுற்றன. மலை வளர் மூங்கில் போன்ற பருமையும் மென்மையும் பொருந்திய தோள்களைப் பெற்ற தோகை நல்லாரின் முன்கைகளும் வனப்புடையவாம் என்பது கூறாதே அமையும். அம்முன்கை போன்ற வடிவும் வனப்பும் உடையது அத்தண்டு. முறையே ஏற்றியும் இறக்கியும் ஏழிசைகளையும் எழுப்புதற்கு ஏற்ப, நரம்புகளைப் பிணிக்கும் வார்க்கட்டு, அத்தண்டில் அமைந்து கிடக்கும் காட்சி, மகளிர் முன்கையில் இறுகச் செறிந்திருக்கும் குறுவளைக் காட்சியைக் காட்ட கண்டு களிப்புற்றான் பாணன்.

யாழ் தண்டின் வடிவழகைக் கண்ணுற்றார்க்கு அதன் வண்ணம் புலப்படாது போகாதன்று. அதனால், அதன் வடிவமைதி அளிக்கும் வியப்பிலிருந்து விடுபடுவதற்கு முன்பே, அதன் வண்ணம் அவன் எண்ணத்தை ஈர்த்தது, தண்டின் நிறம் கறுப்பே என்றாலும், அக்கறுப்பு காண வெறுக்கும் கறுப்பு ஆகாமல், நவமணிகளில் சிறந்த கருநீல மணிகளை வரிசை வரிசையாகப் பொருத்தி வைத்தால், அவ்

வரிசையினின்றும் வெளிப்படும் காண்பவர் கண்ணொளி கெடுக்கும் கருநீல நிறத்தையே, தண்டின் கருநிறமும் காட்டிக்க விஞ்ஞாட்டித் திகழ்ந்தது.

யாழ்த்தண்டின் ஒளி கண்டு உளம் களித்த பாணன், இறுதியாக, யாழ் உறுப்புக்களில் சிறந்தனவும், தலையாயினவுமாகிய நரம்புகளின் அமைப்பினைக் கண்ணுற்றான். நரம்பு ஓரிடத்தே மெலிந்து, ஓரிடத்தே தடித்து ஒழுங்கற்று இருக்குமாயின், அந்நரம்பிலிருந்து எழும் இசையும் ஒழுங்கற்றுப் போய்விடுமாதலின் அந்நரம்புகள் ஒத்தபுரிகளை உடையவாயிருத்தல் மிக மிக இன்றியமையாததாகும். இக் கருத்தோடு, அந்நரம்புகளின் அமைப்பில் ஆராய்ச்சியைப் போக்கிய பாணன் அவை, உருக்கி நீட்டிய பொன் கம்பிகள் போல் புரியடங்கியும் கொடிமுறுக்கற்றும் ஆக்கப் பெற்றிருப்பதைக் காணவே, இவ்வாறு குற்றமற்ற உறுப்புக்களையே கொண்டு குறைவற அமைந்து, கேட்கக் கேட்க இனிக்கும் கேள்விச் செல்வமாம் ஏழிசை வெள்ளத்தை இனிமையுற எழுப்பும் அப்பேரியாழின் பண்பு நலம் பலவும் கண்டு பேரின்பமும் பெருமிதமும் கொண்டான்.

"சுனை வறந்தன்ன இருள்தூங்கு வறுவாய்
பிறை பிறந்தன்ன பின் ஏந்து கவைக்கடை
நெடும்பணைத் திரள்தோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி ஏய்க்கும் மெலிந்து வீங்கு திவவின்
மணிவார்ந்த தன்ன மரஇரு மருப்பின்
பொன்வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
தொடை அமை கேள்வி."

(10-16)

(சுனைவறந்தன்ன—சுனைவற்றி உள் இருண்டுத் தோன்றுவது போன்ற, இருள்தூங்கு—இருள்செறிந்த, வறுவாய்—உள்நாக்கு இல்லாத வாயினையும், பிறை

பிறந்தன்ன—பிறந்த மூன்றாம் பிறையை ஏந்தியிருப்பது போன்ற, பின்ஏந்து—பின்னால் ஏந்தி இருக்கின்ற, கவைக்கடை — இரண்டாகக்கவைத்த கடையினையும் நெடும்பணைத் திரள் தோள் மடந்தை—பருத்த மூங்கில் போல் திரண்ட தோள் அமைப்பினையுடைய மகளிருடைய, முன்கைக் குறுந்தொடி ஏய்க்கும்—முன் கையில் கிடக்கும் குறுவளைகளை யொக்கும், மெலிந்து வீங்கு திவவின்—நெகிழவேண்டிய விடத்தில் நெகிழ்ந்தும் இறுக வேண்டிய விடத்தில் இறுகியும் ஏழிசை எழுதற்குத் துணை புரியும் வார்க்கட்டினையும், மணிவார்ந்தன்ன—நீலமணிகளை வரிசைப்படுத்தி வைத்தாற் போன்ற, மாஇரு மருப்பின்—கரியநிறம் காட்டும் பெரிய தண்டினையும் உடைய, பொன்வார்ந்தன்ன—பொன்னை உருக்கி நீட்டினாற்போன்ற, புரி அடங்கு நரம்பின்—முறுக்கு அடங்கிய நரம்புகளின், தொடை அமை கேள்வி—கட்டு அமைந்த கேள்விச் செல்வமாம் ஏழிசை எழுப்பும் பேரியாழை.)

## 2-2 பாணன் பண்பு

பேரியாழின் பண்புநலம் கண்டு வியந்து நின்ற பாணன் "உறுப்புநலம் எல்லாம் ஒருசேரஅமையப்பெற்ற இத்துணைச் சிறந்த இப்பேரியாழிற்கு உரிமையுடையவன் எத்துணைச் சிறந்தனாதல் வேண்டும், இதன் அருமை பெருமையறிந்து பேணிக் காக்கவல்ல பெருமையாரிடத்து மட்டுமல்லவோ இது இருக்கற்பாலது?" என்பன போலும் எண்ணங்கள் எழவே, அதைத் தொடர்ந்து, இத்தகு பேரியாழிற்குரிய அப் பெரும் பாணன் யாவன்? யாது அவன் இயல்பு? என்பன காணும் ஆர்வம் உந்த, அவன் கண்கள், யாழை விட்டு யாழிற்கு உரியானைக் காணத் துடித்தன.

அதுகாறும் அக்கண்கள் யாழின்மீதே சென்றிருந்தமையால், பெரும் பாணன் உடல் உறுப்புக்களுள், யாழ்

ஏந்தி நிற்கும் இடக்கையே முதற்கண் புலப்பட்டது. யாழை, மார்பின் இடப்புறத்தில், அஃதாவது, அகத்தில் உடலின் உயிர்நிலையாகிய இரத்தப்பை கொலுவீற்றிற்கும் இடத்திற்கு நேராகக் கொண்டு, இடக்கையால் தன் அன்பெலாம் கவர்ந்து கொண்டாரை ஆரத் தழுவி நிற்பது போல் அணைத்துக் கொண்டிருந்தான். யாழ் மீட்டற்கு ஏற்ற நிலை அதுவாகவே, அவ்வாறு ஏந்தியிருந்தான் என்று கொள்ளலாம் என்றாலும், அது, அப்பேரியாழ்போல் அவன் கொண்டிருக்கும் அளவிறந்த பற்றையும் பாசத்தையுமே புலப்படுத்தி நிற்பதாக, அந்நிலை கண்டு, அப்பெரும் பாணன்பால் அவன் கொண்ட மதிப்பு அளவிறந்து பெருகி விட்டது. ஆகவே, அவன் நலத்தின்பால் ஆர்வமும் மிகுந்து விட்டது.

பெரும்பாணன் உடலைப் பார்க்கின்றான். உரம் ஊட்டும் உணவு பெறாது உருக்குலைந்து போயிருந்தது அவ்வுடல். எலும்பும் தோலுமாய்க் காட்சி அளித்த அவ்வுடல் தனக்கு இயல்பாக இருந்த அழகையும் இழந்து காட்சி அளித்தது. வறுமைக் கொடுமை, அவ்வுடலையும், அவ்வுடல் தாங்கி நிற்கும் உள்ளத்தையும் அந்தளவு துன்புறுத்தி விட்டது.

பேரியாழ்இயல்புணர்ந்து பண் இசைக்குமளவு பண்பட்ட உள்ளம் உடையான் ஒருவன், தன் வாழ்க்கையில் உளவாம் செல்வ நிறைவு கண்டு செம்மாந்து போவதோ, அதன் தேய்வு கண்டு துயர்வுற்றுத் துடித்துப்போவதோ, செய்யான். ஆகவே இவன் மேனியின் வனப்பினை மாற்றுமளவு வாட்டுவது, இவன் வறுமைத் துயர்மட்டுமாதல் இயலாது, அதற்கு வேறு சிலவும் காரணமாதல் வேண்டும். பண்புமிகு உள்ளம் வாய்க்கப் பெற்ற பாணனின் மேனியையும் வாட்டி வருத்தும் அது யாதாதல் கூடும் என்று எண்ணியிருக்கும் நிலையில் அவன் காதுகளில், பலர்கூடி ஓலமிடும் அழுகையொலி வந்து

புகுந்தது. புகவே, அது வந்த திசைக்கண் தன் பார்வையைப் போக்கினான். ஆங்கே வறுமையின் நிலைக்களமாய் ஒரு பெருங் கூட்டம் காட்சி அளித்தது. ஒட்டிய வயிறும் உருக் குலைந்த உடலும் உடையவராய அவரெல்லாம் இப்பாண னால் புரக்கத்தக்கவர். இவன் பெரும் பரிசில் பொருளால் உண்டு வாழ்பவர்; இவனுக்குப் பரிசில் கிடைக்காதாயின், தாம் பசியால் துடிக்க வேண்டியவர், ஆக, தன்னால் தாங்க வேண்டிய அவர்கள் தளர்ச்சி கண்டே இவன் மனம் கலங்கு கின்றான். அவ்வுள்ளக் கலக்கமே இவன் உடல் நலத்தை நசுக்கிவிட்டது,

அம்மட்டோ! "பாணன் பறையன் துடியன் கடம்பன் என்று இந்நான்கல்லது குடியுமில்லை" எனப் போற்றத் தக்க பழம் பெரும் சிறப்பு வாய்ந்ததுதான் நான் பிறந்த பாண்குடி. ஆனால், அக்குடிப் பெருமையால், என் குடி வந்தாரின் வறுமைத் துயரைப் போக்க முடியவில்லையே. பேரியாழ்வல்லவன்தான் யான். ஆனால் நான் பெற்றிருக்கும் இசைக்கலை அறிவால், இவர்கள் வறுமையைப் போக்க வழியில்லையே, வாடும் சுற்றத்தின் வயிற்றுப் பசியைப் போக்க மாட்டா எனக்குக் குடிப்புகழ், குறை காணலாகா இசைக்கலை அறிவு இவையும் ஒரு கேடா?" எனப் பிறந்த குடியையும் பெற்ற கல்வியையும் பழிக்கத் தலைப்பட்டு விட்டது இவன் வாய்.

அம்மட்டோ! பாணன் வாய், கற்ற கல்வியையும் பிறந்த குடியையும் பழிக்கிறது என்றால், இவன் உள்ளம் இந்த உலகையே பழிக்குமளவு துணிந்திருந்தது. பார்த்தவர் பசியையும் போக்குமளவு பரந்து கிடக்கும் கடல் நீரால் சூழ்ந்ததுதான் இவ்வுலகம். இருந்தும் என்ன பயன்? அக் கடல் நீர் நா வேட்கையைத் தணிக்க மாட்டாமை ஒருபுறம் கிடக்கட்டும். உடல் மாசைப் போக்கவாவது அது ஒருப் படுமோ? ஒரு சிறிதும் படாது. பெரு நீர்நிலைதான், ஆனால்

பயனற்றது. அத்தகு கடலால் சூழப்பட்டிருப்பதால் இவ்வுலகம் என் ஒருவனை மட்டுமோ அலைய விட்டுளது? தாங்கித் தளர்ச்சி நீக்குவாரைப் பெறாமல் யானும் என் சுற்றமும் மட்டுமோ அலைகிறோம்? இல்லை; வறுமையால் வருந்தும் எம்மைக் கொடு வெய்யிலால் கொளுத்தி மேலும் வருத்துகிறதே இதோ இந்த ஞாயிறு இதுவும் அலைகிறது. இதன் சுற்றமும் அலைகின்றன; திங்களும் அலைகிறது; அதன் சுற்றமும் அலைகிறது. யானும் என் சுற்றமும் பகலில் மட்டுமே அலைகிறோம். இரவில் எங்கேனும் ஓய்வு கொள்கிறோம்; ஆனால் இவையோ என்றால், ஓய்வு ஒழிவு இன்றி, இரவு பகல் இருபோதுமல்லவோ அலைகின்றன! என்னே இவ்வுலகின் கொடுமை! பலர் நின்று போற்ற பெருமித நிலையில் வீற்றிருக்கத் தக்க விழுக்குடிப் பிறப்பும், பழிப்பில் கல்வியும் பெற்றிருந்தும், வாழ்விழந்து வருந்துவாரைத் தாங்கிப் புரக்கவல்ல தண்ணளி அற்ற இவ்வுலகும் ஓர் உலகா? இதில் இருந்து வாழ்வதைக் காட்டிலும் இறந்து மறைந்து போவதே மாண்புடைத்து. ஆனால் அந்தோ! அவ்விறப்பு தானும் எம்மை எட்டிப் பாரேன் என்கிறதே என் செய்வோம்?'' என்று கூறாமல் கூறி ஏங்கி இரங்குகிறது அவன் இனிய உள்ளம். அவ்வுள்ளத் துடிப்பைப் பாணன் முகக் குறிப்புப் பறைசாற்றி நின்றதாக உணர்ந்து கொண்ட பரிசிலொடு மீள்பவன், அவன் உள்ளம் உணர்ந்து உரைக்கத் தலைப்பட்டான்.

பாணன் துயர்போக்கத் துணிந்தவன், பாணன் வாய் உற்றகுடியையும் கற்ற கல்வியையும் பழிக்க, அவன் உள்ளம் இவ்வுலகையை வெறுத்து ஒதுக்குகிறது என்றாலும், அவன் உள்ளத்தில் அடித்தளத்தில், இத்தகைய உலகிலும் தளர்ந்தாரைத் தாங்கும் தண்ணளிமிக்கார் சிலர் எங்கேனும் இருத்தல் வேண்டும்; நம் கண்ணிற்கும் கருத்திற்கும் எட்டாதிருக்கும் அவரை அணுகிவிட்டால் நம்துயரெல்லாம் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை வேரூன்றியுள்ளது என்பது உண்மை.

அந்நம்பிக்கை இல்லாதிருந்தால், இவன், தன் சுற்றத்தைக் கூட்டிக்கொண்டு, இக்கோடையில், இத்துணை தூரம் கால் கடுக்க அலைந்து திரிய மாட்டான். எங்கோ, எப்போதோ இவனும் இறந்து போயிருப்பான்; இவன் சுற்றமும் மறைந்து போயிருக்கும். அவ்வாறு உயிரிழந்து போய்விடாது தன் பெரும் சுற்றத்திற்கு உறுதுணையாகி ஓடி வருகின்றான். ஆகவே, இவன் உள்ளத்திலும், உயிர் வாழ உறுதுணைபுரிய வல்லாரைப் பெறலாம் என்ற நம்பிக்கை உளது. ஆகவே, இவன் மனத் தடுமாற்றத்தை மாற்றி நம்பிக்கை ஊட்டி, நற்றுணை புரிவது இயலும் என்ற துணிவு பிறக்கவே, நின்று உரையாடும் ஆங்கே நிற்கும் ஒரு நெடிய குன்றைப் பாணனுக்குக் காட்டி, "பாண! நின்முன் காட்சி அளிக்கும் இக்குன்று, மழைதரு முகிற்கூட்டத்தால் சூழ்ந்து கிடப்பதற்கு மாறாக, வேனில் வெப்பம் தாளாது, வியன் ஞாலம் வியர்த்து வெளிப்படுத்தும் நீராவியால் சூழ்ந்து கிடக்கும் காட்சியைக் காணும் நீ, 'இவ்வுலகில் மழை நீர் என வாரி வழங்கும் வள்ளல்கள் மறைந்து விட்டாராக, புகை மண்டலம் போல் பிறர்க்குப் பயன்படல் ஆகா மக்கட்பதர்களின் வாழ்விடமாகி விட்டதே இவ்வுலகம்! இவ்வுலகில் பிறர் அளிக்கும் பரிசில் பெற்று பிழைப்பதல்லது, பிழைக்கும் வழி வேறு காணா எம்போல்வார் எங்ஙனம் வாழ்வோம்' என்றெல்லாம் எண்ணி எண்ணி வருந்துவை என்பதை யான் அறிவேன்; ஆனால், பாண! அவ்வாறு நம்பிக்கை இழக்க வேண்டுவதில்லை. பாணர்க்கும் பொருநர்க்கும் பரிசில் அளித்துப் புரக்கவல்ல பெரியோர் சிலர் இலைமறை காய் போல் ஆங்காங்கே இருப்பது உறுதி. இதோ பார்; வேனிற் கொடுமையால் மரங்களெல்லாம் வாடி நிற்கும் இக்காலத்திலும் பறவைகள் பெருங்கூட்டமாய்ப் பறந்து பறந்து திரிகின்றன என்றால், தமக்கு உணவாகிப் பயன் அளிக்க வல்ல பழ மரங்கள் சில, இவ்வேனிற் பருவத்திலும் எங்கேனும் இருக்கும். அவற்றைத் தேடிக் காண்பதே நாம் செய்ய வேண்டுவது என்ற நம்பிக்கையால் அன்றோ, அவை

ஓயாமல் பறந்து, தேடித் திரிகின்றன். அப்பறவைக் காட்சி, உன் உள்ளத்திலும் அந்நம்பிக்கையைத் தலை தூக்கச் செய்யவில்லையோ? கோடையின் கொடுமையுணராது சேணெடும் தொலைவு சென்று பறக்கும் பறவைக்குள்ளது போலும் பறக்கும் வாய்ப்பு இல்லாததையும் பொருட் படுத்தாது. காடு என்றும் மேடு என்றும் கருதாது, மணல் என்றும் மடுவு என்றும் மருளாது, இரவு பகல் இருபோதும் ஓய்வின்றிக் கால்கடுக்க அலைந்து தேடினால் தளர்ந்தாரைத் தாக்கும் தண்ணளிமிக்காரைப் பெறலாம்; அந்நம்பிக்கை உடைமையால் நான் பெற்ற பயன்களும் பலவாம். நின் கவலை விடுத்து யான்கூறும் சிலவற்றிக்குச் சிறிதே காது கொடுப்பாயாக!'' என்ற தோற்றுவாயோடு வழித்துணை புரியத் தொடங்கினான்.

**''தொடையமை கேள்வி இடவையின் தழீஇ**
**வெங்தெறல் கனலியொடு மதி வலம் திரிதரும்**
**தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது**
**பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்**
**பழுமரம் தேரும் பறவை போலக்**
**கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்**
**புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!''**

(16-22)

(தொடை அமைகேள்வி—கட்டு அமைந்த கேள்விச் செல்வமாம் ஏழிசை எழுப்பும் பேரியாழை; இடவயின் தழீஇ—மார்பின் இடப்பக்கத்தில் வைத்து அணைத்துக் கொண்டு; வெந்தெறல் கனலியொடு—கொடிய அழித்தல் தொழிலையுடைய ஞாயிறோடு; மதி வலம் திரி தரும்—திங்களும் வலமாகத் திரியும்; தண்கடல் வரைப்பில்—குளிர்ந்த கடல் சூழ்ந்த உலகில்; தாங்குநர்ப் பெறாது—பொருள் அளித்துப் புரப்ப வரைப் பெறாமல்; பொழிமழைதுறந்த — பெய்யும்

மழை மறந்துவிட்டமையால்; புன்கவேய் குன்றத்து—நிலத்திலிருந்து வெளிப்படும் நீராவி படர்ந்த மலை நாட்டகத்தில்; பழுமரம் தேடும் பறவை போல; கல்லென் சுற்றமொடு—பசி மிகுதியால் அழுது புலம்பும் சுற்றத்தாரோடு; கால்கிளர்ந்து திரிதரும்—ஓரிடத்தும் அடங்கியிராமல் கால்கடுக்க அலைந்து திரியும்; புல்லென் யாக்கை—வறுமையால் நலிந்து வனப்பிழந்து போன உடலையும்; புலவுவாய்—வறுமை தீர்ந்து வாழ்வளிக்கமாட்டாக் கல்வியே எனக் கற்ற கல்வியை பழிக்கும் வாயையும் உடைய; பாண—பாணர் தலைவனே!)

# 3. திரையன் அளிக்கும் பரிசிற் பெருமை

"பாண! உன்னை வாட்டும் வறுமையைக் காட்டிலும் நனிமிகக் கொடிது எம்மை வாட்டிய வறுமை. எங்கள் குடியோடு பிறந்த பெருமையுடையது எம்மைப் பற்றி வருந்திய பசிநோய். எம்குடி என்று தோன்றிற்றோ அன்றே தோன்றிய பழம்பெரும் சிறப்பு வாய்ந்தது எம் பசி. ஆனால் அத்துணைப் பழமை வாய்ந்த அப்பசி இன்று எம்மைப் பொறுத்தமட்டில் பழமையுடையதாகிவிட்டது. இன்று அது எம்பால் இல்லை. ஒரு காலத்தில் இருந்தது என்று பழமை பாராட்டத்தக்கதாகி எம்மைவிட்டு என்றோ அகன்று விட்டது. அதுமட்டுமன்று. இத்துணை நெடுங்காலம் பசியால் வருந்தி, இன்று வளமார் வாழ்வு பெற்றவன் யான் ஒருவன் மட்டும் அன்று. என் சுற்றத்தின் நிலையும் அன்னதே. என் சுற்றமோ என்றால் உன் சுற்றத்தைக் காட்டிலும் மிக மிகப் பெரிது. அவ்வளவு பேரும் பசியால் வருந்தியவர்தாம். இன்று அத்தனை பேருக்குமே வாழ்வும் வளமும் வந்து விட்டன. வளம் என்றால் எத்துணை வளம் என்று எண்ணுகின்றனை. வயிற்றுப் பசி மாற்றும் வளம் என்று எண்ணிவிடாதே. யாம் இப்போது பெற்றிருக்கும் வளத்தால் எம்பசி மட்டுமே பறந்து போய் விட்டது என்று எண்ணற்க. எதிர்ப்படுவார் எவர் பசியையும், அவர்தாம் எண்ணால் எத்துணையராயினும் அன்னார் அனைவர் பசியையும் ஒழித்துவிட்டு, அது செய்து விட்டதால், தன்னளவில்

சிறிதளவு தானும் குறையுற்றுப் போகாப் பெருவளவாழ்வு, யாம் இப்போது பெற்றிருக்கும் வாழ்வு பாண! அத்துணை ஏற்றம் எம்வாழ்வில் இடம்பெற்றது ஒருவன் அளித்த கொடைவளத்தால். 'என்ன? தொல்லூழி காலமாக அல்லல் மிகு வாழ்வு கண்டவர், இன்று பிறர்க்குத் தாம் வழங்க வழங்க வற்றாப் பெருவளவாழ்வு பெறுவதாவது? அத்தகு பெரு வாழ்வு ஒருவன் அளித்த கொடைவளத்தால் உளவாவ தாவது?' என்று எண்ணி எண்ணி வியக்கிறது உன் உள்ளம் இல்லையா. பாண! இதோ பார். பல்லாண்டு காலமாகப் பனித்துளி அல்லது மழைத்துளி காணாக் கொடுமையால் கருகித் தீய்ந்து போகும் காடு, பெருமழையொன்று பெய்து விட்டதும், புத்துயிர் பெற்றுத் தான் பொலிவு பெறுவதோடு மலர் என்றும், மலர் நிறை மது வென்றும், காய் என்றும், கனி என்றும் எண்ணித் தொலையாப் பொருள்களை அனைத் துயிர்க்கும் வழங்கி வான்புகழ் பெறும் காட்சியைக் கண்ட தில்லையோ? கோடைபோல் கொடுமை புரிந்தது வறுமை; அதனால் காடுபோல் கொடுமையுற்றோம் யாம். மழை போல் வந்து ஒருவன் வழங்க, வாழ்வு பெற்று வனப்புற்றோம் இன்று. பெற்ற பெரும் பொருள் எம் தோள்கள் சுமக்கலா காப் பெரும் பொருளாகவே, அவற்றைச் சுமந்து கொண்டு வந்து உதவ வல்ல வெள்ளைக் குதிரைகளைக் கொள்ளை கொள்ளையாகக் கொண்டு வருகிறோம். அது மட்டுமா? யாம் கொணரும் பொருள் பிறர் கண்டு பொறாமைப்பட்டு கவரக் கருதவல்ல பெரும் பொருளாதலின், இடைவழியில் ஏதேனும் இடையூறு நேருமோ என்ற அச்சத்தால், ஆறலைக் கள்வர் போலும் கொள்ளையரைக் கொன்றுயிர் போக்க வல்ல வயக்களிறுகளையும் வாரிக் கொண்டு வருகிறோம்.

"பாண! இன்று இத்தகு பெரு வாழும் யான், வறுமை யால் துடிக்கும் உன்னையும் உன் சுற்றத்தையும் கண்டுகலங்கு கின்றேன். எம்வளத்தில் ஒரு சிறிது வழங்கி உம் வறுமை யைத் தீர்க்கத் துடிக்கிறது எம் உள்ளம். ஆனால் பெரும்

பாணர் குடிவந்த நீ, உம் பெருமை அறிந்து வழங்கவல்ல வள்ளல் பெருந்தகை விரும்பி வழங்கும் விழுநிதிபெற விரும்பு வையே யல்லது, வயிற்றுப் பசி தீர்க்க என்று, எம்போலும் வழிப்போவார் வழங்குவதைக் கனவிலும் கருதாய் என்பதை அறிவேனாதலின், அளிக்க முன் வந்திலேன். ஆகவே, அதை விடுத்து எம்மை இப்பெரு நிலையில் வைத்துப் போற்றி விடுத்த அப்பெரியோனை உமக்கு அறிவித்து, வருவாரை எதிர் நோக்கி வாரி வழங்க வாயிலைத் திறந்து வைத்துக் கொண்டு வீற்றிருக்கும் அவன் வாழ்விடத்தை அடைய லாகும் வழி வகைகளைக் கூறுகிறேன். கேட்பாயாக.

''பெருவறம் கூர்ந்த கானம் கல்லெனக்
கருவிவானம் துளிசொரிந்தாங்குப்
பழம்பசி கூர்ந்த எம்இரும்பேரொக்கலோடு
வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி
வால் உளைப் புரவியொடு வயக்களிறு
முகந்துகொண்டு
யாம் அவண் நின்றும் வருதும்,''

(23-28

(பெருவறம் கூர்ந்த கானம் — பெரிய கோடையால் வறட்சி மிக்க காடு. கல்லென — தழைத்துக் கனியீன்று விளங்கும் பறவையும் மிகுந்து கல்லெனும் ஒலியுடைய தாகிக் கவினுறுமாறு. கருவி வானம் துளிசொரிந் தாங்கு — இடி மின்னல்களோடு கூடிய கார்மேகம் மழைநீரைச் சொரிந்தது போல; பழம்பசி கூர்ந்த எம் இரும்பேரொக்கலோடு — தொன்று தொட்டே தொடர்ந்து வரும் பசிநோய்மிக்க எம் பெரிய சுற்றத்தா ரோடு; யாம் வழங்கத் தவாஅப் பருவளன் எய்தி — யாங்களும், பிறர்க்கு வழங்கினும் வற்றாப் பெரிய செல் வத்தைப் பெற்று! வால் உளைப் புரவியொடு — வெண் ணிறத் தலையாட்டம் வாய்ந்த குதிரைகளோடு, வயக்

களிறு முகந்து கொண்டு — வன்மைமிக்க களிறுகளையும் வேண்டுமளவு வாரிக்கொண்டு, அவன் நின்றும் வருதும்— அவ்வள்ளல் வாழ் ஊரிலிருந்து வந்து கொண்டேயிருக்கிறோம்.)

## 3-1 திரையன் புரையில் பெருமை

பெரும்பாணனைத் திரையன்பால் சேர்க்க விரும்பிய பாணன், குடியாலும் கொற்றத்தாலும், கொடையாலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லா உரவோன் இளந்திரையன்; அவனைப் பாடிப்பரிசில் பெறுவது தனக்கே பெருமையாம் என்ற எண்ணம் பெரும்பாணன் உள்ளத்தில் உருப்பெற்றா லல்லது அவன் அவன்பால் செல்லான் என்பதை அறிந்திருந்தமையால், திரையன் பெருமைகளையெல்லாம் சுருங்கிய வாய்பாட்டான் விளங்க உரைக்க விரும்பினான்.

அவ்வாறு விரும்பியவன், ஒருவற்குப் பெருமை அளிப்பன வற்றுள் தலையாயது அவன் குடிப்பெருமையே யாதலின் திரையன் குடிப் பெருமையை முதற்கண் எடுத்துரைக்கத் தொடங்கினான். முக்கண்ணன், செங்கண்மால், நான்முகன் ஆகிய முழுமுதற் கடவுளர் மூவருள் காக்கற்றொழிலுடையான் திருமாலே ஆதலாலும், அம்மூவருள் அழகிய திருமேனியுடையானும் அவனே ஆதலாலும், உருவும் திருவும் உடைய மன்னரைக் காண்பவரெல்லாம் திருமாலைக் கண்டேன் என்று கூறியே மனநிறைவு எய்துவர் ஆதலாலும், மன்னர் குடிமுதல் திருமாலை முதலாகக் கொண்டு தொடர்கிறது என்ற மரபு உண்மையாலும், தமிழகத்தின் வடவெல்லையாம் தகுதியொடு, திரையன் இருந்து ஆளும் தொண்டை நாட்டிற்குச் சிறப்பளிப்பதாகவும் உள்ள திருவேங்கடமலையில் நின்ற திருக்கோலத்தோடு இருப்பவன் அவனே ஆதலாலும் திரையன் அம்மாலின் வழிவந்தவன் என்பதை முதற்கண் எடுத்துரைத்தான். அவ்வாறு எடுத்துரைக்கும் அந்நிலை

யில் இளந்திரையனின் அளப்பரிய ஆற்றல் நினைவிற்கு வரவே, அவனோடு தொடர்பு படுத்தும் திருமாலைப்பற்றிக் கூறுங்கால், அவன் ஈரடியால் மூவுலகையும் அளந்து கொண்ட அளப்பறிய ஆற்றலைச் சுட்டிக்காட்டினார். மனைவியைப் பிரிந்தறியாமைக்கு ஏதுவாகிய மாறாக் காதலும் அவள் கண்டு களித்தற்குக் காரணமாம் வடிவழகும் உடையவன் திரையன் ஆகவே, அவன் குடிமுதலாகிய திருமாலைக் கூறுங்கால், திருமகளும் பெருமறுவும் கிடந்து மாண்புதரும் அவன் மார்புநலத்தைப் பாராட்டினார். பின்னர் திருமாலின் மேனிக் கருநீல நிறத்தின் கவின் கண்டுகளித்த பாணன் அந்நிறத்தோடு ஒப்புடைய நிறங் காட்டும் உலகியற்பொருள்களை நினைத்து பார்த்த அளவில், திரையன் குடிவிளங்க உதவிய கடல் திரைகள் கருத்தில் வந்து உறுத்தவே, காயாப்பூப்போலும் பலபொருள் கள் உளவாகவும், கடல்வண்ண அடலேறு எனக் கடல்நீரின் கருநீல நிறத்தையே உவமையாக எடுத்துக் கூறினான்.

திரையன் திருமால் வழி வந்தவன் என்று கூறிய பாணன் அக்குடிப்பெருமை நம்மனோரால் காணக்கூடாதது ஆகவே, இன்றைய உலகத்தவர் காணலாம் பெருமையும் அவன் குடிக்கு உளது என்பதைக் காட்டுதல் வேண்டும் என்று விரும்பினான். மேலும் திரையன்குடி, திரைவழித்தொடர் போடு தமிழ்நிலத்தொடர்பும் பொருந்தியது ஆதலின்; கடல்வாணிகம் கருதிக் கலம் ஊர்ந்து வருவாரோடு காவிரிப் பூம்பட்டினத்திற்கு வந்திருந்த நாகநாட்டரசன் மகள் பீலிவளையைக் காதலித்துக் கடிமணம் கொண்டு களித்திருக்குங்கால், ஒருநாள் அவள் திடுமென மறைந்து விட்டாளாக, அவளைக் காணானாய்ச் சோணாட்டு அரசிளங்குமரன் கலங்கியிருப்புழி, 'தன்னூர்க்குச் சென்று விட்டாள் உன் காதலி, இனி அவள் வழித்தோன்றும் உன் மகன் வருவனேயல்லது அவள் வாராள் என்ற செய்தியைச் சிலர் கூறக்கேட்டு மகன் வரவினை எதிர்நோக்கி மன்னன்

இருக்க, நாக நாடடைந்த அந்நங்கை நல்லாள் ஆங்கு பிறந்த தன் மகனுக்கு, அரசனுக்கு அடையாளம் காட்டுவான் வேண்டி ஆதொண்டைக்கொடி அணிவித்து, காவிரிப்பூம்பட்டினம் செல்லும் கம்பளச் செட்டிவழிக் கலம் ஏற்றி அனுப்பினாளாக, இடைவழியில் கலம் கவிழ, கலத்தில் வந்தாருள் கரைசேர்ந்தார் சிலர், காவலன் மகன் ஊர்ந்து வந்த கலத்திற்கு நேர்ந்தது கூற, அது கேட்ட மன்னவன், தாங்கொணாத்துயர் உற்று, அதனால், ஆண்டுதோறும் நிகழ்த்தும் தலைநகர்த் திருவிழாவைத் தான் மறக்க, அது காரணத்தால் தலைநகரைக் கடல்கொள்ள தலைநகர் இழந்து அலைந்து கொண்டிருக்க, காவிப்பூம்பட்டிணத்தில் கரைசேர்ந்தார் சிலரைப் போலவே, மன்னர் மகனும் தமிழ் மண்ணில் அடியிட்டு அரசெய்தி ஆளத்தொடங்கி, அவ்வழியால் தோன்றிய திரையர் குடிவந்த தொல்பெரும் குடிப்பெருமையுடையவன் திரையன் எனத் திரைவழிவந்து தமிழ்க்குடி மூன்றனுள் நடுவண் வைத்து மதிக்கத் தக்க சோழர் குடியோடு தொடர்புகொண்ட குடிப்பெருமையைப் பாராட்டினான்.

திரையன் சோழர் குடியோடு தொடர்புடையவன் என்று கூறக் கேட்ட பெரும்பாணன் உள்ளத்தில், பரந்த இப்பெருநிலத்தை ஆள்வோர் சோழர் குடிவந்தார் மட்டு மல்லரே; சேரர் குடிவந்தாரும் ஆட்சி புரிகின்றனர் பாண்டியர் குடிவந்தாரும் ஆட்சி புரிகின்றனர். ஆட்சி புரிகின்றனர் என்றால் வெறும் பெயரளவிற்கு ஆட்சி புரிபவ ரல்லர். நிலவுலகத்து மக்களெல்லாம் நின்று போற்றும் நல்லாட்சி புரிகின்றனர். வெற்றி எட்டுத் திக்கும் ஒலிக்க முழங்கும் போர் முரசும் உடையவர். அவர் குடிபோல் திரையன் குடியும் ஒன்று; அவ்வளவுதானே. இதனால் திரையனுக்கு என ஒரு தனிப் பெருமை இல்லையே என்ற குறைபாடு உருப்பெறுதல் கூடும் என்று எண்ணவே, "பெரும் பாண! திரையன் முடிகெழுவேந்தர் மூவர்க்கும் உரிய தமிழ்க்

குடியில் தோன்றியவனே என்றாலும், இவனையும் அவரொப்ப மதித்து விடுதல் கூடாது. எல்லாச் சங்குகளும் கடல் நீரில்தான் பிறக்கின்றன. அதனாலேயே அவை யனைத்தும் ஒரு தன்மை ஆகிவிடா. அவற்றுள் வலம்புரிச் சங்கு ஏனைய சங்குகளைக் காட்டிலும் இறப்ப உயர்ந்தது என்பதை உலகம் அறியும். அதைப் போலவே மூவேந்தர் குடியில் தோன்றினானெனும் திரையன் அம்மூவேந்தர் குடிவந்த வேந்தர் அனைவரினும் சாலச் சிறந்தவனாவான்" என்று கூறி அக்குறைபாட்டுக் குறிப்பையும் போக்கினான் பாணன்.

"வினைக்கண் வேறாகும் மாந்தர்களைக் கொண்ட மாண்புடையதன்றோ இம்மண்ணுலகம்! ஆகவே, குடிப் பிறந்தார் அனைவரும் குணமுடையராதலும் இல்லை. குடிப்பிறந்தாருள்ளும் வடுப்புரியும் வாழ்வுடையார் வாழ் கின்றனரே இவ்வையகத்தில்! உலகியல் இதுவாகவே, திரையன் குடிப்பெருமையுடையான் என்பது ஒன்றை மட்டுமே கொண்டு அவனை நல்லவன் என நினைத்துவிடுதல் கூடாதே என்று எண்ணவும் தோன்றுமாதலின், அவ்வெண் ணத்தையும் மாற்றுவான் விரும்பி, "பெரும்பாண! திரையன் பிறந்த குடியால் மட்டும் பெருமையுடையவன் அல்லன்; அவன், அரசர்க்கு ஆகாதன என அறநூல்கள் விலக்கிய அனைத்தையும் அறவே தான் கடிந்து வாழ்வதோடு தன் ஆட்சிக் கீழ் வரும் மக்கள் பாலும் அறமல்லாதன நிகழா வாறு நீக்கிய நல்லோனாவான்" என்று கூறினான். அது கேட்டும் பெரும்பாணன் உள்ளம் நிறைவெய்தியதாகத் தோன்றவில்லை. "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்பதே உலகோர்க்கு, ஆன்றோர் உரைத்த அறம். நல்லது செய்ய ஆற்றாத ஒருவனுக்கு, உன்னால் நல்லது செய்ய இயலாது போயினும் அல்லது செய்வதையாவது கைவிடுக" எனக் கூறுவதே அவ்வறவுரை யின் கருப்பொருளாமாதலின் திரையன் அல்லது செய்திலன்

என்பது உண்மை, ஆனால் அதைக் கொண்டே அவன் நல்லன புரிபவன் என நம்பிவிடுதல் இயலாதே என்று எண்ணி விட்டால் என் செய்வது என்று அஞ்சிய பாணன், "பெரும் பாண! திரையன் அல்லது கடிந்தவன் மட்டுமல்லன்; அற நினைவே உடையவன்; அறமே மொழிபவன்; அறச் செயலே புரிபவன்; ஆக, திரையன் குடியாலும் சிறந்தவன்: குலத்தா லும் சிறந்தவன்; கொள்கையாலும் சிறந்தவன்; அவனைப் பாடிப் பரிசில் பெறுவதால் உன்புகழ் பெருகுவதல்லது குறையுறாது" என்று கூறினான்.

ஆனால், அந்நிலையிலும் 'பாண! நீ கூறியன அனைத்தும் நன்று. இத்துணைச் சிறந்தவன் இளந்திரையன் என்றாலும், அவன்பால் இன்றியமையாதிருக்க வேண்டிய மற்றொரு பண்பும் உளதா என அறிந்தல்லது அவனை அடைதல் இயலாது. நல்லவர்கள் வல்லவர்களாகவும் வாழ வேண்டும். நல்லவர் பால் வல்லமை இல்லையேல், வல்லவ ரால் அந்நல்லோர் அழிக்கப்பட்டு விடுவர் ஆதலின் அவர் நன்மையால் பயன் இன்றாம்; ஆகவே, நல்லோனாகிய திரையன்பால் வல்லமையும் உண்டு சொல்?" என்ற வினா வினை எழுப்பிவிடுவனோ பெரும் பாணன் என ஐயுற்ற பாணன், "பெரும்பாண! திரையன் தான் வல்லவனாதல் மட்டுமன்று; வல்லமை மிக்க பல்வகை வேற்படையும் உடையான்? ஆகவே அவன்பால் இன்றே செல்க. இனியும் எதை எதையோ எண்ணி ஐயங்கொண்டு அடங்கியிருந்து விடாது அவன்பால் செல்லத் துணிவாயாக. செல்லும் எண்ணம் உன் உள்ளத்தில் உருப்பெறுதல் ஒன்றுதான் தடை. உன் அவலமெல்லாம் அப்போதே அழிந்து அகன்றுவிடும். ஆக, அவன்பால் செல்லும் எண்ணம் உண்டாயின் கூறு, இளந்திரையன் இருந்தாளும் காஞ்சிமாநகரின் கவின், அவன் ஆட்சி நிலவும் தொண்டை நாட்டின் வளமும் வனப்பும், ஆங்கு வாழ் மக்களின் பண்பும் பெருமையும், அவன் நாடு கடந்து, அவன் நகர் அடையச் செல்லலாம் இடைவழியின்

இயல்பு, அவ்வழியிடைப் பெறலாம் துணைகள் அவ்வழி களைக் கடந்து செல்லலாம் வகை ஆகியவற்றை விளங்க உரைக்கின்றேன்'' என்று கேட்டு, அவன் அளிக்கும் விடையை எதிர் நோக்கி நின்றான்.

''நீயிரும்
இருநிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோன் உம்பல்,
மலர்தலை உலகத்து மன்உயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்
இலங்கு நீர்ப்பரப்பின் வளைமிக் கூறும்
வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின்,
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன் படர்குவிர் ஆயின்
கேள் அவன் நிலையே, கெடுக நின் அவலம்!''
(28—38)

(முந்நீர் வண்ணன் பிறங்கடையும், உரவோன் உம்பலும், சிறப்பினையும் செங்கோலையும், பல்வேலை யும் உடையோனுமாகிய திரையன் என்றும், நீயிரும் திரையன் படர்குவிராயன், கேள் அவன் நிலை, கெடுக அவலம் என்றும் வினை முடிவு செய்க.

நீயிரும்—நீங்களும், இருநிலம் கடந்த—பெரிய நிலத்தைக் காலால் அளந்து கடந்த, திருமறு மார்பின்—திருமகளும், ஸ்ரீவத்ஸ என்ற மறுவும் பொருந்திய மார்பையும், முந்நீர் வண்ணன்—கடல்நீர் போலும் நீல நிறத்தையும் உடைய திருமாலின், பிறங்கடை—வழி வந்தவனும், அந்நீர்திரை தரு மரபின் உரவோன்—அக்கடல் நீரின் அலைகளால் கரைசேர்க்கப் பெற்ற இயல்பினை உடைய உரவோனின், உம்பல் திரையர்

மரபில் வந்தவனும், மலர்தலை உலகத்து—பரந்து அகன்ற இப்பேருலகில், மன் உயிர்காக்கும்—நிலை பெற்ற உயிர்களைக் காத்து நிற்கும், முரசு முழங்கு தானை—வெற்றி முரசு முழங்கும் பெரிய நாற்படை யினையுடைய, மூவருள்ளும்—சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களைக் காட்டிலும், இலங்கு நீர் பரப்பின் வளை கூறும் வலம்புரி அன்ன—விளங்குகின்ற நீர்ப்பரப்பாகிய கடலில் தோன்றும் வளைகளுள் மேலாகச் சிறப்பித்துக் கூறப்பெறும் வலம்புரிச் சங்கை போல், வசைநீங்கு சிறப்பின்—குற்றம் தீர்ந்த சிறப்பினை யும், அல்லது கடிந்த—அறம் அல்லாதனவற்றைக் கடிந்து நீக்கிய, அறம்புரி செங்கோல்—அறத்தை விரும்பும் செங்கோல் ஆட்சியையும், பல்வேல்—பல்வகை வேற் படையினையும் உடையவனும் ஆகிய, திரையன்—திரையன்பால், படர்குவிராயின் — செல்லுவீராயின், கேள் அவன் நிலையே—அவன் இயல்பைக் கேட்பாயாக! நின் அவலம் கெடுக—கேட்டதும் நின் மனக்கவலை கெட்டொழிவதாக!

## 3-2 அவன் கடியுடை வியன்புலம்

இளந்திரையன் எல்லா வகையிலும் சிறந்தவன் தான் என்றாலும், பேரியாழ் இசைக்கும் பெருமை மிகு குடியில் வந்த பெரும்பாணன் உள்ளத்தில், தன்னால் பாடிப் பாராட்டத் தக்கவன்தான் இளந்திரையன் என்ற எண்ணம் இவன் உள்ளத்தில் எளிதில் உண்டாகாதே; அது உண்டாகித், திரையன்பால் செல்லும் வேட்கை உண்டாகிவிடுமாயின் நன்று: ஆனால், அது உண்டாக வேண்டும் என்ற ஏக்க மிகுதியால், "செல்குவையாயின்" என்று தான்கூற, திரை யன் தலைநகர் சேணெடும் தொலைவில் உள்ளது போலும்; செல்லும் வழி இடர் மிகுந்தது போலும், செல்வார் உணவும் உறையுளும் காணாது, இடைவழியில் இடருற்றுக் கெடுவர்

போலும், அவ்வருமைப்பாடு தோன்றவேதான், பாணன் செல்குவையாயின் என்று கூறுகின்றனன்; ஆகவே, சென்றால் பெரும் பொருள் பெறலாம் என்றாலும், இத்துணை இடர்ப் பாடுகளையும் தாங்கிக் கொண்டு ஆங்கு அடையும் வரை, எம் சுற்றத்தினருள் ஒருவரும் உயிரோடு இரார்; ஆகவே, ஆங்குச் செல்வது அறிவுடைமையாகாது' என்று பெரும் பாணன் எண்ணி விடுவனோ என்ற அச்சம் மிகவே, அவன் உள்ளத்தில் அவ்வச்சம் எழாமைப்பொருட்டு காஞ்சி மாநகர் சென்றடையும் இடைவழியின் ஊறற்று உணவு மிகும் இன்ப நிலையை எடுத்துக் கூறத் தொடங்கினான் பரிசில் பெற்று மீளும் பாணன்.

"தொண்டைநாடு சான்றோர் உடைத்து" என்ற உண்மையைப் பெரும் பாணனும் உணர்ந்திருப்பான் என்றாலும், அத்தகு சான்றோர்களுக்கிடையே சாலாதார் சிலரும் இருத்தல் கூடும்; மேலும் செல்வம் கொழிக்கும் வளநாட்டில், அப்பெருவளத்தைப், பாடுபடாமலே தமதாக்கிக் கொள்ள நினையும் கொள்ளையர் சிலர் வாழ்வதும் இயலும் ஆதலின், திரையன் நாட்டில் கொடியோர் சிலர் வாழ, அக்கொடியோரால், தமக்கு இடைவழியில் இடையூறு நேர்தலும் உண்டாங் கொல்? என்று நினைத்து, பெரும்பாணன் நடுங்காமை குறித்து 'பெரும்பாண' இளந்திரையன் காவல் திறத்தில் கரைகண்டவன்; அதனால், அவன் கீழ்ப் பணிபுரியும் காவலர், பேரூர், சிற்றூர்களாம் மக்கள் வாழிடங்களில் மட்டுமேயல்லாமல், காடும் மலையும் போலும் அம்மக்கள் வழங்கும் வழிகளிலும் நின்று காவல் புரிவர். பரந்து அகன்ற அவன் நாடெங்கும் இத்தகைய காவல்முறை நிலவுவதால் வழிச் செல்வர், இடைவழியில் தம்மைக் கண்ட அளவிலேயே அஞ்சி மெய்விதிர்த்து நடுங்குவராகவும், நடுங்கும் அவர் நிலை கண்டும் அவரைப் போகவிடாது, இடைமறித்து, வருத்தி அவர் கைப்பொருள்களைக் கவர்ந்து செல்லும், ஆறலை கள்வர்களை; வழிப்பறிக்காரர்களை நாட்டில் எங்கும்

காணல் இயலாது; ஆகவே கள்வர் பற்றி அச்சம் அற்று வழிச் செல்வாயாக என்றான். "அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக், கைப்பொருள் வெளவும் களவேர் வாழ்க்கைக் கொடியோர் இன்று அவன் கடியுடை வியன்புலம்".

காவல் சிறப்பால் ஆறலைக் கள்வர் இல்லாது போகலாம். அதனால் அக்கள்வரால் நேரலாகும் வழிப்பறியும் துன்பமும் இலவாகலாம். ஆனால், கடந்து செல்ல வேண்டிய காலமோ கொடிய கோடைகாலம். பகல் எல்லாம் கடும் வெய்யில் காய மாலையிலும், இரவிலும் கருமேகம் திரண்டு கடுமழை பொழியும் அத்தகைய கோடைமழை பெய்யுங்கால், மேகத் தூடே தோன்றும் இடியேறு, கண்ணொளிகெடுக்கும் மின்ன லோடு மண்ணில் கடுகிப்பாயும். அவ்விடியேறு தாக்குண்ட உயிரினங்கள், உடல் கருகி மடியும்; பெருமரங்கள் எரிந்து சாம்பலாகும். மாடமாளிகைகள் மண்மேடாகும். காட்டு வழியின் ஊடே சென்று கொண்டிருக்குங்கால், அவ்விடி யேற்றால் தாக்கும் போது, அக்காவலர் என் செய்வர்? மேலும் கடந்து செல்ல வேண்டிய வழியோ, காடுகளை ஊடறுத்துச் செல்வது. கடித்துக்கக்கும் கொடு நஞ்சால் உயிர் போக்கும் கருநாகமும், விழுங்கி உயிர் போக்கும் மலைப் பாம்பும், பாய்ந்து உயிர்குடிக்கும் புலி முதலாம் கொடு விலங்குகளும் மண்டிக் கிடக்கும். அவற்றால் எந்நேரத்திலும் இடையூறு நேரலாம். அவற்றால் வரும் ஏதத்தைத் தவிர்த் தல் இயலாதே என, வழியிடையே இயற்கையால் ஏற்படக் கூடும் இடையூறுகளுக்கு அஞ்சி, பெரும்பாணன், காஞ்சி நோக்கிச் செல்லும் முயற்சியைக் கைவிடலும் கூடும் என எண்ணினான் பரிசில் பெற்று மீள்வோன்.

அதனால், "கொடியோர் இலர்" என்றதோடு அமையாது திரையன் அறமே விரும்பும் ஆட்சியுடையவன். "இயல்புளிக் கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட பெயலும் விளையுளும் தொக்கு" என வள்ளுவர் கூறுவதும் காண்க. அதனால்

கோடை இடிமுழக்கினும், அது கொடுமை செய்யாது, அரவும் வருவார்க்கு வழிவிட்டு விலகிச் செல்லும்; காட்டுக் கொடிய விலங்குகளும், கண்ணுக்குத் தோன்றாது கரந்து வாழும். ஆகவே, காட்டுவழி அல்லவோ என்ற கவலை கொள்ளாது வழியிடையே, வழிநடை வருத்தம் மிகும் போதெல்லாம். ஆங்காங்கே, அச்சம் இன்றி இருந்து இளைப்பாறி இளைப் பாறிச் செல்வாயாக; மேலும், செல்லும் வழியில் கண்ணை யும்,கருத்தையும்கவர்ந்து களிப்பூட்டும் இயற்கை நலக் காட்சி கள் எங்கும் நிறைந்து கிடக்கும். அவற்றால் ஈர்ப்புண்ட உள்ளம்ஆண்டே இருந்து அவ்வியற்கை இன்பத்தில் தோய்ந்து விட லாகாதா என ஏங்கவும் செய்யும். அத்தகையஇடங்களில் எல்லாம் இருந்து இருந்து செல்வாயாக. மேலும் இடைவழி யில் உன்னையும் உன் சுற்றத்தாரையும் காணும் வழி யிடையூர் வாழ்மக்கள் உங்கள்பால் அன்பு கொண்டு உங்களைத் தங்கள் விருந்தினராக ஏற்றுப் போற்ற முனைவர். அவ்வாறு உங்களை விரும்புவார் மனைதோறும் தங்கித் தங்கி இன்புற்றுச் செல்வாயாக. ஆகவே எதை எதையோ எண்ணிச் செயலற்று நின்றுவிடாது, உள்ளம் ஊக்கம் கொண்டு சிறகடித்துப் பறக்க, காஞ்சி நோக்கிப் புறப்படுவாயாக'' என, இடைவழி இயற்கையால் ஆகும் ஏதம் அற்றது மட்டு மல்லாமல், இருந்து மகிழத்தக்க இனிய இடங்களையும் உடையது எனக் கூறி, பெரும்பாணன் உள்ளத்தில், திரையன் பால் செல்லும் எண்ணம் துளிர்விடச் செய்து விட்டான்.

**அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்**
**கைப்பொருள் வௌவும் களவேர் வாழ்க்கைக்**
**கொடியோர் இன்று, அவன் கடியுடை வியன்புலம்;**
**உருமும் உறாது; அரவும் தப்பாது;**
**காட்டுமாவும் உறுகண் செய்யா; வேட்டாங்கு**
**அசைவுழி அசைஇ; நசைவுழித் தங்கிச்**
**சென்மோ, இரவல! சிறக்க நின்உள்ளம்!**

(39—45)

(அவன் வியன்புலம்—திரையனுடைய பரந்து அகன்ற நாட்டில்; அத்தம் செல்வோர் — வழிப்போவாரை அலறத்தாக்கி — அலற அலறத் தாக்கி; கைப்பொருள் வௌவும் — அவர் கையில் கொண்டு செல்லும் பொருளைக் கொள்ளையடிக்கும்; களவுஏர் வாழ்க்கை— களவுத் தொழிலையே, தொழிலாகக் கொண்டு உயிர் வாழும் வாழ்க்கையுடைய; கொடியோர் இன்று— கொடிய ஆறலை கள்வர் இல்லை; உருமும் உரறாது — இடியேறும் இடித்துத் துன்புறுத்தாது, அரவும் தப்பா— பாம்புகளும் தீங்கு செய்யா; காட்டு மாவும் உறுகண் செய்யா — காட்டு கொடுவிலங்குகளும் கொடுமை செய்யா; ஆகவே வேட்டாங்கு—நீ விரும்பியபடியெல் லாம்; அசைவுழி அசைஇ — தளர்ந்த விடத்தே இளைப் பாறி; நகைவுழித் தங்கி—நீ விரும்பும் இடங்களிலும், உன்னை விரும்பும் இடங்களிலும்தங்கி; இரவல;—இரவ லனே, சென்மோ — செல்வாயாக; நின்உள்ளம் சிறக்க— உன் உள்ளமும் சிறந்து உனக்குத் துணை நிற்குமாக.)

# 4. போக்கும் வரவும் மிக்க காட்டு வழி

## 4-1 உமணர் உப்பு வண்டிகள்

திரையன் ஆட்சிக்கு உட்பட்ட தொண்டை நாடு, காவல் மிக்கது; அதனால் கொடியோர் அற்றது எனச் சுருக்கமாகச் சொல்லியதால், பெரும்பாணன் உள்ளம் அமைதியுற்றிராது என எண்ணினான் போலும், பரிசில் பெற்று மீள்வோன். அதனால், வழி, காட்டுவழியே ஆயினும், அவ்வழி, எவ்வாறு இடர் அற்றது என்பதை விளக்கமாகக் கூற வேண்டும் என விரும்பினான்.

தொண்டை நாட்டுத்தலைநகராம் காஞ்சிக்குச் செல்லும் பெருவழி, காடுகளை ஊடறுத்துச் செல்வதே எனினும், அது வழங்குவாரற்ற கொடுவழி அன்று; மாறாக, அவ்வழியில், உப்பு வணிகர் முதலாம் பல்வேறு வணிகச்சாத்தின் பல்வேறு வண்டிகள், இரவு பகல் எப்போதும் வரிசை வரிசையாகச் செல்லும் ஆதலாலும், அவ்வண்டிகளில் ஏற்றிச் செல்லும் வணிகப் பொருள்களுக்கு உரிய சுங்கவரிகளைத் தண்டும் சுங்கச் சாவடிகள் ஆங்காங்கே அமைந்திருக்கும் ஆதலாலும், அச்சுங்கச் சாவடிகள் அரிய காவல் உடையவாக அமைந் திருக்குமாதலாலும், அப்பெருவழி எப்போதும் ஆரவாரம் மிகுந்ததாகவே இருக்கும் எனக்கூறத் தொடங்கியவன், முதற்கண் அவ்வழியில் செல்லும் உப்பு வணிகர் வண்டிகளின் அமைப்புத் திறனைக் கூறத் தொடங்கினான்.

வண்டிச் சக்கரத்து வண்டிகள் கொழு கொழுவென இருக்கும்: அவ்வட்டையில் இட்ட துளைகளில் செருகப்பட்ட ஆரக்கால்கள், வட்டைகள் ஆரக்கால்களை விழுங்கி விட்டனவோ எனக் காண்பவர் வியக்குமளவு திருத்தமுறப் பொருத்தப்பட்டிருக்கும், ஆரக்கால்களின் மறுமுனை, முழு மரத்தில் கடையப்பட்ட குடத்தில் நிறுத்தப்பட்டிருக்கும், உருளி என்றும் அழைக்கப்பெறும் அக்குடம் எவ்வாறு இருக்கும் என்பதை விளக்க எண்ணியவன், பெரும்பாணன் அறிந்த ஒன்றை உவமைகாட்டி விளக்கினால், எளிதில் விளங்கும் என்பதால், இசைக் கருவிகளுள் ஒன்றாகிய மத்தளம் போல் காட்சி தரும் அக்குடம் என்றான்.

வட்டையும், ஆரமும், குடமும் உடைய சக்கரத்தின் அமைதியை எடுத்துக் கூறியவன், வண்டியின்பார், இரண்டு கணைய மரங்களை இணைத்தால் போன்ற வடிவும் வலிவும் உடையவாகும் என்றான். இத்தகைய உறுப்பு நலம் அமைந்த வண்டியில் அமர்ந்து செல்வார், வெயிலாலும், மழையாலும் கேடுறாது செல்வான் வேண்டி, வண்டியின் மேலே, தாளிப்பனை ஓலையினால் பின்னப்பட்ட பாய் வேய்ந்த கூரையும் அவ்வண்டிக்கு உண்டு; வலிய பெரிய அவ்வண்டிகள் கூரை வேய்ந்து நிற்கும் காட்சி, மழைக் காலத்தில், கருமேகம் சூழ்ந்த மலைகளை நினைவூட்டுவன வாய் இருக்கும். அவ்வண்டிகள், தம்மை ஈர்த்துச் செல்லும் காளைகளின் ஆற்றல் மிகுதியால், தாம் ஊர்ந்து செல்லும் வன்னிலத்தை எளிதே ஊடறுத்துக் கொண்டு விரைந்து செல்லும் என்றான்.

> "கொழுஞ்சூட்டு அருந்திய திருந்துநிலை ஆரத்து,
> முழவின் அன்ன முழுமர உருளி,
> எழூஉப் புணர்ந்தன்ன பருஉக்கை நோன்பார்
> மாரிக்குன்றம் மழை சுமந்தன்ன
> ஆரைவேய்ந்த அறைவாய்ச் சகடம்"
>
> (46-50)

(கொழுச்சூட்டு — உருவு திரண்ட வட்டையில் துளைகளாலே; அருந்திய — விழுங்கப்பட்ட; திருந்துநிலை — திருத்தமான நிலைகளிலே பொருத்தப் பெற்ற, ஆரத்து — ஆரக்கால்களைக் கொண்ட; முழுவின் அன்ன — மத்தளம் போன்ற வடிவுடைய; முழுமரஉருளி — முழு மரத்தாலே கடையப்பெற்ற உருளியினையும்; எழூஉம் புணர்ந்தன்ன — கணையமரங்களை இணைத்தாற்போன்ற; பருஉக்கை நோன்பார் — பருத்த் கைகளையுடைய அழுத்தமான பாரையும்; மாரிக்குன்றம் — மழைக்காலத்தில் சிறுமலைகள்; மழை சுமந்தன்ன — மழைமேகத்தைச் சுமந்து தோன்றுவது போல்; ஆரை — தாளிப்பனை ஓலைப் பாய்; வேய்ந்த— வேய்ந்த; அறைவாய்ச் சகடம் — செல்லும் வழிகளை அறுத்துச் செல்லும் வண்டி.)

## 4-2 வண்டி ஓட்டும் பெண்

வண்டிகளின் வடிவுத்திறனைக் கூறியவன், தொடர்ந்து, அவ்வண்டிகளுக்கு உரியவர் அவ்வண்டிகளில் உடைமைகளை ஏற்றிக்கொண்டு ஓட்டிச்செல்லும் காட்சியினை விளக்கத் தொடங்கினான். அவ்வண்டிகளுக்கு உரியவர் உப்பு வணிகராம் உமணர்; அவர்கள், கடல்படு பொருளாம் உப்பை, மருத நிகலத்து உழவர்களுக்கும், முல்லை நிலத்து ஆயர்களுக்கும், குறிஞ்சி நித்துக் குறவர்களுக்கும், பாலை நிலத்து மறவர்களுக்கும் கொண்டுசென்று விற்கும் தொழில் மேற்கொள்பவர் ஆதலின், அவர்கள் வாணிகம் கருதி ஒருமுறை வீட்டைவிட்டு வெளிவந்தால், மீண்டும் வீடு போய்ச்சேர ஆண்டுபல ஆதலும் கூடும். அதனால், அவர்கள் எங்குச் செல்லினும், தம் மனைவி மக்களையும் இல்லறம் நடத்துவதற்கு வேண்டும் இன்றியமையாப் பொருள்களையும் உடன் கொண்டே செல்வர். அவ்வாறு உடன் கொண்டுசெல்லும் பொருள்களுள், வழியில் நின்று பார்பவர் கண்களுக்குத் தொலைவில் வரும்போதே புலப்படுவது

வண்டிக் கூரைமீது வைக்கப்பட்டிருக்கும் கோழிக்கூடு; அக் கோழிக்கூட்டின் காட்சி, இடைவழியில், தங்கள் புனங் களில் விளைந்து முற்றியிருக்கும் தினையைக்காக்கும் கானவர். தினையை அழிக்கவரும் யானைக் கூட்டங் களைத், தொலைவில் வரும்போதே அறிந்து விரட்டுவதற் காகத் தங்கள் புனங்கள் இடையிடையே அமைத்திருக்கும் பரண்கள்மீது, நிழல்தர வேயப்பட்டிருக்கும் கூரையை நினைவூட்டும். நெடுவழி செல்ல சேர்வதால், ஊர் அற்ற இடைவழியிலும் உணவு ஆக்க நேரிடுமாதலின், அவ்விடங் களில், நெல்லையும் வரகையும் குற்றி அரிசி ஆக்குவதற்கு உதவும் உரல் கிடைப்பது அரிதாகிவிடும் என்பதால், தவறாது உடன்கொண்டு செல்லும் கல் உரலை அக்கோழிக் கூட்டின் வாயிலில் கட்டித் தொங்கவிட்டுச் செல்வர். அவ்வுரல் காட்சி, கடந்துவந்த வழியில் தான்கண்ட பெண் யானையின் முழங்காலை நினைவூட்ட, பரிசில்பெற்று மீள்வோன், அப்பிடியானையின் முழங்கால் அழகு, அதன் உடலின் கருநிறம், அதன் வாயின் இருபுறமும் முளைத்து மூங்கில் முளைபோல் சிறிதே வெளிப்பட்டுத்தோன்றும் தந்தம் ஆகிய காட்சி நலன்களில் சிறிதே மயங்கி இருந்து விட்டு மேலும் தொடர்ந்தான். அவ்வண்டியைக் காண்பார் கண்களில் தப்பாது படும் மற்றொரு பொருள் செல்லும் இடங்களில் இன்றியமையாது வேண்டப்படும் ஊறுகாய் நிறைந்த மிடா. அம்மிடா, வண்டியின் மூக்கணை அருகே கட்டிவிடப்பட்டிருக்கும். பரிசில் பெற்றும் மீளும் பாணன் காட்டுவழியை மட்டும் கண்டு வருபவன் அல்லன். தொண்டை நாட்டுப் பேரூர்களில் பலநாள் இருந்து வந்தவன். அதனால், அப்பேரூர் ஆடரங்குகளில் நிகழும் ஆடல்பாடல்களை அறிந்து வந்தவன். அவை, அவன் உள்ளத்தில் பசுமையாகவும் இருந்தன. அதனால், மேற் புறத்தில் வரிசையாகப் பின்னப்பட்ட கயிற்றின் அகத்தே அகப்பட இட்டு வைத்திருக்கும் அம்மிடாக் காட்சி, பரிசில் பெற்று மீள்வோன் உள்ளத்தில் வார்கொண்டு வரிசை

வரிசையாக வரிந்து கட்டப்பட்டிருக்கும், முழுவு என்ற இசைக் கருவின் காட்சியை நினைவூட்டிவிடவே, அம்முழவி னின்றும் வெளிப்படும் ஓசை இன்பம், அவ்வோசைக்கு ஏற்ப ஆடும் ஆடல் மகளிர், அவர்கள் ஏறி ஆட அமைத்த ஆடரங்கு ஆகிய காட்சிகளையும், அவன் மனத்திரையில் கொண்டு வந்து நிறுத்திவிட்டனபோலும்; சிறிது நேரம் தன்னை மறந்துவிட்டான். அவன் மெய்மறந்து நிற்கவே, வண்டி களும் நின்றுவிட்டனபோலும் அதனால் நின்ற காளைகளை அடித்து ஓட்டவேண்டி நேர்ந்தது. மாடுகளை அடித்து ஓட்டிய ஓசை கேட்டுத், தன் உணர்வு வரப்பெற்று நோக்கும் போது, ஊறுகாய் நிறைந்த சாடிப்பானை வைத்திருக்கும் இடத்திற்கு அருகில் அமர்ந்திருக்கும் பெண், அக்காளைகளை அடித்து ஓட்டுவதையும், அப்பெண்ணின் மடியில் அழகிய குழந்தை சிரித்து விளையாடிக்கொண்டிருப்பதையும் கண்டான். தான் கண்டுவந்த அக்காட்சியைப் பெரும் பாணனுக்கு விளங்க எடுத்துரைத்தான்.

'வேழம் காவலர் குரம்பை ஏய்ப்பக்
கோழிசேக்கும் கூடுடைப் புதவின்
முளைஎயிற்று இரும்பிடி முழந்தாள் ஏய்க்கும்
துளையரைச் சீறுரல் தூங்கத் தூக்கி
நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த
விசிவீங்கு இன்னியம் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடிவைத்த கலன்உடை மூக்கின்
மகஉடை மகடூஉப் பகடு புறந்துரப்ப''

(51—58)

(வேழம் காவலர் - தங்கள் புனத்திற்குள் யானை புகாவாறு காக்கும் காவலர்; குரம்பை ஏய்ப்ப—பரண் மேலே கட்டிய குடிலைப் ஒப்பக் காட்சி தரும்; கோழி சேக்கும் கூடுடைப் புதவின்—கோழிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும், சிறுகுடில் போலும் கூட்டின்

வாயிலில்; முளைஎயிற்று இரும்பிடி—மூங்கில் முளை போலும் சிறுதந்தங்களையுடைய கரிய பெண் யானை யின்; முழந்தால் ஏய்க்கும்—முழங்காலை ஒக்கும்; துளை அரை சீறுரல்—இடையே துளை பொருந்திய சிறிய உரலை; தூங்கத் தூக்கி—ஆடும்படி தொங்கவிட்டு; நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த—நாடகம் ஆடும் மகளிர். ஆடும் அரங்கிலே கொண்டுசென்று முழக்கும்; விசிவீங்கு இன்னியம் கடுப்ப—வரால் விரிந்து கட்டப்பட்ட இனிய முழவுபோல; கயிறு பிணித்து—கயிற்றாலே வரிகட்டி; காடிவைத்த கலன் உடை மூக்கின்—ஊறுகாய் நிறைந்த மிடா வைத்திருக்கும் மூக்கணை மீதிருந்து; மகவுடை மகடூஉ—குழந்தையை மடியிலே கொண்ட உமண் மகள்; பகடு புறம்துரப்ப—எருதுகளை முதுகிலே அடித்து ஓட்ட.)

## 4-3 ஓடும் வண்டிகளின் ஒழுங்கு

பெண்டிர், வண்டிகள் மீது அமர்ந்து மாடுகளை அடித்துத் துரத்த, ஓடும் வண்டிகளின் ஒழுங்கைக் கூறத் தொடங்கினான். வண்டிகள் எல்லாம் உப்புப் பொதி ஏற்றப்பட்ட வண்டிகள். அதனால் வண்டியின் பாரமோ அதிகம், அதே நேரத்தில், வண்டிகள் செல்லும் வழியோ கரடுமுரடான பாதை மேட்டில் ஏறியும், பள்ளத்தில் இறங்கி யும், பெருமணலை ஊடறுத்துச் செல்ல நேரிடும், மேட்டில் ஏறும் போதும், மணலை ஊடறுத்துச் செல்லும் போதும் மாடுகளுக்குத் துணையாக, வண்டிகளின் பின்புறம் இருந்து வண்டிகளைத் தள்ளி விடுதலும், வண்டிகள் பள்ளம் நோக்கிப் பாயும் போது, வண்டிகள் விரைந்து உருள, அவ் விரைவிற்கு ஈடு கொடுக்க இயலாமல் மாடுகள் கால் மடங்கி வீழ்தலும் கூடும் என்பதால், வண்டிகளைப் பின்புறம் இருந்து ஈர்த்து ஈர்த்து விடுதலும் செய்தல் வேண்டும். மேலும் வண்டியில் பூட்டியுள்ள காளைகள் அனைத்தும்

ஒத்த பழக்கமும், வயதும், வலிவும் உடையவாய் அமைதல் இயலாது. அதனால் சில, ஒழுங்கை விட்டு அலைக்கழித்து ஈர்த்துச் செல்லவும் கூடும். வண்டி போகும் வழி, அகன்ற பெருவழி அன்று, ஆதலின், ஒன்றன்பின் ஒன்று என்ற ஒழுங்கு மீறின், வண்டிகளின் போக்கு தடையுறும். அதனால், வண்டிகளின் இருபுறமும் சிலர் நடந்து சென்ற வாறே, மாடுகள் ஒழுங்கு மீறிச் செல்லாவாறு காத்துச் செல்லவும் வேண்டும். மேலும், பெரும்பாரம் ஈர்க்க மாட்டாது சில காளைகள் படுத்துவிடுதலும் உண்டு. அந் நிலையில் அக்காளைகளை அகற்றி விட்டு, வேறு வலிய காளைகளைப் பூட்டி விடுவர். அதற்காக, வண்டியில் பூட்டும் மாடுகளோடு, சில மாடுகளை வறிதே கொண்டு செல்லவும் வேண்டும்.

நெடுவழி ஓடி ஓடித் தேய்ந்து போவதால், சிலசமயம் அச்சு முறிந்து போதலும் உண்டு. அவ்வாறு முறிந்து போகும் இடங்களில், வண்டியில் உள்ள மூட்டைகளைக் கீழே இறக்கி வைத்து விட்டு, முறிந்த அச்சுக்குப் பதிலாக, இது போல் நேர்ந்தவழி உதவுவதற்கென்றே உடன் கொண்டு செல்லும் சேம அச்சு எனப்படும் புது அச்சை மாட்டி, மீண்டும் மூட்டைகளை ஏற்றிக் கொள்ளுதல் வேண்டும். இந்தப் பணிகளை எல்லாம் வண்டிக்குரிய உப்பு வணிகன் ஒருவனே தனித்துச் செய்துவிடல் இயலாது. அதனால் வண்டிகளை இடையூறு இன்றிக் காத்து ஓட்டிச் செல்லவல்ல சிலர், உப்பு வணிகர்க்குத் தேவைப் பட்டனர். அதனால், அப்பணிக்கு ஏற்ற உடல்கட்டு உடையவராகச் சிலரைத் தேர்ந்து, செல்லுமிடந்தோறும் உடன் அழைத்துச் செல்வர். முறுக்குண்ட உடலும், வலிவு மிக்கு இறுகிய தோளும் அமையப்பெற்று, அன்றைய ஆணழகர்களாகக் காட்சி தரும் அவர்கள், கொளுத்தும் கோடை வெய்யிலால், தம் தலைகள் காய்ந்து கொதிப்பேறி விடாதபடி, இளம்தளிருக்கிடையே கொத்துக் கொத்தாகப்

பூத்து மணக்கும் வேப்பிலை முதலாம் பசுந்தழைகளையும், மணம் வீசும் வேறு பல மலர்களையும் கலந்து கட்டிய மாலையைத் தம் தலையிலே சுற்றிக் கொண்டு, உருண்டு திரண்ட நுகத்தடியில் உள்ள துளைகளில் நுழைத்து, மாடு களை ஒழுங்காகக் கட்டிய கயிறுகளைக் கையில் பற்றிக் கொண்டு, வண்டிகளின் இருபுறங்களிலும் நடந்தவாறே, ஒழுங்கு குலையாமல் காத்து வண்டிகளை ஓட்டிச் செல்வர்.

வண்டிகளை, ஊறு நேராவாறு ஓட்டிச் செல்லும் பொறுப்பு அவர்களுடையதாகவே, உப்பு வணிகர், வண்டி யோட்டும் கவலையற்று, உப்புவிற்கும் ஒரே நோக்குடைய வராகி. "நெல்லும் ஒப்பும் நேரே" என உப்புக்கு மாறும் பொருளும், அதன் அளவு கூறி, "உப்போ உப்பு" என உரக்கக் குரல் கொடுத்து வாணிகம் புரிந்தவாறே செல்வர். இவ்வாறு, வாணிகம் மேற்கொண்டு ஊர்ஊராகச் செல்லும் உமணர்களின் வண்டித் தொடர் செல்வதால், உடன்வரும் முடலையாக்கை முழுவலிமாக்கள், உப்பு வணிகர்க்கு மட்டும் அல்லாமல், அப்பெருவழியில் அனைவர்க்கும் இரவில் அல்லாமல் பகலிலும் நல்ல காவலாய் நிற்பர்.

**"கோட்டிணர் வேம்பின் ஏட்டிலை மிடைந்த**
**படலைக்கண்ணி, பரேர் ஏறுழ்த் திணிதோள்**
**முடலையாக்கை முழுவலி மாக்கள்**
**சிறுதுளைக்கொடுநுகம் நெறிபட நிரைத்த**
**பெருங்கயிற்று ஒழுகை மருங்கில் காப்பச்**
**சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்**
**பல்லெருத்து உமணர் பதிபோகு நெடுநெறி**
**எல்லிடைக் கழியுநர்க்கு ஏமமாக."**

*(59-65)*

(கோட்டிணர் வேம்பின்—கொம்புகளில் கொத்துக் கொத்தாகத் துளிர்விட்டிருக்கும் வேப்ப மரத்தின்

ஏட்டிலைமிடைந்த—சிறந்த இலைகளை இடையிடையே இட்டுக்கட்டப்பட்ட; படலைக் கண்ணி—தழையும் மலரும் கலந்து தொடுக்கப்பட்ட தலைமாலையையும்; பேரேர்—சிறந்த அழகினையும்; ஏறுழ்த் திணிதோள்—மிக்க வலியினையும், திண்ணெனத் திரண்ட தோளினையும்; முடலையாக்கை—முறுக்குண்ட உடம்பினையும்; முழு வலிமாக்கள்—நிறைந்த உடல்வலியினையும் உடைய ஆடவர்; சிறுதுளைக் கொடுநுகம்—சிறிய துளைகளையுடைய உருண்டு திரண்ட நுகத்தடியில்; நெரிபட நிரைத்த—எருதுகளை ஒழுங்காகப் பிணித்த; நெருங்கயிற்று ஒழுகை—பெரிய கயிற்றினை உடைய வண்டிகளின் வரிசையை; மருங்கில் காப்ப—பக்கத்தே இருந்து காத்துச் செல்ல; சில்பத உணவின்—சிறிதே பதமாகப் பயன்படும் உணவாம் உப்பின், கொள்ளை சாற்றி—விலையைக்குரல் எடுத்துக் கூறி; பல் எருத்து உமணர்—பல எருதுகளை உடன் கொண்டு செல்லும் உப்பு வணிகர்; பதிபோகு நெடுநெறி — பல ஊர்களைக் கடந்து செல்லும் நெடிய வழியில்; எல்லிடை — பகற்போதில்; கழியுநர்க்கு — வழிப்போவார்க்கு; ஏமமாக — பாதுகாவலாக.)

## 4-4 மிளகுப் பொதி ஏற்றிச் செல்லும் கழுதைச் சாத்து

உமணர் உப்பு வண்டியோடு, துணையாகச் செல்லும் முடலையாக்கை முழுவலி மாக்கள், வண்டிகளை ஊறுஇன்றி ஓட்டிச் செல்லவும், தேவைப்படும் இடங்களில் உப்பு மூட்டைகளை ஏற்றவும் இறக்கவுமே பயிற்சி பெற்றவர்; ஆறலைகள்வரால் வரலாகும் இடையூறுகளைப் போக்குவது அவரால் இயலாது. அதனால் அவர் துணை நம்பி காட்டுவழி செல்வது கூடாது எனப் பெரும் பாணன் எண்ணி விடுதலும் கூடும் என்பதால் வணிகச் சாத்துடன், முடலையாக்கை

முழுவலி மாக்கள் மட்டுமே செல்வர் என்பதில்லை. முழுப் பயிற்சி பெற்ற சிறுபடையும் உடன் செல்லும்; அப்படை வீரர், ஆறலைகள்வர் எத்தகையவராயினும் அவரை அழித்து ஒழிக்கவல்ல ஆற்றல் வாய்ந்தவர் என்பதையும் எடுத்துக்கூறவேண்டியதாயிற்று.

கடல் கடந்த நாடுகளின் பொற்காசுகள் தமிழகத்தில் வந்து குவிவதற்குக் காரணமாய் இருப்பனவற்றுள் தலையாயது மிளகு: அரிய விலையுடையது. அதனால் மிளகை, வாணிகம் கருதி, ஓர் ஊரிலிருந்து பிறிதோர் ஊருக்குக் கொண்டு செல்லுங்கால், படைத்துணையோடு செல்லவேண்டியிருந்தது. அக்கால மிளகு வணிகர், அத்தகைய படைத்துணைக்கு அரசை எதிர்நோக்கி இராது ஒரு சிறுபடையைத் தாமே வைத்துக்கொண்டிருந்தனர். அதை, அக்கால அரசும் அனுமதித்திருந்தது. அத்தகைய வணிகப்படை இல்லாதிருந்திருக்குமாயின், அதிலும், ஆரமும், பொன்னும், மணியும், மிளகும் போலும் மலை நாட்டுப் பொருள்களைவும், முத்தும் பவழமும் போலும் கடல்விளைபொருள்களையும், நாட்டவர் பெற்றிருக்க முடியாது. அப்படைவீரர்களின் துணை இருந்ததினாலேயே அக்கால வணிகர் அப்பொருள்களை ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு அச்சமின்றி எடுத்துச் சென்று வாணிகம் புரிந்தனர். அத்தகைய வாணிகம், தங்கு தடையின்றி நடைபெற்றதினாலேயே, அக்கால மக்களுக்கு அப்பொருள் கள் கிடைத்தன. அதனால், கடல்படுபயனையும், மலைதரு செல்வத்தையும் நாட்டு மக்கள் நுகர்த்துணை நின்ற பெருமை, அவ்வீரர்களையே சாரும்.

அவ்வீரர்கள், குற்றம் தீர்ந்த நல்ல செயல்களையே மேற்கொள்வர். மேற்கொள்வதன் முன், முட்டின்றி முடித்தற்காம் வழிமுறைகளை ஆராய்ந்து துணிந்த பின்னரே மேற்கொள்வர். எடுத்துக்கொண்ட வினைக்கு

எத்தனை பெரிய இடையூறுகள் நேர்ந்தாலும் சோர்ந்து விடாது' முயன்று முடிக்கவல்ல உறுதியாளர்கள். உள்ளத்தில் உறுதியும் உடலில் உரமும் முடிக்கவல்ல உறுதியாளர்கள். உள்ளத்தில் உறுதியும் உடலில் உரமும் எவ்வளவுதான் சிறந்தனவாய் அமைந்து விட்டாலும் அவற்றிற்குத் துணை புரியவல்ல படைக்கலங்களும் தேவை என்பதை உணர்ந்து, ஏற்றபடைக்கலங்களையும் உடன் கொண்டே செல்வர். காலில் அணிந்திருக்கும் செருப்பு, முழங்கால் வரையும் மறைத்துவிடும் சட்டை, அவர்மேனியை மூடிக்காத்துக் கிடக்கும். ஆறலைகள்வரோடு. போரிட்டு, அவர்தம், வில்லாற்றலை முரித்து அழிக்க மேற்கொண்ட போர்களில் ஓரோ வழி, அவர் அம்புபாய்ந்து உண்டாக்கிய புண்வடுக்கள், மார்பிற்கு அணியாகி அழகு தரும். வரிவரியான கோடுகள் விளங்க, பண்ணப்பட்ட அச்சு அவர் மார்பின் குறுக்கே வரிந்து கட்டப்பட்டிருக்கும்; அது, மலையின் குறுக்கே ஊர்ந்து ஏறும் மலைப்பாம்பினை நினைவூட்டுவதாய் இருக்கும். அக்கச்சில், இடது கைப்புறமாக, வெள்ளிய கைப்பிடி பொருத்தப்பெற்ற கூரியவாள் கட்டித்தொங்க விடப்பட்டிருக்கும். இடையில் உடுத்தியிருக்கும் ஆடை, தம்மை மறந்துபோரில் ஈடுபட்டிருக்கும் போதும் நெகிழ்ந்து அவிழ்ந்து விடாதவாறு இறுகக்கட்டப்பட்டிருக்கும்; அவ்வுடைக்குள் ஒரு குத்து வாளும் செருகப்பட்டிருக்கும். இவ்வளவிற்கும் மேலாக, நீண்ட பெரிய வேற்படையைக் கையில் ஏந்திச் செல்வர். இத்தனை படைக்கலங்களையும் பயன்படுத்துவதற்கேற்ற பரந்து அகன்ற தோளாற்றலும் உடையராகிய அவ்வீரர்களைப் பார்த்த. பரிசில் பெற்று மீள்வோன் அகக்கண்முன், அவன் கடந்து வந்த மலை நாட்டுத் தெய்வமாம் முருகன் காட்சி அளிக்கவே அவர்களை, அவனாகவே மதித்து மகிழ்ந்ததோடு, அக்காட்சி இன்பம் பெரும்பாணன் உள்ளத்திலும் பெருக்கெடுக்கும் வகையில், விளங்க எடுத்துரைத்தான்.

வழி, காவல் மிகுந்தது என்பதை வலியுறுத்த வணிகச் சாத்தோடு செல்லும் படைவீரர் இயல்பை எடுத்துக்கூறிய புலவர், அப்படை வீரர் துணை வர, வாணிகப் பெருநகர் நோக்கிச் செல்லும் வணிகர் இயல்பையும் எடுத்துக் கூறினார். மிளகு உப்பு போல் கனமுடையது அல்ல ஆதலாலும், சிறிய அளவுள்ள பொதிக்கே பெரு முதல் வேண்டுமாதலாலும், மிளகு வணிகர்க்கு, மிளகுப் பொதி களைக் கொண்டு செல்ல, உப்பு வணிகர்க்குத் தேவைப் பட்டது போல், பெரிய பெரிய வண்டிகள் தேவைப் பட்டில. மேலும், மிளகை, அதுவிளையும் மலைநாட்டு உட்பகுதிக்கும் சென்று கொள்முதல் செய்யவேண்டிவரும். அத்தகைய இடங்களுக்கு வண்டிகள் செல்வது இயலாது. அதனால் மிளகு வணிகர், தம்பொதி வண்டிகளில் கொண்டு செல்வதை விரும்பாது, கழுதைகளின் முதுகின்மீது கொண்டு செல்வதையே விரும்புவர். கழுதை பெரும்பாரம் சுமக்கக் கூடியது; மலைக்காடுகளின் ஊடே நுழைந்து நுழைந்து செல்லக்கூடியது. அதனால் கழுதைகளே ஏற்புடையவை என எண்ணினர். பொதி சுமப்பதற்கென்றே பிறந்தவை போல், கழுதைகளின் முதுகு இயல்பாகவே வளைந்திருக்கும். மேலும் பொதி சுமந்து சுமந்து தழும்பேறி யிருக்கும். கழுதையின் அத்தகைய வளைந்த முதுகில், இரு பக்கமும் எடை ஒத்திருக்கப் போடப்பட்டிருக்கும் மிளகுப் பொதிக்காட்சி, புலவர் உள்ளத்தில், மலைநாட்டில் தாம் கண்டு வந்த ஒரு வேர்ப் பலாமரத்தையும், அதன் வளைந்த கிளை ஒன்றில் இரு புறமும் காய்த்துத் தொங்கிக் கிடந்த இருபலாக் கனிகளையும் நினைவிற்குக் கொண்டுவரவே—வேர்ப்பலாவாதலால், மரம் ஏறவேண்டிய முயற்சியும் தேவைப்படாது, எளிதில் பறிக்கக் கிடைத்தமையால், ஒரு பழத்தைப் பறித்துப் பிளந்து, எண்ணிக்கையில் சிலவே ஆயினும், உருவில் பெரிய வாக இருந்த சுளைகளைத் தின்றுவந்த இனிய உணர்வுக்கும் சிறிது பொழுது ஆட்பட்டுவிட்டார்; மீண்டும் தம் நினைவு

வரப்பெற்றதும், நிமிர்ந்த காதுகளையுடையவாகிய, அக் கழுதைகள், வரிசை வரிசையாகச் செல்லும் வனப்பினை விளங்க எடுத்துரைத்தார்.

வணிகச் சாத்தோடு சிறுபடையும் செல்வதால், வழியில் இடையூறு இராது எனக் கூறி முடிக்குமளவில், இடை வழியில், மேலும் ஒரு வழித்துணை இருப்பதும் நினைவிற்கு வரவே, அதையும் உரைக்கத் தொடங்கினார் புலவர். மிளகு விலையுயர்ந்த பொருள். அம்மிளகு வாணிகம் புரிவார் பெரும் பொருள் ஈட்டுவர். அவ்வாறு ஈட்டும் செல்வத்தின் ஒரு பகுதியை வரியாகப்பெற அரசுக்கு உரிமை உண்டு. அதனால் அத்தகைய விலையுயர்ந்த வாணிகப் பொருள்கள் மீது வரிதண்டும் சுங்கச் சாவடிகளைப் பெருவழிகளில் அதிலும், பல பெருவழிகள் ஒன்றுகூடும் நாற்சந்தி, முச்சந்திகளில் நிறுவிவைத்திருந்தது அரசு. அத்தகைய சுங்கச் சாவடிகளில் வரியாக வாங்கிய பொற்காசுகள் திரண்டிருக்கும் ஆதலின், அந்நிதியைக் காத்தற்பொருட்டு அரசுப்படையின் ஒரு பிரிவாம் விற்படை ஆங்கு நிலையாக நிறுத்திவைக்கப்படும். சுங்கச் சாவடியும், அதுகாக்கும் விற்படை வீரர் வாழிடமும் இடம்பெற, ஒரு சிறு ஊரே போல் காட்சி அளிக்கும் அத்தகைய இடங்களும், வழிப் போவார்க்குப் பெருந்துணையாகும். ஆகவே, வழியச்சம் சிறிதும் இல்லை, பெரும்பாண! இனியும் தாமதம் செய்யாது புறப்படுவாயாக என ஊக்கப்படுத்தினார் புலவர்.

**'மலையவும் கடலவும் மாண்பயம் தரூஉம்**
**அரும்பொருள் அருத்தும் திருந்துதொடை நோன்தாள்**
**அடிபுதை அரணம் எய்திப், படம்புக்குப்**
**பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின்**
**விரவுவரிக் கச்சின், வெண்கை ஒள்வாள்**
**வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்**
**சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்**
**கருவில் ஓச்சிய கண்ணகன் எறுழ்த்தோள்**

**கடம்புஅமர் நெடுவேள் அன்ன மீளி**
**உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்**
**தடவுநிலைப் பலவின் முழுமுதல் கொண்ட**
**சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மிரியல்**
**புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து**
**அணர்ச்செவிக் கழுதைச் சாத்தோடு வழங்கும்**
**உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்**
**வில்லுடை வைப்பின் வியங்காட்டு இயவின்.''**

*(67—82)*

*(மலையவும் கடலவும் மாண்பயம் தரூஉம் அரும் பொருள்—மலையில் கிடைப்பனவும், கடலில் கிடைப் பனவுமாகிய சிறந்த பயனைத் தரவல்ல பெறுதற்கரிய அரிய பொருள்களாகிய அகில், ஆரம், மிளகு, பொன், மணி, முத்து பவளங்களை; அருந்தும்—நாட்டு மக்கள் பெற்று அனுபவிக்கத் துணை புரியும்; திருந்து தொடை நோன்தாள்—திருந்திய துவக்கத்தையுடையவாக மேற் கொண்ட வினையின்கண் அசைக்க இயலா உறுதி மிக்க முயற்சியினையும்; அடிபுதை அரணம் எய்தி—கால்களை மறைக்கும் செருப்பு அணிந்து; படம்புக்கு—சட்டை அணிந்து; பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின் —பகைவர் எய்யும் அம்புகளின் வலியைத் தம் ஆற்ற லால் அழித்து விடுவதால், அவ்வம்புகள் பாய்ந்து ஆக்கும் புண் இனின்றும் விடுபட்ட மார்பினையும்; விரவு வரிக் கச்சின் வெண்கை ஒள்வாள்—மார்பில் விரிந்து கட்டப்பெற்ற கச்சின்கண் வெள்ளிய பிடி அமைந்த கூர்வாள்; வரையூர் பாம்பின் பூண்டு புடை தூங்க—மலை மீது ஊர்ந்து செல்லும் மலைப் பாம்பு போல், பூணப்பட்டு, பக்கத்தே தொங்க; சுரிகை நுழைந்து—குத்துவால் செருகப்பட்டு; சுற்று வீங்கு ஓச்சிய—பகைவரின் கரிய வலிய வில்லாற்றலை அழித்த; கண் அகன் எறுழ்த்தோள்—பரந்து அகன்ற வலிவு மிக்க*

தோளையும்; கடம்பு அமர் நெடுவேள் அன்ன—கடம்ப மரத்தடியில் வீற்றிருக்கும் முருகனை ஒத்த; மீளி—அண்டினாரை, ஆபத்தினின்றும் மீட்கும் பேராற்றலையும்; உடம்பிடித் தடக்கை—வேலேந்திய பெரிய கையினையும் உடைய; ஓடாவம்பலர்—போரில் பின்னீடாத பேராற்றல் வாய்ந்த வீரர்கள்; தடவு நிலைப் பலவின்—வளைந்த தோற்றத்தை யுடைய பலா மரத்தின்; முழு முதல் கொண்ட—அடிமரத்தில் குலை கொண்ட; சிறுசுளைப் பெரும் பழம் கடுப்ப—சிறிய சிறிய சுளைகளைக் கொண்ட பெரிய பழத்தை ஒப்ப; மரியல் புணர்ப்பொறை தாங்கிய—மிளகின் இருபுறமும் சரி எடையுடையவாகக் கட்டிய சுமையைத் தாங்கிய; வடுஆழ் நோன்புறத்து—வடு அமைந்த வலிவு மிக்க முதுகினையும்; அணர்ச்செவி—நிமிர்ந்து நிற்கும் காதுகளையும் உடைய; கழுதைச் சாத்தொடு—வழங்கும்—கழுதைக் கூட்டத்தோடு துணையாகச் செல்லும்; உல்கு உடைப் பெருவழி—சுங்கம் கொள்ளும் சுங்கச் சாவடிகள் மலிந்த பெருவழிகளில்; கவலை காக்கும்—கவர்த்த வழிகளைக் காத்து நிற்கும்; வில் உடை வைப்பின்—வில்வீரர் வாழ்கின்ற ஊர்களைக் கொண்ட; வியன்காட்டு இயவின்—பரந்து அகன்ற காட்டு வழியில்.)

# 5. விருந்து ஓம்பும் எயினர்

காஞ்சி வழி கொடுமை அற்றது; காவல் மிக்கது என்பதை உறுதி செய்வதற்காகத், தான் கூறிய விளக்கங்களால், பெரும்பாணனுக்கு வழியச்சம் அற்றிருக்கும். ஆனால், காஞ்சியை ஒரு நாளிலோ, ஓர் இரவிலோ அடைந்து விடுதல் இயலாது. பாலை, முல்லை, குறிஞ்சி, மருதம். நெய்தல் என்ற நிலவகைகளையெல்லாம் கடந்து சென்றால்தான் காஞ்சியைக் காண இயலும். நாள் பல நடக்க வேண்டியிருக்கும். அத்தனை நாட்களுக்கு வேண்டிய உணவினை உடன்கொண்டு செல்வதும் இயலாது. இரவுக்காலத்தே இருந்து செல்வதற்கு வேண்டிய இடங்களுக்கு என்ன செய்வது! என்ற எண்ண அலைகள் பெரும்பாணனை அலைக்கழிக்கவும் கூடும் என உணர்ந்த காரணத்தால், கடந்து செல்ல வேண்டிய இடைவழியில் குறுக்கிடும் அந்நிலங்களின் இயல்பையும், இந்நிலங்களில் வாழும் மக்களின் இயல்புகளையும், அவர்கள், வழிப்போவார் அனைவர் பாலும் பொதுவாகவும். திரையன் அவை நோக்கிச் செல்லும் பாணர் போலும் இரவலர்பால் சிறப்பாகவும் காட்டும் பேரன்பு நிலைகளையும் விரிவாகவும் எடுத்துக் கூறத் தொடங்கி, பெரும்பாணன் முதற்கண் அடியெடுத்து வைக்கயிருக்கும் பாலை நிலத்தவர் பற்றிக் கூற முற்பட்டார்.

மழை பெறாக் கடும் வறட்சியாலும், ஞாயிற்றின் கொடும் வெப்பத்தாலும் காய்ந்து தீய்ந்து போன குறுங்காடுகள் இடையிடையே இடம்பெறும் பெருமணல் பரப்

பாகிய பாலை நிலக் கொடுமை கண்டு கலங்க வேண்டுவ தில்லை; செல்லும் வழியில், அப்பாலை நிலத்து மக்களாம் எயினர் குடியிருப்புக்களை ஆங்காங்கே காணலாம். உழுது பெறவல்ல நெல் போலும் நன்செய்ப் பொருள்களோ, தினை சாமை போலும் புன்செய்ப் பொருள்களோ ஆங்குக் கிடைப் பது அரிது. அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் புல் அரிசி ஒன்றே. அப்புல் அரிசியும் எளிதில் கிடைத்து விடாது. சிறிதே மழை பெய்யுங் காலத்தில் முளைத்து முற்றி உதிரும் புல் அரிசியை, எறும்புகள், தங்களுக்கு ஆண்டு முழுமைக்கும் வேண்டும் குறிக்கோளுடன் ஒவ்வொன்றாக ஈர்த்துச்சென்று, தங்கள் வளைகளுள் சேர்த்து வைத்திருக்கும். அத்தகைய வளைகள் உள்ள இடங்களைத் தேடிக் கண்டு பிடித்து வளை களைத் தோண்டி ஆங்குள்ள புல்லரிசிகளைத் திரட்டிக் கொண்டு வருதல் வேண்டும். எறும்புகள், அரிசியை, வளை களின் ஆழமான பகுதியில் சேர்த்து வைத்திருக்கும் ஆத லாலும், நிலம் வன்னிலம் ஆதலாலும், வளைகளை எளிதில் தோண்டுவது இயலாது. ஒரு பக்கம் அடிக்க அடிக்க, தலை விரியாதிருப்பதற்காகக் கட்டப்பட்ட இரும்புப் பூணும், மறு பக்கம், கரையில் செருகப்பட்ட உளி போலும் வடிவுடைய இரும்புக் கடப்பாரையும் உடையவாக, ஆச்சா அல்லது கருங் காலி போலும் வயிரம் மிக்க மரத்தால் ஆன, பருத்த தடி கொண்டு, வளைகளைச் சிறிது சிறிதாகக் குத்திக் குத்திக் கிளரி மண்ணை அகற்றி அரிசியைப் பிரித்து எடுக்கவேண்டும். ஒரு வீட்டில் வாழ்வார் அனைவர்க்கும் தேவைப்படும் அவ் வளவு புல்லரிசியையும், ஒரே வளையில் பெற்றுவிட இய லாது. உள்ள எறும்பு வளைகள் அவ்வளவையும் தோண்டி எடுத்தல் வேண்டும். அப்பணி, வீட்டில் உள்ள ஒரு சிலரால் மட்டும் ஆகிவிடாது. வீட்டில் உள்ள அனை வரும் சென்று தோண்டுதல் வேண்டும். அண்மையில் ஈன்று எடுத்த மகவோடு, மெத்தென்ற மான் தோல் மீது முடங்கிக் கிடப்பது அல்லது எழுந்து நடமாட இயலாதவளாகக் காணப்படும் ஒருத்தி தவிர்த்து ஆண், பெண், இளையோர்,

முந்நியோர் அத்துணை பேரும் சென்று வளை தோண்டினால் தான் ஓரளவு அரிசியையேனும் கொண்டுவர இயலும். ஆக அவர்கள் ஈட்டி வைத்திருக்கும் அப்புல்லரிசி அவ்வளவு அரும் பாடுபட்டுப் பெற்றதாகும்.

சோறுக்கு வேண்டும் புல்லரிசியாவது, அப் பாலை நிலத் திலேயே ஒரு வகையில் கிடைத்து விடும். ஆனால், துணை உணவாகும் காய்கறியைக் காண்பதே இயலாது. வெகு தொலைவில் உள்ள கடற்கரையைச் சேர்ந்த நெய்தல்நிலத்து மீனவர்கள், பச்சை மீனாக விற்றது போக, விலையாகாது விடப்படும் மீனை உப்பிட்டு உலர்த்தி விற்பனைக்காகக் கொண்டு வரும்போது வாங்கி வைக்கும் கருவாடு தவிர்த்து வேறுபொருள் கிடைப்பது அரிது. அக்கருவாடு தானும் நினைத்தபோது கிடைத்துவிடாது. மீனவர்கள் வரும்போது வாங்கி வைத்திருந்தால்தான் உண்டு.

ஆக, எயினர், தங்களுக்கு உணவாகப் பயன்படும் புல் லரிசியையும் கருவாட்டையும் கெடாமல் பேணிக் காப்பதில் விழிப்புடையவர்களாக இருப்பர். மக்கள் உட்கொள்ளும் உணவு வகைகளில் கடைசி தரத்தைச் சேர்ந்தவை இவை. ஆகவே, இவற்றை, அப்பாலை நிலத்து எயினர்களைத் தவிர்த்து வேறு நிலத்து மக்கள் விரும்பமாட்டார்கள். மேலும் எயினர்கள் கொடியவர்கள். மற்றவர் அவர்களைக் காணவும் நடுங்குவர். அதனால், அவ்வுணவுப் பொருள் களுக்கு மக்களால் அழிவு நேராது. ஆனால், இவற்றையும் திருடிச் செல்லும் பகைவர் இல்லாமல் போய்விடவில்லை. பாலை நிலத்தில், இவை தவிர்த்து வேறு உணவுப் பொருள் கிடைக்காது என்றால் அந்நிலத்து வாழ் அணில், எலி போலும் உயிர்களுக்கு வேறு என்ன கிடைத்து விடும். அவை யும் இவற்றை நம்பியே உயிர் வாழும். அதனால் அவ்வுணவுப் பொருள்களுக்கு அணில்களாலும், எலிகளாலும் வரும் கேடு மிக் மிக அதிகமாம். அதனால், அரும்பாடு பட்டு ஈட்டி

வைத்திருக்கும் அவ்வுணவுப் பொருள்கள் அணில் வாயிலும், எலி வாயிலும் விழுந்து விடாதபடிக் காப்பதில் எயினர் மிகவும் கருத்துடையவராக இருப்பர்.

தம்குடில்களைச் சூழ உள்ள இடங்களில் ஆடி மகிழும் அணில்களைக் காணும் எயினர் உள்ளத்தில், மெத்தென்ற பஞ்சுபோலும் மென்மையான மயிர் சிலிர்த்துத் தோன்ற, வரிவரியான கோடுகளோடு கூடிய அவற்றின் அழகிய முதுகு, உயர்ந்த அடியினை உடைய இலவ மரத்தின் நீண்ட கிளைகளில் காய்த்து, அகத்தே இருக்கும் பஞ்சு புறத்தே தோன்றுமளவு முற்றி வெடித்துத் தொங்கும் இலவங் காய்களை நினைவூட்டி மகிழ்ச்சி அளிக்கும் என்றாலும், தங்கள் உணவுப் பொருள்களுக்கு அவ்வணில்களால் ஆபத்து உண்டாகும் என்ற உணர்வு, குடிசைகளுள் அவ்வணில்களையும் நுழைய விடாதபடி பார்த்துக்கொள்வாயாக என நினைவூட்டிவிடும்.

அதனால், தம் குடியிருப்புக்களை அணிலும், எலியும் நுழையாதவாறு அமைத்துக்கொள்வர். ஈச்ச மரத்தின் மட்டைகள், வேலின் முனைபோலும் கூரிய வலிய முனை வாய்ந்த இலைகளை அடர்த்தியாகக் கொண்டவை. அவ்வீச்ச மட்டைகொண்டு குடில்களின் கூரைகளை அமைத்தால், அணிலோ, எலியோ நுழையாது. அதனால், எயினர் ஈச்ச மரங்களைத் தேடிச் சென்று, வெள்ளம் வடிந்த ஆற்றுப் படுகையில் அறலிட்டிருக்கும் மணல்போல் காட்சிதரும் அடியையுடைய அம்மரத்து மட்டைகளை வெட்டிக்கொண்டு வந்து, குடில்களைத் தொலைவிலிருந்து நோக்குவார்க்கு முள்ளம் பன்றியின் முதுகுபோல் காட்சிதரும் வகையில் தம் வீட்டுக் கூரையை அமைத்து இருப்பர்.

வாழிடம் குடில்களே ஆயினும், பாதுகாப்பு மிக்கது என்பதாலும், புல்லரிசியும் கருவாடும் வேண்டுமளவு சேமித்து வைக்கப்பட்டுள்ளன என்பதாலும், அக்குடில்களின் இல்லத்து அரசிகளாம் எயிற்றியர் உள்ளத்தில் எப்

போதும் மகிழ்ச்சி குடிகொண்டிருக்கும். அவ்வக மலர்ச்சி, வெண்பல் வரிசை புலப்பட வாய்நிறைய வெளிப்படும் சிரிப்பால் நன்கு புலப்படும். அவ்வெயிற்றியர் உணவு சமைக்கும் முறையும் பாராட்டத்தக்கதாகும். முதற்கண், புல்லரிசையை மூடிக்கொண்டிருக்கும் உமியையும் ஆடையையும் நீக்க முனைவர். அதற்கு, அதை உரலில் இட்டுக் குற்றுதல் வேண்டும்.

பழகிய மானைக் கொண்டு பழகாப் புது மான்களைப் பிடிப்பது ஒரு முறை. அதனால் எயினர் மனை ஒவ்வொன்றிலும், அவ்வாறு பழகிய மான் ஒன்று வளர்க்கப்பட்டு வரும். பார்வை மான் என அழைக்கப்படும் அந்த மானைக் குடலின் முற்றத்தே வளர்ந்து நிற்கும் விளா மரத்தில் கயிறுகொண்டு கட்டி வைப்பர். மான் சுற்றிச் சுற்றி வருவதால், மரத்தில் கட்டிய கயிறும் சுற்றிச் சுற்றி வந்து மரத்தின் அப்பகுதியை தேய்த்துவிட்டிருக்கும். இவ்வாறு பார்வை மான் பிணிக்கும் கட்டுத் தறியாகவும் பயன்படும் அவ்விளா மரம், குடில்வாழ் மக்கள் தளர்ச்சி அற்று உழைப்பதற்கு உறுதுணையாக, முற்றத்தில் நிறை நிழலை பரப்பி நிற்கும். அம்மரத்தின் அடியில் புதைக்கப்பட்டிருக்கும் கல்லுரலில் புல்லரியை இட்ட எயிற்றியர், வயிரம் பாய்ந்த குறுகிய உலக்கை கொண்டு பல முறை குற்றி உமியும் ஆடையும் போக்கி எடுத்துக் கொள்வர். பின்னர் சமைப்பதற்கு வேண்டிய தண்ணீர் கொண்டுவரச் செல்வர். நிலம் வன்னிலம், வறட்சி மிக்கது. அதனால், கிணறு ஆழமாகத் தோண்டியிருப்பினும், கல்லூற்றாகவே இருப்பதால் தண்ணீர் சிறிதளவே கிடைக்கும். அதுவும், பருகுவதற்கு இனிய நன்னீராக இராது. உவர் நீராகவே இருக்கும். ஆயினும் அது தவிர்த்து வேறுநீர் கிடைக்காது. அதனால் அந்நீரை மொண்டு வந்து சேர்வர். அடுப்பில் தீ மூட்டுவர். கொம்மை முரிந்து கிடக்கும் அவ்வடுப்பில், சோற்றுப் பானையை ஒருவாறு நிறுத்துவர். பானை பழைய பானை, அதனால் வாய் உடைந்திருக்கும். அம்மூளிப்பானையில் நீர் ஊற்றித் தீ மூட்டுவர். நீர் கொதிக்கத் தொடங்கி

யதும், முன்பே உமிபோக்கியும், கல் நீக்கியும் இருப்பதால் புல்லரிசியை நீரில் இட்டு அரித்து எடுக்காமல், நேரே உலையில் இடுவர். இவ்வாறு அரும்பாடுபட்டு ஆக்கிய புல்லரிசிச் சோற்றைக் கருவாட்டுடன் கலந்து, அனைவரும் ஒருங்கிருந்து உண்டு மகிழ்வர்.

அவ்வெயினர்கள் உணவு உண்ணப் புகும் நிலையில் பாணர் போலும்இரவலர்களைப் பார்த்துவிட்டால், உடனே உண்பதை விடுத்து ஓடிச்சென்று எதிர்கொண்டு அழைத்து, வருவர். வந்தவர்களின் ஊர், பேர், உற்றார் பற்றி உசாவுவர். வந்தவர்கள், பிறர்மேல் வலியச் சென்று போரிட விரும்பாது, பிறர் ஆணவம் மிகுந்து, தம் ஆற்றலை நிலைநாட்ட வலிய போர் மேற்கொண்டு வருவராயின், அவரை அழித்து வெற்றி கொண்டு அது பாராட்டி அரசு சூட்டும் பொன்னாலான தும்பை மலர் மாலை அணிந்து சிறக்கும் சிறப்புமிகு வீரர்களுக்குத் தலைவனும், பகைப்படை எவ்வளவு வலிவு மிகுந்த பெரும்படை ஆயினும், அப்படையை வென்று முன்னேறுவதல்லது, தோற்றுப் பின்னிடாப் பெருமை மிகு நாற்படை கொண்டவனும், இவ்வாறு ஆற்றல்மிகு வீரர்களையும் நாற்படைகளையும் உடைமையால், களம், பலவென்று, அது பாராட்ட, காலில், அரிய வேலைப்பாடு அமைய பொன்னால் ஆக்கப்பெற்ற வீரக் கழல் புனைந்தவனும், பல்வேறு வள்ங்களைக் கொண்டு இருப்பதோடு, நின்ற கோலத்து நெடுமால் கோயில் கொண்டிருக்கும் வேங்கடமலை நாட்டை உடையவனும் ஆகிய இளந்திரையன் புகழை வாயாரப்பாடிய பின்னர், அவனைப் பாடிப் பாராட்ட அவன் அவை நோக்கிச் செல்லும் பாணர்கள் யாம் எனக்கூறியது கேட்ட அக்கணமே, திருவுடை மன்னனாம்திரையனைத் திருமாலாகவே கருதி அன்பு செலுத்தும் எயினர்கள் அவன் புகழ்பாடும் பாணர்களையும் கடவுளர் வடிவங்களாகவே மதித்துத் தம்பசியையும் மறந்து, பாணனையும் அவன் உடன் வந்திருப்பார் அனைவரையும் அமர்த்தி, அவர் முன் பரப்பிய தேக்கிலைகளில், ஆக்கி வைத்திருக்கும் உணவைத்

தெய்வங்களுக்குப் படையல் இடுவது போன்ற உளநிறை வோடு படைத்து; அவர்கள் அது உண்டு மகிழ்வது கண்டு மனம் நிறை மகிழ்வெய்துவர். நிலம் வன்னிலம் ஆயினும் எயினர் உள்ளம் மென்மையானது. அந்நிலத்துக் கிணற்றில் நீர் ஊறாது; ஆயினும் எயினர் உள்ளத்தில் அன்பு ஊறும். நிலம் பாலைதான்; ஆனால்; ஆண்டுவாழும் எயினர் பசுமையான உள்ளம் வாய்ந்தவர். ஆகவே பயம் அற்றுச் செல்வாயாக என்றார்,

"நீள்அரை இலவத்து அலங்கு சினை பயந்த
பூளை அம் பசுங்காய் புடை விரிந்தன்ன
வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது
ஆற்று அறல் புரையும் வெரிந் உடைக் கொழுமடல்
வேல் தலை அன்ன வைந்நுதி நெடும் தகர்
ஈத்து இலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை
மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி
ஈன்பிணவு ஒழியப் போகி, நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இடுநிலக் கரம்பைப் படுநீறு ஆடி
நுண்புல் அடக்கிய வெண்பல் எயிற்றியர்
பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழல் முன்றில் நில உரல் பெய்து
குறுங்காழ் உலக்கை ஓச்சி, நெடுங்கிணற்று
வல் ஊற்று உவரி தோண்டித், தொல்லை
முரவுவாய்க் குழிசி முரி அடுப்பு, ஏற்றி
வாராது அட்ட வாடு ஊன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை, ஒண் தொழில் கழற்கால்
செவ்வரை நாடன் சென்னியம் எனினே
தெய்வமடையில் தேக்கி இலை குவைஇ, நும்
பைதீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவீர்".

(83—105)

(நீள்அரை இலவத்து—நீண்ட அடியினை உடைய இலவமரத்தின்; அலங்கு சினை பயந்த—ஆடுகின்ற கொம்பு காய்த்த; பூளைஅம்பசுங்காய்—பஞ்சினை உடைய அழகிய பசுங்காயின்; புடை விரிந்தன்ன—முதுகு அகத்துள பஞ்சு புறத்தே தோன்றுமாறு—சிறிதே வெடித்துத் தோன்றினாற் போல; வரிப்புற அணிலொடு —வரிகளை முதுகிலே உடைய அணிலோடு; கருப்பை ஆடாது—எலியும் திரியாதவாறு; ஆற்று அறல் புரையும்—நீர் ஓடிவற்றிய ஆற்றின் அறலை ஒக்கும்; வெரிந் உடைக் கொழுமடல்—முதுகினை அதாவது அடிமரத்தை உடையதும், வளமான மடல்களை—யுடையதும் ஆகிய! வேல்தலை அன்ன வைநுதி ஈத்தலை—வேலின் முளையை ஒத்த கூரிய முனையினையுடைய ஈச்ச மரத்தில் இலையால வேய்ந்த நெடுந்தகர்—வேயப்பட்ட கூரையின் நெடிய மேட்டினையும், எய்புறக் குரம்பை— முள்ளம் பன்றியின் முதுகுபோல் காட்சிதரும் புறத்தினையும் உடைய குடிலின்கண்; மான்தோல் பள்ளி—மான் தோலாகிய படுக்கையில்; மகவோடு முடங்கி பிள்ளையோடு முடங்கி கிடக்கும், ஈன்பிளவு ஒழியப் போகி— மகவு ஈன்ற எயிற்றி ஒழிய ஏனையோர் சென்று; இரும்பு தலையாத்த—பூண் தலையிலே கட்டப்பட்ட; திருந்து கணை—நல்ல பருமன் வாய்ந்த, நோன்காழ்—நல்ல வயிரம் பாய்ந்த, விழக்கோல்—சிறந்த கோலினை உடைய, உளிவாய்ச் சுரையின்—உளிபோலும் வாயை உடைய பாரைகளால், மிளிர மிண்டி—மண்கீழ்மேலாகுமாறு நன்கு குத்தி; இருநிலக் கரம்பை—கரிய நிலமாகிய கரம்பை நிலத்தில், படுநீறு ஆடி— புழுதியைச் சலித்து; முன்புல் அடக்கிய— மெல்லிய புல்லரிசியை வாரிக் கொண்ட, வெண்பல் எயிற்றியர்— வெள்ளிய பற்களை உடைய எயினர் குல மகளிர், பார்வை யாத்த— பார்வை மான் கட்டப்பட்டிருக்கும், பறைதாள் விளவின்— தேய்ந்த அடி மரத்தினையுடைய விளா

மரத்தின், நீழல் முன்றின்— நிழல் படர்ந்தமனைமுற்றத்தில், நில உரல் பெய்து— நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் உரலில் புல்லரிசியை இட்டு, குறுங்காழ் உலக்கை ஓச்சி— குறுகிய வயிரம் வாய்ந்த உலக்கையால் குற்றி, நெடுங்கிணற்று— ஆழமான கிணற்றில், வல் ஊற்று உவரி தோண்டி— சிறிதே ஊறும், உவப்பு நீரை முகந்து கொண்டு, தொல்லை முரவு வாய்க் குழிசி— பழைய வாய் உடைந்து போன மூளிப் பானையை, முரி அடுப்பு, ஏற்றி— கொம்மை முரிந்த அடுப்பில் ஏற்றி, வாராது— அரித்து எடுக்காமல், அட்ட— ஆக்கிய, வாடு ஊன்— உலர்ந்த கருவாட்டுடனே கூடிய, புழுக்கல்— சோற்றை வாடாத்தும்பை— பொன்னாலான தும்பை சூடிய வயவர் பெருமான்— வீரர்களுக்குத் தலைவனாகிய ஓடாத்தானை— போரில் புறம்காட்டாத படையினை உடைய, ஒண்தொழில் கழல்கால்—அரிய வேலைப்பாடு அமைந்த வீரக்கழல் விளங்கும் கால்களை உடைய செவ்வரை நாடன்— சிறந்த மலைநாடாளும் திரையனுடைய, சென்னியம் எனினே— பாண்சாதியேம்யாம் என்று கூறுவீராயின்; தெய்வ மடையின்— தெய்வங்களுக்கு இடும் பலிபோல, தேக்கு இலை குவைஇ—தேக்கு இலையில் உணவைக்குவிப்பர் ஆகையினாலே, நும் பை தீர்குடும்பொடு— நும்முடைய பசுமைதீர்ந்த சுற்றத்தாருடன்; பதம் மிகப்பெறுகுவீர்— உணவினை மிகவும் பெறுகுவீர்கள்.)

## 5-1 கூடி உண்ணும் கானவர்

பாலைநிலத்துக் குடிமக்களாம் எயினர்களின் குடியிருப்புக்களில் கிடைக்கும் வரவேற்பு நன்றாகவே இருக்கும். ஆனால், அப்பாலை நிலம் தமக்கே உரியது எனும் உணர்வோடு, அந்நிலத்துக் குறுநில மன்னர்கள் போல், எல்லைகளில் குறும்பு என அழைக்கப்படும் சிறுசிறு அரண் அமைத்து

வாழும் அந்நிலத்து வீரர்களின் போக்கு எவ்வாறு இருக்குமோ என எண்ணி, பெரும்பாணன் அஞ்சி விடுதல் கூடாது என்பதால், அத்தகைய எயினக் குறும்புகளின் இயல்பையும் அவற்றிற்கு உரியராகிய எயினவீரர்களின் இயல்பையும், எடுத்துரைக்கத்தொடங்கியவர், முன்னதாக, கடந்து செல்ல வேண்டிய குறுங்காடுகளில், இரவிலும் பகலிலும் உணவிற்காகக் காட்டு விலங்குகளுக்குக் கண்ணிவைப்பதல்லது வேறு கேடு அறியாக்கானவர் வாழ்க்கையை விளக்கினார்.

கலைமானும், காட்டுப் பன்றியும், குறுமுயலும் வாழும் குறுங்காடு அது. பாதை எனச் சொல்லத்தக்க நிலையில் முறையாக அமைந்த பாதை எதுவும் இராது. மேலும் மான்கள் கூட்டம் கூட்டமாய்த் திரிவதால், வழியெங்கும் அம்மான்களின் காலடிகளே தெரிவதல்லது, மக்கள் காலடியைக் காண்பது இயலாது. அதனால், செல்லும் வழி இது தானா என்ற மயக்கமும் ஒரோவழி எழக்கூடும். ஆனால், அந்த மயக்கத்தைப் போக்கி, இதுவழிதான் என்பதைக் கூறாமல் கூறும் சில குறியீடுகளும் ஆங்கே உள்ளன. அது பாலை நிலம். ஆங்கு மழைபெய்வது அரிது. அவ்வாறு வானம் வறண்டுபோகும் காலத்தில் ஆங்கு வாழ்வார் குடிநீர் பெறுவான் வேண்டி வெட்டும் குழிகள், அவ்வழியின் இருமருங்கிலும் நிறைந்து தோன்றும். அதுகொண்டு வழி தெரிந்து செல்வது எளிதாகும், மேலும், இரவில் காட்டுப் பன்றி வேட்டை குறித்தும், பகலில் குறுமுயல் வேட்டை குறித்தும் திரியும் கானவர்களை அவ்வழிகளில், ஆங்காங்கே காணலாம். ஆகவே வழி அச்சமும் தேவையில்லை என்றவர், அவர்களின் வேட்டை முறைகளையும் சிறிதே விளக்கத் தொடங்கிவிட்டார்.

பன்றி வேட்டை பற்றிய விளக்கத்தை முதற்கண் எடுத்துக்கொண்டவர்க்குப் பன்றியின் உடலமைப்பைப் பற்றியும் சிறிது கூற விருப்பம் எழுந்ததுபோலும். ஆனால்,

காட்டுப் பன்றிகள் திரியும் காலம் இராக்காலம்; மேலும் அதன் நிறமே கறுப்பு, அதனால் உடலமைப்பைக் காட்ட முடியவில்லை, என்றாலும், கார் இருள் இடையேயும் கறுப்பு நிறத்து ஊடேயும், காண்பார் கண்களுக்கு, அதன் வாயின் இருபுறங்களிலும் முளைத்து வெளிப்பட்டுத் தோன்றும் கொம்புகள் தெற்றெனப் புலப்பட்டுவிடும், வளைந்து தூய வெண்ணிறம் வாய்ந்த அக்கொம்புகள் வடிவாலும் நிறத்தாலும் அகத்தில் பூவை—நினைவூட்ட, அவ்வகத்தி இலைகள், தம்மொத்த வடிவுடைய இலைகளைக் கொண்டதும், பாலையின் புறத்திணை உரிப்பொருளாகிய, வெற்றிக்கு உரியதாகிய வாகை எனும் பெயரே தாங்கி அப்பாலை நிலத்தில் வளர்ந்து நிற்பதுமாகிய வாகை மரத்தை நினைவூட்ட, அந்நினைவு ஆட்டத்தில் சிறிதே மயங்கியபின்னர் கானவர் காட்டுப் பன்றியை வேட்டை யாடும் விதத்தை விளக்கத் தலைப்பட்டார்.

காட்டுப் பன்றிகள் உள்ள இடத்தை அறிந்து அடைவதும் அரிது. அவற்றை நேர்நின்று வளைத்துப் பிடிப்பதும் இயலாது. அதனால், வாழிடம் விட்டு, அவை தாமாகவே வெளிப்பட்டு வருவதை எதிர்நோக்கி இருப்பர், காட்டில், வேறு எங்கும் தண்ணீர் இல்லாமையால் தம் நீர்வேட்கையைப் போக்கிக்கொள்ள, அவையும், கானவர், அகழ்ந்து வைத்திருக்கும் குழிகளுக்கே வருதல் வேண்டும். இதை அறிந்து வைத்திருக்கும் கானவர், அத்தகைய குழிகளைச் சூழவும் வேறு குழிகளை அகழ்ந்து, அவை குழிகள் எனத் தோன்றாவாறு, மேற்புறத்தைத் தழைகளால் மறைத்து விட்டு, அக்குழிகளின் அகத்தே ஒரு புறமாக ஒடுங்கிக் கிடப்பர். நீர் உண்ணவரும் பன்றி, அக்குழிகள் மீதுஅறியாது கால்வைத்ததும், நிலைகுலைந்து, அதன் அகத்தே வீழ்ந்து விடும். உடனே, அங்கே ஒடுங்கியிருக்கும் கானவர் அப் பன்றியை அகப்படுத்திக்கொள்வர்.

பன்றிவேட்டை, கானவர் எண்ணியவாறு எப்போதும் வாய்த்துவிடுவதில்லை. இரவெல்லாம் காத்திருந்தாலும் பன்றி வராமலே போய்விடுவதும் உண்டு, பன்றி வந்தாலும், வெட்டிய குழிகளில் வீழ்ந்துவிடாமல் நீர் உண்டு சென்று விடுவதும் உண்டு. குழியில் வீழ்ந்தாலும் கானவரைத், தன்வலிய கொம்புகளால் குத்தித் துன்புறுத்திவிட்டுத் தப்பி விடுவதும் உண்டு. அதனால் பன்றி வேட்டை பயனற்றும் போவதும் நிகழும். அவ்வாறு ஏமாற்றம் காணும் கானவர், இரவில், பன்றிவேட்டை ஆடுவதைக் கைவிட்டுப், பகலில் முயல்வேட்டை மேற்கொள்வர். முயல் விரைந்து ஓட வல்லது. தப்பி ஓடும் போது உடன் ஓடித் துரத்திப் பிடித்தல் தம்மால் இயலாது என்பதால் வேட்டை நாய் களையும் உடன்கொண்டு செல்வர். வேட்டை வாய்த்ததும் விரைந்து கவ்விக்கொள்ளும் உணர்வோடு எப்போதும் வாய் அங்காந்தே திரியும் நாய்களுடன் செல்லும் கானவர், குறு முயல்கள் அடங்கியிருப்பனவாகவும், வெளிப்படும் முயல்கள் குறுகிய ஒருவழி தவிர்த்து, வேறு பக்கங்களில் தப்பிவிடாத வாறு, நாற்புறமும் வேலிகளால் சூழப்பெற்றனவுமாகிய தூறுகளைத் தேர்ந்து, ஒன்றோடொன்று பிணைத்துப் பின்னப்பட்ட வலையை, அக்குறுகிய வழியில் கட்டிவிட்டு, ஆங்கே சிலர் காத்திருக்க, சிலர் உள்ளே புகுந்து முயல் அடங்கியிருக்கும் தூறுகளைத் தடிகொண்டு தாக்குவர். அத்தாக்குதலுக்கு அஞ்சி வெளிப்படும் முயல், பல திசை களிலும் ஓடியும், அங்கெல்லாம் வேலி நின்று தடுக்கவே, வேறு வழியின்றி, அச்சிறுவழியாக வெளிப்பட விரையுங்கால், ஆங்கே கட்டப்பட்டிருக்கும் வலையுள் வீழ்ந்துவிட, கானவர் அதை அகப்படுத்திக் கொள்வர். வலையுள் அகப்பட்டுக், கிடக்கும் முயலை அகக் கண்களால் பார்க்கின்றார் புலவர். முயல் உறுப்புக்களில் எளிதில் புலப்படுவன இரு காதுகளே. எப்போதும் நிமிர்ந்தே நிற்கும் அக்காதுகளின் தோற்றம், தாமரை மலரின் புறஇதழ்களை நினைவூட்ட, அத்தாமரை மலரின் அழகிய தோற்றம், அம்மலரைத்

தாங்கி நிற்கும் தாமரைத்தண்டு, அத்தண்டைக் கைப்பற்றுவார் கைகளைக் குத்தும் சிறுசிறு முட்கள் ஆகியவற்றை எண்ணி மகிழும் இன்ப உணர்வோடு, மீண்டும் முயலை நோக்கியபோது அவ்வின்ப உணர்வுகளுக் கெல்லாம் நிலைக்களமாகக் கிடக்கும் அம்முயலின்பால் அன்பு பாராட்டுவதற்கு மாறாக, அம்முயலைக் கொன்று தின்னும் கானவர் செயல்கண்டு கொதிப்பேறி, அவரைக் கடுங்கண் மறவர் என வசைபாடித் தீர்த்தாலும், கொன்ற முயலைத்தான் மட்டும் தனித்து இருந்து தின்ன எண்ணாது, கானவர் அனைவரையும் அழைத்து, அவர்க்கும் அளித்து உண்ணும் அவர் செயலை, அவர் உள்ளம் ஓரளவு பாராட்டவும் செய்தது. குறுங்காட்டுவழியின் இயல்பு இதுவாகும்.

''மான் அடி பொறித்த மயங்கு அதர் மருங்கின்
வான் மடி பொழுதில் நீர் நசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கிப்,
புகழா வாகைப் பூவின் அன்ன
வளைமருப்பு ஏனம் வரவு பார்த்து இருக்கும்
அரைநாள் வேட்டம் அழுங்கின்பகல் நாள்
பகுவாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கித்
தொகுவாய் வேலித் தொடர் வலை மாட்டி
முள்அரைத் தாமரைப் புல் இதழ் புரையும்
நெடும்செவிக் குறுமுயல் போக்கு அறவளை இக்
கடுங்கல் கானவர் கடறுகூட்டு உண்ணும்
அரும் சுரம் இறந்த அம்பர்''

(106—117)

(மான் அடி பொறித்த—மான்களின் அடிச்சுவடுகள் அழுந்திக் கிடக்கும்; மயங்கு அதர் மருங்கின்—வழியோ, அல்லவோ என மயங்குதற்குக் காரணமான வழிகளின் பக்கத்தில்; வான்மடி பொழுதில்—மழை பெய்யாமல்

பொய்த்துவிட்ட காலத்தில்; நீர் நசைஇக் குழித்த—நீர் விரும்பித் தோண்டிய; அகழ் சூழ் பயம்பின் அகத்து—ஆழ்ந்த பள்ளங்களைச் சூழ்ந்து உள்ள மூடு குழிகளின் உள்ளே; ஒளித்து ஒடுங்கி—மறைந்து ஒதுங்கி; புகழா வாகை—அகத்தியின், பூவின் அன்ன—வெண்ணிறம் வாய்ந்து வளைந்த மலரை ஒத்த; வளைமருப்பு ஏனம்—வளைந்த கொம்பினையுடைய காட்டுப் பன்றியின்; வரவு பார்த்து இருக்கும்—வருகையை எதிர்நோக்கி இருக்கும்; அரைநாள் வேட்டம் அழுங்கின்—நடுயாமத்து வேட்டை பயனளிக்காது போகவே; கைவிடுவராயின்; பகல்நாள்—பகற்போழ்தில்; பகுவாய் ஞமலியோடு—அங்காந்த வாயையுடைய வேட்டை நாய்களுடன்; பைம்புதல் எருக்கி—பசிய சிறுதூறுகளை அடித்து; தொகுவாய் வேலி—குறுகிய இடத்தையுடைய வேலியில்; தொடர்வலை மாட்டி—பின்னப்பட்ட வலைகளைமாட்டி; முள்அரைத்தாமரை—முள்ளைத்தண்டிலே உடைய தாமரை மலரின்; புல் இதழ் புரையும்—புற இதழை ஒக்கும்; நெடும் செவிக் குறு முயல்—நெடிய காதுகளையுடைய குறிய முயல்களை; போக்கு அற வளைஇ—தப்பிப் போகவிடாமல் வளைத்துப் பிடித்து; கடுங்கண் கானவர்—கொடிய கானவர்; கடறு—காட்டகத்தே; கூட்டு உண்ணும்—உறவினரோடு கூடி இருந்து உண்ணும்; அருஞ்சுரம்—அரிய பாலைநிலத்தை; இறந்த அம்பர்—கடந்துவிட்ட பின்னர்த்தாகிய இடத்தில்.)

## 5-2 குறும்பில் எயினர் விருந்து

குறுங்காட்டு வழிச் சென்று பாலைநிலத்து எல்லையை அடைந்த வழி ஆங்குப் பெரும்பாணர் கண்களில் புலப்படும் எயினக் குறும்புகள் பற்றிக் கூறத் தொடங்கினார். குறும்பு என அழைக்கப்படும் அச்சிற்றரசன் அகத்தே, படைக்கலன்களை இட்டுவைக்கும் படைக்கலக்கொட்டில் ஒன்று இருக்-

கும். அதன் உள்ளே ஒரு பக்கத்தில், வேற்படைகள் வரிசையாகச் சார்த்திவைக்கப்பட்டிருக்கும். அவற்றை அணுகினால், புலால் நாறும்; ஊன்றி நோக்கினால். கூரிய முனை மழுங்கியும் வளைந்தும் காணப்படும். இதற்கு ஏன் இந்தக் கதி என்ற வினா எழுப்பினால், ஆங்கு உள்ளார், இவ்வேற்படைகளெல்லாம் அண்மையில் நடந்த ஒரு போரில் ஈடுபட்டு, களத்தில் மடிந்து வீழும் வீரர் உடல்களைத் தின்பதற்காக வந்து வட்டமிட்ட பருந்துக்கூட்டத்தால் களமே நிழல்பட்டுப் போய்விட்டது எனக் கூறுமளவு, பகைவர் பல்லாயிரவர் உடலிற்பாய்ந்து உயிர் போக்கியதோடு, எஞ்சியோரை அஞ்சி ஓடச் செய்து களம் வென்ற சிறப்போடு இவண்வந்து சேர்ந்துள்ளன, அதுதான் காரணம் என்றுகூற, அவ்வேற்படையின் வீரம் கண்டு பாராட்டி அப்பால் நகர்ந்தால், ஆங்கு, வலதுகையில் ஏந்தும் வேற்படை பகைவரை அழிக்கும் நேரத்தில், பகைவர்படை தம் மெய்யில் பாய்ந்து விடாவாறு மெய்யை மறைத்துக் கொள்ள, வீரர் இடது கையில் ஏந்தும், பலகைபோல் படர்ந்த கேடயங்கள் வரிசை வரிசையாகச் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும். அடுத்துச் சென்றால், போர் என்றதுமே பயன் கொள்ளும் நிலையில், ஏற்றிய நாண் ஏற்றியவாறே உள்ள நெடிய பெரிய விற்படைகள் சார்த்தி வைக்கப்பட்டிருக்கும். அவ்வில் வரிசைக்கு அணித்தாக, வகைவகையான அம்புகள், குவியல் குவியல்களாகக் கொட்டிக் கிடக்கும்.

படைக்கலக் கொட்டிலைவிட்டு வெளியே வந்ததும், ஆங்கே, பருத்து உயர்ந்த கால்கள் நாட்டிப் போடப்பட்டிருக்கும் பெரிய பந்தலைக் காணலாம். மலையளவு உயரம் உடையனவாகக் காணப்படும் அப்பந்தலின் கால்கள் தோறும், ஒரு காலில் அம்புகள் நிறைந்த அம்பூறாத்தூணி, ஒரு காலில், கேட்ட அளவிலேயே பகைவரை அஞ்சி ஒடுங்கச் செய்துவிடவல்ல கடிய ஓசையை எழுப்பும் துடிப்பறை என மாறி மாறிக் கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கும்

மிக உயர்ந்த கால்களின் உச்சியில் கட்டப்பட்டுத் தொங்கும் அப்பறாத்தூணி, பெரும்பாணன், அடுத்துப்புக இருக்கும் மலைநாட்டில், மலை உச்சிகளில் கட்டப்பட்டிருக்கும் தேன் கூடுகளை நினைவூட்டுவதாய் இருக்கும்.

பந்தலின் வேறு ஒரு புறத்தில், மற்றும் ஒரு மனை காட்சி தரும். அம்மனை வாயிலில் கொடிய வேட்டை நாய்கள் இரும்புச் சங்கிலிகளால் கட்டிவைக்கப்பட்டிருக்கும். அந்நாய்களைக் காண்பார் எவரும், அம்மனையை அணுகுதற்கும் அஞ்சுவர். அம்மட்டோ! அத்தகைய நாய்கள் இருந்து காப்பதோடு, மேலும் வலுவான காவலும் ஆங்குப் போடப்பட்டிருக்கும். இவற்றையெல்லாம் நோக்கின், அது, அக்குறும்பின் தலைவன் உறையுளாம் போலும் என எண்ணத் தோன்றும்.

அவ்விடம் விட்டு அகன்றால், இவ்விடங்களையெல்லாம் உள்ளடக்கிய மிக உயர்ந்த சுற்றுமதில் காட்சிதரும். மதில், மழையாலும், வெய்யிலாலும் பாழ்பட்டுபோகாவாறு, அதன் தலை ஊகம் புல்லால் வேயப்பட்டிருக்கும். மதில் வாயிலை அணுகினால், அவ்வாயில், வலிய பலகைகள் பலவற்றை ஒட்டுச்சேர்த்துச் செய்யப்பட்ட கதவால் மூடப்பட்டிருப்பதும், அக்கதவினை, எளிதில் திறந்துவிடாதபடி அடைப்பதற்காக, உருண்டு திரண்ட கணையமரம் பொருத்தியிருப்பதும் புலப்படும். கதவைத் திறந்து கொண்டு வாயிற்புறத்தே வந்தால், ஆங்குப், பகைவர்களைக் குத்திக்கொலை செய்யவல்ல கழுமரங்கள் வரிசையாக நாட்டப்பட்டிருப்பதைக் காணலாம்.

குறும்பைவிட்டு வெளியே வந்தால், அக்குறும்பைச் சூழப் பகைவர் எளிதில் நுழைந்துவிடாதபடி, தடுத்து நிறுத்தவல்ல பருத்து உயர்ந்த மரங்கள் அடர்ந்த காடுபோல் வளர்ந்து நிற்பதைக் காணலாம். காவற்காடாகிய அப்பகுதி

யினின்றும் வெளிப்பட்டு வந்து பார்த்தால், காவற் காட்டைச் சூழ, முள்நிறை மரங்கள் முளைத்து வேலியாக அமைந்திருப்பதைக் காணலாம். எயினக் குறும்பின் அமைப்பு இதுவாகும்.

எயினக் குறும்பின் இயல்புகளை கூறக்கேட்ட பெரும்பாணன் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டு விட்டதை அறிந்த புலவர், ''எயினர் குறும்பு இத்துணைக் காவல் உடையது; கொடுமை மிக்கது என்றாலும், திரையன் புகழ்பாடும் பெரும்பாணராம் நும்போலும் இரவலர்க்கு நுழைவதற்கு எளிமையானது; இனிமை தருவது; உங்களைக் கண்டதுமே, கொடிய வில்லேந்தித் திரியும் எயினர்கள், தம் கொடுமையை மறந்து விடுவர்; உங்கள் முன் பணிந்து நிற்பர். உங்களை வரவேற்று அழைத்துச் சென்று, சோறும் கறியும் கொடுத்து உம் பசி போக்கி வழி அனுப்புவர். ஆங்கு அவர் இடும் சோறு, எயினர் சுரம் பையில் உண்ணும் புல்லரிசிச் சோறுபோல் இராது. ஈங்கு, படைக்கப்படுவது நெல் அரிசிச் சோறு; அதிலும், மேட்டு நிலத்தில் விளைந்த செந்நெல் அரிசிச் சோறு. அச்சோறு எப்படி இருக்கும் தெரியுமா? கடந்து செல்லும் களர் நிலத்தில் வளர்ந்து நிற்கும் ஈச்ச மரத்தின் கொட்டைகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவைபோல் கொட்டை கொட்டையாகச் சிவந்து காட்சி அளிக்கும். படைக்கும் சோறு மட்டுந்தான் சிறப்புடையதாக இருக்கும் என எண்ண வேண்டாம். சோற்றோடு உடன் படைக்கும் கறி, அதை விடச் சிறப்புடையதாகும். கறி, எளிதில் கிடைக்காத உடும்புப் பொறியல். தம்முடைய வேட்டை நாய்களை ஏவிக் கொண்டு வந்த அவ்வுடும்புப் பொரியலைப், படைத்த சோறு மறைந்து விடுமளவு நிறையப் படைப்பர். அத்தகைய சிறந்த உணவினை, வழியில் காணலாம் ஒவ்வொரு குறும்பிலும் பெறுவீர்கள். ஆகவே, பாலையை இனிது கடந்து செல்வாயாக'' என்றார்.

"பருந்துபட
ஒன்னாத் தெவ்வர் நடுங்க ஓச்சி
வைநுதி மழுங்கிய புலவு வாய் எஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ, முடிநாண்
சாபம் சார்த்திய கணை துஞ்சு வியன்நகர்,
ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்கும் கணைக்கால் பந்தர்த்
தொடர்நா யாத்த துன் அரும் கடிநகர்,
வாழுமுள் வேலிச் சூழ்மிளை படப்பை
கொடுநுகம் தழீஇய புதவின் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயில்
கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்
களர்வளர் ஈந்தின் காழ்கண்டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்அவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறை கால்யாத்தது வயின்தொறும் பெருகுவிர்"
(117—133)

(பருந்துபட—வீழ்ந்தவர் உடலைக்கொத்தித் தின்பதற்காகப் பருந்துகள் வந்து நிறையுமாறு; ஒன்னாத் தெவ்வர்—தம்மோடு பொருந்திவராத பகைவர்; நடுங்க ஓச்சி—அஞ்சுமாறு குத்தியதால்; வைநுதி மழுங்கிய—கூரிய முனை மழுங்கிய; புலவு வாய் எஃகம்—புலால் நாறும் வாயையுடைய வேற்படைகளை; வடிமணிப் பலகையொடு நிரைஇ—வடித்த மணிகள் கட்டிய கேடயங்களோடு வரிசையாக வைத்து; முடிநாண் சாபம் சார்த்திய—ஏற்றிய நாணோடு கூடிய வில்லைச் சார்த்தி வைத்த; கணைதுஞ்சு வியன் நகர்—அம்புகள் குவிந்து கிடக்கும் பெரிய வீட்டையும்; ஊகம் வேய்ந்த—ஊகம் புல்லாலே வேயப்பட்ட; உயர்நிலை

வரைப்பின்— உயர்ந்த நிலையையுடைய மதிலையும்; வரைத்தேன் புரையும்— மலையில் கட்டப்பட்டிருக்கும் தேனடையை ஒக்கும்; கவைக்கடை புதையொடு— கவர்த்த அடிப்பகுதியையுடைய அம்புக்கட்டுகளுடன்; கடுந்துடி தூங்கும்— கடிய ஓசையை எழுப்பும் துடி எனும் தோல் கருவியும் தொங்கவிடப்பட்டிருக்கும்; கணைக்கால் பந்தல்— பருத்தகால்களையுடைய பந்தலையும்; தொடர்நாய் யாத்து—சங்கிலிகளால் நாயைக் கட்டிவைத்துள்ள; துன்னரும் கடிநகர்— அணுகுதற்கு அரிய காவல் அமைந்த வீட்டையும்; வாழ்முள் வேலி—முள் உயிரோடு கூடிய. முள் நிறைந்த மரங்களால் ஆன வேலியினையும், மிளைசூழ் படப்பை- காவற்காடு சூழ்ந்த பக்க இடத்தினையும்; கொடு நுகம் தழீஇய புதலின்—உருண்டு திரண்ட கணைய மரம் பொருத்தப் பெற்ற கதவினையும்; செந்நிலை நெடுநுழி வயக்கழு நிரைத்த வாயில்—சாயாது நிற்கும் நிலையினையும், கூரிய முனையினையும் உடைய வலிய கழுமரங்கள் வரிசையாக நிறுத்தப்பட்ட வாயிலையும் உடைய; கொடுவில் எயினக் குறும்பில் சேப்பின்— கொடிய வில்லேந்திய எயினருடைய அரண்களில் சென்று தங்கினால்; களர் வளர் ஈந்தின்—களர் நிலத்தில் வளரும் ஈச்ச மரத்தின்; காழ் கண்டன்ன— கொட்டைகளைக் கண்டாற் போன்ற: சுவல்வளர்— மேட்டு நிலத்தில் விளைந்த; நெல்லின் செல் அவிழ்ச் சொன்றி—நெல்லின் சிவந்த அரிசியாலாகிய சோற்றை; ஞமலி தந்த—நாய் பற்றிக்கொண்டு வந்த; மனவுசூல் உடும்பின்—அக்குமணி போலும் முட்டைகளையுடைய உடும்பினது; வறை கால்யாத்தது—பொரியலாலே மறைத்த உணவை; வயின் தொறும் பெறுகுவிர்— வீடுகள் தோறும் பெறுவீர்கள்.)

# 6. மறவர் வீர வாழ்க்கை

பாலை நிலத்தில் எயினர் குறும்புகளில் செந்நெல் அரிசி சோற்றையும் உடும்புப் பொரியலையும் வயிறுபுடைக்கத் தின்ற மகிழ்ச்சியோடு, மலைநாடாம் குறிஞ்சி நிலத்தில் நுழையும் பெரும்பாணனுக்கு அம்மண்ணின் வீரப்பெருமையை விளக்கத் தொடங்கினார்.

மகளிர் இயல்பாகவே அஞ்சும் இயல்புடையவர்; வேற்றொலி கேட்பினும் வியர்த்து ஒடுங்கி விடுவர் என்பதும், அஞ்சாமையும் தறுகண்மையும் ஆடவர்க்கே உரியவை; ஆகவே, வீரம் என்றால் அதை ஆடவர்பால் மட்டுமே காணலாம், என்பதும் உலகியல். ஆனால், இது குறிஞ்சி நிலத்தவர்க்கு முழுமையாகப் பொருந்தாது. அந்நிலத்து ஆடவர் எவ்வாறு அடலேறுபோன்ற ஆற்றல்மிகு மறவர்களாக வளர்க்கப்படுகிறார்களோ, அதற்குச் சிறிதும் குறையாத நிலையிலேயே, அந்நிலத்து மகளிரும் மறக்குடி மகளிராகவே வளர்க்கப்படுவர். மகளிர், கருவுற்றிருக்கும்போது சிறிதளவு அச்ச உணர்ச்சிக்கும் ஆளாகிவிடுதல் கூடாது என்ப. குறிஞ்சி நிலத்து மகளிர், இதற்கும் அப்பாற்பட்டவராவர். வாழும் நிலம் கொடு விலங்குகள் மண்டிக்கிடக்கும் காடுகள் செறிந்த மலைநாடு. கோடையில் இடியேறு கூடிய கொடு மழை கொட்டும். கருவுற்றிருக்கும் நிலையிலும், தினைக்காத்தலும் கிழங்கு அகழ்தலும் ஆகிய பணி மேற்கொள்ளும் அந்நிலத்து மகளிர், தங்களைத் தாக்க வரும் யானை கண்டு அஞ்சுவதற்கு மாறாக, அதை அச்சுறுத்தி ஓட்டி மகிழ்வர்.

படம் எடுத்துப் பாயும் பாம்பைக் கண்டு பயந்து விடாமல் மாறாக, அதைப் பற்றி ஈர்த்துப் பாறை மீது மோதி உயிர் போக்குவர். நீர் உண்டு சூல்கொண்ட கருமேகத்திடையே. கண்ணொளி கெடுக்கும் பேரொளியோடு தோன்றிக் காது கள் செவிடுபடப் பேரொளி எழுப்பும் இடியொலி கேட்கும் நிலையிலும், கலங்காது தம்பணி மேற்கொள்வர்.

மகளிர் இயல்பே இது என்றால், ஆடவர் வீரம்பற்றிக் கூறவும் வேண்டுமோ? வெறும் உடல் உழைப்பால் பெற லாகும், ஊதியம் கொண்டு உடல் வளர்ப்பதை விரும்பார்; தம் ஆண்மையை நிலைநாட்டிப் பிறரை வெற்றி கொண்டு கொணரும் ஆக்கத்தால் மட்டுமே, தம் உடல் ஆக்கத்தைப் பெருக்க விரும்பும் பேருள்ளம் வாய்க்கப் பெற்றவர். அதற் கேற்ப வாட்போரில் வல்லவர். வாளோடு பிறந்தவர் எனக் கூறுமாறு, உண்ணும் போதும், உறங்கும்போதும்,எப்போதும் வாளேந்தியே காணப்படுவர்.

இம்மறக்குடி மாந்தரின் தலைவனாக வருபவன், அரும்பு மீசையுடைய கட்டிளங் காளையாக, காண்பவர், ஆண் புலி தானோ என எண்ணி அஞ்சும் தோற்றப் பொலிவு உடைய வனாகத் திகழ்வான். அவன் கீழ்ப் பணிபுரியும் வீரர்கள், குறிப்பிடும் விலங்கின் மீது குறி தவறாது பாய்ந்து பற்றி ஈர்த்து வரும் ஆற்றலும், தன்னை வளர்ப்பவன் பின், அவன் நிழல்போல் தொடர்ந்து செல்லும் அன்பும் வாய்க்கப் பெற்ற நாய் போன்றவர்கள்; அவன் ஏவும் இடம் சென்று ஏவிய பணியை முடித்து மீளவல்லவர்; அவனை ஒருபோதும் பிரியாப் பேரன்புடையவர். கையில் எப்போதும் வில்லேந்தி இருப்பவர்.

ஆண்மையும் ஆற்றல்மிகு வீரர்களும் இருப்பதால், அவன், தன் ஆணைகேட்டு அதற்கேற்ப நடந்து கொள்ள மறுக்கும் அரசனுக்குரிய அண்டை நாட்டினுள், ஆங்குள்ள அரிய காவல் கண்டு அஞ்சாது, இரவோடு இரவாகப் புகுந்து

எல்லைக் காவற்படைகளை அழித்து, அந்நாட்டு எல்லைக் கண் இருக்கும் அந்நாட்டு ஆனிரைகளைப் பொழுது புலர் வதற்கு முன்பே கவர்ந்து கொண்டு வருவர். ஊர் வந்தடைந் ததும் முதற்பணியாக, அன்றுவரை தங்களுக்குக் கடனுக்குக் கள் வழங்கிய கள் விலையாட்டிக்குக் கள் விலையாக, ஆனிரைகளில் ஒரு சிலவற்றைத் தந்து விடுவர். பின்னர்த் தங்கள் மனைகளில், தாங்களே காய்ச்சி வைத்திருக்கும் கள் வகைகளுள், மிக இனியதாகிய, நெல் இட்டுக் காய்ச்சிய கள்ளை உண்டு மகிழ்வர். பிறகு ஊர் மன்றத்திற்குச் சென்று, ஆங்குத் தம் வெற்றியைக் கொண்டாட கொண்டு வந்த ஆனிரைகளுள், கொழுத்துத்திரியும் கொல் லேற்றை அறுத்து, ஆக்கி, ஊராருடன் ஒருங்கிருந்து உண்டு, மகிழ்வர். அது முடிந்ததும் வீர விளையாட்டு மேற்கொள் வர். கொன்ற கொல்லேற்றின் தோலை, மயிர் சீவாமல் மடித்துப்போர்த்த மத்தளத்தை,ஒருவன் கூட்டத்தின் நடுவே வைத்து அடித்து முழக்க அவ்வொலிக்கு ஏற்ப, வில்லேந்திக் கிடக்கும் இடத் தோள்கள் வலப்புறம் வளையவும், வலத் தோள்கள் இடப்புறம் சாயவும் பகலெல்லாம் ஆடி மகிழ்வர்.

இவ்வாறு, சோம்பல் என்பதைச் சிறிதும் அறியாது வீர வாழ்க்கை வாழும் கானவர் குடியிருப்புகள் மிகுந்த மலை நாட்டில், மறவர்களின் வீர விளையாடல்களைக் கண்டு மகிழ்ந்தவாறே, காட்டுப் பாதையைக் கடந்து செல்வீர் களாக என்றார்:

"யானை தாக்கினும் அரவு மேல் செலினும்
நீல்நிற விசும்பின் வல்ஏறு சிலைப்பினும்
சூல் மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலி கூட்டு உணவின் வாட்குடி பிறந்த
புலிப்போத்து அன்ன புல் அணல் காளை
செந் நாய் அன்ன கருவில் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாள் ஆதந்து நறவு நொடை தொலைச்சி

இல் அடு கள்ளின் தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவண் சிலைப்பச்
சிலைநவில் எறுழ்த்தோள் ஓச்சி வலன் வளையூஉப்
பகல் மகிழ்தூங்கும் தூங்கா இருக்கை
முரண்தலை கழிந்த பின்றை.''

(134-147)

*(யானை தாக்கினும்—யானை தாக்க வந்தாலும்; அரவு மேல் செலினும்—பாம்பு தன்மேல் ஊர்ந்து சென்றாலும்; நீல் நிற விசும்பின்—நீல நிறம் வாய்ந்த மேகத்திடையே தோன்றும்; வல்ஏறு சிலைப்பினும்—கொடிய இடி இடித்தாலும்; சூல் மகள்—கருவுற்ற மகளும்; மாறா மறம் பூண் வாழ்க்கை—அவற்றிற்கு அஞ்சித் தன் வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொள்ளாத வீரம் செறிந்த வாழ்க்கையினையும்; வலிக்கூட்டு உணவின்—தம் ஆற்றலால், பிறர் நாட்டைக் கொள்ளைகொண்டு உண்ணும் வழக்காற்றினையும் உடைய; வாள்குடிப் பிறந்த—வாள் தொழில் வல்ல குடியில் பிறந்த; புலிப் போத்து அன்ன—ஆண்புலி போன்ற; புல் அணல் காளை—புல்லிய அரும்பு மீசை கொண்ட அக்குடித் தலைவன்; செல் நாய் அன்ன—குறித்த விலங்கின் மீது குறி தவறாது பாயவல்ல நாயை ஒத்த; கருவில் சுற்றமொடு—ஏவிய பணியை இடையூறு இன்றி முடிக்க வல்ல, வலிய விற்படையுடைய வீரர்களுடன்; கேளா மன்னர் கடிபுலம் புக்கு—தன் ஆணைகேளாத பகை அரசருடைய காவல்மிக்க இடத்தே சென்று; நாள் ஆ தந்து—விடியற்காலத்தில் அவர்கள் ஆனிரைகளைக் கவர்ந்து வந்து; நறவு நொடை தொலைச்சி—அவற்றை கள்ளுக்கு விலையாகக் கொடுத்து; இல்அடுகள்—வீட்டில் உள்ள கள் வகைகளில்; இன் தோப்பி பருகி—இனிய, நெல்லால் செய்த கள்ளை உண்டு; மல்லல் மன்றத்து—*

ஆரவாரம் மிக்க ஊர் மன்றத்தில்; மதவிடை கெண்டி—கொழுத்த கொல்லேற்றை அறுத்துத் தின்று; மடிவாய்த் தண்ணுமை—மடிந்த தோல் போர்த்த தண்ணுமை; நடுவண் சிலைப்ப—நடுவே இருந்து முழங்க; சிலை நவில் எறுழ்தோள் ஓச்சி—வில் கிடக்கும், வலிய இடது தோளைத் தூக்கி; வலன் வளையூஉ—வலப் பக்கமாக வளைத்து; பகல் மகிழ் தூங்கும்—பகற் போதெல்லாம் மகிழ்ந்து ஆடிச் சிறக்கும்; தூங்கா இருக்கை—சோம்பலைக் காணாக்குடியிருப்புகளைக் கொண்ட; முரண் தலை கழிந்த பின்றை—கரடுமுரடான காட்டு நிலத்தைக் கடந்த பின்னர்.)

# 7. ஆயர் மகளிர் அறிவும் அன்பும்

மலைநாட்டு மறக்குடி மக்களின் வாழ்க்கை வளத்தை எடுத்துரைத்த பின்னர், பெரும்பாணன் அடுத்துப் புக விருக்கும் முல்லை நிலத்து ஆயர் நலம்பற்றிக் கூறத் தொடங்கினார்.

ஒரு பால் மலை நிலமும், மறுபால் வயல் நிலமும் எல்லையாய் அமைய அவற்றிற்கு இடைப்பட்ட நிலமே முல்லை ஆகும். அதனால், முல்லை நிலத்தில் வாழ்பவர், ஆயர் எனும் ஓர் இனத்தவரே ஆயினும், அவ்வாயருள்ளும், மலை நிலத்தை ஒட்டிய பகுதியில் வாழ்வார் வாழ்க்கை முறை ஒரு வகையாகவும், வயல் நிலத்தை ஒட்டிய பகுதியில் வாழ்வார் வாழ்க்கை முறை வேறு வகையாகவும் அமைந்திருப்பது இயல்பே. அவ்விருவகைப்பட்ட வாழ்க்கை முறைகளையும் அறிந்து கொண்டாலல்லது ஆயர் வாழ்க்கை முறைகளை முழுமையாக அறிந்து கொண்டதாகாது; அதனால், அவ்விரண்டையும் விளக்க முனைந்து, மலை நிலத்தை ஒட்டி வாழும் ஆயர் வாழ்க்கை வளம் பற்றிய விளக்கத்தை முதற்கண் எடுத்துக் கொண்டார்.

ஆயர்பாடியில் வரிசை வரிசையாகக் காணப்படும் சிறு சிறு குடில்களின் குறுகிய கம்பங்களில், ஆடு தின்னும் தழைகள், அவை நின்று தின்பதற்கான உயரத்தில் கட்டப் பட்டிருக்கும். கூரையாக வேயப்பட்ட ஓலையும் பிறவும் சரிந்து தொங்குவதால், குடிசைவாயில் சிறு தூறுபோலும்

தோற்றம் அளிக்கும். மூங்கில் மிலார் கொண்டு பின்னப்பட்ட படலால் அது மூடப்பட்டிருக்கும். ஆட்டு மந்தையோடு சென்று தங்கும் இடங்களில், குட்டிகளை இட்டு மூடி வைப்பதற்காகச் செல்லும் இடந்தோறும் உடன் கொண்டு செல்வதற்காகக், கழிகள் கொண்டு கட்டி, கற்றை கற்றையாக வைக்கோல் வேயப்பட்டு சிறுகுடில் போல் காட்சி தரும் கூண்டு ஒரு பால் கிடக்கும். ஆயர் குடிலையும் ஆயர் உடைமையாம் ஆட்டு நிரையையும் காக்கும் கடமை பூண்டவன் இருக்கவும் துஞ்சவும் உதவும் தோலால் ஆன விரிப்பு ஒருபால் சுருட்டி வைக்கப்பட்டிருக்கும். பகலில், புனத்தில், மேயும் போது, ஆட்டுக்கிடாய் ஆட்டு மந்தையொடு கலந்து மேய விடப்படும் என்றாலும், இரவில் கிடாக்களை, மந்தையிலிருந்து பிரித்து, நீண்ட கயிற்றில் வரிசையாக இணைக்கப் பட்டிருக்கும் தாம்புகளில் பிணித்து விடுவர். தாமணி என அழைக்கப்படும் அத்தாம்பின் இரு முனைகளையும், இரு பக்கத்திலும் ஈர்த்துக் கட்டுவதற்காக நடப்பட்டிருக்கும் கட்டுத்தறிகள் ஒருபால் காட்சி அளிக்கும். கிடாய் நீங்கிய செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் அடைத்து வைக்க, முள்கொண்டு வேலி அமைத்து ஆக்கிய அடைப்பும், ஆடுகள் கழித்த எருக்குப்பையும் அடுத்தடுத்து இடம் பெற்றிருக்கும்.

ஆயர் மகளிர், இருள்புலரும் விடியற்காலத்தில், காகமும், கோழியும் துயில் எழுப்ப எழுந்து, தயிர் கடையத் தொடங்கி விடுவர். மழைகாலத்தில் ஆங்காங்கே முளைத்திருக்கும் குடைக்காளான்போலும் வடிவமும், தூய வெண்ணிறமும் வாய்ந்த குமிழ்கள் இடையிடையே தோன்றுமளவு இறுகத் தோய்ந்து இன்சுவை மிகுந்த தயிர் உள்ள பானையுள், மத்திட்டு, மத்தில் சுற்றிய கயிற்றின் இருமுனைகளையும் பற்றி மாறி மாறி வலிப்பர். தயிர் கடையும் போது எழும் ஒலி புலி முழக்கத்தை நினைவூட்டுவதாய் இருக்கும். அவ்வாறு கடைந்து, திரண்டு எழும் வெண்ணெயை வேறு

படுத்தி அகற்றிய மோரை, கடையும் போது தெரித்த மோர், மேற்புறமெல்லாம் புள்ளி புள்ளியாகக் காட்சி தரும் பானையுள் நிறைத்துக் கொண்டு, பானையைத் தலையில் மெத்தென்ற சுமட்டின் மீது வைத்துக்கொண்டு, காலையிலேயே மோர் விற்கச் சென்று விடுவர். நிறம் கறுப்புதான் எனினும் அக்கறுப்பினும் அழகு மிளிரும் மேனியராகிய ஆய் மகளிர் கூந்தலை ஆற்றறல் போல், வனப்புற வாரி முடித்து, காதில் அணித்திருக்கும் தாளுருவி எனும் அணி, நடைக்கு ஏற்ப, ஆடி அசையுமாறு, மூங்கில் போலும் வடிவும் வனப்பும் வாய்ந்த தோள்களை வீசி வீசி விரைந்து நடந்து மோர் விற்று முடிப்பர்.

மோர் விற்பனையால் கிடைக்கும் சிறுதொகை கொண்டு தம்வீட்டார் வாழ்வாங்கு வாழ்வதற்குத் தேவைப்படும் பொருள்களைக் குறைவற வாங்கிக் கொண்டு, நெய் விற்பனையால் பெருந்தொகை கிடைத்த போது, அது கொண்டு பெண்கள் இயல்பாக விரும்பும் பொன் அணிகள் வாங்கிவிட எண்ணாது, தம் குடும்பவருவாய் பெருகத்துணை புரியும், கன்று ஈன்ற எருமையையும், கன்று ஈன்ற பசுவையும் வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்வர். மனைவியர், இவ்வாறு மனைத்தக்க மாண்புடையவராகவும், வளத்தக்க வாழ்வுடையவராகவும் வாய்த்து விடுவதால், ஆயரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து போவார். அவ்வக மகிழ்ச்சி வாய் மடித்து எழுப்பும் சீழ்க்கை ஒலியாக வெளிப்பட்டு வழியும்.

இத்தகைய ஆயர் பாடியுள் புகுந்து விட்டால், அவர்கள் உங்களைத் தங்கள் மனையிலே இருத்தி, குறிஞ்சி நிலத்தில் மோர் விற்று, அதற்கு விலையாக பெற்றுவந்த தினையரிசியாலான சோற்றை, இனிய பாலோடு கலந்து படைப்பர் உண்டு மகிழ்வீராக என்றார்.

"மறிய
குளகு அரையாத்த குறுங்கால் குரம்பைச்
செற்றை வாயில், செறிகழிக் கதவின்
கற்றைவேய்ந்த கழித்தலைச் சாம்பின்,
அதளோன் துஞ்சும் காப்பின், உதள
நெடும் தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்
கொடுமுகத்து உருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி, எருப்படு வரைப்பின்,
நள்இருள் விடியல் புள் எழப் போகிப்,
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகை அன்ன கூம்புமுகிழ்
உறையமை தீம்தயிர் கலக்கி, நுரை தெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ் சுமட்டு இரிஇ
நாள்மோர் மாறும் நன் மாமேனிச்,
சிறுகுழை துயல்வரும் காதின், பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளைவிலை உணவிற் கிளையுடன் அருத்தி,
நெய்விலைக்கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை, நல்ஆன் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயின் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்".
(147 — 168)

(மறிய—ஆட்டு மறிகளுக்கு உரிய; குளகு அரை யாத்த-தழைகள் இடையிலே கட்டப்பட்ட; குறுங்கால்-குறுகிய கால்களையும்; செற்றை வாயில்—சிறு தூறு போலும் தோற்றம் தரும் வாயிலையும்; செறிகழிக் கதவின்—ஒன்றின் குறுக்கே ஒன்றாகச் செறுக்கப்பட்ட கழிகளால் ஆகி, படல் எனும் பெயர்கொள்ளும் கத வினையும் உடைய; குரம்பை—குடில்களையும்; கற்றை வேய்ந்த-வைக்கோல் கற்றை வேய்ப்பட்ட; கழித்தலை

சாம்பின்-கழிகளைத் தலையிலே உடைய, ஆட்டுக்குட்டி களை மூட உதவும் கூண்டினையும்; அதளோன் துஞ்சும் காப்பின்—தோல் பாய் உடையோன் இருந்து காக்கும் காவலையும்; உதள நெடுந்தாம்பு—ஆட்டுக் கிடாய் களின் நீண்டதாம்பு; தொடுத்த குறுந்தறி—கட்டப் பட்ட— சிறிய கட்டுத்தறிகளையும் உடைய முன்றில்— மனைமுற்றத்தில்; கொடுமுகத் துருவையொடு— வளைந்த முகத்தையுடைய செம்மறி ஆடுகளோடு; வெள்ளை சேக்கும்—வெள்ளாடுகள் அடைபட்டுக் கிடக்கும்; இடுமுள்வேலி—வெட்டிக்கொணர்ந்து நட்டுக் கட்டிய முள்வேலியையுடைய; எருப்படு வரைப்பின்— எருக்குவியல் மிக்க ஆயர்பாடியில், நள்இருள் விடியல்— செறிந்த இருள்கழியும் விடியற்காலத்தில்; புள்எழப் போகி—பறவைகள் குரல் எழுப்பி எழுப்ப எழுந்து சென்று; புலிக்குரல் மத்தம்—புலி முழக்கம் போலும் ஒலி எழக்கடையும் மத்து; ஒலிப்ப வாங்கி— ஆரவாரிக்குமாறு கயிறுகொண்டு வலித்து; ஆம்பிவான் முகை அன்ன—குடைக்காளானுடைய வெண்ணிற முகைகளையொத்த; கூம்பு முகை—கூம்பி எழும் முகை களையுடைய; உறை அமை தீந்தயிர் கலக்கி—உறைந்து இறுகிய இனிய தயிரைக் கடைந்து; நுரை தெரிந்து— நுரைவடிவில் வெளிப்படும் வெண்ணெயை வேறுபிரித்து எடுத்து; புகர் வாய்க் குழிசி—மோர்ப் புள்ளிகள் மிகுந்த வாயையுடைய மோர்ப்பானையை; பூஞ்சுமட்டு இரீஇ—மெத்தென்ற சுமட்டின் மீது வைத்துச்சென்று; நாள்மோர் மாறும்—நாட்சாலையில் மோர் விற்கும்; நல் மா மேனி—நல்ல அழகு வாய்ந்த கறுநிற மேனியையும்; சிறுகுழைதுயல் வரும் காதின்—தாளுருவி என அழைக்கப்படும் சிறிய அணி கிடந்து அசையும் காதினையும்; பணைத்தோள்—மூங்கில் போலும் தோளி னையும்; குறுநெறிக்கொண்ட கூந்தல்—சிறுசிறு அறல்கள் நிறைந்தாற்போல் வாரி முடித்த கூந்தலையும்

உடைய; ஆய்மகள்—ஆயர்குடியில் வந்தவள்; அளை விலை உணவின்—மோருக்கு விலையாகப் பெற்ற உணவுப் பொருள்களால்; கிளையுடன் அருத்தி—சுற்றத் தார் அனைவரையும் உண்ணப்பண்ணி; நெய்விலை—நெய்க்கு விலையாக; கட்டிப் பசும்பொன் கொள்ளாள் —பசும்பொன் கட்டிகளைக் கொள்ளாமல்; எருமை, நல் ஆன் கருநாகு—கன்றீன்ற நல்ல எருமையையும், நல்ல பசுவையும் வாங்கிவரும்; மடிவாய்க் கோவலர்—சீழ்க்கை அடிக்க மடித்த வாயையுடைய கோவலர்க்கு உரிய; குடிவயின் சேப்பின்-மனைகளில் சென்று தங்குவீ ராயின்; இருங்கிளை ஞெண்டின்—பெரிய சுற்றங்களை யுடைய நண்டின்; சிறுவார்ப்பு அன்ன—சிறிய குஞ்சுகள் போலும் வடிவுடைய; பசுந்தினை மூரல்—பசிய தினை அரிசியால் ஆன சோற்றை; பாலொடும் பெறுகுவிர்—பாலோடு பெறுவீர்கள்.)

## 7-1 ஆனிரை மேய்க்கும் ஆயர்

மலைநாட்டை அடுத்து வாழ்வதால், ஆனிரை ஓம்பி அவைதரும் பால்பயன் அல்லது வேறு வருவாய் காணா ஆயர் இயல்பை இனிது எடுத்துக் கூறியதை அடுத்து, வயல் வளம் மிகுந்த மருத நிலத்தை அடுத்து வாழ்வதால் உழவாலும் வளம் பெருக்கும் ஆயர் இயல்பை எடுத்துரைக்க முனைந்தவர், செல்லும் வழியில் ஆனிரையோடு, மேய்புலத்தில் உறையும் ஆயர் இயல்பை உரைப்பாராயினர்

பரல்கற்களும் முள்ளும் நிறைந்த காட்டுப் பகுதியிலேயே வாழவேண்டியிருப்பதால், ஆயர்கள் எப்போதும் தோலால் ஆன செருப்பு அணிந்திருப்பர்; செருப்புக்காலோடு ஆனிரையின் பின் அலைவதால், அவர் கால்கள் செருப்புத் தழும்பேறியிருக்கும். ஆனிரைகளை அடித்துத் துரத்தும் கோலும், காட்டை அழித்து விளைநிலம் காண, மரம் செ

கொடிகளை வெட்டி வீழ்த்தப் பயன்படும் கோடரியும் மாறி மாறி ஏந்தும் அவர் கைகளும் காழ்ப்பு ஏறி உரம் பெற்றிருக்கும். வாழிடம் விட்டு ஆனிரைகளோடு வந்து விட்டால், மீண்டும் வாழிடம் அடைய நெடுங்காலம் ஆகும் ஆதலின், செல்லும் இடங்களில் தேவைப்படும் உடை, உணவாக்கும் கலன்கள் ஆகியவை இடப்பட்ட உறிகள் இரு புறமும் தொங்கும் காவடியைச் சுமந்து சுமந்து, மயிர் அடர்ந்த அவர் தோள்களும் தழும்பேறிக்கிடக்கும். தலை மயிரைப் பசும்பால் தடவி வாரிமுடித்து, கொம்புகளிலும் கொடிகளிலும் பூத்து மணக்கும் பலவண்ணக் காட்டு மலர்களைக் கலந்து கட்டிய மாலையைச் சூட்டிக்கொள்வர். உடுப்பது ஒரே ஆடையாகவும், உண்பது கூழாகவும் கொண்டு, போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதற்கு இலக்கியமாய் அமைதி வாழ்வு காணும் அவர்கள் ஈன்ற கன்றுகள் பால் நிறை அன்பு உடையவாகிய ஆனிரைகளைப் பசும்புல் வெளியில் மேயவிடுத்து, இசை இன்பத்தில் ஆழ்ந்து விடுவர்.

முதற்கண் குழல் ஊதவிரும்பி, குழல் ஆக்குதற்கேற்ற மூங்கிலைத் தேர்ந்துகொண்டு, தீக்கடைக்கோலைக் கடைந்து தீ மூட்டி, அதில் காய்ச்சிய கம்பிகொண்டு மூங்கிலில் துளையிடத் தொடங்குவர். மணக்கும் புகை முதற்கண் சிறிதே தோன்றிப் படிப்படியாக மிகமிக, மூங்கிலில் கரிய துளைகள் வரிசையாக அமைய, மூங்கில் ஊது குழலாகிவிடும். குழலை வாயில் வைத்து காதுக்கினிய பாடலைப் பண்ணோசை எழ வாசிக்கத் தலைப்பட்டுவிடுவர். போதும் கேட்டது என வெறுக்குமளவு நீண்ட நேரம் குழல் வாசித்த பின்னர், யாழ் ஓசையில், அவர்க்கு வேட்கை எழும். குமிழ மரத்தினின்றும் வெட்டிக்கொணர்ந்த உள் துளை பொருந்திய கொம்பை யாழ்த் தண்டாகவும், கயிறு போலும், மெல்லிய மரலின் நாரை நரம்பாகவும் கொண்டு, குமிழங்கொம்பை வில் வடிவில் வளைத்து ஈர்த்துக்கட்டிய நரம்பைக் குறிஞ்சி என்னும் பண்ணோசை எழ, விரலால் எறிந்து இசைத்து

இன்புறுவர். அவர் எழுப்பும் அவ்வின்னொலி, வண்டுகளின் ரீங்காரத்தை ஒத்திருக்கும் ஆதலால், ஆங்குள்ள மலர்களில் தேன் உண்டு பறக்கும் வண்டுகள், அவ்வோசையைத் தம் இளவண்டுகள் எழுப்பும் ஓசைதானோ எனக்கேட்டு மயங்கும். ஆனிரைகள் வயிறாரமேய்வதற்கேற்ற பசும்புல் நிறைந்த அப்பகுதி ஆயர் எழுப்பும் இசை வெள்ளத்தில் ஆழ்ந்துவிடும்.

''தொடுதோல் மரீஇய வருவுஆழ் நோன்பு அடி
விழுத்தண்டு ஊன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா ஊர்ந்த மறுப்படு மயிர்ச் சுவல்
மேம்பால் உரைத்த ஓரி, ஓங்குமிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
ஒன்று அமர் உடுக்கை கூழ் ஆர் இடையன்
கன்று அமர் நிரையோடு கானத்து அல்கி
அம் நுண் அவிர்புகை கமழக் கை முயன்று
ஞெலிகோல் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத்தோட்ட கருந்துளைக் குழலின்
இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழல்கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின்
வில் யாழ் இசைக்கும் விரல் எறி குறிஞ்சிப்
பல்கால் பறவை கிளைசெத்து ஓர்க்கும்
புல்ஆர் வியன்புலம் போகி''

(169—184)

(தொடுதோல் மரிஇய—செருப்பு கிடந்த; வடுவு ஆழ் நோன் அடி—வடு ஆழ்ந்த வலிய அடியினையும், விழுத்தண்டு—ஆனிரைகளை அடித்துத்துயர் விளைவிக்கும் தடியை, ஊன்றிய—தாங்கிய; மழுத்தின் வன்கை—கோடாரியால் ஆன தழும்பு இருந்த வலிய கையினையும்; உறிக்கா ஊர்ந்த—இரண்டு தலைகளிலும்

உறிகள் தொங்கும் காவடி சுமந்ததனால் உண்டாகிய; மறுப்படு மயிர்ச்சுவல்—தழும்பு மிக்க மயிர் முளைத்த தோள்களையும்; மேம்பால் உரைத்த ஓரி—பால்களில் சிறந்த பசுவின்பால் தடவிய மயிரினையும்; ஓங்கு மிசை —மிக உயர்ந்த உச்சியையுடைய கோட்டவும் கொடியவும்—கொம்புகளிலும் கொடிகளிலும் மலர்ந்துள்ள; காட்ட பல்பூ—காட்டு மலர்கள் பலவற்றை; விரைஇ மிடைந்த படலைக்கண்ணி—கலந்து கட்டிய கலம்பக மாலையினையும்; ஒன்று அமர் உடுக்கை—உடுத்த ஒற்றை உடையினையும்; கூழ் ஆர் இடையன்—கூழ்உணவு உண்ணும் இடைமகன்; கன்று அமர் நிரையொடு—கன்றுகளை விரும்பும் ஆனிரைகளோடு, கானத்து அல்கி-காட்டிலே தங்கி; அம் நுண் அவிர் புகை கமழ—அழகாய், நுண்ணியதாய் எழும்புகை மணக்க; கைமுயன்று—கையால் கடைந்து; ஞெலிகோல் கொண்ட—தீக்கடைக் கோலில் உண்டாக்கிய; பெரு விறல் ஞெகிழி—பேராற்றல் வாய்ந்த கொள்ளியான; செந்தீத் தோட்ட—சிவந்த தீயால் துளையிட்ட; கருந்துளைக்குழலின்—கரிய துளைகளையுடைய குழலில் எழுப்பிய; இன் தீம் பாலை முனையின் —இனிய கேள்விச் சுவைமிக்க பாலை என்னும் பண்ணோசையை வெறுக்கின்; குமிழின் புழல் கோட்டுத் தொடுத்த—குமிழ மரத்தின் உள்துளை வாய்ந்த கொம்பில் வளைத்துக் கட்டிய; மரல் புரி நரம்பில்—மரலின் நாராகிய நரம்பினை உடைய; வில் யாழ் இசைக்கும்—வில்வடிவான யாழ் இசைக்கும்; விரல் எறி குறிஞ்சி—விரலாலே எறிந்து எழுப்பும் குறிஞ்சி என்னும் பண்ணை; பல்கால் பறவை—பல கால்களையுடைய வண்டுகள்; கிளைசெத்து ஓர்க்கும்—தம் இனம் எழுப்பும் ஓசையாகக் கருதிக் காது கொடுத்துக் கேட்கும்; புல் ஆர் வியன் புலம் போகி—புல் நிறைந்த அகன்ற மேய் புலத்தைக் கடந்து போய்.)

## 7-2 உழுது உண்ணும் ஆயர் உறையுள் நலம்

இசை இன்பம் நுகர்ந்தவாறே மேய்புலத்தைக் கடந்து சென்றால், உழுதுண்ணும் ஆயர் வாழும் சிற்றூரை அடைந்து விடலாம். ஊருள் புகுவதன் முன்னர்க் கண்ணில் படுவது, ஆனிரைகள் கட்டி வைக்கப்பட்டிருக்கும் தொழு. தொழுவில் விடப்படும் ஆனிரைகளுக்குக் காட்டுக்கொடு விலங்குகளால் கேடுவாராமை குறித்தும் அத்தொழுவைச் சுற்றிலும் முள் நிறைந்த மரங்கள் காடுபோல் நெருங்க வளர்க்கப் பட்டிருக்கும். அடுத்து ஊருள் புகுந்ததும் வரகு போலும் விளை பொருள்களைக் கொட்டி வைத்திருக்கும் குதிர்கள், கடந்து வந்த காட்டுப் பகுதியில் கண்டு வந்த யானைக் கூட்டத்தை நினைவூட்டுமளவு பருத்தும் உயர்ந்தும் உழுதுண்ணும் ஆயரின் வளமார் வாழ்க்கைக்குச் சான்று பகர்ந்து நிற்கும். நெல்லரிசி தினை அரிசிகளை மூடிக்கொண் டிருக்கும் ஆடையைக் குற்றி அகற்றுவது போல், வரகு அரிசியை மூடியிருக்கும் ஆடையைக் குற்றி அகற்ற இயலாது. அதை அரைத்தே அகற்றுதல் இயலும். அதற்குப் பயன்படும் திரிமரம் எனும் இயந்திரமும் ஆங்கே இருக்கும். தோற்றத் தில், யானையின் கால் போல் காட்சி தரும் அதை இயக்கிச் செயல் படுத்தும் மகளிர்க்கு நிழல் தரும் பொருட்டு, அம்மனை முற்றத்தில் பந்தலும் போடப்பட்டிருக்கும். வீட்டின் நெடுஞ்சுவர், வண்டிச் சக்கரங்களும், உழுகலப்பை களும் சார்த்தி சார்த்தி வெளிப்புறத்தில் தேய்ந்திருக்கும். உட்புறம், சமைக்க மூட்டிய அடுப்பிலிருந்து எழும் புகை படிந்து கருத்திருக்கும். வீடுகள் வரகு வைக்கோலால் வேயப் பட்டு, பருவ மழை காலத்தில், வானத்தில் கொண்டல் கொண்டலாக எழும் கருமுகில் போல் காட்சி அளித்துக் கவின் பெற்றுத் திகழும். அத்தகைய வீடுகள் நிறைந்த ஆயர் பாடியுள் புகுந்து விட்டால், ஆங்கு அளிக்கப்படும் வரகரிசிச் சோறும் அவரைக் கொட்டைப் பொரியலும், உண்டவர் வாய் மணக்கும் என்றவர் அவை பற்றிச் சிறிதே விளக்கவும் செய்தார்.

வரகு, நெற்பயிர் போல் உயர்ந்து வளராது; வரகுக் கதிரும் நெற்கதிர் போல் நீளமாக இராது. தாளும் குட்டை; கதிரும் குட்டை; அவ்வரகரிசிச் சோற்றை வடித்துக் கொட்டினால், வேலிகளில் நீண்ட கொடி விட்டுப் படர்ந்திருக்கும் சிறு பூளையின் வெண்ணிறம் வாய்ந்த சின்னம் சிறு மலர்களைப் பறித்துக் கொட்டி வைத்தாற் போலும் கவின் மிகு காட்சி அளிக்கும். சோற்றின் வனப்பு இது. மலை நாட்டில் கொத்துக் கொத்தாக மலர்ந்து மணக்கும் வேங்கையின் செந்நிற மலரை நினைவூட்டும் வகையில், கொடியில் கொத்துக் கொத்தாகக் காய்த்திருக்கும் அவரைக் காய்களை உரித்து எடுத்த கொட்டைகளை, உலையுள் நிறைய இட்டு நன்கு துழாவி எடுத்த பொரியலின் மணம் நுகர்ந்தவர் மூக்கைத் துளைக்கும். சுவை, உண்டவர் நா மணக்கப் பண்ணும். சுவை மிகு அவ்வுணவுண்டு இனிதே செல்வீராக என்றார்.

' முள் உடுத்து
எழுகாடு ஓங்கிய தொழுவுடை வரைப்பின்
பிடிக் கணத்தன்ன குதிர்உடை முன்றில்
களிற்றுத்தாள் புரையும் திரிமரப் பந்தர்
குறும்சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி
நெடும் சுவர் பறைந்த புகைசூழ் கொட்டில்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரல் பூளைப்பூவின் அன்ன
குறுந்தாள் வரகின் குறள் அவிழ்ச் சொன்றிப்
புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன
அவரை வான்புழுக்கு அட்டிப் பயில்வுற்று
இன்சுவை மூரல் பெறுகுவீர் ''.

(184—196)

(முள் உடுத்து எழு காடு—முள் கொண்டு வளர்ந்த மரங்களால் ஆன காடுகள்; ஓங்கிய தொழு உடை

வரைப்பின்—சூழ எழுந்த மாட்டுத் தொழுவம் அமைந்த பகுதியில்; பிடிக் கணத்து அன்னகுதிர் உடை முன்றில் -பெண் யானைக் கூட்டத்தையொத்த, வரகு முதலியன கொட்டி வைக்கும் குதிர்களை உடைய முன்றிலையும் களிற்றுத் தாள் புரையும் திரிமரப் பந்தர்—ஆண் யானையின் காலை ஒக்கும் வரகு அரைக்க உதவும் திரி மரம் என்ற இயந்திரம் கிடக்கும் பந்தலையும்; குறும் சாட்டு உருளையொடு கலப்பைசார்த்தி—சிறிய வண்டிச் சக்கரங்களோடு கலப்பையைச் சார்த்தி வைக்கப் பட்ட தால்; பறைந்த நெடும் சுவர்—தேய்ந்துபோன நெடிய சுவரோடு கூடிய; புகை சூழ் கொட்டில்—புகை படிந்த கொட்டிலினையும் உடைய; பருவ வானத்துப் பா மழை கடுப்ப—பருவ காலத்து வானத்தில் விரவி எழும் கருமுகிலை ஒப்ப; கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்—கரிய வரகு வைக்கோல் வேய்ந்த அழகிய குடியிருப் பினையும் உடைய சிற்றூர்களில்; நெடும் குரல் பூளைப் பூவின் அன்ன—நீண்ட கொத்துக்களையுடைய சிறு பூளையின் பூக்களை ஒத்த; குறுந்தாள் வரகின்—குறிய தாள்களையுடைய வரகின்; குறள் அவிழ் சொன்றி— சிறிய பருக்கைகளாகிய சோற்றை; புகர் இணர் வேங்கை கண்டன்ன—செந்நிறம் வாய்ந்த கொத்துக் கொத்தான வேங்கை மலர்களைக் கண்டாற் போலும்; அவரை வான் புழுக்கு அட்டி—அவரைக் கொட்டையின் நல்ல பருப்பை நிறைய இட்டு; பயில்வுற்று இன்சுவை மூரல் பெறுகுவீர்—துழாவியதால் இன்சுவை கூடிய பருப்போடு பெறுவீர்கள்.)

# 8. புன் செய் நில உழவர் பெருமை

உழுதுண்ணும் ஆயர்வாழ் சிற்றூர்களின் சிறப்பை எடுத்துரைத்த புலவர், பெரும்பாணன், அடுத்துப்புக இருக்கும் மருதநில் மாண்பு குறித்துக் கூறத்தொடங்கினார். தொடங்கியவர், வரப்பு உயர நீர் உயர்ந்து நிற்கும் நன்செய் நிலங்களை மட்டுமேயல்லாமல், மருத நிலத்து உழவர் மழை ஒன்றையே கொண்டு விளைந்து பயன்தரும் புன்செய் நிலங் களையும் கொண்டிருப்பர் ஆதலாலும், அத்தகைய புன்செய் நிலங்கள், பெரும்பாலும், முல்லையும் மருதமும் கலக்கும் மேட்டுப் பகுதியிலேயே அமைந்திருக்கும் ஆதலாலும், நன்செய் நிலங்களின் நலம் பாராட்டுவதன் முன்னர், புன்செய் நில உழவு நலம் பற்றிக் கூறத் தொடங்கினார்.

மருத நிலத்து உழவர் மனைகளில், ஊர் உலகம் அனைத் தையும் ஒருசேரப்புரக்கவல்ல உணவுப் பொருள்கள் மண்டிக் கிடக்கும். அதற்குக் காரணம், நிலத்தைப் பலசால் உழுதல் வேண்டும் என்பது முதலாம், உழவு முறைகளை, அவர்கள் நன்கு பயின்று நடைமுறைப்படுத்தி வருவதே ஆம். அவர் களின் எருதுகளையும் ஏரையும் பார்த்தாலே, அவர்கள் எவ்வளவு சிறந்த உழவர்கள் என்பது புலப்பட்டு விடும். எருது களெல்லாம் எவ்வளவுபெரிய கலப்பையைப் பூட்டி, எவ்வளவு ஆழமாக அழுத்தி எவ்வளவு நேரம் உழுதாலும், சிறிதும் தளரா உரம் வாய்ந்தவை. ஏரில் பூட்டும்எருதுகள் இரண்டில், ஒன்று விரைந்து நடைபோட, ஒன்று மெல்ல அடியிட் டாலும், ஒன்று வலப்புறம் ஈர்க்க ஒன்று இடப்புறம் ஈர்த்து

ஓடினும், உழுதொழில் நன்கு நடைபெறாது. இவ்வுழவர் எருதுகள், அக்குறைபாடு நீங்க, நன்கு பழக்கப்பட்டவை. ஒன்றுபட்டுச் செயலாற்றும் உயர்வுடையவை. மாட்டிற்கு ஏற்றவை அவர்பால் உள்ள கலப்பைகளும். கலப்பை முகம், பெண் யானையின் தந்தம் நீங்கிய வாய்போல், அகன்றும் பருத்தும் காணப்படும். அதன் கொழு, உடும்பு முகம் போலும் உரமும் உருவும் வாய்ந்தவை.

நிலம், வீட்டிற்கு அணித்தாகவே இருப்பதால், எருது களைத் தங்கள் வீட்டிற்கு முன்பாகவே ஏர்களில் பூட்டி விடுவர். நிலத்தில் இறங்கி ஏர் ஓட்டும்போது, கொழு, நிலத்துள் மறைந்து, மண்ணை அடிகாணப் புரட்டிவிடுமாறு கலப்பையை அழுத்திப் பிடித்து ஓட்டுவர். களை, அறவே நீங்குமாறும், மண், படுபுழுதி ஆகுமாறும், மடக்கிப் பலசால் ஓட்டுவர். விதைத்து, விதை முளைத்துச் சிறிதே வளர்ந்ததும், மறுபடியும் ஏர்பூட்டிப் புதுக்களைபோகவும், மண் தளரவும் உழுவர்; அந்நிலையிலும் அழியாத களை களைக் களைக்கொட்டுக் கொண்டு அகற்றுவர். இவ்வாறு முறை அறிந்து பயிர் செய்வதால், பயிர், குறும்பூழ் போலும் பறவைகள் கூடுகட்டி வாழுமளவு செழித்து உயர்ந்து வளரும்.

வளர்ந்து நிற்கும் பயிர்கள் இடையே இருந்து, அவ்வப் போது எழுந்து உயரப் பறக்கும், சின்னஞ்சிறு கால்களும், கருநிறக் கழுத்தும் உடைய குறும்பூழ்ப் பறவைகளையும், உயரப் பறக்க மாட்டாது, தத்தித் தத்திப் பறக்கும், வெண்கடம்பு மரத்தின் மலர் போலும் வடிவமும், வண்ண மும் மென்மையும் வாய்ந்த, குறும்பூழ்க் குஞ்சுகளையும் கண்டு கண்டு மகிழ்வர். அதனால், பயிர் வளர்ந்து முற்றியது கண்டு அறுவடை செய்யும் பருவத்தில், அருள் உள்ளம் வாய்க்கப்பெற்ற அவ்வுழவர்கள், அப்பறவைகளை அகற்றிய பின்னரே— அவை பாதுகாப்பான இடம் சென்று சேர்ந்த பின்னரே, அறுவடைமேற்கொள்வர். அதனால், வயலின்

நாற்புறமும் நின்று ஆரவாரப்பெருங்குரல் எழுப்புவர். அது கேட்ட குறும்பூழ்ப் பறவைகள், பயின்ற இடம் விட்டுப் பிரிகிறோமே என்ற வருத்தத்தோடு, பறக்கமாட்டாத் தம் பார்ப்புகளையும் தழுவி எடுத்துக்கொண்டு பறந்து போய், அடுத்திருக்கும் முல்லை நிலத்து மரங்களில் பாது காப்பான இடம் தேர்ந்து தங்கிவிடும். அவ்வாறு, அவை பறந்து செல்லும் அழகைப் பார்த்து அகமகிழ்ந்த பின்னர், உழவர்கள் புனத்துள் புகுந்து அறுவடை தொடங்குவர்.

"ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்
நடைநவில் பெரும் பகடு புதவில் பூட்டிப்
பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றித்
தொடுப்பு எறிந்து உழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதின் இரியல் போகி
வண்ணக் கடம்பின் நறுமலர் அன்ன
வளர் இளம் பிள்ளை தழீஇக், குறுங்கால்
கறை அணல் குறும்பூழ் கட்சி சேக்கும்
வன்புலம் இறந்த பின்றை."

(196—206)

(ஞாங்கர்—ஆயர் குடியிருப்புக்கு அப்பால்; குடி நிறை வல்சி—வீடு நிறைந்த உணவின்னையுடைய; செஞ் சால் உழவர்—பலசால் சிறக்க உழப் பழகிய உழவர்; நடை நவில் பெரும்பகடு—ஏரில் நன்கு நடந்து பழகிய பெரிய எருதுகளை; புதவில் பூட்டி—மனைமுற்றத் திலேயே நுகத்தடியில் பூட்டிச் சென்று; பிடிவாய் அன்ன மடிவாய் நாஞ்சில்—பெண் யானையின் வாயை ஒத்து வளைந்த வாயை உடைய கலப்பையின்; உடுப்பு முக முழுக்கொழு—உடுப்பு முகம் போலும் பெரிய கொழு; மூழ்க ஊன்றி—மண்ணுள் மறையுமாறு அமுக்கிப்

பிடித்து; தொடுப்பு எறிந்து—பலசால் உழுது விதைத்து; உழுத—முளைத்த பின்னர்க் களைபோக உழுத; துளர்படு துடவை—மீண்டும் களைக் கொட்டுக்கொண்டு களைபோக்க விளைந்த நிலத்தை; அரிபுகு பொழுதில்—அறுவடை செய்யும் காலத்தில்; இரியல் போகி—அஞ்சிப் பறந்து சென்று; வண்ணக்கடம்பின் நறுமலர் அன்ன—வெண்ணிறம் வாய்ந்த மணம் மிக்க கடம்ப மலரை ஒத்த; வளர் இளம்பிள்ளை தழீஇ—வளரும் இளம் பார்ப்புகளைத் தழுவிக் கொண்டு; குறுங்கால் கறை அணல் குறும்பூழ்—சிறிய கால்களையும்; கரிய கழுத்தையும் உடைய குறும்பூழ்ப் பறவை; கட்சி சேக்கும்—காட்டு மரங்களிலே சென்று தங்கும்; வன்புலம் இறந்த பின்றை—மேட்டு நிலங்களைக் கடந்த பிறகு.)

## 8-1 வயலில் உழவர், வரப்பில் சிறார்

மருத நிலத்து உழவர்களின் புன்செய் நிலத்து உழவுப் பணி பற்றிய விளக்கம் அளித்த புலவர், அடுத்து அவர்கள் மேற்கொள்ளும் நன்செய் உழவு பற்றிய விளக்கம் அளிக்கத் தொடங்கினார்.

உழுகாளைகளின் உரமும் திறமும் பற்றிப், புன்செய் நில உழவு பற்றிய விளக்கத்தின் போதே விரித்துரைத்தும், புலவர் உள்ளம் அமைதியுற்றிலது. அத்துணைச் சிறப்புடையவை அக்காளைகள். அதனால் நன்செய் உழவு பற்றிய விளக்கத்திலும். காளைகள் பற்றிய சிறப்பிற்கே முதலிடம் வழங்கியுள்ளார். ஆழ உழவேண்டும்; நுண்சேறு படுமளவு பலமுறை உழவேண்டும். என்ற உழவியல் முறைகளை உணர்ந்த அவ்வுழவர்கள், உழுதது போதும் இனி உழத்தேவையில்லை எனக் கூறுமளவு முற்ற உழுது முடித்த பின்னரே காளைகளைப் பூட்டவிழ்த்து விடுவர். கரம்பு நிலை உழ்வு முடிந்து, நன்செய் நிலை உழவு தொடங்கும்

போது, பொதுவாக, காளைகள் தளர்ந்துவிடும். நன்செய் உழவு முடியும் நிலையில், அவற்றால் நடக்கவும் இயலாது. அவ்வளவு தளர்ந்து விடும். ஆனால், இம்மருத நிலத்து உழவர் காளைகள், உரம் மிக்கவை; அத்துணை உழவு முடிந்த நிலையிலும், அவற்றின் உரம் குறைந்து விடாமை யால், பூட்டவிழ்த்து விட்டதும் தொழுவடைந்து படுத்து விடுவதற்குப் பதிலாக, வரப்பு ஓரங்களில் நண்டுகள் தோண்டி வைத்திருக்கும் வளைகள் இருந்த இடம் தெரியாத வாறு மறைந்து மண்மூடிப் போகுமாறும், வரப்புகளில் வளர்ந்திருக்கும் கோரைப்புற்கள் வேரற்றுப் போகுமாறும், கொம்பெல்லாம் மண்ணாகிப் போகுமாறும், அவ்வரப்பு களை முட்டிமோதும். அவ்வாறு முட்டியும் உரம் அடங்கா நிலையில், உழுது முடித்த நிலத்தை அடுத்து உழுவதற் காகக் காத்திருக்கும் கரம்பு நிலத்தில் புகுந்து, தமக்குள்ளே கடும் போரிடத் தொடங்கிவிடும். அதன் பயனால், ஏர்கொண்டு உழ வேண்டாதே, பெருஞ்சேறுபட்டு விடும் அந்நிலத்தை, உழவர்கள் காலால் மிதித்துச் சமன் செய்து, அதையும் நடுவதற்குத் தகுதி உடையதாக ஆக்கிவிடுவர்.

மருத நிலத்து நஞ்செய் உழவு நிலம் பற்றிய விளக் கத்தை மேற்கொண்ட உழவர், ஒரு நாடு உழவுத் தொழில் ஒன்றை மட்டுமே நம்பியிருத்தல் கூடாது. அது, நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கி விடாது. அவ்வளம் சிறக்க, அது, தொழில் துறையிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதை அறிந்தவர். அதற்கேற்ப, திரை யனுக்கு உரியதான அம்மருத நிலம், உழவுத் தொழிலோடு தொழில் துறையிலும் சிறந்து விளங்குகிறது என்பதைப் பெரும்பாணனுக்கு உரைக்க விரும்பினார், போலும். உழவுத் தொழில் வளம் பற்றி உரைத்த பின்னர், அதைத் தொடர்ந்து, தொழில் வளம் பற்றி விரிவாக உரைக்க எண்ணினார். என்றாலும், காளைகள் மோதியதால் மறைவுண்ட வளைகளிலிருந்து வெளியேறி விரைந்து ஓடும்

நண்டுகளின் கவர்த்த கால்கள், தொழில்வளம் பற்றிய சிறு குறிப்பையேனும் தொடக்கத்தில் உரைத்தல் வேண்டும், என்ற உணர்வைத் தூண்டி விடவே, நண்டின் கவர்த்த கால்களைப் போலும் தோற்றம் உடையதாய்க் காய்ச்சிய இரும்பினை இறுக்கிப் பிடிக்கப் பயன்படும் கொறடு என்ற ஆயுதம். அதைக் கையாளும் கொல்லன் அவன் பணிபுரியும் உலைக்களம், உலையில் கொழுந்து விட்டெரியும் செந்தழல், அது அவ்வாறு எரியத் துணை புரியும் தோலால் ஆன துருத்தி, அது வெளிக்காற்றை ஈர்த்து உலையுள் செலுத்த, அதை விட்டுவிட்டு மிதிப்பது ஆகிய இவற்றைச் சுருங்கிய அளவில் கூறி, மருத நிலத்துத் தொழில்வளம் பற்றிய சிறிய அறிமுகத்தைப் பெரும்பாண னுக்குச் செய்து வைத்தார்.

நண்டின் கால்களைக் கண்ணுற்றது கொண்டு, தொழில் துறை பற்றிச் சிறிதே கூறினாராயினும், புலவர் நினை வெல்லாம் உழவுத் தொழிலைச் சுற்றியே உழன்று கொண்டிருந்தமையால், உழவு பற்றித் தொடர்ந்து கூறத் தொடங்கி விட்டார். முறையாக உழுது சேறுபட்ட நிலத்தைப் போலவே, ஏறுகள் பொருதலால் சேறுபட்ட நிலத்திலும், நாற்றுநட்டு நாள் தோறும் நீர் பாய்ச்ச, பயிர்களை பறிக்குமளவு வளர்ந்து விட்டது. களை பறிக்க, உழவர் மகளிர் நிலத்தில் இறங்கிவிட்டனர். நிலம், வளம் மிக்கது, மேலும், உழவர்கள், முறையறிந்து பயிர் ஏற்றி யுள்ளனர். அதனால் பயிர் செழித்து வளர்ந்திருப்பதோடு, அதற்கேற்ப களைகளும் அதிகமாகவே இருந்தன; களை களுக்கிடையே நெய்தலும் கொடிவிட்டு மலர்ந்திருந் திருந்தது. தேன் நிறைந்து மணம் நாறும் நெய்தல் மலர்கள் காண மகிழ்ச்சியளிக்குமாயினும், அவை, பயிர் வளர்ச்சியைக் குன்றச் செய்திடுமென்பதால் அவற்றையும் பறித்துக் களைந்தனர்.

நெய்தலைக் களைந்து பறித்தனராயினும், அதன் அழகிய மலர்களை அழிக்க மனம் வராமையால், அம்மலர் களை வயல் ஓரத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் தம் சிறுவர்களிடம் கொடுத்தனர். நெடுநேரம் கழிந்துவிட்டது; களை பறிப்பது முடியவில்லை. சிறுவர்களுக்குப் பொறுமை குறைந்து விட்டது. நெய்தல் புது மலர்கள், தேன் நிறைந்து மகிழ்ச்சி தருவனவாக இருந்தாலும், அவை குவியல் குவியலாகக் குவிந்துவிடவே, அவர்களுக்கு அம்மலர்கள் மீது வெறுப்புப் பிறந்து விடவே, அவ்விடம் விட்டு விட்டு உடனே புறப்பட்டனர். வயலை அடுத்த நீர்நிலைகளில் முளைத்திருந்த நீர்முள்ளிச் செடிகளில், கண்கவரும் கருநிற மலர்கள் மலர்ந்திருப்பது கண்டனர். உடனே அவற்றைப் பறித்தனர்; தண்ணீர் மட்டத்திற்கு மேல் வளர்ந்திருந்த தண்டாங்கோரையைப் பிடுங்கி வந்து, அதைப் பல்லிடையே வைத்து மெத்தென ஆகுமாறுமென்று, நாராக்கி. முள்ளி மலர்களை மாலையாகத் தொடுத்து, மலரும், கோரையும் பறிக்க நீருள் இறங்கியபோது நனைந்து போன தலையில் சூடிக்கொண்டனர்.

இரும்பை உருக்கி வார்த்தாற் போன்ற உடலமைப்பும், அது காரணத்தால் மென்மைத் தன்மை வாய்ந்ததாயினும், தளர்ந்து திரைந்து போகாத் திண்மையும், தொடர்ந்து தொழிலாற்றினாலும், சோர்ந்து போகாக் கைவன்மையும் வாய்ந்த உழவர் ஈன்ற மக்களாவர் அச்சிறுவர்கள். அதனால், வாளா மடிந்திருக்க இயலாது போகவே, அவ்விடம் விட்டு அகன்று, கண்பின் என்ற காரைப் பறித்து உடைத்து, அதன் உள்ளே இருக்கும் பொன்னிறமான சுண்ணப் பொடிகளைத் தம் மார்பில் கொட்டிப் பூசிக் கொண்டனர். கருநிறம் வாய்ந்த தம் அகன்ற மார்பு பொன்னிறத்தாது படிந்து, பொன்துகள் நிறைந்து மின்னும், பொன்னுறை கல் போல் காட்சி அளிப்பது கண்டு அகமகிழ்ந்தனர். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்ப. பசிவரப் பெற்ற அவர்கள்

இவ்வின்ப விளையாடல்களை மறந்தனர். மனைநோக்கி விரைந்தனர். உழவு நலம் கருதி, அறுவடை முடியுங்காலும், வயல்களை அடுத்தே வாழ வேண்டியிருப்பதால், வயல்களை அடுத்து, வரப்பு ஓரங்களில் தற்காலிகமாக, சிறுசிறு குடிசைகளைக் கட்டியிருந்தனர். புது வைக்கோல் வேயப்பட்ட அக்குடில்களுள் புகுந்த சிறுவர்கள் ஆங்குப் பானை நிறைய, கட்டி கட்டியாகச் சோறு இருந்தாலும், அது பழஞ்சோறு என்பது கண்டு, அதை வெறுத்துவிட்டு, குடிசையின் முன் புறத்தே இருக்கும் உரலில் அவித்த நெல் இட்டு, அவல் இடித்து உண்டு பசி ஆறிய பின்னர், அவலிடிக்கும் போது வாளா இடிக்காது, பாட்டுப் பாடிக்கொண்டே இடிக்க, அவ்வுலக்கைப் பாட்டொலியும், உலக்கை இடிக்க. உரல் எழுப்பும் ஒலியும் கேட்டு பயந்து தாம் வாழ்ந்திருந்த மரங்களை விட்டுப் பறந்தோடும், கிளிக் கூட்டங்களையும், வளைந்த மூக்கு, பச்சை வண்ணமேனி ஆகிய அவற்றின் உடலழகையும் கண்டு மகிழ்வாரா்யினர்.

"மென்தோல்
மிதி-உலைக் கொல்லன் முறிகொடிற்று அன்ன
கவைத்தாள் அலவன் அளற்று அளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பின்
கார் ஏறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்தொளி நிரவிய வினைஞர்
முடிநாறு அழுத்திய நெடுநீர்ச் செறுவில்
களைஞர் தந்த கணைக்கால் நெய்தல்
கள்கமழ் புதுப்பூ முனையின், முள்சினை
முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கால் மாமலர் கொய்துகொண்டு அவண,
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர் நார்ப்பெய்த புனைவுஇன் கண்ணி
ஈர்உடை இருந்தலை ஆரச் சூடிப்

பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச்சுண்ணம் புடைத்த மார்பின்
இருப்பு வடித்தன்ன மடியா மென்தோல்
கருங்கை வினைஞர் காதலம் சிறாஅர்.
பழஞ்சோற்றுப் அமலை முனைஇ, வரம்பில்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவல் எறி உலக்கைப் பாடு பிறந்து
அயல, கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்''.

(206—227)

(மென்தோல்—மெல்லிய தோலால் ஆன துருத்தியை; மிதி உலை கொல்லன்—மிதித்து ஊதுகின்ற உலையில் தொழிலாற்றும் கொல்லனுடைய; முறி கொடிறு அன்ன—முறிந்த கொறடு போன்ற; கவைத் தாள் அலவன்—கவர்த்த கால்களையுடைய நண்டினது; அளற்று அளை சிதைய—சேற்றில் தோண்டிய வளை அழியும்படி; பைஞ்சாய் கொன்ற—பசிய கோரைப் புல்லைக் குத்தி அழித்த, மண்படு மருப்பின்—மண்படிந்த கொம்புகளையுடைய; கார் ஏறு பொருத—கரிய எருதுகள் போரிட்ட; கண் அகன் செறுவில்—இடம் அகன்ற நிலத்தில்; உழா நுண் தொளி—உழாதே உண்டான நுண்ணிய சேற்றை; நிரவிய வினைஞர்—மேடு பள்ளம் இல்லாமல் நிரவிய உழவர்; முடிநாறு அழுத்திய—முடித்துக் கொண்டு வந்த நாற்றை நட்ட; நெடுநீர்ச் செறுவில்—நிறைய நீர் நின்ற வயலில்; களைஞர் தந்த—களைபறிப்போர் களைந்து போட்ட; களைக் கால் நெய்தல்—பருத்த தாளையுடைய நெய்தலின்; கள்கமழ் புதுப்பூ முனையின்—தேன் நாறும் புதுமலர் களை வெறுத்தாராயின்; முள்கிளை—முள் நிறைந்த கொம்புகளையுடைய; முகை சூழ்—அரும்புகள் நிறைந்த தகட்ட—இதழ்களையுடைய; பிறழ்வாய் — விரிந்த வாயையுடைய; முள்ளி—நீர் முள்ளியின்; கொடுங்கால்

மாமலர்— விளைந்த காம்பினை உடைய கருநிறம் வாய்ந்த மலரை; கொய்து கொண்டு—பறித்துக் கொண்டு; அவண—அந்நிலத்தில் வளர்ந்திருக்கும்; பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டி—பசிய தண்டாங் கோரையைப் பல்லால் மென்று; புணர்நார் பெய்த—, கிழித்து முடிந்த நாரால் தொடுத்த; புனைவு இன் கண்ணி—புனைதற்கு இனிய மாலையை; ஈர் உடை—ஈரப்பட்ட (அல்லது) ஈரும் பேனும் நிறைந்த; இருந்தலை ஆரச்சூடி—கரிய தலையில் நிறையச்சூடி; பொன்காண் கட்டளை கருப்ப—பொன்னை உரைத்து மாற்றுகாணும் பொன்னுரை கல்லைப் போன்ற; கண்பின் புன்காய்ச் சுண்ணம்—கண்பின், என்ற சிறிய காயின், பொன்னிறத்தாதை, புடைத்த மார்பின்—பூசிக்கொண்ட மார்பினையும்; இரும்பு வடித்தன்ன—இரும்பை வடித்து எடுத்தாற்போன்ற; மடியா மென்தோல்—திரையாத மெல்லிய தோலினையும் உடைய; கருங்கை வினைஞர்—வலியகைகளால் தொழில்புரிவாருடைய; காதல் அம் சிறாஅர்—அன்புமிக்க, அழகிய சிறுவர்கள்; பழம் சோற்று அமலை முனையின்—பழஞ்சோற்றுத் திரளை வெறுத்தால்; வரம்பின்—வரப்பு ஓரத்தில் உள்ள; புதுவை வேய்ந்த கவிகுடி முன்றில்—புதிய வைக்கோல் வேய்ந்த கவிந்த குடிலின் முற்றத்தில் அவல் எறி உலக்கைப்பாடு விறந்து—அவல் இடிக்கும் உலக்கைப் பாட்டொலி மிகுதலாலே; அயல, கொடு வாய்க்கிள்ளை—அயலில் வாழும் வளைந்த மூக்கினை உடைய கிளிகள்; படுபகை வெருஉம்—தமக்கு நேர்ந்த பகையொலியாகக் கொண்டு அஞ்சும்,)

## 8-2 பொன்மலை நிகர் நெல் மலை

நெற்பயிர் விளைந்து, பதரோ, பசுங்காயோ ஒன்று கூட இல்லாமல் நெல்மணிகள் முற்றிவிடும். கொட்டினால் கடுக்கும் செங்குளவிக் கூட்டம் ஒரு சேரத் திரண்டிருப்பது

போல், செந்நெல் மணிகள் வரிசை வரிசையாகச் சேர்த்து வைத்தாற்போல் திரண்டிருப்பதால் பொறை தாங்கமாட்டாது கதிர்கள் தலை சாய்ந்துவிடக் கண்டு, பயிர் அறுவடைக்குத் தகுதியுடையதாகி விட்டது என அறிந்து கொள்ளும் உழவர்கள், அரிவாள் கொண்டு, வளம் மிகுதியால் உள்ளே துளைபடுமளவு பருத்துத் திரண்டிருக்கும் தாளை அறுத்து. அரிஅரியாக அடுக்கிக் கட்டி, கட்டுகளைச் சுமந்து களம் நோக்கி விரைவர்.

களத்துமேடு, பரந்த வயல்களில் பெருக விளையும் நெற்கட்டுகள் இட்டு வைப்பதற்கேற்ற பரப்புடையதாக இருக்கும். ஆங்குப் பணிபுரிவாரை வெய்யிற் கொடுமையினின்றும் காக்கவல்ல நிறை நிழல்தரும் அடர்ந்த உயர்ந்தகிளைகளைக் கொண்ட மருத மரங்கள் வளர்ந்திருக்கும். ஆண்டு முதிர்ந்த மரங்களாகவே, அவற்றில், பாம்புகள் வந்து குடிபுகுவதற்கு வாய்ப்பளிக்கும் கங்குகள் பல காணப்படும். பொந்துகளில் குடிவாழும் அரவுகள், நெற்கதிர்களுக்கு ஊறுவிளைவிக்கும் எலிகளைத் தின்று தங்களுக்குத் துணைபுரிவதல்லது, தங்களுக்கு ஊறு செய்யா என நம்புவதால், உழவர்கள், பாம்புக்கு அஞ்சாது அம்மரத்தடியிலேயே களப்பணிமேற் கொள்வர். களத்தில், உழவுப்பணியாற்றுவோரேயல்லாமல், அவர்கள் வாரி வழங்கும் நெல்பெறுவான் வேண்டி, வந்து கூடியிருக்கும் ஏர்க்களப் பாணர் முதலாம் இரவலர் பெருங் கூட்டமும் கூடியிருக்கும்.

அத்தகைய களத்து மேட்டில். கதிர்க்கட்டுகளை வரிசை வரிசையாக அடுக்கிவிட்டு, பழுக்காதிருக்கும் ஓரிரு நெல்லும் பழுத்துவிடட்டும் என்பதாலும் கதிர்களில் ஒரு நெல்கூட நில்லாமல் கொட்டிவிடட்டும் என்பதாலும் அடுக்கிய கட்டுகளை ஓரிரவு இருக்கவிட்டு, திரையன் நாட்டில் களவாடுவார், இலராதலின் கதிர் களவு போய்விடுமே என்ற கவலை சிறிதும் இலராய், காவல் கருதாது இரவில் மனை சென்று தங்கிவிட்டு மறுநாள் களம் வந்து சேர்வர். வரிசை வரிசையாகப் போடப்பட்டிருக்கும் கதிர்ப்போர்களில், தாம்

பின்னும் வலையுள் வந்து விழும் பூச்சிகளை உண்டு உயிர் வாழும் சிலந்திக்கூட்டம், வளைத்து வளைத்துப் பின்னிய வலைகள், இரவில் வீழ்ந்த பனித்துளிகளால் நிறைந்து வெண்ணிறம் காட்ட, அந்நிலையில் நிற்கும் கதிர்ப்போர் காட்சி தம் சுற்றத்தோடு கூடிக் கைகோத்துத் துணங்கைக் கூத்து ஆடக் கூடிநிற்கும் பூதகணங்கள், வெண்ணிற ஆடை உடுத்திருக்கும் அழகிய காட்சியை நினைவூட்ட, அக்கதிர்ப் போர்களை மகிழ்ச்சி பொங்கச் சுற்றி வரும் உழவர்கள் கதிர் களவாடப்பட்டிருப்பின், களவாடியவர் கைப்பட்டுச் சிலந்திவலை அறுபட்டிருக்கும்; அது சிறிதும் அறுபடாமையால், கதிர் களவு போகவில்லை என்ற மனநிறைவோடு போர் அழித்துக் கடாவிடத்தொடங்குவர்.

போரை, அடிகாணப் பிரித்துப் போடப்போட, காளைகளை ஒருங்கு பிணித்து மிதிக்க விடுவர், தாளில் ஒரு நெல் கூட இல்லை; அறவே உதிர்ந்து விட்டன என்பதை உணர்ந்ததும், வைக்கோலையும் கூளத்தையும் அகற்றி, நெல்லைத் தனியே பிரித்த பின்னர், மேல்காற்று வீசும் காலம் பார்த்திருந்து, நெல்லை, முறங்களில் வாரித்தூற்ற, நெல்லோடு கலந்திருக்கும் ஓரிரு பதரும், சிறு தூசுகளும் நீங்க, அகத்துள அரிசி செந்நிறம் காட்டினும், புறம் பொன்னிறமே காட்டும் நெல்மணிகள், வடதிசைக் கண்ணதாகிய பொன்மலையாம் மேருமலையே களத்தில் வந்து நின்றுவிட்டதோ எனக் கருதுமளவு, மலைபோல் குவிந்துவிடும். நெல்கொண்ட உழவர்கள், களம்பாடும் பொருநர்க்கும் பிற இரவலர்க்கும் நெல்வழங்கி, பெற்ற அவர்கள் மகிழ்ந்து வாழ்த்த மனம் நிறை மகிழ்வோடும், நெற்பொதிகளோடும், நகரில் உள்ள தம்மனைபுகுவர்.

**"நீங்கா யாணர் வாங்கு கதிர்க் கழனி**
**கடுப்பு உடைப் பறவைச் சாதி அன்ன**
**பைது அற விளைந்த பெரும் செந்நெல்லின்**
**தூம்பு உடைத் திரள் தாள் துமித்து வினைஞர்**

**பாம்புஉறை மருதின் ஓங்குசினை நிழல்**
**பலிபெறு வியன்களம் மலிய ஏற்றிக்**
**கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந்து ஆடும்**
**துணங்கை அம்பூதம் துகில் உடுத்தவைபோல்**
**சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின்**
**குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சிப்**
**பகடு ஊர்பு இழிந்த பின்றைத் துகள்தப**
**வையும் துரும்பும் நீக்கிப் பைது அறக்**
**குடகாற்று எறிந்த குப்பை, வடபால்**
**செம்பொன் மலையின் சிறப்பத் தோன்றும்.''**

(228—241)

*(நீங்கா யாணர் - குறையாத புதுவருவாயினை உடைய: வாங்கு கதிர்க் கழனி - வளையும் கதிர்களை உடைய கழனியில்; கடுப்பு உடைப் பறவைச் சாதி அன்ன - கொட்டினால் கடுக்கும் செங்குளவிக் கூட்டத்தை ஒத்த; பைது அற விளைந்த பெரும் செந்நெல்லின் - பசுங், காயும், பதரும் அறும்படி முற்றிவிளைந்த பெரிய செந் நெல்லின்; தூம்பு உடைத்திரள்தாள் - உள்ளே துளை உடையதாகிய திரண்ட தாளை அறுத்த உழவர்; பாம்பு உறை மருதில் - பாம்பு வாழும் மருதமரத்தின்; ஓங்கு கிளை நிழல் - உயர்ந்த கிளைகளின் நிழலின்; பலிபெறு வியன்கலம் - இரவலர் பிச்சை பெறும் அகன்ற களத்தில்; மலிய ஏற்றி - நிறைய, போராக இட்டு; கணம் கொள் சுற்றமொடு - மிகப் பெரிய சுற்றத்தோடு; கைபுணர்ந்து ஆடும் - கைகோர்த்து ஒழுங்காக நின்று ஆடும்; துணங்கை அம்பூதம் - துணங்கைக் கூத்தில் வல்ல அழகிய பூதங்கள்; துகில் உடுத்தவை போல் - வெண்ணிற ஆடை உடுத்து நிற்பது போல்; சிலம்பி வால் நூல் - சிலந்தியின் வெண்ணிற நூல்; வலந்த மருங்கின் - பின்னப்பட்ட பக்கங்களையுடைய; குழுமு நிலைப் போரின் - கோபுரம் போல் குவிந்திருக்கும் போர்*

களின்; முழு முதல் தொலைச்சி - அடியை அறவாங்கி வீசி; பகடு ஊர்புஇழிந்த பின்றை - கடாவிட்ட பின்னர் துகள்தப - குற்றம் நீங்க; வையும் துரும்பும் நீங்கி - வைக்கோலையும் களத்தையும் அகற்றி; பைது அற - மேலும் உள்ள பதரும் தூசும் நீங்க, குடகாற்று எறிந்த குப்பை - மேல் காற்றிலே தூற்றி எடுத்த நெற்குவியல்; வடபால் செம்பொன் மலையின் சிறப்புத் தோன்றும் - வடதிசைக் கண்ணதாகிய, சிறந்த பொன்மலை எனப் படும் மேருமலையைக் காட்டிலும் சிறந்ததாகத் தோன்றுவதற்குக் காரணமான; தண்பனை தரீஇய தளரா இருக்கை - மருதநிலம் சூழ்ந்த வாழிடம் விட்டு வேற்றிடம் போக விரும்பாத குடியிருப்புக்களில்)

## 8-3 மாட்சி மிகு மனை வாழ்க்கை

மருத நிலத்து உழவர்கள் தங்கள் தொழிலில் வெற்றி காணும் சிறப்பை விளங்க உரைத்த புலவர், அடுத்து, அவ் வுழவர்களின் மனை வளங்கள் பற்றிய விளக்கத்தை மேற் கொண்டார்.

ஒரு நாட்டிற்குச் சிறப்புத்தருவது, அந்நாட்டு மக்கள், ஆங்கு வாழ்வாங்கு வாழ மாட்டாமையால், அவ்விடம் விட்டு அகன்று, அவ்வாறு வாழத்தக்க இடம் தேடிப் போய்விட வேண்டும் என்ற எண்ணத்தானும் உண்டாகாத வகையில், அவர்கள் அங்கேயே வளமார் வாழ்க்கை வாழ்வதற்கேற்ற வளமெலாம் ஒருங்கே குவிந்திருக்கப் பெறுவதாகும். அத் தகைய பெருவளம் நிறைந்தமையால் மருதநிலத்து மண், பதி எழு எண்ணாப் பழங்குடி மக்கள் நிறைந்த பழம்பெரும் ஊர் களைக் கொண்டிருந்தது. அத்தகைய பேரூர் ஒன்றில் பெரு வாழ்வு வாழும் மனை ஒன்றின் மாண்பினை விளக்க முனைந்தார்.

கன்று ஈன்ற பசுவும், பசுவின் மீது அன்பு பாராட்டும் காளையும் தொழுவில் இருக்க, இளமை மிகுதியால் கால்களை நேர்வைத்து நடக்கவும் மாட்டாத கன்றைத் தாம்பில் பிணித்து, அத்தாம்பை, மனை முன்றிலில் நடப்பட்டிருக்கும் கட்டுத்தறியில் கட்டிவைப்பர். அக்கட்டுத் தறியை அடுத்து, மூங்கிலால் ஆன குதிர் நிற்கும். ஏணியிட்டு ஏறினாலும் எட்ட முடியாத உயர்வுடையது அக்குதிர். அது, தலையைத் திறந்து கொட்டிய பழைய நெல்லால் நிறைந்து வழியும். ஒன்று நடப்பு ஆண்டில் விளையும் நெல் போதாது போகக் குறை நேரவேண்டும். அல்லது, கடும் வறட்சியாலோ அல்லது கொடும் புயலாலோ அந்த ஆண்டு நிலம் விளையாது போக வேண்டும். அத்தகைய காலங்களில்தான் சென்ற ஆண்டில் விளைந்து, அக்குதிரில் கொட்டிவைக்கப்பட்டிருக்கும் நெல்லை எடுப்பர். ஆனால், அத்தகைய பற்றாக்குறை எந்த ஆண்டும் நேராமையால் குதிரும், குதிரில் கொட்டிய நெல்லும், மேலும் மேலும் பழையனவாக ஆகிக் கொண்டிருக்குமே ஒழிய, அவை பயன்படுத்தப்படுவதில்லை. அவ்வாறு சேமித்து வைக்கப்படும் பழைய நெல்லால் நிறைந்திருக்கும் குதிர்கள் அம்மனைகளின் செல்வ நலத்திற்குச் சான்று பகர்ந்து நிற்கும்.

அம்மனைவாழ்வார் ஈட்டத் தெரிந்தவரேயல்லாது, ஈட்டியதை, இல்லாதவர்க்கு வழங்கத் தெரிந்தவரோ, நன்கு துய்க்கத் தெரிந்தவரோ அல்லர் எனக் கூறிவிட இயலாது, மாறாக, அவற்றை அறிந்தவர்கள், வாழ்க்கையிலும் வழுவாது கடைப்பிடிப்பவர்கள். விளைந்த நெல்லின் ஒரு பகுதியைக் களத்து மேட்டிலேயே, இரவலர்க்கு வழங்கிவிட்டு எஞ்சிய நெல்லையே மனைகொண்டுவரும் மனவளம் படைத்த அவர்கள், செல்வ நலனைச் சிறக்க நுகரவும் தெரிந்திருந்தார்கள்.

இளஞ்சிறுவர்கள் உடல் உரம் பெற ஓடி ஆடவேண்டும். ஆடிய பின்னர் அரிய உணவினை ஆர உண்ண வேண்டும். உண்டபின்னர் அயர்ந்து உறங்க வேண்டும் என்ற மக்கள்

வளர்ப்பு முறைகளை அறிந்து மக்களை வளர்த்து வருவார்கள். சிறுவர் சிறுதேர் ஈர்த்து விளையாடி மகிழ்வர். அவர்கள் ஈர்த்துத் திரியும் சிறு தேரிலும், அவர்களின் செல்வச் சிறப்பு புலப்படும். தச்சர்கள், ஊரில் உள்ளார் அனைவர்க்கும் விதவிதமான சிறு தேர்களைச் செய்து அளிப்பர். அத்தேர்களையெல்லாம், அவை செய்யப்படும் போதே, உடனிருந்து பார்க்கும் அத்தச்சர் வீட்டுச் சிறுவர்களுக்கு எந்தத் தேர் மீதும் பற்று ஏற்படாது. ஆனால், கூறிய மனையைச் சேர்ந்த சிறுவர் ஈர்க்கும் சிறு தேர், அந்தச் சிறுவர்களுக்கும் அதுபோலும் ஒரு தேர் தேவை என்ற ஆசையை ஊட்டவல்ல சிறந்த வடிவமைப்பு உடையதாக இருக்கும். அக் சிறுதேர், தக்சச் சிறுவர்க்கே ஆசை ஊட்டும் என்றால், ஏனைய சிறுவர்களைப்பற்றி கூறத் தேவையில்லை, அதனால், சிறுவர் நெடிது நேரம் ஈர்த்துத் திரிந்துக் களைத்துப் போவர்; தளர்ந்துபோன அச்சிறுவர்க்குப் பால் உணவு ஊட்டுவர்; பால், வெறும் பசும்பால் அன்று; தாய்ப் பால்; ஆனால், அது அச்சிறுவனை ஈன்ற தாயின் பால் அன்று; செல்வம் கொழிக்கும் அவ்வீட்டில். சிறுவரைவளர்ப்பதற்கென்றே செவிலியர் சிலர் இருப்பர்; அவர்கள், வெறும் கூலிக்குப் பணிபுரிபவர் அல்லர். அக்சிறுவர் பால்,பெற்றெடுத்த தாயினும் பேரன்புடையவர்; அதனால், பசி எடுத்ததும், அச்சிறுவரும், பெற்ற தாயிடம் செல்ல எண்ணாது, பேணி வளர்க்கும் செவிலியரிடமே விரைவர். அச்செவிலியரும், அச்சிறுவர் பால், தலையாய தாயன்பே செலுத்துவதால், சிறுவர்க்ன் தம்மைத் தழுவியதுமே பால் சுரக்க, சிறுவர்க்குப் பால் அளித்து மகிழ்வர். பால் உண்டு பசி தீர்ந்த சிறுவர், பஞ்சணைப் பள்ளியில் படுத்து அயர்ந்து உறங்கிவிடுவர். அத்துணை வளம் மிக்கவை அம்மனைகள்

மருத நிலத்துப் பேரூர்களில் உள்ள ஒவ்வொரு மனையு... வளம் கொழிக்கும் மனைகளாகவே இருக்கும்; ஆதலின் அவ்வூரார் பசி என்பதையும் அறியார்; பசித்துயர் போக்க

அவ்வூரை விட்டுப் பிரிந்தும் அறியார் என அப்பேரூர்களின் பெருமையினைப் பெரும்பாணனுக்கு எடுத்துரைத்த புலவர், 'பெரும்பாண! நீயும் உன் சுற்றமும் அவ்வூரில் சென்று தங்குவீராயின், அவ்வூரார், உன்னைத் தங்கள் ஆருயிர் அனைய உறவினர்களாகவே கொண்டு பெருவிருந்து அளிப்பர். அவர்கள் உழுது கொண்டது செந்நெல். ஆனால், அதை உங்களுக்கு அளிக்க மாட்டார்கள்; அரும்பாடுபட்டு உழவுத் தொழில் புரிவார் மட்டுமே விளைவிக்க வல்லதும், தூய வெண்ணிறம் வாய்ந்ததுமான மெல்லிய அரிசியைத் தேடிப் பெற்று ஆக்கிய சோற்றையே படைப்பர்; துணைக் கறியாக, நாள்தோறும் வழக்கமாக உண்ணும் கறிகளை, அன்று சமைக்காது, சிறப்பு விருந்தினர்களாக வருவார்க்கு மட்டுமே அளிப்பதான, தங்கள் மனையில் தாம் வளர்க்கும் கோழியை அடித்துச் செய்யும் கோழிப் பொறியலையே படைப்பர்; சிறந்த அவ்வுணவுண்டு மகிழ்ந்து செல்வீராக'' என்றார்.

"பகட்டுஆ ஈன்ற கொடுநடைக் குழவிக்,
கவைத் தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்,
ஏணி எய்தா நீள்நெடும் மார்பின்
முகடுதுமித்து அடுக்கிய பழம்பல் உணவின்
குமரி மூத்த கூடு ஓங்கு நல்லில்;
தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட, அலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பால் ஆர்ந்து
அமளித் துஞ்சும் அழகுடை நல்லில்
தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லல் பேரூர் மடியின், மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவீர்"

*(243—256)*

(பகட்டுஆ ஈன்ற—காளைகளோடு கூடிய பசுபெற்ற கொடுநடைக் குழவி—வளைந்து வளைந்து நடக்கும் கன்றுகளைக் கட்டிய; கவைத்தாம்பு தொடுத்த—தலை பிரிந்திருக்கும் தாம்பு எனும் கயிறு கட்டப்பட்டிருக்கும்; காழ் ஊன்று அல்குல்—கட்டுத்தறிகள் நடப்பட்டிருக்கும் அகன்ற இடத்தையும்; ஏணி எய்தா நீர் நெடும் மார்பின்—ஏணியிட்டு ஏறினாலும் எட்டாத மிகப் பெரிய வயிறு எனப்படும் நடுப்பகுதியையும், முகடு துமித்துஅடுக்கிய பழம்பல் உணவின்—தலையைத்திறந்து மேலே மேலே சொரிந்த பழைய நெல்லையும் உடைய; குமரி மூத்த கூடு ஓங்கு நல்இல்—இளமைநலம் கெடாமலே முதிர்ந்துபோன குதிர்கள் உயர்ந்து நின்ற நல்ல இல்லங்களையும்; தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த—தச்சச் சிறுவர்களும் விரும்புமாறு பண்ணப்பட்ட; ஊரா நற்றேர்—ஏறி ஊரப் பயன்படாமல் ஈர்க்கப் பயன்படும் சிறுதேரை; உருட்டிய புதல்வர்—ஈர்த்துத் திரிந்த பிள்ளைகள்; தளர் நடை வருத்தம் வீட—தளர் நடையால் உண்டான வருத்தம் நீங்க; அவர் முலைச் செவிலி அம் பெண்டிர்த் தழீஇப் பால் ஆர்ந்து—பால் சுரந்து நிற்கும் செவிலியராகிய சிறந்த மகளிரைத் தழுவிப் பால் உண்டு; அமளித் துஞ்சும் அழகுடை நல்இல்—பஞ்சணையில் துயில் கொள்ளும் அழகிய இல்லங்களையும் உடைய; தொல்பசி அறியா உலகில்—தொடர்ந்து வரும் பசி அறியாத; துளங்கா இருக்கை—குடிபெயர நினையா மக்கள் வாழும் குடியிருப்புகளை உடைய; மல்லல் பேரூர்—வளம்மிக்க பேரூர்களில்; மடியின்—தங்குவீராயின்; மடியா வினைஞர்—சோம்பி இராத உழவர்கள்; தந்த வெண்ணெய்வல்சி—விளைத்துத் தந்த வெண்ணெல் சோற்றை; மனைவாழ் அளகின் வாட்டொடு பெறுகுவீர்—தங்கள் மனையில் வாழும் கோழிப் பொரியலோடு பெறுவீர்கள்.)

## 8-4 மருதநாட்டுத் தொழில் வளம்

ஆலைகள் ஆக்கிக் குவிக்கும் செய்பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும், ஆலைகளுக்குத் தேவைப்படும் இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் வேண்டியிருக்குமாதலின், ஒருநாட்டின் தொழில் நிலையங்கள், பெரும்பாலும் அந்நாட்டின் கடற்கரையை ஒட்டியே அமைந்திருக்கும். அம்முறைக்கு ஏற்ப, திரையன் நாட்டு ஆலைகளும், மருத நிலத்து வயல்களைக் கடந்து, கடலைச் சார்ந்த நெய்தல் நிலத்தில் அடியிடும் பகுதியிலேயே அமைந்திருந்தன.

மருதநில வயல் வளத்தை—பேரூர் மக்களின் செல்வப் பெருக்கை—எடுத்துரைத்த புலவர், அப்பேரூரில், கோழிப் பொறியல் கலந்த வெண்சோறுண்டு காஞ்சி நோக்கிப் புறப்படும் பெரும்பாணன், அம்மருத நில எல்லையில் காண நேரும் ஆலைகள் பற்றிக் கூறத் தொடங்கினார். பெரும்பாணன், ஆலைகள் அமைந்திருக்கும் பகுதியை அணுகும் போதே, அவர்களை அச்சுறுத்தும் பேரொலி கேட்கும், அது, இரவு பகல் ஓயாமல், கரும்பில் சாறுபிழிந்து, காய்ச்சிக் கட்டியாக்கும் இயந்திரங்கள் எழுப்பும் ஒலியாகும். அவ்வொலி, பாணன் கடந்து வரும், மூங்கில்கள் காடுபோல் வளர்ந்திருக்க, அதன் குளிர்ச்சியால் ஈர்ப்புண்டு, பெருமழை பெய்யும் மலைநாட்டுப் பகுதியில், எதிர்ப்படுவார் அனைவரையும் தாக்கித் துயர் விளைவிக்கும் கொடுமை மிக்க புலியால் தாக்குறும் யானைக்கூட்டம் அஞ்சி எழுப்பும் பெருங்குரல் ஒலிபோல் இருக்கும். அது அறிந்தவர் புலவர். அதனால், பெரும்பாணனுக்கு அதை அறிவித்து, அவ்வொலி கேட்டு அச்சுறாது சென்று, அவ்வாலைகளை அடைவீர்களானால், ஆலை உரிமையாளர்கள், கருப்பஞ்சாறும், கருப்பங்கட்டியும் தருவார்கள். உங்களில் யார் யார் எது எதை விரும்புவீர்களோ, அது உண்டு, செல்வீர்களாக" என்று கூறினார்.

"மழை விளையாடும் கழைவளர் அடுக்கத்து
அணங்கு உடை யாளி தாக்கலின் பலவுடன்
கணஞ்சால் வேழம் கதழ்வு உற்றாங்கு
எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை
விசயம் அடூஉம் புகைசூழ் ஆலைதொறும்
கரும்பின் தீஞ்சாறு விரும்பினர் மிசைமின்"

(257—262)

(மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து—மழை பொழியும் மூங்கில் வளரும் பக்கமலைகளில்; அணங்கு உடை யாளிதாக்கலின்—பிற உயிர்களுக்கு வருத்து தலைச் செய்யும், யாளி தாக்குவதால்; பல உடன் கணம் சால் வேழம் கதழ்வுற்றாங்கு—பலவும் கூடிக் கூட்டமாக வாழும் யானைகள் கலங்கிக் கதறினாற் போல; எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை—கரும்பில் சாறு பிழியும் எந்திரம் ஆரவாரிக்கும் இடையறாத ஓசை உடைய; விசயம் இடூஉம்—புகை சூழ் ஆலைதோறும்; கருப்பஞ்சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகை சூழ்ந்த ஆலைகள் தோறும்; கரும்பின் தீஞ்சாறு—கரும்பின் இனிய சாற்றை; விரும்பினன் மிசைமின்—விருப்பம் உடையவர் பருகுவீர்களாக.)

# 9. வலைஞர் வழங்கும் விருந்து

பாலை, முல்லை, குறிஞ்சி, மருதம் ஆகிய நிலங்களை, முறையே கடந்து செல்லும் பெரும்பாணன், இறுதியாகக் கடக்க வேண்டிய நெய்தல் நில இயல்பையும், அந்நிலம் வாழ் வலைஞர் வாழ்க்கை முறைகளையும் விளக்கத் தொடங்கினார்.

வலைஞர் குடில்கள், மெல்லிய மூங்கில்களை வரிசையாகப் பரப்பி, வஞ்சி அல்லது காஞ்சி மரத்தின் வெள்ளிய கொம்புகளை இடை இடையே இட்டுத், தாழை நார் கொண்டு கட்டி, தருப்பைப் புல் வேய்ந்து, பெய்யும் மழையால் நனையாவாறு சுவர்களைக் காத்தற் பொருட்டு, குறிய இறப்பை, நாற்புறங்களிலும் அமையக் கட்டப் பட்டிருக்கும். ஓடும் நீரில் எதிர்த்து ஏறும் மீன்களை வாரிக் கொட்டும் பறிகள், மனை முற்றத்தில் காணப்படும்.

உணவிற்குத் துணைக்கறியாகப் பயன்படவல்ல அவரை, பீர்க்கு, புடலை, பாகல் போலும் காய்களைத் தரும் கொடிகளை வளர்த்து, அவை பெருகப் படர்ந்து பயன் தரற் பொருட்டு, வளைந்து கவிர்த்த புன்னைக் கிளைகளை நட்டுப், போடப் பட்டிருக்கும் பந்தலும் ஆங்கு காணப்படும். மேலே பந்தல் நிழல் செய்ய, கீழே, மெத்தென்ற மணல் பரந்த அந்த இடம், இருந்து இளைப்பாறுதற்கு இனிதாக இருக்கும்.

கடல் மீன்களைக் காட்டிலும் குளத்து மீன்களே சுவை மிகுந்தவை; பெருவிலை தருபவை; கட்டுமரம் ஏறிச்சென்று கடலோடு போராட வேண்டுமே என்ற கவலை தராமல் பெறக் கூடியவை என்பதால், குளத்து மீன் பிடிப்பதிலேயே ஆர்வம் காட்டுவர். வலைஞர் குடியிருப்பு கடற்கரையைச் சார்ந்திருக்கும். கடல் நீர் உப்பு நிறைந்து உண்ணவும் மண்ணவும் பயன்படாது. அதனால், அப்பகுதிவாழ் வலைஞர்கள், குடிப்பதற்கு நீர் பெற ஒரு குளம். குளிப்பதற்கு ஒரு குளம், உள் நாட்டு மீன் வகைகளை வளர்ப்பதற்குச் சில குளங்கள் எனத், தம் குடியிருப்பைச் சுற்றிக் குளங்களாகவே வெட்டி வைத்திருப்பர்.

குளத்தில் நீர் வற்றி விட்டால், குடிப்பதற்கு நீர் இல்லாமல் போகும் என்பது மட்டுமன்று; நீர் வற்றி விட்டால், மீன் அற்றுப் போக, அவர் பிழைப்பும் அற்றுப் போகும். அதனால், குளத்து நீரை வற்ற விடாது காப்பதில் விழிப்பாயிருப்பர். அதனால், அவர்கள் வெட்டியிருக்கும் குளங்கள், மழை தரும் மாரிக் காலம் குறைந்து, மழை தராக் கோடைக் காலம் நீண்டு போகும் ஆண்டிலும், உயர்த்திய கையோடு இறங்குவார் கையும் மறைய நீர் நிறைந்திருக்கு மளவு மிக ஆழம் உடையதாகவே இருக்கும்.

மீன் வளர்க்கும் எல்லாக் குளங்களிலும், எல்லா வகை மீன்களையும் ஒரு சேரக் கலந்து வளர்க்க மாட்டார்கள். பெரு மீன்கள், சிறு மீன்களைத் தின்று அழித்து விடும் ஆதலாலும், சிறு மீன்களை வலை வீசி வாரிக் கொள்ள வேண்டும்; பெரு மீன்களைத் தூண்டில் கொண்டு பிடிக்க வேண்டும் ஆதலாலும், கண்டை, கயல், இறால் போலும் சிறு மீன்களை ஒரு குளத்திலும், வரால், வாளை போலும் பெரு மீன்களை வேறு குளத்திலுமாக வளர்த்திருப்பர்.

அவரை முதலாம் கொடி படர்ந்திருக்கும் பந்தலின்கீழ் மணற்பரப்பில் ஒன்றுகூடும் வலைஞர், ஊரெல்லாம் திரண்டு

விட்டனர், குடியிருப்பைச் சேர்ந்த ஆண், பெண், இளை யோர், முதியோர் அனைவரும் வந்து விட்டனர் என்பதை உறுதி செய்து கொண்டு குளக்கரை அடைவர். அம்பு முனை போலும் வடிவுடையதாய்ப், புரண்டு, புரண்டு திரியும் போது வான் மீன் போல் ஒளி காட்டும் கயல் மீன் கூட்டமும் வில் வடிவில் வரிசை அமைத்துக் கொண்டு கூட்டம் கூட்ட மாய்த் திரியும் இறால் மீன்களும் களித்துக் திரிவது கண்டு, சிறிது நேரம், அக்காட்சியில் களிப்புற்று, பின்னர் உடன் வரும் இளம் பிள்ளைகளோடும், குளத்துள் ஒரு சேர இறங்கி மீன்களை அளைந்து வாரிக்கொண்டு கரையேறி மகிழ்வர்.

மீன் பிடித்தற் பொருட்டு, கூட்டமாகக் குளத்துள் இறங்கி நீரைக் கலக்கிச் சேறாக்கி விடுவர் என்றாலும், குடி நீர் குளத்தில், குடி நீர் கொள்வதல்லது, ஒருவரும் காலிடார். தவறி யாரேனும், அறியாது அதிலும் இறங்கி, நீரின் தூய்மையைக் கெடுத்து விடுவாரோ எனும் அச்சத்தால், ஆண்டு முதிர்மையால், குளத்துள் இறங்கியோ, கடல்மேல் சென்றோ மீன் பிடிக்க மாட்டா முதியவர்கள், குடிநீர்க் குளக்கரையில் அமர்ந்து காவல் காத்திருப்பர். அவ்வாறு காவல் காத்திருக்கும் நிலையிலும், காலமெல்லாம் தொழி லாற்றிய அவர் கைகள் வாளா இராது, மீன் பிடி வலை களைப் பின்னிக் கொண்டிருக்கும்.

அத்தகைய வலைஞர் மனைகளில் தங்குவீரானால், ஆங்கு கொழியல் போகக் குற்றி விட்டால் உரச் சத்து அற்றுவிடும் என்பதால் கொழியல் போகாது வெறும் உமி மட்டுமே நீங்கக் குற்றிய அரிசியைக் கஞ்சி போகச் சோறாக்கும் நிலை யிலும் உரச் சத்து அகன்று விடும் என்பதால் சோறாக வடித்துக் கொள்ளாமல், இளகிய வடிவில் துழாவி எடுத்து வாய் அகன்ற தட்டிலே வார்த்துச் சூடு போக ஆற்றிய களியையும், தாம் அரிதின் முயன்று எடுத்த புற்றினுள் பாம்பு குடிபுகக்கண்டு, வெளிப்பட்டு இறகு உதிர்ந்து வீழ்ந்து கிடக்கும் புற்றீசல் குவியலோ என ஐயுறத்தக்க வடிவுடைய தாகிய செந்நெல்லின் குறுமுளைகளால் ஆன அடையையும்,

காடி எவ்வளவு புளிப்பு ஏறுகிறதோ, அவ்வளவும் சுவை மிகும் என்பதால், வாய் அகன்ற உறுதியான பெரிய சாடியில் முழுமையாக இரண்டு பகல், இரண்டு இரவு கழியப் புளிக்க வைத்துப் பிறகு அடுப்பிலேற்றிக் கொதிக்க வைத்து, இறக்கி கையிட்டு அலைத்தும் பிழிந்தும், நெய்யரி கொண்டு வடித்தும். கொண்ட மணம் மிக்க கள்ளையும், நெருப்பிலே இட்டுச் சுட்டு எடுத்த மீனையும் அன்போடு வழங்குவார்கள். அத்தகைய உணவின்பால் உங்களுக்கு விருப்பம் இல்லாது போயினும். நெடும் வழி நடையாலும். பெரும் பசியாலும் உண்டாகும் தளர்ச்சி போகவாவது சிறிது உண்டுசெல்வீராக என்றார்.

''வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறிஇறைக் குரம்பைப், பறியுடை முன்றில்,
கொடுங்கால் புன்னைக் கோடுதுமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணல் பந்தல்,
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றிப்,
புலவுநுனைப் பகழியும் சிலையும் மானச்,
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்
மை இரும்குட்டத்து மகவொடு வழங்கிக்,
கோடை நீடினும் குறைபடல் அறியாத்
தோள்தாழ் குளத்த கோடு காத்திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயின் சேப்பின்
அவையா அரிசி அம்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றிப்,
பாம்புறை புற்றில் குரும்பி ஏய்க்கும்
பூம்புற நல்லடை அளைஇத், தேம்பட
எல்லையும் இரவும் இருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சு அற விளைந்த
வெங்நீர் அரியல் விரல்அலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
(263—282)

**உரை:**

வேழம்நிரைத்து—சிறு மூங்கிலை வரிசையாகச் சார்த்தி. வெண்கோடு விரைஇ—காஞ்சி அல்லது வஞ்சியின் வெள்ளிய கொம்புகளை இடையிடையே கலந்து, தாழை முடித்து—தாழை நாரால் கட்டி, தருப்பை வேய்ந்த—தருப்பைப் புல்லால் வேயப்பட்ட, குறி இறைக் குரம்பை—குறுகிய இறப்பையையுடைய குடிலினுடைய, பறி உடை முன்றில்—மீன் பிடிக்கும் பறிகளையுடைய முற்றத்தில், கொடுங்கால் புன்னை—வளைந்த கால்களையுடைய புன்னை மரத்தின், கோடு துமித்து இயற்றிய—கொம்புகளை வெட்டி நட்டு போடப்பட்ட, பைங்காய் தூங்கும்—அவரை போலும் பசிய காய்கள் காய்த்துத் தொங்கும், பாய் மணல் பந்தர்—விரிந்த மணல் பரந்த பந்தரில், இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி—இளைஞர்களும் முதியவர்களுமாக சுற்றத்தாரோடு நிறைந்திருந்து, புலவு நுனைப் பகழியும் சிலையும் மான—புலால் நாறும் முனையையுடைய அம்பையும் வில்லையும் ஒப்ப, செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்—செவ்வரி படர்ந்த கயல் மீன்களோடு, பசிய இறா மீன்கள் பிறழும், மை இருங் குட்டத்து மகவொடு வழங்கி—ஆழம்மிகுதியால் கருமை நிறம் வாய்ந்த நீர் நிறைந்திருக்கும் ஆழ்ந்த குளங்களில், இளம் பிள்ளைகளோடு இறங்கி, அளைந்து மீனைப் பிடித்து, கோடை நீடினும் குறைபடல் அறியா—கோடைக் காலம் நீடித்தாலும் வற்றுதல் அறியாதவாறு, தோள் தாழ்குளத்த—நீர் ஆழம் காட்ட நீருள் இறங்கி உயர்த்திய கையும் அமிழ்ந்து போகும் ஆழம் வாய்ந்த குளங்களின், கோடுஉர காத்திருக்கும்—கரையில் காவல் மேற்கொண்டிருக்கும், கொடுமுடி வலைஞர்—பின்னிய முடிகளைக் கொண்ட வலைகளை உடைய மீனவர், குடிவயின் சேப்பின்—குடியிருப்பில் தங்குவீராயின்,

அவையா அரிசி—கொழியல் போகக் குற்றாத அரிசியை, அம் களித் துழவை—இனிய களியாகத் துழாவி அடப் பட்டதை, மலர்வாய்ப் பிழாவில் புலர ஆற்றி—அகன்ற வாயையுடைய தட்டில் வெப்பம் போக ஆற்றி; பாம்பு உறை புற்றின் குறும்பி ஏய்க்கும்—பாம்பு வாழும் புற்றி லிருந்து வெளிப்பட்ட ஈசலை ஒக்கும், பூம்புற நல்லடை அளைஇ—அழகிய புறத்தோற்றத்தை உடைய நெல் முளையால் ஆன அடை கலந்து, தேம்பட—இனிமை மிகும்படி, எல்லையும் இரவும் இருமுறை கழிப்பி—இரண்டு இரவும், இரண்டு பகலும் கழித்து, வல்வாய்ச் சாடியின்—வலிய வாய் அமைந்த சாடியில் வைத்து, வழைச்சு அற விளைந்த—இளமை நாற்றம் அற்றுப் போக முதிர்ந்த, வெந்நீர் அரியல் விரல் அலை நறும் பிழி—வெந்நீரோடு கொதிக்க வைத்து, நெய்யரியால் வடிகட்டி, விரல்களால் அலைத்துப் பிழிந்தெடுத்த நல்ல கள்ளை, தண்மீன் சூட்டொடு—பச்சை மீனைச் சுட்ட தாகிய வெஞ்சனத்தோடு, தளர்தலும் பெறுகுவிர்—தளர்ந்து போகு நிலையில் பெறுவீர்கள்.

# 10. தாமரைக்குளம்

வலைஞர்பால் விடைகொள்ளும் ஓரிரு நாழிகைக்குள் அந்தணர் குடியிருப்பை அடைந்துவிடலாம் எனினும், இடை வழியில் உள்ள தாமரைக் குளக்கரையிலும், குவளை மலர்க் குளக்கரையிலும், பெரும்பாணனைச் சிறிது நேரம் இருக்க வைத்து, அவற்றின் இயற்கை அழகை அனுபவித்து, இன்புறச் செய்துள்ளார் புலவர்.

வலைஞர் குடியிருப்பிற்கு அணித்தாக ஒரு குளம். வாளையும், வராலும் வளரும் அக்குளக்கரையில், மீன் பிடிப்பதில் வல்லவர் வரிசையாக அமர்ந்திருப்பர். தூண்டில் முள்ளில் இடுவதற்கான பச்சை இறைச்சி இருக்கும் தோற்பை, அவர் தோளில் தொங்கிக் கொண்டிருக்கும்; கையில் நீண்ட மூங்கிற் கோலாலான தூண்டில்; மூங்கில் முனையில் வலித்து முடியப்பட்ட மெல்லிய வலிய கயிறு; கயிற்றின் மறு முனையில் உட்புறம் வளைந்த தூண்டில்முள்; அம்முள்ளில், அது முள் எனத் தெரியவாறு முழுமையாக மறையும்படி கோத்து வைக்கப்பட்ட இறைச்சித் துண்டு; நீருள் போடப்படும் அத்தூண்டிலை, அவர் கைகள் விட்டு விட்டு அசைத்துக் கொண்டிருக்கும்.

திடுமெனத், தூண்டிலை யாரோ பற்றி மறுபுறம் வலிந்து ஈர்ப்பது போன்ற உணர்வு; உடனே அவர்முகம் மலர்ந்துவிடும். தூண்டிலில் பருமீன் அகப்பட்டுக்கொண்

டது. அறிந்து, தூண்டிலை விரைந்து வலித்துத் தூக்க, தூண்டில் முள்ளில் அகப்பட்டுக் கொள்ளாமலே, மிகவும் பக்குவமாகத், தூண்டில் முள்ளில் கோத்து வைத்த இறைச்சியை மட்டும் கவர்ந்து சென்றுவிட்டது காண, அவர் பெரிதும் ஏமாற்றம் அடைவர். மீன் பிடிப்பதில் அவர் வல்லவர் என்றால்; அக்குளத்து மீன்கள் அவரைவிடத் திறமை வாய்ந்தவை எனினும், வலைஞர், உள்ளம் சோர்ந்து விடாது, உறுதியோடு இருந்து, வரால்களை வேண்டுமளவு அகப்படுத்திச் செல்லவே முயற்சிப்பர்.

தூண்டில் முள்ளில் அகப்பட இருந்ததிலிருந்து, தப்பிப் பிழைத்த மீன் மருட்சியுற்றுப்போகும். அந்நிலையில். குளக் கரையில் செழுமையாக வளர்ந்திருக்கும் பிரம்புக் கொடிகளின் நிழல், மெல்ல அலைவீசிக் கொண்டிருக்கும் நீருள் தெரிவதைக் காணும் அம்மீன்கள், அவற்றையும் தூண்டிலாகக் கருதி, அஞ்சி மீண்டும் மருளும். இவ்வாறு மருட்சி மேல் மருட்சியுற்றுப்போகும் அவை, தம்மை அறியாமல், தாமாகவே சென்று தூண்டிலில் அகப்பட்டுக் கொள்ளும்.

குளத்தின் ஒரு துறையில், அவ்வாறு சிலர் மீன் பிடித்திருக்க, வேறு துறையில், பெருநீரில் குதித்து நீந்த வல்லவர் சிலர், நீந்தி மகிழ்வர். இவை அனைத்திற்கும் மேலாகக், குளமே தீப்பற்றி எரிகிறதோ என எண்ணுமளவு, குளம் நிறைய, செந்தாமரை மலர்கள், இலை தெரியாவாறு மலர்ந்திருக்கும். திருமகளும் கலைமகளும் விரும்பி அமரும் மலர்களாதலின், பெரும்பாண! அம்மலர்க் காட்சியைக் கண்டு மகிழ்வதல்லது பறித்துச் சூட விரும்பாதீர்கள்" என்றார்.

அடுத்து ஒருகுளம். ஆங்கு மீன் பிடிப்பாரும் இலர்: நீந்தி மகிழ்வாரும் இலர்; ஆயினும், அது தாமரைக் குளத்தினும் அழகுடையது. அதில், செவ்வரக்கை உருக்கி

வார்த்தாற்போலும் செந்நிறம் வாய்ந்த செங்குவளையும், இளநீல நிறம் காட்டும் கருங்குவளையும், மற்றும், வேறு பன்னிற மலர்களும் மலர்ந்து மணம் வீசும். அக்குளத்தைக் காணும் உன் அகக் கண்முன், பெரும்பாண! மலைநாட்டைக் கடந்து வந்தபோது, பெருமழை பெய்து ஓய்ந்த கருமுகில் அகன்ற வானில், ஞாயிறு தோன்ற, அஞ்ஞாயிற்றின் கதிர்கள் ஊடறுத்துப் பாய எழுநிறம் காட்டித் தோன்றிய வானவில் காட்சி தோன்றி, அவ்வின்ப நிலையில், நீ மகிழ்ந்து போவாய் அந்நிலையில், அம் மலர்களைப் பறித்திருப்பவர், திரையன் புகழ்பாட வந்திருக்கும் புதியவர் என அறிந்து உன்பால் அன்புகொண்டு, மலர்களுள், அன்றலர்ந்த மலர்களாகத் தேர்ந்து தருவர். மணம் நாறும் அம் மலர்களை மாலையாகத் தொடுத்து அணிந்துகொண்டு, ஞாயிறு தோன்றும் விடியற்போதில் அந்தணர் குடியிருப்புள் புகுவீர்களாக" என்றார்.

"பச்சூன் பெய்த சுவல் பிணி பைந் தோல்,
கோள்வல் பாண்மகன் தலைவலித்து யாத்த
நெடுங்கழைத் தூண்டில் நடுங்க நாண் கொளீஇக்
கொடுவாய் இரும்பின் மடிதலை புலம்பப்
பொதிஇரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பின் நடுங்குநிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங்கயம் தீப்பட மலர்ந்த
கடவுள் ஒண்பூ அடார்தல் ஓம்பி,
உறைகால் மாறிய ஓங்குயர் நனந்தலை
அகலிடு வானத்துக் குறைவில் ஏய்ப்ப
அரக்கு இதழ்க் குவளையொடு நீலம்நீடி
முரண்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுநர் இட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநாள் அமைத்துப் பிணையினிர் கழிமின்"
(283—296)

உரை

பச்சூன் பெய்த சுவல் பிணி பைந் தோல்—வேகாத புதிய இறைச்சி இடப்பட்ட, தோளில் மாட்டித் தொங்கும் பசிய தோற்பையினை உடைய, கோள்வல் பாண் மகன்—மீனைத் தப்பாமல் பிடிக்க வல்ல பாணர் குடியில் பிறந்தவனுடைய, தலை வலித்து யாத்த—முனையில் இறுக்கிக் கட்டிய, நெடுங்கழைத் தூண்டில் நடுங்க— நீண்ட மூங்கிற் கோலாலான தூண்டில் நடுங்கும்படி, நாண் கொளீ இயகொடுவாய் இரும்பின் மடிதலை புலம்ப—கயிற்றனாலே கட்டப்பட்ட வளைந்த முனையையுடைய இரும்பாலான தூண்டில் முள், தன்னிடத்தே கோத்து வைக்கப்பட்ட இரை கவரப்பட்டு தனித்து வறிதே கிடக்க; பொதி இரை கதுவிய—தூண்டிலில் பொதிந்து வைக்கப்பட்ட இரையைக் கௌவிக்கொண்டு பிழைத்து ஓடிய, போழ்வாய்வாளை —பிளந்தபெரிய வாயையுடைய வாளைமீன்; நீர் நணிப் பிரம்பின்—நீர் அணித்தே முளைத்திருக்கும் பிரம்புக் கொடியின், நடுங்கு நிழல் வெரூஉம்—அசையும் நீரில் தெரிவதால் அசையும் நிழலுக்கு அஞ்சும், நீத்து உடை நெடுங் கயம்—நீந்தி விளையாடுதற்கு உரிய பெரிய குளத்தில், தீப்பட மலர்ந்த கடவுள் ஒண்பூ—குளம் தீப்பட்டு விட்டதே என மருளுமளவு நிறைய மலர்ந்த கடவுள் விரும்பும் சிறந்த தரமரை மலரை, அடைதல் ஓம்பி—பறித்துச் சூடுதலைக் கைவிட்டு, உறை கால் மாறிய—மழை பெய்தலைக் கைவிட்ட, ஓங்கு உயர் நனந்தலை அகன்ற வானத்து—ஓங்கி உயர்ந்த பரந்த இடம் அகன்ற வானத்தில் தோன்றும், குறைவில் ஏய்ப்ப—விட்டு விட்டுக் காட்சி தரும் வானவில்லை ஒப்ப, அரக்கு இதழ் குவளையொடு, நீலம் நீடி—செவ்வரக்குப் போன்ற செவ்விதழ்களையுடைய குவளை மலரோடு, நீல மலரும் மலர்ந்து; முரண்பூ மலிந்த

முதுநீர்ப் பொய்கை—நிறத்தால் வேறுபட்ட பல்வேறு மலர்களும் நிறைய மலர்ந்த, வற்றாத பழைய நீர் நிறைந்த குளத்தில்,குறுநர் இட்ட கூம்பு விடு பன்மலர்—பூக் கொய்வார் உங்கள் முன்னே குவித்த, அரும்பு மலர்ந்த பல மலர்களை; பெருநாள் அமையத்து—பெருமைக்குரிய விடியற் போதில், பிணியினிர் கழிமின்—சூடிக்கொண்டு செல்வீர்களாக.

## 10-1 அந்தணர் அளிக்கும் விருந்து

வலைஞர் குடியிருப்பின் நீங்கி, திரையன் அரசிருக்கையாம் கச்சி நோக்கிச் செல்லும் பெரும் பாணன், இடையில், அந்தணர் குடியிருப்பையும், காஞ்சி நாட்டுக் கடற்றுறை நகராம் நீர்ப்பாயல் துறையையும், வணிகர் வாழிடங்களையும், மாவும், பலாவும், வாழையும், தென்னையும் மலிந்த பெருமரச் சோலைகளையும், தண்டலை உழவர் உறையுள்களையும் கடந்து சென்ற பிறகே கச்சிநகர் அடைவராதலின், கச்சி நகர் பற்றி விளக்குவதன் முன்னர், இடைவழிச் சிறப்புகளை விளக்கத் தொடங்கி, முதற்கண் அந்தணர் குடியிருப்பு பற்றிய விளக்கத்தை மேற்கொண்டார்.

அந்தணர், தம் உற்றார் உறவினர் பால் அன்பு கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களிடத்தும் அருள் கொண்டிருப்பதினாலேயே அந்தணர் என அழைக்கப்படுவர். அதனால், அது, அவர் வாழ்க்கையின் ஒவ்வொரு கூறிலும் தெற்றெனப் புலப்பட விளங்கும். அவர் மனையின் முன்புறத்தில் போடப்பட்டிருக்கும் பந்தலின் குறுகிய காலில் கட்டப்பட்டிருக்கும் கன்று ஒன்றே, அவர், எத்துணை அருள் நிறை உள்ளம் உடையவர் என்பதை விளக்கிவிடும். தாய்ப்பசு அளிக்கும் பால் அவ்வளவையும் தாமே கறந்து கொண்டு விடாது,

கன்று செழுமையாக வளர்வதற்குத் தேவைப்படுமளவு, அதைக் குடிக்கவிட்டு, எஞ்சிய பாலையே அவர் கறந்து கொள்வர். அதை. அக்கன்றின் உடல் செழிப்பே உணர்த்தி விடும்.

அவர் வீடுகள், அவர்தம் புறநலனைப் புலப்படுத்தும் வகையில், நாள்தோறும், பசும் சாணமும் செம்மண்ணும் கொண்டு மெழுகப்பட்டுத் தூய்மையுடையதாக இருக்கும். மனையின் அகத்தே அவர் வழிபடு தெய்வங்களின் படிவங்கள் நிறுவப்பட்டிருக்கும். அந்தணர் புலால் உணவைவெறுப்பவர். அதனால், பிறர் மனைகளில், அது குறித்து வளர்க்கப்படும் கோழியை அந்தணர் குடியிருப்பில் காணல் இயலாது. உலகத்து மக்கள் அறவழி வாழ மறை ஓதிக்காவல் புரிபவர் அந்தணர்; அதனால், அவர் உடைமைகளைக் காக்கும் பொறுப்பு அவர்க்கு இல்லை; அதனால் காவல் கருதி நாய் வளர்ப்பது அவர்க்குத் தேவையற்றது. மேலும், நாய், தான் உண்ணும் உணவு கிடைக்கும் இடத்திலேயே சுற்றி சுற்றித் திரியும். அந்தணர் இல்லத்தில் அது விரும்பும் உணவு கிடைக்காது. அதனால் நாய்களும், அந்தணர் சேரியை அணுகுவதில்லை.

ஆங்கு, வேத ஒலி ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கும். மறையவர், குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே மறை ஓதுவர், காலை முதல் மாலை வரை இடைவிடாமலும் ஓதிக் கொண்டிருப்பவரோ என ஐயுற்று நோக்கினால், அவ்வாறு ஓயாமல் ஓதுவது அந்தணர் அல்லர், அந்தணர் மனைகள் மீதும், மரக் கிளைகள் மீதும் அமர்ந்திருக்கும் கிளிக்கூட்டங்கள் தான், கூறியது கூறும் கிளிப்பிள்ளை என்ற முது மொழியை மெய்ப்பிக்கும் வகையில், அந்தணர் ஓதுவது கேட்டுக் கேட்டுக் கற்றுக் கொண்ட அம் மறையை, மீண்டும் மீண்டும் ஓதிக்கொண்டிருப்பது புலப்படும். நான்மறையை, வரும் புதியவர்க்கெல்லாம் பிழையறக் கற்பிக்குமளவு கிளி

களும் மறை ஓதும் என்றால், அக்கிளிகள் பயில மறை ஓதும் அந்தணர் பெருமையைக் கூறவும் இயலுமோ!

இவ் வகையால், அந்தணர் இல்லத்து ஆடவர் சிறந்து விளங்குவது போலவே, அவ்வில்லத்து மகளிரும் நனி சிறந்து விளங்குவர். வானம் பெரிது; அதில் உலா வரும் மீன்களும் எண்ணிறந்தன; ஆயினும், அவற்றுள், உலகோரால் வழி படத்தக்கது, உற்று நோக்குவார்க்கு மட்டுமே புலப்படும் சிறு மீனாம், அருந்ததியாகும்; அது போல் இளையரும், முதியவரும், ஆடவரும் மகளிருமாகப் பலர் கூடி நடத்தும் இல்லற வாழ்க்கையில், மனைவியின் பங்கு சிறிதே என்றாலும், அருந்ததி நிகர் கற்புடைமையால் அவள் அம்மனைக்கு ஒளி தந்து நிற்பர்ள்.

கற்பாம் அக அழகு வாய்க்கப் பெற்ற அவள் புற அழகிலும் குறையற்றிருப்பாள். ஒளி வீசும் நுதல் அழகு போலும் இயற்கை வனப்போடு, கைவளை அணிதல் முதலாம் செயற்கை அழகும் உடையவள் அவள். அது மட்டு மன்று; செயல் திறமும் வாய்க்கப் பெற்றவள். அரிசியும், காய்களும் நல்லனவாகத் தேர்ந்து கொண்டு, உரிய காலத்தில் அடுக்களை புகுந்து, சுவை மிகச் சமைத்து, அன்புடன் படைப்பதிலும் அவள் வல்லவள். அரிசி வகைகளுள் சிறந்ததான கருடன் சம்பா அரிசியால் சோறு ஆக்கி, மாதுளை வகைகளில் கறிக்கு உதவும் கொம்மட்டி மாதுளங் காயை வகிர்ந்து, ஆவின் பால் காய்ச்சி ஆக்கிய நல்ல மோரைக் கடைந்து எடுத்த வெண்ணெயில், சிவந்து பதமுற வதக்கி, மிளகுப் பொடியும் கறிவேப்பிலையும் இட்டுக் கறி சமைத்து, வற்றி இலை உதிர்ந்து போய் விடாது தழைத்துப் பூத்துக் குலுங்கும் வளமான மரத்திலிருந்து பறித்துக் கொணர்ந்த இளம் பிஞ்சுகளாகிய மாவடுவைப் பிளந்து போட்டு, உப்பும் பிறவும் இட்டு ஊற வைத்து ஊறுகாய் செய்து, வரும் விருந்தினர்களை முக மலர்ந்து வரவேற்று,

அவர் அகம் மலர உண்வு படைக்கும் உயர்வுடையவள் அவள். பெரும்பாண! வழியில் அந்தணர் குடியிருப்புக்குத் தவறாது சென்று, அவர் அளிக்கும் அரிய அறு சுவை உணவுண்டு செல்வாயாக'' என்றார்.

''செழும் கன்று யாத்த சிறுதாள் பந்தர்
பைஞ் சேறு மெழுகிய படிவ நல் நகர்,
மனை உறை கோழியோடு ஞமலி துன்னாது,
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறை காப்பாளர் உறை பதிச் சேப்பின்,
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறு மீன் புரையும் கற்பின், நறு நுதல்,
வளைக்கை மகடூஉ, வயின் அறிந்து அட்ட
சுடர்க் கடைப் பறவைப் பெயர்ப் படு வத்தம்,
சேதா நறுமோர் வெண்ணையின் மாதுளத்து
உருப்புறு பசுங்காய்ப் போழோடு, கறிகலந்து
கஞ்சக நறு முறி அளை இப், பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகை படப் பெறுகுவிர்''

(297-310)

**உரை:**

செழும் கன்று யாத்த சிறு தாள் பந்தர்—வளமான கன்றைக் கட்டின குறுகிய கால்களையுடைய பந்தலினையும், பைஞ் சேறு மெழுகிய படிவ நல் நகர்—பசும் சாணத்தால் மெழுகிய, தெய்வங்களின் படிவங்கள் உள்ள, நல்ல வீடுகளையுடைய, மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது—மனைகளிலே வளரும் கோழிகளுடன் நாயும் நெருங்காமல், வளைவாய் கிள்ளைமறைவிளி பயிற்றும்—வளைந்த வாயையுடைய கிளி, வேதத்தைப் பலகால் ஓதும், மறை காப்பாளர் உறைபதி

சேப்பின்—வேதக் காவலராகிய அந்தணர் வாழும் ஊரில் தங்குவீராயின், பெருநல் வானத்து வடவயின் விளங்கும்—பெரிய நல்ல வானத்தில், வடபகுதியில் ஒளிவிடும், சிறு மீன், புரையும் கற்பின்—சிறிய மீனாகிய அருந்ததியை ஒக்கும் கற்பினையும், நறு நுதல் வளைக்கை மகடூஉ—நல்ல மணம் நாறும் நெற்றியையும், வளை அணிந்த கைகளையும் உடைய பார்ப்பினி, வயின் அறிந்து அட்ட—பதம் அறிந்து ஆக்கிய, சுடர்க் கடை—ஒளி வீசும் முனைகளை யுடைய, பறவைப் பெயர்ப் படு வத்தம்—கருடன் என்ற பறவையின் பெயர் பெற்ற கருடன் சம்பா என்ற நெல் சோற்றினையும், சேதா நறு மோர் வெண்ணையின்—சிவந்த பசுவின் மணம் மிக்க மோரைக் கடைந்து கொண்ட வெண்ணையில் வெந்ததினால். உருப்புறு மாதுளத்து பசுங்காய்ப் போழோடு—சிவந்த மாதுளங் காயின் வகிரோடு, கறி கலந்து—மிளகுப் பொடி கலந்து, கஞ்சிக நறுமுறி அளை இ—கருவேப்பிலையின் நல்ல இலைகளைக் கலந்து ஆக்கிய கறியையும்; பைந்துணர் நெடுமரக் கொக்கின்—பசிய இளந்தளிர்களையுடைய உயர்ந்த மாமரத்தின், நறு வடி விதிர்த்த தகை மாண் காடியின்—நல்ல இளம் பிஞ்சுகளைப் பிளந்து போட்ட உண்ணும் தகுதியால் மாண்புற்ற ஊறுகாயினோடு, வகை படப் பெறுகுவிர்—வகை வகையாகப் பெறுவீர்கள்.

# 11. நீர்ப் பாயல் துறைமுகப் பட்டினம்

பல்லவர் காலம் தொட்டு மாமல்லபுரம் என வழங்கப் பெறும் துறைமுகப் பட்டினம், திரையன் ஆண்டிருந்த சங்க காலத்தில் நீர்ப்பாயல் என அழைக்கப்பட்டது. அந்தணர் குடியிருப்பில் அறுசுவை விருந்துண்டு விடை கொள்ளும் பெரும்பாணன், அடுத்துப் புக இருப்பது, அந்தணர் குடியிருப்பிற்கு அணித்தாக இருக்கும் அத்துறைமுகப் பட்டினமே யாதலின், அதன் வணிகவளம், அதன்கண் வாழ் மக்கள் செல்வ வளம், பெரும்பாணன் ஆங்குப் பெறலாகும் சிறப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து விளக்கத் தொடங் கினார்.

நீர்ப்பாயல் தறை, அந்தணர் குடியிருப்பிற்கு நனிமிக அண்மையில் இருக்கும். அங்கு வந்து நிற்கும் மரக்கலங்களின் கூம்புகள் அந்தணர் குடியிருப்பிலிருந்து நோக்கினாலும் நன்கு புலப்படும். மேலும் அத்துறை நீரில் மூழ்கி மீன் கவரும் பறவைகள், அந்தணர் குடியிருப்பில் அந்தணர் நட்டு வைத்திருக்கும் வேள்விக் கம்பத்தில் அமர்ந்தே இரையுண்ணும். அத்துணை அண்மையது அது.

அப்பட்டினத்து வணிகர் செல்வச் செருக்கில்மிகுந்தவர்; அவர் வீட்டு மகளிர் புனலாடச் செல்லும்போது, தாம் அணிந்திருக்கும் மகரக்குழை முதலாம் பொன் அணிகள் விலை மிகுந்தவை; அவற்றை வீட்டிலேயே கழற்றிக் காப்பிட்டுச் செல்லவேண்டும் என்ற கருத்தின்றி அவற்றை

அணிந்தவாறே நீர் ஆடச் செல்வர். தோழியரோடு சென்று மணல் வீடு கட்டியும், மலர் கொய்தும் ஆடி, உண்ணு நீர்த் துறையில் நீர் உண்டு,அணிகளைக் கழற்றி அந்நீர்த்துறையில் போட்டுவிட்டுப் புனலாடி எழுந்து. மீண்டும் அணிகளை அணிந்து வீடு திரும்பும் அவர்கள் அணிகளில், மகரக் குழையாம் காதணியை அணிந்து கொள்ளமறந்து, அந்த ஆண்டே விடுத்துச் செல்வர். அத்துணைச் செருக்கு மிக்க செல்வக்குடியில் வந்தவர் அம்மகளிர்.

செல்வச் செழுமையால், அப்பட்டினத்து மகளிர், தம் மகரக்குழையையும் மறந்து போவர் என்றால், அப்பட்டினத்துப் பறவைகள் அத்துறைமுகத்தில், வணிகப் பொருள்களைக் கொண்டு செல்வதும், கொண்டு வந்து குவிப்பதுமாகிய பணிகள் ஓய்வின்றி நடைபெற, எப்போதும் ஆரவாரம் மிகுந்திருக்குமாதலின், போதிய இரை பெறமாட்டாது வருந்தியிருக்கும் நிலையில், அரிதின் கிடைக்கும் இரையை இனப்பறவைகள் அறிந்தால், பங்கிற்கு வந்து விடுமோ எனும் அச்சத்தால், அவை இருக்குமிடம் செல்லாது, தனித்த இடம் தேடிப் போய்விடும்.

அவ்வாறு இரைக்காக ஏங்கிக் காத்திருக்கும், சிச்சிலி என அழைக்கப்படும் மீன்குத்திப் பறவை, மகளிர் விட்டுச் சென்ற மகரக்குழையை, இரை எனக்கருதி தன் கூரிய அலகால் கொத்திக் கொண்டு, தன் இனப் பறவைகள் கூட்டமாக இருக்கும் பனந்தோப்பில் சென்று தங்காது, அந்தணர் சேரியில் அந்தணர் நட்டு வைத்திருக்கும் வேள்விக் கம்பத்தின் உச்சியில் சென்று அமர்ந்து கொள்ளும். நீலமணி நிறம் காட்டும் தோற்றப் பொலிவு வாய்ந்த அப்பறவை தன் கூரிய அலகில், மின்னும் மகரக்குழையைத் தாங்கியவாறே அக்கம்பத்தின் உச்சியில் அமர்ந்திருக்கும் காட்சி, யவன நாட்டிலிருந்து வந்து, நங்கூரமிட்டிருக்கும் மரக்கலத்துக் கூம்பில் பொருத்தப்பட்டு, எரிந்து ஒளிவிடும் அன்னவடிவில்

ஆன விளக்கை நினைவூட்டுவதாக இருக்கும். மேலும் வைகறைப் போதில், வானவீதியில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் வெள்ளி என்ற விண்மீன் போலவும் அது காட்சி தரும். நீர்ப்பாயல் நகர் எல்லையை அணுகும் நிலையில், அழகிய அக்காட்சி கண்டு, பெரும்பாண! நீ அகம் மிக மகிழ்ந்து போவாய்.,'

''வண்டல் ஆயமொடு உண் துறைத் தலைஇப்
புனல் ஆடு மகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரைசெத்து எறிந்தெனப்
புள்ஆர் பெண்ணைப் புலம்புமடல் செல்லாது
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வித் தூணத்து அசைஇ, யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனின் பைபயத் தோன்றும்
நீர்ப் பெயற்று எல்லை போகி''

(311-319)

## உரை

புனல் ஆடு மகளிர்—நீராடும் மகளிர், வண்டல் ஆயமொடு—ஆடும் தோழியரோடு, உண்துறை தலைஇ இட்ட பொலங்குழை—நீர் உண்ணும் துறையில் கூடிப் போட்டு விட்டுப்போன பொன்னால் செய்த மகரக் குழையை; இரைதேர் மணிச்சிரல்—இரையைத் தேடும் நீலமணி போலும் நிறம் வாய்ந்த சிச்சிலி என்னும் பறவை, இரை செத்து எறிந்தென— இரை எனக்கருதி எடுத்துக் கொண்டதாக, புள்ஆர் பெண்ணைப் புலம்பு மடல் செல்லாது—இனப்பறவைகள் நிறைந்திருக்கும் பனையின் தனி மடலில் சென்று தங்காது. கேள்வி அந்தணர்—கேள்வி அறிவு மிக்க அந்தணர், அருங்கடன் இறுத்த—செய்தற்கு அரிய கடனாகக் கருதிச் செய்து

முடித்த, வேள்வித் தூணத்து—வேள்விச் சாலையில் நட்ட கம்பத்தின் மீது, அசை இ—சென்று தங்கி, யவனர் ஓதிம விளக்கின்—யவனர் மரக்கலத்துக் கூம்பின் மேலே ஏற்றிய அன்ன விளக்குப் போலவும், உயர்மிசை கொண்ட—உயர்ந்த வானில் இடங் கொண்ட, வைகுறு மீனின்—வைகறைப் போதில் தோன்றும் வெள்ளியாகிய விண்மீன் போலவும், பையத் தோன்றும்—ஒளிவிட்டுத் தோன்றும், நீர்ப் பெயற்று எல்லை போகி—நீர்ப்பாயல் என்னும் துறைமுக நகரின் எல்லைக்குள் சென்று.

## 11-1 நீர்ப்பாயல் பட்டினப் பெருமை

நீர்ப்பாயல் துறையின் சிறப்பினை எடுத்துரைத்து, அத் துறைமுகப் பட்டினத்துள் விரைந்து புகவேண்டும் என்ற வேட்கையைப் பெரும் பாணன் உள்ளத்தில் எழுப்பிவிட்ட புலவர், அடுத்து, அப்பட்டினத்தில் வந்து குவியும் வணிகப் பொருட்கள், அவற்றைச் சேமித்து வைக்கும் பண்டகசாலை, வணிக வீதி முதலாம் பல்வேறு வீதிகள், அவ்வீதிகளின் இருமருங்கிலும் கட்டப்பட்டிருக்கும் மாடமாளிகைகள், ஆகியவற்றின் சிறப்புக்களை சீர்பெற உரைக்கத் தொடங்கினார்.

நீர்ப்பாயல் பட்டினத்தின் துறைமுகத்தில், கடல் கடந்த நாடுகளிலிருந்து வரும் கடல் ஓடவல்ல பெரிய நாவாய்களும் வங்க நாட்டிலிருந்து வரும் கரை ஓரப் போக்குவரத்திற்கு உகந்த மரக்கலங்களும் கணக்கிலவாய் வந்து அலை வீசும் நீரில் அசைந்தாடியவாறே நங்கூரம் இட்டிருக்க, வேந்தர்களின் நாற்படை நிறைவு கருதி, மேலை நாடுகளில் பெரு விலை கொடுத்து வாங்கப் பெறும், பால் போலும் தூய வெண்ணிறம் வாய்ந்த உடலும், அதற்கு ஏற்ப வெள்ளிய தலையாட்டமும் வாய்க்கப் பெற்ற குதிரைகளும், வட நாட்டுப் பெருமலையாம் இமயம் தரும் வளங்களாம் செம்

பொன்னும், நவமணியும், கங்கை பாயும் வங்க நாடு தரும் பல்வேறு வளங்களும், அக் கலங்களிலிருந்து இறக்கப்பட்டு வரிசைப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

தமிழகத்துப் பொருள்களை அவை விரும்பும் வெளிநாடு களுக்குக் கொண்டு சென்று விற்றும், தமிழகத்திற்குத் தேவைப்படும் பொருள்களை அவை கிடைக்கும் வெளிநாடு களிலிருந்து வாங்கி வந்தும் தமிழகத்தின் செல்வ வளம் பெருக்கும் வணிகப் பெருமக்கள் தொழிலாற்றும் வணிக வீதிகள் எண்ணிலவாகும். கடற்கரைப் பகுதியாதலின் வீதிகளில் பெருமணலே பரந்து கிடக்கும் என்றாலும், இரு மருங்கிலும் மாடமாளிகைகள் வானளாவும் உயர்வுடைய வாகக் கட்டப்பட்டிருக்கும். வாணிகம் கருதி வந்து குவிந்திருக்கும் பொருட்களைச் சேமித்து வைத்திருக்கும் மிக உயர்ந்த பண்டக சாலைகளும், அவற்றைக் காத்து நிற்கும் காவல் வீரர்களையும் ஆங்கே காணலாம். அடுத்து அவ்வணிகப் பெருமக்களும், ஆங்குப் பணி புரிவாரும் வாழும் இல்லங்களைக் காணலாம்.

அது வணிகப் பேரூர், உழு தொழிலுக்கு இடமில்லை ஆதலாலும் ஏர்களிலிருந்து பூட்டி விடப்படும் உழுகாளை களும், கன்றுஈன்ற பசுக்களும் வயிறாரத் தின்பதற்கான புல், மணல் நிறைந்த கடற்கரைப் பகுதியில் கிடைக்காது ஆதலாலும், உழு காளைகளையும், கன்று ஈன்ற பசுக்களை யும், ஆங்குக் காணல் இயலாது. ஆனால், ஆங்கு வாழ்வார் தம் உடைமைகளின் காவல் கருதி வளர்க்கப்படும் நாய் களையும், உணவு கருதி வளர்க்கப்படும் ஆட்டுக்கிடாய் களையும் காணலாம். வருவார்க்கு எப்போதும் வழங்கிக் கொண்டே இருப்பதற்கேற்ற பெருஞ்சோற்று வளம் மிக்கவை, வணிகரின் அவ்வில்லங்கள்.

"பால் கேழ்
வால் உளைப் புரவியொடு வடவளம் தருஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாடம் ஓங்கிய மணல் மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்,
சிலதர் காக்கும் சேண்உயர் வரைப்பின்,
நெல் உழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோடு எகினம் கொட்கும்
கூழ் உடை நல் இல்"

(319—327)

**உரை:**

*பால் கேழ்—பால் போலும் வெள்ளிய நிறத்தினையும், வால் உளைப் புரவியொடு—வெள்ளிய தலையாட்டத்தினையும் உடைய குதிரைகளோடு, வடவளம் தருஉம்—வடதிசை நாட்டின் நுகர் பொருள்களையும் கொண்டு வரும், நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை—மரக்கலங்கள் நிறைந்த பெருமை மிக்க கடற்கரைப் பக்கத்தினையும், மாடம் ஓங்கிய மணல் மலி மறுகின்—இரு பக்கங்களிலும் மாடமாளிகைகள் உயர்ந்த மணல் நிறைந்த தெருக்களையும், பரதர் மலிந்த—வணிகர்கள் மிகுந்த, பல்வேறு தெருவின்—பல்வேறு தெருக்களையும், சிலதர் காக்கும்—காவல் தொழில் புரிவார் காத்து நிற்கும், சேண் உயர் வரைப்பின்—மிக உயர்ந்த பண்டக சாலைகளையும், நெல்உழு பகட்டொடு கறவை துன்னா—நெற்பயிர் விளைய உழும் காளைகளோடு, கறவை மாடுகளும் நெருங்காத, மேழகத் தகரொடு எகினம் கொட்கும்—ஆட்டுக்கிடாயோடு நாய் சுழன்று திரியும், கூழ்உடை நல் இல்—சோற்றுணவு மிகுந்த நல்ல இல்லங்களையும்.*

## 11-2 நீர்ப் பாயல் பட்டினத்து மகளிர் மாண்பு

வணிகர் இல்லத்துச் சோற்று வளத்தை வாயாரப் புகழ்ந்த புலவர், அடுத்து, அவ்வில்லத்து உறையும் மகளிரின் ஆடை அணிகள் பற்றியும், அவர் மேற்கொள்ளும் ஆடல் வகை பற்றியும் கூறுமுகத்தான் வணிகரின் செல்வச் செழிப்பைச் சிறப்புறக் கூறத் தொடங்கினார்.

வானளாவி நிற்கும் உயர்வுடைமையால் மட்டுமே வணிகரின் மாடமாளிகைகள், சிறப்புடையவாம் எனல் பொருந்தாது. மகளிர் பந்தாடும் களமாக, மேனிலை மாடத்தைக் கொள்ளுமளவு அகன்று நீண்ட பரப்புடைமையாலும், அது சிறப்புடையது. அம்மாளிகை வாழ் மகளிர், உச்சி முதல் உள்ளங்கால் வரை பொன்னணிகளாகவே பூண்டிருப்பர். பல மணிவடங்கள் தொங்கும் மேகலை கிடந்து ஒளி செய்யும் இடையில் உடுத்தியிருக்கும் மெல்லிய வெண்துகில், பூங்காற்று அலைக்க அசைய நிற்கும் அம்மகளிர், பொன்னிற அரும்புகள் பூத்துக் குலுங்கும் கிளைகள் வெண்ணிறப் பனிப்படலத்தால் மூடுண்டு கிடக்க நிற்கும் கொன்றை மரம் போலும் காட்சி நலம் உடையராகிக் கண்ணுக்கு விருந்தளிப்பர்.

மேனிலை மாடத்தில் பந்தாடித்திரியும் அம்மகளிர், மலை உச்சிகளில் மகிழ்ச்சி பொங்க, தோகை விரித்து ஆரவாரிக்கும் மயில் கூட்டம் போலவும் காட்சி அளிப்பர். மேனிலை மாடத்தில், காலில் அணிந்திருக்கும் பொற்சிலம்பு ஒலிக்க, ஓடி, ஓடி, நூலால் வரியப்பட்ட பந்தாடி மகிழும் அவர்கள், சிறிதே தளர்வுற்றுப் போனதும், பந்தாடலைக் கைவிட்டு, நிறத்தாலும், வடிவாலும் முத்தை நிகர்க்கும் புது மணல் பரப்பில் அமர்ந்து, கையில் அணிந்திருக்கும் தொடி அசைய, பொன்னால் செய்யப்பட்ட கழங்கை மெல்ல மெல்ல உருட்டி ஆடி மகிழ்வர்.

"கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப்பனி தவழ்பவைபோல்
பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும்
பீலிமஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்துவார் மணல்பொற் கழங்குஆடும்"

(327—335)

**உரை :**

கொடும்பூண் மகளிர்—வடித்துச் செய்யப்பட்ட பொன்னணிகலன் அணிந்த மகளிர், கொன்றை மென் சினை—கொன்றையின் மெல்லிய பூங்கொம்புகளில், பனி தவழ்பவைபோல்—பனிப்படலம் படிந்திருப்பது போல், பைங்காழ் அல்குல் நுண்துகில் நுடங்க—பசிய மணிவடங்கள் அணிந்த அல்குலில் மெல்லிய ஆடை அசைய, மால்வரைச் சிலம்பின்—பெரிய பக்க மலைகளில், மகிழ் சிறந்து ஆலும்—மகிழ்ச்சி மிகுந்து ஆரவாரிக்கும், பீலி மஞ்ஞையின் இயலி—தோகையோடு கூடிய மயில்போல் உலாவி, காலதமனியப் பொற் சிலம்பு ஒலிப்ப—கால்களில் உள்ள செம்பொன்னால் ஆன்சிலம்பு ஒலிக்க, உயர்நிலைவான் தோய் மாடத்து—உயர்ந்த நிலையுடையதாகிய வானத்தைத் தீண்டும் மாடத்தின் கண், வரிப்பந்து அசைஇ—வரிந்து செய்யப் பட்ட பந்துஆடி இளைத்து, கைபுனை குறுந்தொடி தத்தப் பைப்பய—கையில் அணிந்த மெல்லிய தொடி அசையும்படி மெல்ல மெல்ல, முத்துவார் மணல்—முத்துப் போன்ற பரப்பிய மணலில், பொற்கழங்கு ஆடும்—பொன்னால் செய்த கழங்கு கொண்டு விளையாடும்.

## 11-3 பட்டினத்தில் பெரு விருந்து

நீர்ப்பாயல் பட்டினத்து, மகளிர் நலம் பாடுவார்போல், அந்நகரத்து வணிகச் செல்வரின் வளம் பாடிய புலவர், அடுத்து, ஆங்குச் செல்வார்க்கு, அவர் வழங்கும் விருந்துச் சிறப்பினை விளக்கத் தொடங்கினார்.

திரையன் அரசோச்சியிருந்த சங்க காலத்தில், தமிழகத்தில் சிறந்து விளங்கிய துறைமுகப் பட்டினங்களில் நீர்ப்பாயல் துறையும் ஒன்று. ஆங்கு வாழ்ந்தோரில், தமிழகத்து வணிகரினும், யவனர் முதலாம் பிறநாட்டு வணிகர்களே மிகப் பலராவர். மொழியாலும், பழக்கவழக்கங்களாலும் வேறுபடுவது போலவே, உணவாலும் வேறுபடும் அவர்களோடு பழகி, தமிழகத்து வணிகர்களும், அவர்கள் உணவு முறையினை, ஏற்றுக்கொண்டு விட்டமையால், நீர்ப்பாயல் பட்டினத்தில், அவர்கள் விரும்பி உண்ணும் பன்றிக் கறியும், கள்ளுமே கிடைக்கும். அதனால் புலவரும், பன்றிக் கறி பற்றிக் கூறத் தொடங்கினார். அவ்வாறு தொடங்கியவர் நினைவில், அப்பன்றி, அது விரும்பும் பிணவு, அது ஈனும் குட்டிகள், அவை வீழ்ந்து புரளும் சேறு, சேறுபட உதவிய கள் அக்கள் விற்கும் கடை அமைப்பு ஆகியவை நிரலே வந்து நிற்கவே, அவை பற்றிய விளக்கத்தை முதற்கண் மேற்கொண்டார்.

கள் உண்பார் எவ்வளவு பேர் வந்தாலும், எந்த நேரத்தில் வந்தாலும், இல்லை என்னாது வழங்கவல்ல பெருமை உடையது அக் கள்ளுக்கடை. அக்கடை வாயிலில், அது கள்ளுக்கடை என்பதைத் தொலைவில் உள்ளாரும் அறிந்து கொள்ள உதவும் அடையாளக் கொடி பறந்து கொண்டிருக்கும். கடை முன்புறம் புல் போகவும், மேடு பள்ளம் அகலவும் நன்கு செதுக்கப் பட்டிருக்கும். கள்ளுச் சாடிக்கு நாள்தோறும் மலர் மாலை சூட்டி வழிபாடு செய்வது வழக்க

மாதலின், கடை வாயிலில் மலர் தூவப்பட்டிருக்கும். கள்ளுக் கடையின் ஒரு பகுதியிலேயே கள் காய்ச்சவும் படும். கள் காய்ச்சும் தொழிலை மகளிரும் கற்றிருப்பர், அம் மகளிர்கள் காய்ச்சிய கலங்களைக் கழுவிச் சாய்க்கும் கழிநீர், பல கால்களாக ஓடி, பன்றிக் கூட்டம் தம் குட்டிகளோடு வீழ்ந்து புரளுமளவு அகன்ற பெரும் பள்ளத்தில் வீழ்ந்து நிரப்பும்.

கள் காய்ச்சிய கலங்களைக் கழுவி வார்த்த நீர் ஓடித் தேங்கும் சேற்றுக் குழிகளில், பன்றிக் கூட்டம் வீழ்ந்து கிடக்கும் எனக் கூறுவதன் முகத்தான், கள்ளுக் கடையின் பெருமையினை எடுத்துக் காட்டிய புலவர். பன்றிக் கறியின் பெருமையினைத் தொடர்ந்தார்.

அவர்கள், பன்றிக் கறி உண்பவர்தான் எனினும், பன்றி களுள் நல்லதாகத் தேர்ந்தெடுக்கும் பன்றியின் கறியை மட்டுமே உண்பார்கள். உடலெல்லாம் மாசுபடச், சேற்றில் வீழ்ந்து கிடக்கும் பன்றியின் கறியையோ, கிடைப்பன எல்லாம் தின்று வளரும் பன்றியின் கறியையோ, குட்டி பல ஈனும் பெண் பன்றியோடு கூடி உரம் இழந்து போகும் பன்றியின் கறியையோ உண்ண மாட்டார்கள். உண்பதற் கென்றே ஆண் பன்றி ஒன்றைத் தேர்ந்து, அதைப், பிற பன்றிகளோடு சேர்த்து வளர்த்தால், அவை போலவே சேற்றில் புரண்டு வந்து சேரும், கிடைப்பன எல்லாம் தின்று வந்து சேரும், பெண் பன்றியோடு இணைந்து உரம் இழந்து போகும் என்பதால், அதை ஏறமாட்டா ஆழம் மிக்க குழியில் வைத்து, நெல்லை இடித்து எடுத்த மாவை மட்டுமே உணவாக அளித்து வளர்ப்பர். உண்பர்; வருவோர்க்கும் படைப்பர்; பெரும்பாண! அப் பட்டினத்தில் தங்க நேர்ந் தால், அவர் அளிக்கும் பன்றிக் கறியும், களிப்பு மிக அளிக்கும் கள்ளும் உண்டு செல்வாயாக என்றார்.

"பட்டினம் மருங்கின் அசையின், முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர் புகு வாயில்
செம்பூத் தூய செதுக்குடை முன்றில்
கள் அடு மகளிர் வள்ளம் நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ் சேறு ஆடிய இரும்பல் குட்டிப்
பன் மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெல் மா வல்சி தீற்றிப் பன்னாள்
குழி நிறுத்து ஓம்பிய குறுந்தாள் ஏற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவீர்"

(336—345)

உரை

முட்டில்—கள் வழங்குவதில் முட்டுப் பாடு இல்லாத, பைங்கொடி நுடங்கும்—புதிய கொடிகள் பறக்கும், பலர் புகு வாயில்—கள் உண்பார்பலரும் புகும் வாயிலில், செம்பூத்தூய—சிவந்த மலர்கள் தூவப்பட்ட, செதுக்குடை முன்றில்—புல் போகச் செதுக்கப்பட்ட முற்றத்தில், கள் அடு மகளிர்—கள் காய்ச்சும் மகளிர், வள்ளம் நுடக்கிய வார்த்து உகு சில் நீர் வழிந்த குழம்பின்—கலங்களைக் கழுவிக் களைத்துச் சிந்திய சிலநீர் சேர்ந்து ஓடி நிறைந்து வழிந்த குழம்பில், ஈர்ஞ்சேறு ஆடிய—ஈரச் சேற்றில் வீழ்ந்து புரண்ட, இரும்பல் குட்டி—கரிய பல குட்டிகளை ஈன்ற. பன் மயிர்ப் பிணவொடு—உடலெல்லாம் மயிரால் நிறைந்த பெண் பன்றியோடு, பாயம் போகாது—புணர்ச்சி விரும்பிக் கூடாமல், நெல் மா வல்சி தீற்றி—நெல் அரிசி மாவாகிய உணவைத் தின்னப் பண்ணி, பல் நாள் குழி நிறுத்து ஓம்பிய குறுந்தாள் ஏற்றை—பல நாள் வரை, குழியிலே வைத்துக் காத்து வளர்த்த குறுகிய கால்களை உடைய ஆண் பன்றியின், கொழு நிணத் தடியொடு—கொழுத்த கறித்

துண்டுகளோடு, கூர் நறாப் பெறுகுவீர்—களிப்பு மிக்க கள்ளும் பெறுவீர்கள்.

## 11:4 கலங்கரை விளக்கு

நீர்ப்பாயல் துறையின் கலங்கரை விளக்கம், நகரப் பெரு மாளிகைகளிடையே கட்டப் படாது, கலங்களின் கண்ணில் நன்கு படுதற் பொருட்டு, நகர எல்லையில் கட்டப்பட்டிருப் பினும், அது, அந் நகரத்துக் கட்டிடங்கள் எல்லாவற்றைக் காட்டிலும் உயரமானது ஆதலின், ஆங்குச் செல்வார் கண் களுக்கு அது தப்புவது இல்லை. அதனால், நீர்ப்பாயல் நீங்கிக் கச்சி நோக்கிப் புறப்பட்ட பெரும்பாணனுக்குக் கச்சி பற்றிக் கூறுவதன் முன்னர்க், கலங்கரை விளக்கம் பற்றிக் கூறத் தொடங்கினார்.

கலங்கள், நடுக்கடலில், நெடுந் தொலைவில் வரும் போதே அடையாளம் காட்டி அழைக்க வேண்டு மாதலின், கலங்கரை விளக்கம் நனிமிக உயரமாகக் கட்டப்பட்டிருக்கும். அதன் உயர்வை நோக்குவார் அனைவரும், வானம் இடிந்து வீழ்ந்து விடாதபடி முட்டுக் கொடுத்து நாட்டி வைத்தி ருக்கும், மதலையோடு கூடிய கம்பமோ, வானத்தோடு முட்டி மோத உயர்ந்து நிற்கிறதோ என்றே ஐயுறுவர். அத்துணை உயரம் உடையது. அதன் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் விளக்கை, நாள்தோறும் இரவில் ஏற்றி வைக்க ஏறிச் செல்ல ஏணி பொருத்தப்பட்டிருக்கு மென்றாலும் அதன் மூலம் ஏறுவதும் அத்துணை எளிதன்று. ஒவ்வொரு நாளும் அரும்பாடு பட்டே ஏறுதல் இயலும். அத்தனை உயர மாக இருப்பதாலும், பெருங்காற்று வீசும் கடற்கரையில் இருப்பதாலும், மணல் நிலத்தில் கட்டப்பட்டிருப்பதாலும், அது, கல்லும் சாந்தும் கொண்டு கட்டப்பட்டிருக்கும். அதன் கூரையும், கழிகளாலும், ஓலைகளாலும், வைக்கோலாலும் வேயப் படாமல், மாடியாகவே அமைக்கப்பட்டிருக்கும்.

பெரும்பாண! அதன் சிறப்பினையெல்லாம் கண்டு வியந்து வாறே கச்சிக்குப் புறப்படுவாயாக, என்றார்.

"வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றரும் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை பிறக்கு ஒழியப் போகி"

(346—351)

**உரை**

வானம் ஊன்றிய மதலைபோல—வானம் விழாதபடி முட்டுக் கொடுத்து நிறுத்திய முட்டுக்கால் போல, ஏணி சாத்திய—ஏணி சாத்திய, ஏற்றரும் சென்னி—ஏறுதற்கு அரிய உச்சியையுடைய, விண்பொர நிவந்த—விண்ணைத் தீண்டும்படி உயர்ந்த, வேயா மாடத்து—கழியும், கற்றையும் கொண்டு வேயாமல், கல்லும், சாந்தும் கொண்டு கட்டப்பட்ட மாடத்தில், இரவின் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி—இரவில் கொளுத்திய விளங்கும் சுடர் காலும் விளக்கு, உரவுநீர் அழுவத்து—பெருநீர்ப் பரப்பாகிய கடலில், ஓடுகலம் கரையும்—வழி தவறி ஓடும் கலங்களை அழைக்கும், துறை பிறக்கு ஒழியப் போகி—நீர்ப்பாயல்துறை பிற்படச்சென்று.

# 12. தண்டலை உழவர் தரும் விருந்து

கச்சியையும், தமிழகத்துப் பிற பெரு நகரங்களையும் இணைக்கும் பெரு வழிகள் பல இருந்தாலும், கச்சியையும், நீர்ப்பாயல் துறையையும் இணைக்கும் பெருவழி, மிகவும் சிறப்புடையதாகும். தொண்டை நாட்டின் தலை சிறந்த துறைமுகம் பட்டினமாகவும், சிறந்த கடற்படை நிலையமாகவும், நீர்ப்பாயல் இருந்தமையால், நாடாளும் அரசனும், அவன் நாற்படையும், வணிகப் பெருமக்களும், அப்பெரு வழியில் எப்போதும் வழங்கி வந்தமையால், அது, நன்கு பேணப்பட்டு வந்தது. வழியின், இரு மருங்கிலும், தென்னந் தோப்புகளும், கமுகஞ் சோலைகளும், மாவும், பலாவும் மலிந்த பெருந் தோப்புகளும், வாழைத் தோட்டங்களும் நிறைந்து, வழி நெடுகப் பந்தர் இட்டாற்போல் நிழல் படர்ந் திருக்கும். நீர்ப்பாயல்துறை விடுத்துக் கச்சிக்குப் புறப்படும் பெரும்பாணனுக்கு, அப்பெரு வழியின் சிறப்பினையும், ஆங்குப் பசி தீரப் பெறலாம் காய்கனி வகைகளையும் எடுத் துரைக்கத் தொடங்கினார்.

பெருவழி, கீழ்க்கடலை அடுத்துச் செல்வது. அதனால், நிலம் மணல் கலந்து, வாழையும் தென்னையும், மாவும் பலாவும், போலும் மர வகைகளும், மஞ்சளும், மலர்ச் செடிகளும், வள்ளிக் கிழங்கும் வளமாக வளர்வதற்கு ஏற்புடையதாக இருக்கும். பருவ மழையால், நீர் வளத்தையும் குறைவரப் பெற்றிருக்கும். இவை அனைத்திற்கும் மேலாக, அவ்விரு வளங்களையும் துணை கொண்டு தொழிலாற்றிப் பயன்

காணத் துடிக்கும் மனவளம் படைத்த உழவர் பெருமக்களும் நிறைந்திருப்பர். அவர் வளர்க்கும் மரம், செடி கொடிகளுக்கு இடையறாக் காவல் தேவை. சிறிது கண்ணயர்ந்தாலும், அவை களவாடப்பட்டு விடும். அதனால், அவர்கள், அவை வளரும் விளை நிலங்களிலேயே, தங்கள் வாழிடங்களையும் வகுத்துக் கொள்வர்.

அவர் வாழும் மனைகள், தென்னந்தோப்பிலும், மாந் தோப்பிலும் தனித் தனியாகக் கட்டப்பட்டிருக்கும். தென்னை மடல்களுள், வளமான மடல்களாகத் தேர்ந்து வெட்டிப், பச்சை நிறம் மாறிப் பழுப்பு நிறம் பெறுமாறு வதக்கி உலர்த்திப் பின்னிய கீற்றுகள் கொண்டு கூரை வேயப் பட்ட அக்குடில்கள், தொலைவிலிருந்து நோக்குவார்க்கு, உரல்போல் பருத்த கால்களையும், குன்றோ என ஐயுறத் தக்க உடலமைப்பையும் உடைய பருத்த யானையோ என ஐயுறத் தோன்றும்.

மனையின் முன் புறத்தில் மஞ்சளும், இஞ்சியும், இரு பக்கங்களிலும் மணம் நாறும் மலர்ச் செடிகளும் செழித்து வளர்ந்திருக்கும். மனையின் முற்றத்தே நின்று நாற்புறமும் நோக்கினால் ஒரு பக்கத்தில், பெரிய பெரிய பழங்கள் பல காய்த்துத் தொங்குவதால் தாழ்ந்து போன கிளைகளைக் கொண்டு வேர்ப்பலா நிற்பதைக் காணலாம். மற்றொரு பக்கத்தில், உயர்ந்து வளராமல் குட்டையாகவே நிற்பதால், அம் மண்ணில் நிறைய வளரும் தாழையோ என மருளத் தக்க தென்னை, குலை குலையாகக் காய்த்து நிற்பதைக் காணலாம். பிறிதொரு பக்கத்தில் முற்றிய பெருங்குலைகள் நிலத்தைத்தொட நீண்டுதொங்கும் வாழைத் தோட்டத்தைக் காணலாம். சிறிது தொலைவில், பனை மரங்கள் சல சலக்கும் பச்சோலைகளுக்கிடையே, குலை குலையாகக் காய் விட்டு நிற்பதைக் காணலாம்.

அம்மனை வாழ் மக்கள், விருந்தோம்பி மகிழும் வேளாண் குடி வந்தவர். விருந்தினர் யாரையேனும் கண்டுவிட்டால், அவர்களை அன்புடன் அழைத்துச் சென்று, தம்மிடம் உள்ளன எல்லாம் அளித்து அக மகிழ்வர். விருந்தினரை மனை முற்றத்தில் அமரச் செய்து விட்டு, ஒருவர் சென்று, பலாக்கனியொன்றை வெட்டிக் கொணர்ந்து, பிளந்து சுளை விரித்து வைப்பர். ஒருவர் தென்னையில் ஏறிக் காய்களைப் பறித்துக் கொணர்ந்து சீவி இளநீர் பருக வேண்டுவர். ஒருவர் வாழைத் தோட்டத்துள் புகுந்து, முழுத் தாரைக் கொணர்ந்து, புகையூட்ட வேண்டாது குலையிலேயே கனிந்திருக்கும் பழங்களைத் தோல் உரித்து வைப்பர். ஒருவர் ஓடிப், பனை மரத்தில் ஏறிக் கொணர்ந்த பனங்காய்களை வெட்டி நுங்கெடுத்து வைப்பர்.

சக்கை குறைந்து, சுளையே மிகுந்திருக்கும் இப்பலாப் பழத்தின் பெரும் பாரத்தைத் தாங்கி, அக்கிளை, எப்படித் தான் ஒடிந்து போகாமல் நிற்கிறதோ என வியந்தவாறே, சுளையை வாயில் இட்டால் அதன் சுவை,மேலும் வியப்பூட்டு வதாய் இருக்கும். தோல் அற்றுப் போக, வெண்ணிறம் காட்டி, வளைந்து கிடக்கும் வாழைக் கனிகள், பிடியானை யின் வாயின் இரு மருங்கிலும் சிறிதே வெளிப்பட்டுத் தோன்றும் வெள்ளிய கொம்புகளை வடிவாலும், வண்ணத் தாலும் ஒத்திருப்பது கண்டு அடையும் மகிழ்ச்சியினும், உண்டவழிச் சுவை அளிக்கும் மகிழ்ச்சி, குறைவுடையதாக இராது. தென்னையின் முற்றா இளங்காயின் சுவை மிகு நீரைக் குடிக்கக் குடிக்க, அத்துணைக் குட்டையான மரம், இவ்வளவு நீர்கொண்ட காய்களை எவ்வாறுதான் காய்த்துத் தாங்குகிறதோ என்ற வியப்பே மேலிடும். பனம் நுங்கு பெரிய பாராட்டைப் பெற்று விடும். இவை மட்டுமன்று; அவர் கொடுக்கக் கொடுக்க நிறைய உண்பதால், அளவிற்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாம் என்பதற்கேற்ப, அவற்றின் பால் வெறுப்புண்டாகி விடவும் கூடும்; வயிறு புடைக்க

உண்டதால் வயிறு வலிக்கவும் கூடும்; அதைக் குறிப்பால் உணர்ந்து கொள்ளும் அவ்வீட்டார், விரைந்து சென்று இஞ்சிக் கிழங்கை அகழ்ந்து கொணர்ந்து தருவர். அதைத் தின்று நோய் தீர்த்தபின்னரே, விருந்தினர்க்கு விடைதருவர்.

தண்டலை உழவர் மனையில் விருந்துண்டு, அவரிடம் விடை கொண்டு கச்சி நோக்கிச் செல்வார்க்கு இடைவழியில், கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சிகளுக்குக் குறைவிராது. அது கோடைகாலம்; அக்காலத்து மாலைப் பொழுதில் கருமேகம் கால் கொண்டு பெருமழை கொட்டும். மழை பெய்து ஓயும்வரை காப்பான இடத்தில் ஒதுங்கியிருந்து, அது நின்ற பிறகு, மீண்டும் வழி மேற்கொண்டு செல்லும் நிலையில் இடைவழியில் அவர் காணும் ஒரு காட்சி, கருமேகம் மீண்டும் கால் கொண்டு விட்டதோ என்று எண்ணி நடுங்கச் செய்துவிடும். அந்நடுக்கத்தோடு, அக்காட்சியை மெல்ல மெல்ல அணுகி நோக்க, அது, மேகம் கால் கொண்டது அன்று; அஃது ஒரு கமுகந்தோட்டம்; கமுக மரத்தின் பருத்து நீண்ட தண்டுகளே, கருமேகம் கால் கொண்டது போல் காட்சி அளித்தது என அறிந்து அச்சம் நீங்கி, மேலே செல்லத் தொடங்கியதும், மகிழ்ச்சியூட்டும் காட்சி ஒன்றும், ஆங்கே காத்திருக்கும்.

கமுகந்தோட்டத்தை அடுத்திருக்கும் தென்னந்தோப்பில் வழிப்போவார் சிலர், மரத்தடியில் கல்லடுப்பு மூட்டிச் சமைத்துக் கொண்டிருப்பர். அவர்களுக்கோ கடும்பசி. சமையல் முடிந்து உணவு படைக்கும் வரை, பசிதாங்க மாட்டாது துயருற்றுக் கிடப்பர். அந்நிலையில், முற்றிய தேங்காய் ஒன்று, காம்பற்று அடுப்பருகே விழும். அது விழும் அதிர்ச்சியில், அக்கல்லடுப்பும், அதன் மீது உள்ள சோற்றுப் பானையும் சிறிதே நடுங்கவும் செய்யும். அதிர்ச்சியால் சோற்றுப் பானை உருண்டு வீழ்ந்து உடைந்து விடுமோ என அவரும் அஞ்சி நடுங்கிப்போவர். அது சிறிது பொழுதே; காய்

வீழ்ந்தபோது பானை சிறிது அசைந்ததே ஒழிய உருண்டு விடவில்லை என்று கண்டு, கலக்கம் ஒழிவர். கலக்க மிகுதியால், வீழ்ந்த தேங்காயை, மறந்திருந்த அவர்கள், அக்கலக்கம் கழிந்ததும், காயைக் கண்ணுற்றதும், அக்காயை மட்டை நீக்கி உடைத்து உண்டு ஓரளவு பசி தீர்ந்து மகிழ்ச்சி உறுவர்.

வளம் மிக்க அத்தகைய இடங்களைக் கடந்து செல்லும் போது, இடையிடையே, செல்வவளம் மிக்க சில நகரங்களையும் காணலாம். அந்நகரத்து மக்கள் நிறை வாழ்வு வாழ்பவர்கள். எங்கு நோக்கினும் மாடமாளிகைகளேகாணப் படும். வானளாவ உயர்ந்து நிற்கும் அவை, அடுத்தடுத்து இடையீடின்றிக் கட்டப்படாமல், ஒவ்வொன்றும் நாற்புறங்களிலும் சுற்றுச்சுவர் அமைய தனித்தனியாகவே கட்டப் பட்டிருக்கும். அதுமட்டும் அன்று; அம்மக்கள், ஆடல் பாடல்களிலும் தம்மை மறந்து ஈடுபட்டிருப்பர். வள்ளிக்கூத்து போலும் பல கூத்துக்கள், ஆங்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். தன்னாட்டு மக்களை அத்தகைய பேரின்பத்தில் ஆழ்த்திட வல்ல பெருவளம் கொழிக்கும் நாடு, திரையன் ஆட்சி நிலவும் நாடு; பெரும்பாண! அத்தகைய வளம் சிறக்கும் அந்நாட்டின் பல பகுதிகளையும் கடந்து சென்று, கடைசியில் கச்சி மாநகர் புகுவாயாக என்றார்.

**"கறையடிக்**
**குன்று உறழ் யானை மருங்குல் ஏய்க்கும்**
**வண்தோட்டுத் தெங்கின் வாடு மடல் வேய்ந்த**
**மஞ்சள் முன்றில் மணம் நாறு படப்பைத்**
**தண்டலை உழவர் தனி மனைச் சேப்பின்,**
**தாழ்கோள் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்,**
**வீழ் இல் தாழைக் குழவித் தீநீர்க்**
**கவைமுலை யிரும்பிடிக் கவுள் மருப்பு ஏய்க்கும்**

குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்,
திரள் அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பல்தார முனையின், சேம்பின்
முளைப்புற முதிர்கிழங்கு ஆக்குவிர், பகல்பெயல்
மழை வீழ்ந்தன்ன மாத்தாள் கமுகின்
புடை சூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்
ஆறு செல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி இளக விழூஉம்
வீயாயாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி, நன்னகர்
விண் தோய் மாடத்து விளங்கு சுவர் உடுத்த
வாடா வள்ளியின் வளம் பல தரூஉம்
நாடு பல கழிந்த பின்றை''

(351-371)

உரை:

கறையடிக் குன்று உறழ் யானை மருங்குல் ஏய்க்கும் —உரல் போன்ற கால்களை உடைய, வடிவால் மலையோடு மாறுபடும் யானையின் உடம்பை ஒக்கும், வண் தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த—வளமான மடல்களை உடைய தென்னையின் வற்றிய மடலால் வேயப்பட்ட, மஞ்சள் முன்றில்—மஞ்சள் வளர்ந்த முற்றத்தினையும், மணம் நாறு படப்பை—மணம் நாறும் மலர்ச் செடிகள் வளர்ந்த தோட்டங்களையும் உடைய, தண்டலை உழவர் தனி மனை சேப்பின்— தோட்டக்கால் பயிர் செய்யும் உழவர்களின் தனித் தனியாக அமைந்த மனைகளிலே தங்கின், தாழ்கோள் பலவின் சூழ்சுளைப் பெரும் பழம்—தாழ்ந்த குலைகளை உடைய பலாமரத்தின் சுளைகள் மிகுந்த பெரிய பழத்தையும், வீழ் இல் தாழைக் குழவித் தீநீர்—விழுது இல்லாத் தாழையாம் தென்னையின் இளங்காயின்

இனிய நீரையும், கவைமுலை யிரும்பிடிக் கவுள் மருப்பு ஏய்க்கும்—கவைத்த முலைகளையுடைய பெண் யானையின் வாயிடத்து வெண் தந்தங்களை ஒக்கும், குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்—குலையிலேயே கனிந்த வாழையின் வெண் பழத்தையும், திரள் அரைப் பெண்ணை நுங்கொடு—திரண்ட அடிமரத்தினையுடைய பனையின் நுங்கோடு, பிறவும் தீம்பல் தாரம்—வேறு பல இனிய பண்டங்களையும், முனையின்—தின்று வெறுப்பின், சேம்பின் முளைப்புற முதிர்கிழங்கு ஆக்குவிர்—சேம்பினுடைய, முளைக்கும் திறம் பெற முளைவிட்டு முதிர்ந்த கிழங்குகளைத் தின்பீர்கள், பகல் பெயல் மழை வீழ்ந்தன்ன—பகற்போதில் பெய்யும் மழை கால் இறங்கினால் அன்ன, மாத்தாள் கமுகின்—பெரிய தண்டினை உடைய கமுகந் தோட்டத்தின், புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்—பக்கத்தே சூழ்ந்த, தென்னையின் முப்பக்கங்களையுடைய முற்றிய காய், ஆறுசெல் வம்பலர் காய் பசிதீர—வழிப் போவாரின் கொடிய பசி தீரவும், சோறு அடு குழிசி இளக—அவர் சோறு ஆக்குகின்ற பானை அசையவும், விழூஉம், வியாயாணர் வளங் கெழு பாக்கத்து—விழும், கெடாத புது வருவாயினையுடைய வளம் மிக்க பாக்கங்களில், பல் மரம் நீள் இடைப் போகி—பல மரங்கள் வளர்ந்த நீண்ட வழிகளைக் கடந்து சென்று, விளங்கு சுவர் உடுத்த—விளங்குகின்ற மதிலால் சூழப்பட்ட, விண் தோய் மாடத்து—வான் அளவா உயர்ந்த மாடங்களை உடைய, நன் நகர்—நல்ல நகரங்களில், வாடா வள்ளி வளம் பல தரூஉம்—வள்ளிக் கூத்து ஆடி ஆடி மகிழ்தற்குக் காரணமான வள்ங்கள் பலவற்றையும் தருகின்ற, நாடு பல கழிந்த பின்றை—நாடுகள் பலவற்றைக் கடந்து போன பிறகு.

# 13. பாம்பணைப் பள்ளியானைப் பரவுக

"கச்சியுள் புகுக" எனப் பெரும்பாணனுக்கு விடை கொடுத்த புலவர், பெரும்பாணன் கச்சி செல்வது, ஆங்கு அரசோச்சியிருக்கும் திரையனைக் கண்டு, பாடிப் பரிசில் பெறவே என்றாலும், கச்சி செல்லும் அவன், திரையனைக் காண்பதன் முன்னர், ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் பாம்பணைப் பள்ளிப் பரமனை வழி படுதல் முறையாகும் என்பதால், திரையன் நாளோலக்கச் சிறப்பினை எடுத்துரைப்பதன் முன்னர், அப்பெருமான் பள்ளி கொண்டிருக்கும் திரு வெஃகா என்னும் திருக்கோயில், அக் கோயிலை அடுத்த சோலை, அச்சோலையை அடுத்து ஓடும் சிற்றாற்றுத்துறை, அச் சோலையிலும், துறையிலும், மகளிர் உடன் வர வந்து ஆடி மகிழும் ஆடவர் ஆகியோர் பற்றியும் விளக்குவ ராயினர்.

கோயிலை அடுத்து ஒரு மலர்ச் சோலை; அம் மலர்ச் சோலையை அடுத்து ஒரு சிற்றாறு; அது பெருக்கெடுக்கும் போதெல்லாம் சோலையுள் புகுந்து பாய்ந்து, ஆங்கு உதிர்ந்து கிடக்கும் இலைச் சருகு முதலாம் குப்பைகளை வாரிக் கொண்டு, புது மணலைப் பரப்பி விட்டுப் போகும். அம் மலர்ச் சோலையில், பல்வேறு வகை மரங்களும் நெருங்க வளர்ந்து தழைத்து நிற்கும். ஆதலால், அச் சோலையுள் வெயிலையே காண இயலாது. குயில்கள் கூடச் சிறகடித்துப் பறக்க இயலாது. மரங்கள் ஊடே நுழைந்து தான் மெல்லப் பறத்தல் இயலும். அச் சோலையில் காஞ்சி

மரங்களில் ஏறிப்படர்ந்திருக்கும் மாதவிக் கொடியிலிருந்து வேனில் வெப்பம் தாங்க மாட்டாது வாடிப் போன மலர்கள் உதிர்ந்து கொண்டிருக்கும். அவ்வாறு உதிரும் மலர்கள், மரத்தடியில், வட்டம், வட்டமாக நீர் தேங்கி நிற்கும் சிறு சிறு பள்ளங்களில் வீழ்ந்து மிதக்கும் அக் காட்சி, அக் காஞ்சிமா நகரத்து வீதிகளில், அப்ப வணிகர், கரிய சட்டியில் காய்ச்சிய பாகு கலந்து பிசைந்த மாவை, வட்டம் வட்டமாகச் சுற்றி வைத்த, வெண்ணூல் போலும் வடிவில் பிழிந்து எடுக்கும் இடியாப்பம், பால் நிறைந்த வட்டத் தட்டில் மிதக்க விட்டிருப்பதை நினைவூட்டுவதாய் இருக்கும்.

அழகிய அந்தச் சோலையுள், காதலனும் காதலியுமாக, கணவனும் மனைவியுமாக, ஆடவரும் மகளிரும் திரண்டிருப்பர். ஆங்கு உலா வரும் அம் மகளிர் அழகில் மிக்கவர்; அவர் நுதல் மூன்றாம் பிறைத் திங்கள் போல் ஒளிவீசும். படம் விரித்த பாம்பு போலும் வடிவுடைய, மகரவாய் என்ற அணியைத் தலையில் அணிந்திருக்கும் நிலையில், அவர் முகத்தை நோக்கினால், அரவு கவ்விய இளம்பிறைத் திங்கள் போல் தோன்றும். அவர் கருவிழிகளில் அன்பு கனியும். இனிக்கும் தேனை உருமாற்றி, இம்மகளிரின் கண்ணாகப் பொறுத்தி விட்டனரோ என எண்ணி ஏங்குமளவு இன்பச் சுவை ஊட்டும். அத்தகைய அழகுமிக்க இளம் மகளிர் உடன் வர, மலர்ச்சோலை புகும் ஆடவர், சோலைப் புது மணலில் அமர்ந்து, பாளை உள் அடங்க, சூல் கொண்ட கமுக மரத்தின் வயிறு போல் உடைத்திருக்கும் பச்சைக் குப்பிகளில், உடன் கொணர்ந்த கள்ளை உண்டு தீர்த்து, இன்ப விளையாடல் மேற்கொண்டிருப்பர்.

சோலையிலும், சோலையை அடுத்து வற்றாத சிற்றாறு பரப்பும் புது மணல் மீதும், கரை வளர் மரங்கள் சொரியும் பன்னிற மலர்கள் நிறைந்திருக்க, அடைவதற்கு அரியது, அடைந்தார்க்குப் பேரின்பம் பயப்பது என்ற பழம் பெருமை

வாய்ந்த துறக்க உலகம் என்றது இதைத்தானோ என எண்ணுமளவு இன்பச் சூழல் மிகுந்த அச் சோலையிலும், அச் சோலையை அடுத்த ஆற்றுத் துறையிலும் உலக இன் பத்தில் ஆழ்ந்துபோகும் அவர்கள், மறுமை இன்பத்திற்கும் வழிவகுத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு வரப் பெற்றதும், சோலையின் நீங்கி, திருவெஃகா அடைவர். பள்ளி கொண்ட பெருமாளின் திருவருட் காட்சிக்காக, ஆங்குக் காத்திருப்பார் வரிசையில், தாமும் இடங் கொண்டு விடுவர்.

பெரும்பாண! அவ்வாறு காத்திருப்பாரோடு நீயும் கலந்து கொள்வாயாக; திருக்கோயில் உள்ளே படம் விரித்து உயர்ந்த ஆயிரம் தலைகளைக் கொண்ட பாம்பணைமீது, கரிய திருமேனிப் பெருமாள் பள்ளி கொண்டிருப்பான். அக் காட்சி, கடந்து வந்த வழியில், காந்தள், விரிந்த கைபோலும் வடிவில், கொத்துக் கொத்தாய் மலர் ஈன்று காடென வளர்ந்திருக்கும் மலைச்சாரலில், அக் காந்தள் மலர்க் கிடையே, கரிய பெரிய ஆண் யானை படுத்துறங்கும் காட்சியை நினைவூட்டிப் பேரின்பம் தரும். அப்பெருமான் திருமுகக் காட்சி கிடைக்கும் வரை வாளா இராது,' உன் கையில் இருக்கும் இனிய யாழை இயக்கி, அப் பெருமாள் புகழ் பாடிப் பரவுவாயாக! திரையன் புகழ் பாடுவதன் முன்னர்த் திருமால் புகழ் பாடினம் என்ற மன நிறைவு உண்டாகும்.

"நீடு குலைக்
காந்தள் அம்சிலம்பில் களிறு படிந்தாங்குப்
பாம்பு அணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்
வெயில் நுழைபு அறியாக்குயில் நுழைபொதும்பர்க்
குறுங்கால் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்,
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
கார் அகல்கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால்கலந்தவை போல்

நிழல்தாழ் வார்மணல் நீர்முகத்து உறைப்பப்,
புனல் கால்கழீஇய பொழில்தொறும், திரள்கால்
சோலைக் கமுகின் சூல்வயிற்று அன்ன
நீலப் பைங்குடம் தொலைச்சி, நாளும்
பெருமகிழ் இருக்கை மரீஇச், சிறுகோட்டுக்
குழவித் திங்கள் கோள் நேர்ந்தாங்குச்
சுறவுவாய் அமைத்த சுரும்புசூழ் சுடர்நுதல்,
நறவு பெயர்த்தமைத்த நல்எழில் மழைக்கண்
மடவரல் மகளிரொடு பகல் விளையாடிப்,
பெறற்கு அரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்
பொய்யா மரபின் பூமலி பெருந்துறைச்
செவ்வி கொள்பவரொடு அசைஇ, அவ்வயின்
அருந்திறல் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட்டு இன்னியம் இயக்கினிர் கழிமின்''
(371-392)

**உரை :**

*நீடுகுலைக் காந்தள் அம்சிலம்பில்—நீண்ட குலைகளையுடைய காந்தள் வளர்ந்த அழகிய பக்க மலையில், களிறு படிந்தாங்கு—யானை படுத்திருந்தாற்போல, பாம்பு அணைப்பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்—பாம்பணைப் படுக்கையில் விரும்பித் துயில்கொண்டோனுடைய திருவெஃகாவில், வெயில் நுழைபு அறியா—ஞாயிற்றின் கதிர் சிறிதும் நுழைவதும் அறியாத, குயில் நுழை பொதும்பர்—குயில்கள் நுழைந்து செல்லும் இளமரக்காவில், குறுங்கால் காஞ்சி சுற்றிய—குறுகிய காலையுடைய காஞ்சி மரத்தைச் சுற்றிய, நெடுங்கொடிப் பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூ—நீண்ட கொடிகளையும், பசிய இலைகளையும் உடைய குருக்கத்தியின் பொலிவிழந்த புறத்தினையும் வரிகளையும் உடைய மலர்கள், கார் அகல்—கரிய சட்டியில், கூவியர் பாகொடு பிடித்த—அப்ப வாணிகர், பாகொடு கலந்து*

பிழிந்து எடுத்த, இழைசூழ் வட்டம்—நூல்போல் வட்ட வட்டமாய் பிழிந்து எடுக்கப்பட்ட அப்பம், பால் கலந்தவைபோல்—பாலில் கலந்து மிதப்பவைபோல், நிழல் தாழ்வார் மணல்நீர் முகத்து உறைப்ப—நிழல் படிந்த பரந்த மணலிடத்துக் குழிகளில் தேங்கி நிற்கும் நீரில் விழுந்து மிதக்க, புனல்கால் கழீஇய பொழில் தொறும்—வெள்ளநீர், குப்பைகளை அகற்றித் தூய்மை செய்த பொழில்கள் தோறும், திரள்கால் சோலைக் கமுகின்—திரண்ட தாளையுடைய சோலையிடத்துக் கமுக மரத்தின் சூல்கொண்ட வயிற்றைப்போலும், நீலம் பைக்குடம் தொலைச்சி—பச்சைநிறக் குப்பிகளில் கொண்ர்ந்த கள்ளைஉண்டு தீர்த்து, நாளும் பெருமகிழ் இருக்கை மரீஇ—நாள்தோறும் பேரின்ப வாழ்க்கை மேற் கொண்டு, சிறுகோட்டுக் குழவித்திங்கள்—சிறிய கோடு போன்ற இளம் பிறையை, கோள் நேர்ந்தாங்கு—பாம்பு தீண்டினாற்போல, சுறவுவாய் அமைத்த—மகரவாய் என்ற தலைக் கோலத்தை அணிந்த, சுரும்பு சூழ் சுடர் நுதல்—வண்டுகள் சூழும் ஒளிவீசும் நெற்றியினையும், நறவு பெயர்த்து அமைத்த—தேனை உருவுமாற்றி அமைத்தால் ஒத்த, நல்எழில் மழைக்கண்—நல்ல அழகு அமைந்த, குளிர்ந்த பார்வை பொருந்திய கண்களையும் உடைய, மடவரல் மகளிரோடு பகல் விளையாடி—மடப்பம் மிக்க இளமகளிரொடு பகலெல்லாம் விளை யாடி, பெறற்கு அரும் தொல்சீர்த் துறக்கம் ஏய்க்கும்—பெறுதற்கு அரிய பழைய புகழ்வாய்ந்த துறக்க உலகத்தை ஒக்கும், பொய்யா மரபின் பூமலி பெருந் துறை—நீர்பொய்யா இயல்பு வாய்ந்த பூக்கள் நிறைந்த பெரிய நீர்த்துறையில், செவ்வி கொள்பவரோடு—திருவெஃகாவில் குடிகொண்டுள்ள திருமாலைக் காணும் செவ்விக்காகக் காத்திருப்பவரோடு, அசைஇ—காத் திருந்து, அவ்வயின்—ஆங்குக் கோயில் கொண்டிருக்கும், அருந்திறல் கடவுள் வாழ்த்தி—அரியதிறல் வாய்ந்த

திருமாலை வாழ்த்தி, சிறிதுநும் கருங்கோட்டு இன்னியம் இயக்கினிர் கழிமின்—சிறிது நேரம், உம்முடைய கரிய தண்டுடைய இனிய யாழை இயக்கி, பின்னர் அவ்விடம் விட்டு அகன்று போவீராக.

## 13-1 கச்சிமாநகர் மாண்பு

மரங்களுள், காய்த்துப் பயன்தரா மரங்கள், பூத்துக் காய்க்கும் மரங்கள், பூவாதே காய்க்கும் மரங்கள் என எத்தனையோ வகையிருப்பினும், பூவாதே காய்த்துக், கனிந்து, விரிந்து. சுளை கொட்டும் பலா மரத்தையே பல் திசைப் பறவைகளும் சென்று அடைவது போல், கடல் சூழ்ந்த உலகில், எண்ணற்ற பெரு நகரங்கள் இருந்தாலும் பல்வேறு சமயக் கடவுளர்களும், சமயத் தலைவர்களும் கோயில் கொண்டிருக்க, திங்கள் தோறும் திருவிழா என ஆண்டு முழுவதும் விழாக்கள் எடுக்கப் படுவதால் உலக மக்கள் எல்லாம் தன்பாலே வந்து திரளும் தனிச் சிறப்பு வாய்ந்த பெரு நகரம், காஞ்சி மாநகரம்.

அத்தகைய பெருமை மிகு கச்சிமா நகரம் அடையும் பெரும்பாணன், முதற் பணியாக ஆங்குக் கோயில் கொண்டிருக்கும் பெருமாளை வணங்கிய பின்னர், அவன் செல்ல வேண்டிய இடம், திரையன் உறையும் அரண்மனை யாதலின், அதுபற்றிக் கூறத் தொடங்கிய புலவர், கோட்டையைச் சூழ உள்ள செண்டு வெளிகளில் இடம் பெற்றிருக்கும் நாற்படைத் தளங்கள், வாணிக நிலையங்கள், காவற்காடு, கோட்டை வாயில் ஆகியவற்றைப் பற்றியும் கூறத் தொடங்கினார்.

பழைய காலத்து நாற்படையுள், பெரும் பங்கு கொள்வது யானைப்படை. மேலும், திரையன் நாட்டு வேங்கட மலையில் யானைகள் மிகுதி. அதனால், அவன் பால், எண்ணற்ற போர்க் களிறுகள் இருந்தன. அவை ஒரு பெரிய

சோலையுள் நிறுத்தப் பட்டிருக்கும். ஆங்கு, நெய் இட்டு மிதித்துக் கலந்த உணவு, கவளம் கவளங்களாகப் பிரிக்கப் பட்டு, யானைகளுக்கு இடப்படும். அவ்வாறு இடப்படும் கவளத்தில் சிறிது குறைந்து போவதால் யானைகள் கவலை யுறுவது இல்லை. அதனால், குரங்குகள் யானைக்கு அஞ்சுவ தில்லை. ஆனால், இடப்படும் உணவு, குரங்குகள் கவர்ந்து கொள்வதால் குறைவுற்று, அதனால் களிறுகளின் உரம் குறைந்து விடுமோ என அஞ்சும் பாகர்கள், அக் குரங்குகளை விரட்டிக் கொண்டே இருப்பர். அதனால், அக் குரங்குகள் அப்பாகர்களைக் கண்டு அஞ்சும், என்றாலும், சூல் முதிர்ந்த நிலையில், ஏனைய குரங்குகள் போல், ஊரெல்லாம் திரிந்தோ, காடெல்லாம் அலைந்தோ, உணவு தேடி உண்ண இயலாது ஒய்ந்து கிடக்கும் மந்திகள் சிலவும் அவற்றிடையே இருப்பதால், அவை, பாகர் ஏமாந்திருக்கும் காலம் பார்த்துக் கவளத்தைக் கவர்ந்தோடிச் செல்லும்.

இது ஒரு பால். பிறிதோரிடத்தில், அண்மையில் பிடிக் கப்பட்டு, பழகுவதற்காகக் கொண்டு வரப்படும் யானை களை, அவற்றின் சினம் அடக்கி, அடங்கும் வரை பிணித்து வைப்பதற்காக, வெள்ளீடு இன்றி வயிரம் பாய்ந்த மரத்தால் ஆன கட்டுத் தறிகள் வரிசையாக நடப்பட்டிருக்கும்.

சோலையின் நீங்கிப், படை போகு பெருந்தெருவில் அடிவைத்தால், அது, மக்கள் வழங்குவதற்கு இயலாவாறு பாழ்பட்டிருப்பது தெரியும். அத்தெரு வாழ்மக்களை அது பற்றிக் கேட்டால், அத்தெருவில், நாள் தோறும் ஓடும் தேர்களின் எண்ணிக்கை மிகுதியாலும், அவற்றின் நெடிய, பெரிய, வடிவமைப்பாலும், அவற்றில் பூட்டப்படும் குதிரை கள், காற்றினும் கடுக ஈர்த்து ஓடுவதாலும், அது, அவ்வாறு, குண்டும் குழியுமாகப் பாழ்பட்டுப் போகும் என அறிவிப்பர், அவர்களின் சொல்லோவியம் மூலமாகவே தேர்ப்படை, குதிரைப்படைகளின் பெருமையை உணர்ந்து கொள்வதால்,

அவை இருக்கும் இடம் சென்று அவற்றைக் காணாது, அடுத்து நடந்தால் வீரர் வாழிடம் அடையலாம்.

எதிர்த்து நிற்கும் படைவரிசையை அழிப்பதல்லது, அப்படை வரிசை முன்அழியா ஆற்றல் மறவர்கள். அதனால், அவர்கள் அடையும் புகழுக்கு ஓர் எல்லை வகுக்க இயலாது. புகழ் எல்லையைக் கடந்த அவ்வீரர் குடியிருப்பபைக் கடந்து சென்றால், வாணிக வீதி வரும். ஆங்குப் பொருள்களை வாங்குவோரும், விற்போருமாக மக்கள் கூட்டம் பெருகி நிற்பதால், அத்தெருவைக் கடந்து செல்வதே அரிதாக இருக்கும். ஒருவாறு கடந்து விட்டால், காவற் காட்டையும், அதை அடுத்து அரண்மனை வாயிலையும் அடையலாம்.

அது அரண்மனை வாயில். அகத்தே அரசன் இருக்கை. அதனால், யாரேனும் பகைவர் அறியாது உள் நுழைந்து ஊறு விளைவிக்கவும் கூடும் என்ற அச்சத்தால் வாயில் அடைபட்டு இருக்குமோ என்ற ஐயஉணர்வோடு அணுகிப் பார்த்தால், அது திறந்தே கிடக்கும். திரையன் ஆற்றலும், அவன் படைப் பெருமையும் அறிந்திருக்கும் அவன் பகைவர், அவன் நாட்டின் எல்லையையும் அணுக மாட்டார். ஆதலின் அவர்களுக்கு அஞ்சி, வாயிலை அடைக்க வேண்டிய நிலை என்றுமே எழாது; மேலும், திரையன் பெருங் கொடையாளன், அவன் புகழ் பாடிப் பரிசில் பெறும் நினைவோடு, இரவலர்கள், எப்போதும் வந்த வண்ணமே இருப்பர். அவர்களை வரவேற்க, அவ்வாயில், எப்போதும் திறந்தேயிருக்கும்.

வாயிலைக் கடந்தால் அரசன் கோயில். அது, செங்கல்லும், இட்டிகையும் கொண்டு வானளாவக் கட்டப்பட்டிருக்கும். நாற்புறங்களிலும், படைபோகு பெருவீதி, வணிகர் வீதி, என வரிசையாக வீதிகள் இடம் பெற்றிருக்க, அரசன் பெருங்கோயில் நடுவே அமைந்திருக்கும், அந்நகர் அமைப்பு, வட்டம், வட்டமாக. இதழ்கள் விரித்திருக்க,

இடையே கொட்டை புடைத்திருக்கும் தாமரை மலரை நினைவூட்டும். அந் நகர் அமைப்பு தாமரை மலரை நினை ஊட்ட, அந் நகர் காணும் மக்கள் உள்ளத்தில், அதைத் தொடர்ந்து, திருவெஃகாவில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலின் உந்தியில் வேர்விட்டு நான்முகனைப் பயந்து மலர்ந்திருக்கும் உந்திக் கமல நினைவு எழ, உள்ளத்தில அப் பெருமானின் நினைப்பே முனைப்போடு முன்நிற்கும்.

"காழோர் இகழ் பதம் நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம் மிதி கவளம்,
கடுஞ்சூல் மந்தி கவரும் காவின்,
களிறு கதன் அடக்கிய வெளிறு இல் கந்தின்,
திண் தேர் குழித்த குண்டுநெடுந் தெருவின்,
படைதொலைபு அறியா மைந்து மலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையும் கோளும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயில் மிளைசூழ் படப்பை,
நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக ஒருவன் பயந்த பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண் வரத் தோன்றி;
சுடு மண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்,
இழு மென் புள்ளின் ஈண்டு கிளைத் தொழுதிக்
கொழு மென் சினைய கோளியுள்ளும்
பழம் மீக் கூறும் பலா அப் போலப்
புலவுக் கடல் உடுத்த வானம் சூடிய
மலர் தலை உலகத் துள்ளும் பலர் தொழ
விழவு மேம் பட்ட பழ விறல் மூதூர்"

(393-411)

உரை :

காழோர் இகழ் பதம் நோக்கி—பரிக் கோலை உடைய யானைப் பாகன் ஏமாந்திருக்கும், கூர்லம்

பார்த்து, கீழ நெடுங்கை யானை—கீழ் இடத்தே வைக்கப் பட்ட நீண்ட கையையுடைய யானைக்கு இடும். நெய்ம் மிகுதிகவளம்—நெய் இட்டு மிதித்துப் பண்ணிய உணவாகிய கவளத்தை, கடுஞ்சூல், மந்தி சவரும் சாவின்—நிறைசூல் கொண்ட மந்தி கவர்ந்து கொள்ளும் சோலையினையும், களிறு கதன் அடக்கிய—களிற்றின் கடுஞ்சினத்தை அடக்கிய, வெளிறு இல் கந்தின்— வெள்ளீடு இல்லாதகட்டுத் தறிகளையும், திண்தேர் குழித்த—திண்ணிய தேர்கள் பலகால் ஓடிக் குழி செய்த, குண்டு நெடுந்தெருவின்— பள்ளமும் மேடும் ஆன நீண்ட தெருவினையும், அறியா— படையின் முன்னே கெட்டு அழிதலை அறியாத, மைந்து மலி—ஆற்றல் மிகுதலால் உண்டான, பெரும் புகழ்க் கடைகால் யாத்த—பெரிய புகழின் எல்லையை அழித்த, பல்குடி கெழீஇ—பல மறக்குடிகள் நிறையப் பெற்று, கொடையும் கோளும் வழங்குநர்த் தடுத்த—விற்றலும் வாங்குதலுமாகிய வணிகத் தொழில் மிகுதியால் ஆங்கு இயங்கு வாரைத் தடுப், பதற்கு காரணமான, அடையா வாயில்—இரவலர்க்கும் பரிசிலர்க்கும் அடைக்காத வாயிலையும், மிளை சூழ் படப்பை—காவற்காடு சூழ்ந்த பக்கத்தினையும் உடைய நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ்— நீல நிற மேனி யோனாகிய திருமாலின் திரு வுந்தியாகிய. நான்முக ஒருவன் பயந்த—நான்முகன் என்ற ஒருவனை ஈன்ற, பல் இதழ்த் தாமரைப் பொகுட்டின்—பல இதழ்களையுடைய தாமரையின் கொட்டை போல, காண் வரத்தோன்றி-அழகு விளங்கத் தோன்றி, சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்—செங்கல்லால் கட்டப் பட்டு உயர்ந்த பெரிய அரண்மனையச் சூழ்ந்தமதிலினை யும்,இமுமென் புள்ளின் ஈண்டு கிளைத்தொழுதி— இமும் எனும் ஒலி எழுப்பும் பறவையின், பெரிய இனத்தின் கூட்டம் வந்து தங்கும், கொழுமென் சினைய கோளி

யுள்ளும்—கொழு கொழு வென்ற மெல்லிய கொம்பு களையுடைய பூவாதே காய்க்கும் மரங்களுள்ளும், பழம் மீக் கூறும் பலா அம்போல—இனிய பெரிய பழம் உடைமையால் புகழப் படும் பலாமரத்தைப் போல, புலவுக் கடல் உடுத்த—புலால் நாறும் கடலால் சூழப் பட்ட, வானம் சூடிய—வானம் கவிந்த, மலர்தலை உலகத் துள்ளும்—பரந்த இடத்தையுடைய உலகத்து நகரங்கள் பலவற்றுள்ளும், பலர் தொழ—பல்வேறு சமயத்தாரும் தொழும்படி, விழவு—விழாக்களாலே மேலான சிறப்பைப் பெற்ற, பழ விறல் மூதூர்—பழம் பெருமைவாய்ந்த மூதூர்.

# 14. திரையன் ஆற்றிய கன்னிப் போர்

கச்சிப் பெரு நகரின் பெருமை, அதன் அமைப்பு நலன் ஆகியவற்றை விளங்க உரைத்த புலவர், அடுத்து, திரையன் நாளோலக்க நலம் பற்றிக் கூறுவதன் முன்னர், "திரையன் இப்போது பெற்றிருக்கும் அரசப் பெருவாழ்வு பாரெல்லாம் போற்றும் பெருமை வாய்ந்ததாகவே இருப்பினும், அது, அவன் ஆற்றல் கொண்டு அவனே அமைத்துக் கொண்ட தாகாது, அவன் தாயத்தாரால் அமைக்கப் பெற்று, மகனுக்குத் தந்தை கொடுத்தது என்ற தாயமுறையால் வந்ததாக இருப்பின், அப் பெருவாழ்வு கண்டு, அவன் முன்னோரைப் பாராட்ட வேண்டுமே ஒழிய, திரையனைப் பாராட்டுவது முறையாகாது" என்று பெரும்பாணன் எண்ணவும் கூடும் என நினைத்தமையால், புகழ்மிகு பேரரசு அமைக்க, திரையன் மேற்கொள்ள வேண்டியிருந்த போர்க் கொடுமைகள் பற்றிய விளக்கத்தை மேற்கொண்டார்.

கச்சி அரியணையில் அமர்ந்திருக்கும் திரையன், அதை எளிதில் கைக் கொண்டான் அல்லன். பகைவர் பலரை வென்று அழித்த பின்னரே, கச்சியுள் புக முடிந்தது. அவன் பகைவர் எந்நிலையிலும் உடன்பாடு காணமாட்டா முரண் பாடு மிக்கவர். அவர்களும் ஒருவர் அல்லர்; பலர்; அவர் பால் இருந்த படைகளோ ஓர் எண்ணிக்கைக்குள் அடங்க மாட்டாப் பெருமை வாய்ந்தவை. அத்துணைப் பெரும் படைகளோடு, அவர்கள் அனைவரும், ஆறாச் சினம் கொண்டு ஒன்று கூடி வந்து எதிர்த்தனர். திரையன், தான்

தனியன், அவர் பலர் என எண்ணி அஞ்சி விடாது, தன் ஆற்றல் முழுவதும் கொண்டு, பலநாள் ஓயாது போரிட்டான். இறுதியில், "நாமும் நூறு பேர் உள்ளோம்! நம் பால் பதினெட்டு அக்ரோணி படைகளும் உள" என்ற செருக்கால் போர் தொடுத்து வந்த துரியோதனாதியர் அனைவரும் மாண்டு மடிய, ஒரு நாள் இரு நாள் அல்ல, பதினெட்டு நாட்கள் கடும் போரிட்டு, அந்திச் செவ்வானத்தில் வளரும் பருவத்து வெண் பிறைத் திங்கள் இடையே இடம் பெறக் கார் முகில் கூட்டம் நகரும் காட்சியை நினைப்பூட்டும் வகையில், களத்தில் இறந்து வீழ்ந்தவர் உடல் கொட்டிய செங்குருதி வெள்ளத்தில், நீண்டு வளைந்த வெண்கோடு களையுடைய களிறுகளின் கரிய உடல்கள் மிதந்து செல்லு மாறு கடும் போரிட்டு வெற்றி கொண்ட பாண்டவர் ஐவர் மேற்கொண்ட பாரதப் போரை நினைவூட்டுமளவு பேராற்றல் காட்டிப் போரிட்டுப் பகைவரை அறவே அழித்து வெற்றிக் கொண்டு விழாக் கொண்ட பின்னரே திரையன் கச்சி அரியணையில் அமர முடிந்தது.

பெரும்பாண! அவ் வெற்றிப் பெருமிதம் மிதக்க, திரையன் இப்போது கச்சி அரியணையில் உள்ளான். "அவன் வெற்றித் திருமகனாதல் கூடும்; ஆனால் வருவார்க்கு வாரி வழங்கும் கொடைக் குணம் அவன்பால் குடிகொண் டிருக்குமோ!" என்ற ஐயமே வேண்டாம். வெற்றிப் புகழில் சிறந்து விளங்குவது போலவே, கொடை வளத்திலும் அவன் தலை சிறந்தவன். ஆகவே, பெரும் பாண! இனியும் தாமதி யாது, இன்னே அவன்பால் செல்வாயாக என்றார்,

"அவ்வாய் வளர்பிறை சூடிச், செவ்வாய்
அந்தி வானத்து ஆடு மழை கடுப்ப
வெண்கோட்டு இரும் பிணம் குருதி ஈர்ப்ப
ஈரைம் பதின்மரும் பொருது களத்து அவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்

ஆராச் செருவின் ஐவர் போல
அடங்காத் தானையோடு உடன்றுமேல் வந்த
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்துக்
கச்சியோனே கைவண் தோன்றல்"

(412-420)

உரை :

அவ்வாய் வளர்பிறை சூடி—அழகிய வடிவுடைய வளரும் பிறைத் திங்களைச் சூடி, செவ்வாய் அந்தி வானத்து—சிவந்த இடத்தை உடைய அந்திக் காலத்துச் செவ்வானத்தில், ஆடு மழை கடுப்ப—அசையும் கார் முகில்களை ஒப்ப, வெண்கோட்டு இரும்பிணம்—வெள்ளிய கொம்புகளை உடைய யானைகளின் கரிய பிணத்தை, குருதி ஈர்ப்ப—குருதி வெள்ளம் இழுத்துச் செல்லுமாறு, ஈரைம் பதின்மரும் பொருது களத்து அவிய—துரியோதனன் முதலான உடன் பிறந்தார் நூற்றுவரும் போரிட்டும் போர்க்களத்தே அழியும்படி, பேரமர் கடந்த—பெரிய போரை வென்ற, கொடுஞ்சி நெடுந் தேர்—கொடுஞ்சியை யுடைய தேர்ப்படையினையும், ஆராச் செருவின் ஐவர் போல—தொலையாப் பெரும் போரையும் உடைய தருமன் முதலான பாண்டவர் ஐவரைப் போல, அடங்காத் தானையோடு—எண்ணில் அடங்காத படையோடு, உடன்று மேல் வந்த—சினம் கொண்டு போர் தொடுத்து வந்த, ஒன்னாத் தெவ்வர்—தன் ஏவலுக்கு அடங்காத பகைவர்கள், உலைவிடத்து ஆர்த்து—அழிந்த போர்க்களத்து வெற்றிக் களிப்பு மிக ஆரவாரித்து, கைவண் தோன்றல்—கைகளால் வாரி வழங்கும் வள்ளல் தன்மையில் தலை சிறந்தோனாகிய தொண்டைமான் இளந்திரையன், கச்சியோனே—கச்சிமா நகரின் கண் உள்ளான்.

## 14: 1 திரையன் நாளோலக்க நலன்

"திரையன் கச்சியுள் உள்ளான்; காணச் செல்க" எனப் பெரும் பாணனுக்கு விடை கொடுத்த புலவர், திரையனைக் கண்டு அவன் புகழ் பாடுவதன் முன்னர், அவனைப் பணிந்து அவன் ஏவல் கேட்க வந்திருக்கும் வேற்றரசர் கூட்டம் காத்திருக்கும் அரண்மனை முற்றத்தின் கொற்றத்தையும், அவன் நாட்டு மக்கள் முறை அளிப்பான் வேண்டியும், குறைதீர்ப்பான் வேண்டியும் கூடியிருக்கும் அரசவை மாண்பையும் அறிந்து கொண்டால், அவன் புகழை முழுமையாகப் பாடிப், பாராட்ட இயலும் என உணர்ந்தமையால், அவைபற்றிக் கூறத் தொடங்கினார்.

திரையன் அரண்மனை முற்றத்தில், அரசர் பலர் குழுமியிருப்பர். வந்திருக்கும் அவர்கள் தாம் மட்டும் தனித்து வாராது, திரையனுக்குத் தம் காணிக்கையாகத் தருவான் வேண்டித், தங்கள் நாட்டிற்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்தன வாய பொருள்களாகவே தேர்ந்து உடன் கொண்டு வந்திருப்பர். அவர்களின் முகத்தைப் பார்த்தால், சிலர் உள்ளத்தில் அன்பு ஊற்றெடுப்பது தெரியும்; சிலர் உள்ளத்தில் அச்சம் குடி கொண்டிருப்பது புலனாம். அவர்கள் ஒவ்வொருவரும் திரையனைக் காண, உள்ளே நுழைவதற்குத் தான் முன், நீ முன் என ஒருவரை ஒருவர் முந்த முனைவர்.

இமையவர் உறைவதால் இமயம் என அழைக்கப்பெறும் உயர் மலையிலிருந்து, வெள்ளிப் பனிப் படலம் உருகப் பெருகிப், பொற்பாறைகளை உடைத்துத் துகளாக்கி அரித்துக்கொண்டு, புணை இன்றிக் கடக்க இயலா ஆழமும், அகலமும் உடையதாக உருண்டோடி வரும் கங்கைப் பேராற்றின் ஒரு கரை வாழ் மக்கள், ஆங்கு, இயற்கை விளைவித்த இடரராலோ, இறை அளித்த துயராலோ வாழமாட்டா நிலையுற்று வாழிடம் விடுத்து, வாழப் புது இடம் தேடி,

மறுகரை செல்வதற்காக, இன்றியமையா ஒரு சில உடைமைகளோடு திரண்டு வந்து கரையில் குழுமி நோக்கிய போது, ஆங்குக் கங்கையைக் கடக்க உள்ளது ஒரே தோணி என அறிந்ததும், அதில் ஏறி அக்கரை அடைய ஒருவரை ஒருவர் முந்த விரையும் விரைவை அம் மன்னர்களின் வேகத்தில் காணலாம். திரையனைக் காண்பதில் அம்மன்னர்களுக்கு அத்துணை ஆர்வம்; விரைவு.

திரையனைக் காணும் ஆர்வம் உந்த, ஆங்குக் காத்திருக்கும் மன்னர்களிடையே புகுந்து "மன்னர்காள்! திரையன்பால், என்ன சிறப்பைக் கண்டு, இவ்வளவு திரளாக வந்து கூடியிருக்கிறீர்கள்? உங்கள் அனைவரையும் ஒரு சேர ஈர்த்த அவன் அருந்திறல்கள் தாம் யாவையோ?" என வினவினால் "தன்னை விரும்பி, தன்பால் அடைக்கலம் புகுந்துவிட்டார்க்கு, ஒரு சிறு இடையூறுதானும் உண்டாகாவாறு காத்துப் புரக்கவல்ல அவன் அருளுடைமை கண்டு, அடைக்கலம் புக வந்துள்ளோம்" என்பர் சிலர். "தன்னோடு பகை கொள்வாரை அறவே அழித்தொழிக்கும் அவன் ஆற்றல் கண்டு அஞ்சி, பகை விடுத்து, பணிந்து வாழ வந்துள்ளோம்" என்பர் சிலர்.

அவர்கள் அவ்வாறு கூற, "அடைந்தாரைக் காக்கும் பேரருளுடைமையும், பகைத்தாரைப் பாழ் செய்யும் பெருவலியும், திரையன் பால் இருப்பதை எவ்வாறு கண்டு கொண்டீர்கள்" என்று வினவினால், "திரையனைப் பகைத்துக் கொள்ளாதார் நாட்டிற்கு அவனால், அழிவு உண்டாகாது: ஆனால் அந்நாட்டில் வளம் கொழிக்கும் என்று சொல்ல முடியாது; ஓரளவு வளந்தான் இருக்கும். ஆனால், திரையனோடு பகை கொள்ளாதிருப்பதோடு அமையாது, நட்பும் கொண்டவர் நாட்டில், வறுமை தலை காட்டாது; அழிவு இடம் பெறாது போவது மட்டுமன்று; ஆக்கம் பெருகி வளம் கொழிக்கும்; செல்வம் செழிக்கும். செல்வச் செழிப்பு என்றால், வெறும் வயல் வளம் மட்டுமே

பெருகும் என்பதில்லை; பொன் வளமும் பெருகி நிற்கும்; அந்நாட்டு மரம், செடி, கொடிகள் பூவாகப் பூத்துக் குலுங்குவது போல், அந்நாட்டு மனைகளில் பொன் பூத்துப் பொலிவுறுவதைக் கண்ணாரக் கண்டு வந்துள்ளோம்'' என்பர் சிலர்.

தன்னோடு நட்பு கொண்டவர் நாட்டில், உள்ள வளத்திற்கு ஊறு தேடாமையோடு நில்லாமல் அவ்வளம் ஒன்று பலவாகப் பெருகவும் துணை செய்யும் திரையன், தன்னோடு பகை கொண்டவர் நாட்டில், உள்ள வளத்தை அழிப்பதோடு அமைதி கொள்ளாது, அந் நாட்டையே இல்லாமல் செய்யவும் வல்லன். அந்நாடு இருந்த வளங்களை இழந்து போவது மட்டுமன்று, அழிவுக்கும் உள்ளதாகும். தன்னோடு பகை கொண்டு, தன் மேல் போர் தொடுத்து வந்தாரைப், போர்க் களத்தில் வென்று அழிப்பதோடு, அமைதி உறுவானல்லன். ஆங்கு அவரை அழித்த அவன், அவர் நாட்டுக்குள்ளும் புகுந்து நாடு எனும் பெயர் மறைந்து, காடு எனும் பெயர் பெற்றுப் போகுமாறு அந்நாட்டை அறவே அழித்து விடுவன். மனையற வாழ்வு மேற்கொண்டு மக்கள் வாழும் மாட மாளிகைகள் மட்டுமன்று; தமக்கென ஒரு வாழிடம் இல்லா வறியோர்களின் இருக்கையாம் ஊர்ப் பொதுவிடத்தையும் விட்டு வைப்பானல்லன். அம்மன்றமும் பாழ் பட்டுப் போக அந்நாட்டை அறவே அழித்து ஒழிப்பன். அவ்வாறு அவனால் அழிவுற்ற நாடுகளைக் கண்டு வந்துள்ளோம்'' என்பர் சிலர்.

அவர்கள், அவ்வாறு கூறக்கேட்டு, மலையில் பிறந்து, உருண்டோடி வரும் அருவிகள், அம் மலையிலேயே இருந்து விடுவது இல்லை; இறுதியில், கடலில் சென்று கலந்து விடுவது தவிர்த்து அவற்றிற்கு வேறு வழி இல்லை. அது போல், தங்கள் நிலைகுலைந்து போன இந்த அரசர்களுக்குத் திரையனை தவிர்த்து வேறு புகலிடம் இல்லை. தன்னோடு

கலந்துவிட உருண்டோடி வரும் அருவிகளை ஏற்றுக் கொள்வதல்லது ஏற்க மறுக்கும் இயல்பு கடலுக்கு இல்லை. அது போல் தன்பால் அடைக்கலம் புகும் அரசர்களை ஏற்று அவர்களுக்கு வாழ்வளிப்பதல்லது, வெறுத்து வெளியேற்றும் இயல்பு இளந்திரையனுக்கும் இல்லை என்ற உணர்வு எழ, மன்னர்களிடம் விடை கொண்டு, முற்றத்தைக் கடந்து சென்றால் அவன் அரண்மனைச் சிறப்பைக் காணலாம்.

முற்றத்தைக் கடந்து அரசவைநோக்கிச்செல்லும் போது, இடை வழியில், அரண்மனை மாடத்து இறப்புகளில், தம் பெடைகள் இணைபிரியாதிருக்கும் இன்ப உணர்வில் தம்மை மறந்து அறிதுயில் மேற் கொண்டிருக்கும் ஆண்புறாக் கூட்டம் அவ்வப்போது சிறகடித்து எழுந்து பறந்து செல்வதும், மீண்டும் வந்து இறப்புகளில் அமர்வதுமாகிய காட்சியைச் கண்ணுற்று புறாக்களின் அமைதிச் சூழ் நிலையைக் கெடுப்பது எதுவோ என எண்ணி நிற்பார் காதுகளில், கொல்லன் உலைக்களத்தில் பழுக்கக் காய்ச்சிய இரும்பைப் பட்டடை மீது வைத்து, பெரிய சம்மட்டி கொண்டு ஓங்கி அடிக்குந்தொறும் எழும் ஒலி விழவே, அவ்வொலி கேட்டே, அப் புறாக் கூட்டம் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகிறது என அறிந்து வருந்தி, அவற்றின் நிலைக்கு இரங்கி, ஆங்குச் சிறிது இருந்து, பின்னர், அவ்வொலி எழுந்தவிடம் நோக்கிச் சென்று பார்த்தால், ஆங்கே, கொல்லன், போர்க்களிறுகளின் நீண்ட வலிய தந்தங்களுக்குப் பொருத்தப்படும் பூணாகிய கிம்புரிகளை உருவாக்கிக் கொண்டிருப்பதைக் காணலாம். அக் காட்சியால், திரையன், யானைப் படை முதலாம் நாற்படைகளைப் பேணிக்காக்கும் விழிப்புணர்வை உணர்ந்து மகிழ்ந்தவாறே அரண்மனையுள்ளே சென்றால், ஆங்கு, பொற்கட்டிகள் குவியல், குவியல்களாகக் கொட்டிக் கிடப்பதைக் காணலாம்.

படைக் கலங்களை வடிக்கும் உலைக் களத்தில் எழும் ஒலி பறவைகளை உறங்காமல் செய்ய, அவ்வுலைக்களம் செய்து குவிக்கும் படைக்கலத் துணையால் பெற்ற பொற் கட்டிகள் தீண்டுவாரற்றுக் கிடந்து உறங்கும் நலம் கண்டு மகிழ்ந்தவாறே அரசவை புகுந்தால், ஆங்குத் திரையன் நடாத்தும் அறவழி ஆட்சி நலம் கண்டு பெருமகிழ்வு எய்தலாம்.

திரையன் அரியணையில் வீற்றிருக்கும் காட்சி, கீழ்க் கடலின் அடிவானத்தே தோன்றி, பேரொளி பரப்பியவாறே எழும் கானல் ஞாயிற்றின் காட்சியை நினைவூட்டும். அக் கடற்காட்சி, தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டி அவன் தாய் பீலிவளை, அவனைக் கலம் ஏற்றிக் கடல் வழி அனுப்ப, இடைவழியில் கலம் கவிழத், திரைவழி வந்து அரசோச்சும் திரையன் குடிப் பெருமையை நினைவூட்டி விடும். அந் நினைவுஅலையில் மிதந்தவாறே அவையை நோக்கினால், ஆங்கு வலியரால் நலிவுற்று முறை வேண்டி வந்தவர்களும், வறுமையுற்றுப் பொருள் வேண்டி வந்தவர் களும் குழுமி இருப்பதைக் காணலாம்.

"திரையன், தம்முறை கேட்டுத் தக்க தீர்ப்பளிப்பன். தம் குறை கேட்டு, அது தீர்த்து வைப்பன். அதற்கேற்ற தகுதி களைக் குறைவறப் பெற்றவன். தன் முன்வந்து முறையிடு வார் கூறுவன கொண்டே, அவர் கூறாத உண்மைகளைக் குறிப்பினாலேயே ஐயம் திரிபு அற, உள்ளது உள்ளவாறே உணரவல்ல அறிவுத் தெளிவுடையவன். அதுமட்டுமன்று; வந்து இரப்பார்க்கு வாரி வழங்குவது தன் பிறவிக் கடன் என்ற உணர்வும், அதற்கேற்ற வளமும் வாய்க்கப்பெற்றவன். தன் அவை வந்து நிற்பார்க்கு நடுவு நிலை பிறழா நீதி கிடைத்தல் வேண்டும்; வறுமை, இனி அவரைத் தொடரா வாறு வழங்க வேண்டும் என்ற அந்த உணர்வு எந்நிலையிலும் மங்கிப் போகாப் பேருள்ளம் உடையவன்" என உளமார

உணர்ந்தமையினாலேயே, அவர்கள் அவ்வளவு பெருங் கூட்டமாக வந்து, நம்பிக்கையோடு அவன்முன் நிற்கின் றனர் என்பதை அறிந்து, அவன் பெருமையை எண்ணி, எண்ணி, வியந்து நிற்கும் நிலையில், அவனைச் சுற்றி அமர்ந் திருப்பாரைக் கண்ட வழி, அவன் பெருமை மேலும் உயர்ந்து காணப்படும்.

திரையனைச் சுற்றி, அமைச்சர்களுக்கு அமைய வேண்டிய, அறிவு, ஆற்றல், பண்பாடுகளை ஒரு சிறிதும் குறைவின்றிப் பெற்றிருக்கும் அமைச்சர்களின் ஒரு பெரிய கூட்டமே அமர்ந்திருக்கும். தன்னளவிலேயே தகைசான் றவன் என்ற பாராட்டினுக்கு உரியவனாகிய திரையன், “எனக்கு அறிவு புகட்ட, எனக்கு வழிகாட்ட ஒருவரும் தேவை இல்லை” என இறுமாந்துவிடாது, ஒளி விளக்கே ஆயினும், நன்றாய் விளங்கிடத் தூண்டுகோல் இன்றியமை யாதது என்ற உணர்வுடையனாய்ப், பெரியாரைத் துணை கோடலால் ஆம் நன்மையை உணர்ந்து, மதித்து, மதி வலம் மிக்க, நல்ல அமைச்சர்களைத் துணையாகக் கொண்டு அவர் நடுவண் அமர்ந்து நாடாண்டிருப்பன். அவை புகுந்து, அவனைக் காணும் பெரும்பாண! அவனை, உன் நாவார, உன்நல் உளமாரப் பாராட்டுவாயாக, என்றார்.

‘‘நச்சிச் சென்றோர்க்கு ஏமம் ஆகிய
அளியும் தேறலும், எளிய ஆகலின்
மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணை இலோரும்,
கல்வீழ் அருவி, கடல்படர்ந்தாங்குப்
பல்வேறு வகையின் பணிந்த மன்னர்,
இமையவர் உறையும் சிமையச் செவ்வரை
வெண்திரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்

பொன்கொழித்து இழிதரும் போக்கரும் கங்கைப்
பெருநீர் போகும் இரியல்மாக்கள்,
ஒருமரப் பாணியில் தூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்துப்,
பெருங்கை யானைக் கொடுந்தொடிப் படுக்கும்
கருங்கைக் கொல்லன், இரும்புவிசைத்து எறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ, மாடத்து
இறையுறை புறவின் செங்கால் சேவல்
இன்துயில் இரியும் பொன்துஞ்சு வியன்நகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு
முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டுநர்க்கு அருளி,
இடைதெரிந்து உணரும் இருள்தீர் காட்சிக்
கொடைக் கடன் நிறுத்த கூம்பா உள்ளத்து
உரும்பில் சுற்றமொடு இருந்தோன் குறுகி''

(421-447)

**உரை :**

*நச்சிச் சென்றார்க்கு—தன்னை விரும்பித் தன்னை அடைந்தவர்க்கு,ஏமம் ஆகிய அளியும்-பாதுகாவல் ஆகிய அருளும், தெறலும்—தன்னை விரும்பாத பகைவர்க்குக் கேடு ஆகிய அழித்தல் தொழிலும், எளிய ஆகலின்—தனக்குச் செய்தற்கு எளிய தொழில்கள்ஆதலின், மலைந்தோர் தேஎம்—தன்னோடு போரிட்டோர் நாட்டின், மன்றம் பாழ்பட—ஊர்ப் பொதுவிடங்கள், மக்கள் வழக்கற்றுப் பாழ்பட்டுப் போகவும், நயந்தோர் தேஎம்—தன்னை விரும்பியவர் நாட்டில், நன்பொன் பூப்ப—நல்ல பொன் கொழித்துச் செழிக்கவும் அவற்றைக்கண்டு நட்புக் கொளல் வேண்டி நயந்திசினோரும்—நட்புக்*

கொள்ளுதலை விரும்பி அவனை விரும்பினவர்களும், துப்புக் கொளல் வேண்டிய துணை இலோரும்—அவன் ஆற்றலைத் துணைக் கொள்ளக் கருதிய வேறு ஓர் துணை இல்லாதவர்களும், கல்வீழ் அருவி கடல் படர்ந் தாங்கு—மலையிலிருந்து விழும் அருவி, கடலில் சென்று கலந்தாற் போல, பல்வேறு வகையில் பணிந்த மன்னர் —பல்வேறு காரணம் கருதிப் பணிந்த அரசர்கள். இமை யவர் உறையும் சிமையச் செவ்வரை-இமையவர் வாழும் உச்சியையுடைய சிறந்த இமய மலையின் கண், வெண் திரை கிழித்த விளங்கு சுடர் நெடுங் கோட்டு— வெள்ளிய அலைகளையுடைய நீர் பிளந்து பாய்வதால் விளங்கும் ஒளியையுடைய உயர்ந்த உச்சியிலிருந்து, பொன் கொழித்து இழி தரும்—பொன்னைக்கொழித்துக் கொண்டு ஓடி வரும், போக்கு அரும் கங்கை—கடத் தற்கு அரிய கங்கையாற்றில், பெருநீர்ப் போகும் இரியல் மாக்கள்—பரந்து அகன்ற அக் கங்கை நீரைக் கடந்து போகும் தங்கள் நாடு இழந்து கெட்ட மக்கள், ஒரு மரப்பாணியில் தூங்கி யாங்கு—கங்கையைக் கடக்க விடுகின்ற தோணி ஒன்றேயாதலால், தம்முறை வரும் வரை காத்திருந்தாற் போல, தொய்யா வெறுக்கை யோடு—எண்ணித் தொலையா பெரும் செல்வங் களோடு, துவன்றுபு குழீ இ—நெருக்கமாகத் திரண்டு, செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து—திரையனைக் காணும் காலம் எதிர் நோக்கிக் காத்திருக்கும், வளம் மிக்க முற்றத்தினையுடைய, பெருங்கை யானைக் கொடுந் தொடிப் படுக்கும் கருங்கைக் கொல்லன்— நீண்ட கையினை உடைய யானையின் தந்தத்திற்கு வளைந்த பூணைச் செய்யும் வலிய கைகளையுடைய கொல்லன், இரும்பு விசைத்து எறிந்த கூடத்திண்ணிசை வெரீ இ—இரும்பால் ஆன சம்மட்டியை ஓங்கி அடித்த பட்டடையிலிருந்து எழுந்த பெரிய ஓசைக்கு அஞ்சி, மாடத்து இறையுறை புறவின் செங்கால் சேவல் இன்

துயில் இரியும்—மாடத்தின் இறப்புகளிலே வாழும் புறவின் சிவந்த கால்களையுடைய சேவல், இனிய துயிலை இழத்தற்குக் காரணமான, பொன் துஞ்சு வியன் நகர்—பொன் மகளாம் திருமகள் நீங்காது தங்கும் அகன்ற அரண்மனையில், குணகடல் வரைப் பின் முந்நீர் நாப்பண்—கிழக்குக் கடலின் அடிவான மாகிய; நிலத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத் தொழிலும் செய்யவல்ல நீரின் நடுவே, பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு—பகற் பொழுதைச் செய்யும் ஞாயிறு கதிர் பரப்பி எழுந்தாற் போல, முறை வேண்டு நர்க்கும்—வலியரால் நலிவு எய்தி முறை வேண்டி வந்தார்க்கும், குறை வேண்டுநர்க்கும்— வறுமையுற்று இரந்து வந்தார்க்கும், வேண்டுப, வேண்டுப வேண்டினர்க்கு அருளி— வேண்டியவற்றை, வேண்டியவற்றை, அவற்றை வேண்டியவர்க்கு வழங்கி, இடை தெரிந்து உணரும் இருள் தீர்க் காட்சி- ஒருவர் உணர்த்த விரும்பியதை, அவர் உணர்த்த வேண்டாதே உணரவல்ல ஐயம் திரிபு அற்ற அறிவுடையனாய், கொடைக்கடன் நிறுத்த கூம்பா உள்ளத்து—கொடை என்னும் கடமையைக் குறைவறச் செய்து முடித்த குறுகியதாகாது விரிந்த உள்ளத்துடன், உரும்பில் சுற்றமொடு இருந்தோன் குறுகி— குடிமக்கட்குக் கொடுமை நினையா அமைச்சர் சுற்றத்தோடு அரிய யணையில் இருந்த திரையனை அணுகி.

## 14-2 திரையன் பெருமை

திரையனைப் பாடிப் பாராட்டுவாயாக எனக் கூறிய புலவர், திரையனைப் பாராட்டும் முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் பெரும்பாணனுக்கு விளக்கத் தொடங்கினார். குலப்பெருமை பாராட்டாதவரை, தன் குலப் பெருமையை பிறர் பாராட்டுவது கேட்டு மகிழாத

வரை காண்பது இயலாது. அறிவும், ஆற்றலும் அளிக்கும் புகழினும் குலப் பெருமை அளிக்கும் புகழே பெரிதெனக் கருதுவர். இது மனித இயல்பு. இளந்திரையன் இதற்கு விலக்கானவன் அல்லன். அதனால், அவன் புகழ் பாடுவதன் முன்னர், அவன் குலப்புகழ் பாடுதல் நன்று எனக் கருதினார். அதனால், திரையன் குடியாம் தொண்டையர்குடிப் புகழ் பாடத் தொடங்கி விட்டார்.

தொண்டையோர், புலவர் பால் பெருமதிப்பு உடையவர். புலவர்களைத் தம் அவைக்கு அழைத்து, அவர் விரும்பும் அறுசுவை உணவு, ஆடை, அணி ஆகிய அனைத்தும் வழங்குவர். அவ்வாறு வழங்குவதைத் தம் கடமையாகவே கொள்பவர். அவ்வாறு வழங்கி விடை கொடுத்த பின்னரே, வேறு பணி மேற்கொள்வர். வண்டுகள் மொய்க்குமளவு மதநீர் வடிய மதம் கொண்டு திரியும் பெரிய களிற்று யானை மீது பாய்ந்து கொன்ற சிங்க ஏறு, அடுத்துப் பூனை எதிர்பட்டால் அதன் மீது பாய எண்ணாது. மாறாக, புலியைத் தேடிச் சென்றே பாயும். அதுபோலத் தம்மை பணிய மறுக்கும் பகைவர் மீது போர் தொடுத்துப் போகும் காலத்தில், ஓர் அரசை அழித்து வெற்றி கொண்ட பின்னர், மீண்டும் போர் வேட்கை எழுந்தால், அவர் நினைவு, பண்டு அழித்த அரசினும் ஆற்றலில், அளவில், சிறிய அரசு, மீது செல்லாது; மாறாக, அன்று அழித்த அரசினும் ஆற்றல் மிக்க பேரரசு மீதே போர் தொடுத்துப்போவர். அத்துணை தறுகணாளர் தொண்டையோர்.

போர் தொடுத்துப் புறப்பட்டுவிட்டால், பகைவர் கோட்டை காவற்காடு, ஆழ்ந்த அகழி, பல்வகைப் படைக் கலம் பொருத்தப்பட்ட பெருமதில் ஆகியன கொண்டு அழிக்கலாகாத் திறம் வாய்ந்ததாக இருப்பினும், அவை அனைத்தையும் அழித்து அரணைக் கைப்பற்றிக் கொள்வர். அந்நிலையில், அரண் அழிவுற்று விட்டது; இனி அதைக்

காத்தல் இயலாது என உணர்ந்து, பகைவர் போரைக் கைவிட்டு, பணிந்து திறை தர முன்வந்தால் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, அரணுக்குரிய அரசர்களின் மணி முடிகளைக்கைப்பற்றி அந்நாடாளும் அரசராக,அவ்வரணிலேயே முடி புனைந்து வெற்றிவிழா கொண்டாடி மகிழ்வர். அவ்வாறு பகை அரண்களையும், பகை நாடுகளையும் அழித்து, ஆங்குக் கைக்கொண்ட வளம் உண்டு வாழும் வீரவாழ்வினர். அத்தகைய வீரவாழ்க்கை நடாத்துதற்கேற்ற வாள் படை முதலாம் நாற்படைகளைக் கொண்டவர். அப்படைகளை ஆளவல்ல உரம் பாய்ந்த உடல் அமைப்பும் வாய்க்கப் பெற்றவர்.

பெரும்பாண! தொண்டையோரின் இப்புகழை யெல்லாம் விளங்க எடுத்துரைத்தபின்னர், "அத்தொண்டையோர் வழியில் வந்தவனே! போரில் வல்ல பெருவீரர்களும் புகழ்ந்து பாராட்டத்தக்க பெரு வீரனே! அவ்வீரத்தை எளியோரை அழிக்கப் பயன்படுத்தாது, கொலை, களவு மேற்கொள்ளும் கொடியோரைக் கொடுமை செய்யப் பயன்படுத்தும் கொற்றவனே! அருட் செல்வம், பொருட் செல்வம் அறிவுச் செல்வம் வாய்க்கப் பெற்ற செல்வர்களும் மதித்துப் பாராட்ட அச்செல்வங்களைச் சிறக்கப் பெற்றவனே! போர் தொடுத்து எழுந்தால், அழியுதர் புறக்கொடை அயில்வேல் ஓச்சாமை போலும் அறவழிப் போர் செய்யும் சிறப்புடையோனே! வரையாது வழங்கும் கொடை வளம் முதலாக அளவிறந்த புகழ்ச் செல்வம் உடையோய்! அவை அனைத்தையும் கூறிப் புகழ்வது என்னால் இயலாது. அவற்றுள் நான் அறிந்த சிலவே கூறிப் பாராட்டினேன். நீ நெடிது வாழ்வாயாக!" என்றெல்லாம் பாராட்டி வாழ்த்துவாயாக.

குலத்தாலும், வேறு பல நலத்தாலும் சிறந்து விளங்கும் அவனை, அரசர் அவை தோறும் சென்று பண் இசைத்துப்

பரிசில் பெற்றுத் திரியும் நீ பாராட்டுவது, கடலிடையே புகுந்து, மாமர வடிவுற்றுக் கரந்து நின்ற சூரனைக் கொன்ற வீரனும், அணிகள் பலபூண்ட இளம் அழகனுமான முருகனைப் பெற்றளித்த பெருமைக்குரிய வயிறுடையாளும், பேய்கள் எல்லாம் கூடி ஆடும் துணங்கைக் கூத்தையும் கண்டு களிக்கும் கன்னிப் பருவத்தாளும் ஆகிய உமை அம்மைக்குப் பேய் ஒன்று குறி கூறத் தொடங்கி; அவள் குலப் பெருமை, குணப் பெருமைகளைக் கூறுவது போல் நகைப்பிற்கு உரிய தாகும் என்றாலும் உமை அம்மையார், பேய் கூறும் குறியை யும் விருப்புடன் கேட்டு அப்பேய் வேண்டுவன எல்லாம் வழங்கி அருள் பாலிப்பது போல், அளக்கலாகாப் புகழ் வாய்ந்த திரையனும், நீ கூறும் புகழ் உரைகளை, உளம் உவக்கக் கேட்டு, உன்பால் பேரன்பு கொண்டு, நீ வேண்டு வன எல்லாம் வழங்குவன்.

ஆகவே, பாராட்டு பயன் தருமோ என்ற ஐயுறவு விட்டுப் பாராட்டி, பாராட்டு முடிவில், உன் இடது தோளில் தழுவிக் கிடக்கும் பேரியாழை, இயக்குமுறை பிறழாது இயக்கி, யாழ்த் தெய்வத்திற்கு ஆற்ற வேண்டிய கடப் பாட்டு மரபு கெடா வகை, முதற்கண் இருகை கூப்பி வணங்கி, வாயாரப் போற்றிய பின்னர், திரையன் உள்ளிட்ட அவ்வவையில் இருப்பார் அனைவரும் இசை இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து போக, இசை எழுப்பி நிற்பா யாக! உன் பேரியாழ் எழுப்பும் இசை வழங்கிய பேரின்பம் நுகர்ந்த அளவே, திரையன் உன்னை முழுமையாக அறிந்து கொள்வன்" என்றார்.

"பொறிவரிப் புகர் முகம் தாக்கிய வயமான்
கொடு வரிக்குருளை கொள வேட்டாங்குப்,
புலவர் பூண்கடன் ஆற்றிப், பகைவர்
கடிமதில் எறிந்து குடுமி கொள்ளும்

வென்றி அல்லது வினை உடம்படினும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி உண்டித் தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செரு மேம் படுந!
வெண்திரைப் பரப்பில் கடுஞ்சூர்க் கொன்ற
பைம்பூண் சேஎய் பயந்த மாமோட்டுத்
துணங்கையம் செல்விக்கு அணங்குநொடித்தாங்குத்
தண்டா ஈகை நின் பெரும் பெயர் ஏத்தி
வந்தேன் பெரும! வாழியு நெடிது! என
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபின் கைதொழூஉப் பழிச்சி
நின்நிலை தெரியா அளவை''

(448—464)

**உரை :**

*புலவர் பூண்கடன் ஆற்றி—புலவர்களுக்குப் பொன் அணி பூட்டுதல் முதலாம் கடன்களைக் குறைவற முடித்து, பொறி வரிப் புகர் முகம் தாக்கிய வயமான் — பொறிகளையுடைய வண்டுகள் மொய்க்கும் புள்ளிகள் பொருந்திய முகத்தினை உடைய யானையைத் தாக்கிய சிங்கம், கொடு வரிக் குருளை கொள வேட்டாங்கு — வளைந்த கோடுகளையுடைய புலிக்குட்டியைப் பாய்ந்து கொல்ல விரும்பியதுபோல், பகைவர் கடி மதில் எறிந்து- பகை மன்னர்களின் காவல் அமைந்த மதில்களை அழித்து, குடுமி கொள்ளும்—அம்மதிலகத்து அரசர்க்கு உரிய முடிக்கலம் முதலியவற்றைக் கைக்கொண்டு ஆங்கே முடி புனைந்து விழாக்கொண்டாடும், வென்றி அல்லது— வெற்றியை விரும்புவதல்லது, வினை உடம்படினும் — அப்பகையரசர் பணிந்து உடன்பாடு செய்து கொள்ள விரும்பினும்; ஒன்றல் செல்லா—அதற்கு ஒத்து கொள்ளாமைக்குக் காரணமான, உரவு வா*

தடக்கை—வலிய வாளையும், பெரிய கையையும், கொண்டி உண்டி—பகைவர் நாடுவென்று கொண்ட கொள்ளைப் பொருளாகிய உணவினையும், உடைய, தொண்டையோர் மருக — தொண்டையோர் குடியில் வந்தவனே! மள்ளர் மள்ள—வீரர் போற்றும் வீரனே, மறவர் மறவ — கொடியோர்க்குக் கொடியவனே, செல்வர் செல்வ — செல்வரும் மதிக்கும் செல்வச் சிறப்புடையவனே! செருமேம் படுந — போரில் மிக்க வனே, வெண் திரைப் பரப்பில் கடுஞ்சூர் கொன்ற — வெண்ணிற அலைவீசும் கடல் பரப்பில், கொடிய சூரனைக் கொன்ற, பைம்பூண் சேய் — புத்தொளிவீசும் அணிகலன் அணிந்த இளையோனாம் முருகனை, பயந்த மாமோட்டுத் துணங்கையம் செல்விக்கு — பெற் றெடுத்த பெருமைக்கு உரிய வயிற்றினை உடையவளும், துணங்கைக் கூத்தைக் கண்டு மகிழ்பவளுமான அழகிய உமையம்மைக்கு, அணங்கு நொடித் தாங்கு — பேய்குறி கூறிப் பாராட்டினாற் போல், தண்டா ஈகை நின்பெரும் பெயர் ஏத்தி வந்தேன் பெரும — குறையாத கொடை வளம் மிக்க உன் பெரும் புகழுள் சிலவற்றைப்பாராட்டி வந்தேன் பெருமானே, வாழிய நெடிது—நீ நெடுங்காலம் வாழ்வாயாக, என—என்று கூறி, இடன் உடைப் பேரி யாழ் — இடப் பக்கத்தே தழுவிக் கிடக்கும் பேரியாழை, முறையுளிக் கழிப்பி — முறைப்படி இயக்கி, கடன் அறி மரபின்—யாழ்த் தெய்வத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை அறிந்த முறைப்படி, கை தொழூஉப் பழிச்சி — கை கூப்பி வணங்கி நாவால் பாராட்டி, நின் நிலை தெரியா அளவை—நீ நிற்கும் நிலையினைத் தெரிந்து கொள்வதற்கு முன்பே,

## 14 - 3 திரையன் வழங்கும் விருந்து

பெரும்பாண! நின் பேரியாழ் இயக்கி இசையெழுப்பிப் பாராட்டி நிற்கும் அந்நிலையே திரையன் உன்னை முழுமை

யாக அறிந்து கொள்வான் என்ற புலவர், அடுத்து, திரையன் வழங்கும் விருந்தின் பெருமை பற்றி விளக்கத் தொடங்கினார்.

திரையன் புகழ் வாய்ந்த குடியில் வந்தவன். சிறந்த வீரன், பெரிய நாடாள்பவன். அதே நிலையில், 'இவற்றிற் கெல்லாம் நிலைக்களமாய உலகம் வாழ வேண்டும்; அது இல்லையேல் இவை இல்லை. இவற்றைக் காத்துக் கொள்ள வேண்டுமேல், முதலில் அதைக் காத்துக் கோடல் வேண்டும். அந்த உலக வாழ்வு,அதில் வாழும் உயர்ந்தோரைப் பொறுத் துள்ளது. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு; அந்த உயர்ந்தோர் வாழ்ந்தால் உலகம் வாழும்; அவர் இல்லையேல் அதுவும் இல்லாகி விடும். ஆகவே, அதை வாழ வைக்க வேண்டு மேல் உயர்ந்தோர்களை வாழச் செய்தல் வேண்டும்' என்ற உலகியலையும் உணர்ந்திருந்தான், அதனால் பேரியாழ் இசைத்து, இசை வளம் காத்து வரும் பெரும் பாணனைக் காப்பது தன் கடமை என உணர்ந்திருந்தான்.

மேலும், இளமையும், இரும்பெனத் திரண்டுருண்ட உடலும், பெரிய அரச வாழ்வும் பெற்றிருந்தாலும், அவை அனைத்தும் ஒருநாள் அழியக் கூடியவை; அழியாது நிற்பது புகழ் ஒன்றே; அப்புகழ் தானும் பலவகையானும் வரும் என்றாலும், இல்லாதார்க்கு ஈதலால் வரும் புகழே ஈடு இணையற்றது என்பதையும் உணர்ந்திருந்தான். அதனால் பெரும்பாண! உம் போலும் இரவலர்களை அரசவையில் காணுவதன் மூலம், அவ்வுணர்வு வரப் பெற்றதும் அரசவைப் பணிகளை மறந்து விடுவான். உன்னை அருகில் அழைத்து அணைத்துக் கொள்வான்.

பலநாள் உணவின்றித் துன்புறும் பசிக் கொடுமையோ, உடல் உறுப்புகளில் அணியேதும் இல்லாமையோ, ஒருவன் வறுமையுற்றிருப்பதைக் காட்டி விடாது. ஒருவர் உடு

திருக்கும் உடையைப் போல், அவர் வறுமையை வெளிப் படுத்தி விடுவது வேறு எதுவும் இல்லை. உங்களை அருகில் அழைத்து நோக்குவதற்கு முன்பே, நீயும் நின் சுற்றமும் உடுத்திருக்கும் உடை நிலை, நீங்கள் எத்தகைய கொடிய வறுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை உணர்த்தி விடுமாதலின், திரையன் முதற்பணியாக, நீங்கள் உடுத் திருக்கும் வேலப்பாசி வேர் போல, நைந்து போயிருக்கும் கந்தல் ஆடைகளை அகற்றி விட்டு, மெல்லிய நூலால் நெய்யப்பட்ட பாலாடை போன்ற பளபளக்கும் வெள்ளாடைகளை அவரவர் உடல் அளவிற்கேற்புடைய வற்றை அளித்து உடுத்து விடுவன்.

புத்தாடை உடுத்துப் புதுப் பொலிவோடு நிற்கும் உங்களின் அடுத்த தேவை வயிறார உணவு என்பதை அறிந் திருக்கும் திரையன், உங்களை அழைத்துக் கொண்டு அடுக் களையுள் புகுவன். ஆங்குக் கொடுவாள் ஏந்திக் ஏந்திக் காழ்ப்பு ஏறிய கையில், கொடுவாள் ஏந்திய நெடிய, பெரிய ஆள் உங்களை வரவேற்பன். அவன் வடிவையும், அவன் கைக் கொடுவாளையும் கண்டு அஞ்சத் தேவையில்லை. அவன், அம்மடைப் பள்ளியின் தலைவன். ஆட்டுக்கறி கோழிக் கறி என வகை வகையான கறிகளைக் கொந்தி அரிவதற்குத் துணை புரியும் கொடுவாளே அவன் கையில் இருப்பது. திரையன் முன்னே நடந்து, அடுக்களையுள் ஆக்கக் குவித்து வைத்திருக்கும் அரிசியையும், ஆக்கி வைத் திருக்கும் உணவு வகைகளையும் காட்டிக் கொண்டே செல்ல அவனைத் தொடர்ந்து செல்லும் நீங்கள், ஆங்கே கொட்டி வைத்திருக்கும் அரிசியைக் காண்பீர்கள் அது, தாள் ஈரம் அற நன்கு பழுத்து, கொட்டை கொட்டையாக முற்ற விளைந்த செந்நெல் அரிசி. அது, கல்லும், மண்ணும், கருக் காயும், கலப்பும் நீக்கித் தூய்மை செய்து வைக்கப்பட் டிருக்கும்.

அடுத்துச் சென்றால், பெரிய பெரிய கலங்கள், பாது காப்பாக மூடி வைக்கப்பட்டிருக்கும். அவை ஒவ்வொன்றை யும் திறந்து பார்த்துக் கொண்டே சென்றால், ஒன்றில், முனை முறியாமல் முழு வடிவில் வடித்து வைக்கப்பட் டிருக்கும் சோறு; ஒன்றில் ஆட்டுக்கறி: ஒன்றில் கோழிக்கறி; ஒன்றில் மான் கறி; அடுத்துள்ள கலங்களில் வேறு வேறு வகையான அறுசுவை உண்டிகள் நிறைந்திருக்கக் காண்பீர் கள். அவற்றிலிருந்து எழும் மணம், உண்ணும் பசி இல்லா தாரையும் உண்ணத் தூண்டி விடும்.

அவற்றைக் காட்டிக் கொண்டே சென்று, இறுதியில், உண்ணும் இடம் அடைந்து அமர்த்துவன். சோறுண் கலம் இடையில் இருக்க, அதைச் சுற்றிலும் பல்வேறு கறி வகை களுக்கான கலங்களைத், திங்களைச் சூழ ஒளிவிடும் விண்மீன் கள் எனக் காட்சி அளிக்குமாறு உங்கள் முன் பரப்பி வைத்து அவற்றுள் நிறைய உணவு படைக்கப்பட்டதும், திரையன் உம் அருகில் அமர்ந்து இதில் ஒரு கவளம், இன்னும் ஒரு கவளம், எனக்காக ஒரு கவளம், அம்மாவுக்காக ஒரு கவளம் எனக் கூறி; தாய் தன் மகவுக்கு உணவோடு இன்ப அன்பு கலந்து ஊட்டுமாறு, உங்களை உண்பித்து, உண்ட நிறைவு தோன்ற, உங்கள் முகம் மலரக் கண்டு அக மகிழ்ந்து போவன்.

“அந்நிலை
நாவலம் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா உலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை அணுகல் வேண்டி, நின் அரைப்
பாசி அன்ன சிதர்வை நீக்கி
ஆவி அன்ன அவிர்நூல் கலிங்கம்
இரும் பே ரொக்கலோடு ஒருங்குடன் உடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்லூன் கொழுங்குறை

அரிசெத்து உணங்கிய பெருஞ் செந் நெல்லின்
தெரிகொள் அரிசித் திரள் நெடும் புழுக்கல்
அருங்கடித் தீஞ்சுவை அமுதொடு பிறவும்
விருப்புடை மரபின் காப்புடை அடிசில்
மீன்பூத்தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகன் அமர்ந்து
ஆனா விருப்பின் தான் நின்று ஊட்டி''

(464-479)

**உரை :**

அந்நிலை—அரசவையில் நீ நின்ற அந்த நிலையைக் கண்டதும், நாவலம் தண்பொழில்—நாவல் மரத்தால் பெயர் பெற்று சம்புத்தீவு என அழைக்கப்படும் குளிர்ந்த உலகம். வீவின்று விளங்க—கேடின்றி விளங்கும்படி, நில்லா உலகத்து நிலைமை தூக்கி— நிலையாமையை யுடைய உலகத்தில், நிலைபேறு உடையது, எது என ஆராய்ந்து அது புகழே என அறிந்து, அந்நிலை அணுக வேண்டி—செய்மைக் கண் நிற்கும் உன் நிலை தனக்கு அணித்தாகுமாறு உன்னை அருகில் அழைத்து, நின் அரைப் பாசி அன்ன சிதர்வை நீக்கி—உன் அரையில் கிடந்த, வேலம் பாசி வேர் போன்ற, நைந்த கந்தல் ஆடையை அகற்றி, ஆவி அன்ன அவிர் நூல் கலிங்கம்—, பால் ஆவியை ஒத்த, ஒளிவிடும் நூலால் நெய்யப்பட்ட ஆடையை, இரும்பே ரொக்கலொடு ஒருங்கு உடல் உடீஇ—உன் பெரிய சுற்றத்தோடே, உடலுக்கு ஏற்ப உடுக்கப்பண்ணி, கொடுவாள் கதுவிய—வளைந்த அரிவாள் ஏந்திய, வடுவாழ் நோன்கை—வடு பொருந்திய வலிய கைகளை உடைய, வல்லோன் அட்ட—அடுதல் தொழிலில் வல்லவன் சமைத்த, பல்லூன் கொழுங்குறை —பல வகைக் கறிகளிலும் பொறுக்கிய கொழுத்த கறியும், அரி செத்து உணங்கிய—அரிதாள் நீர் வற்றும்

படி உலர்ந்த, பெருஞ்செந்நெல்லின்—பெரிய செந்நெல்லினுடைய, தெரிகொள் அரிசி—கல்லும் பிறவும் நீக்கிப் பொறுக்கி எடுத்த அரிசியால் ஆக்கிய, திரள் நெடும் புழுக்கல்— திரண்ட நீண்ட சோறும், அருங்கடித் தீஞ்சுவை அமுதொடு பிறவும்—அரியகாவல் மிக்க இடத்தில் வைத்துக் காத்த இன்சுவை மிக்க அமிழ்தம் போன்ற உணவும் பிறவும் ஆகிய, விருப்புடை மரபின் காப்புடை அடிசில்—கண்டாரை விரும்பப்பண்ணும், கலங்களில் மூடி வைத்துக் காப்பாற்றிய உணவு வகைகளை, மீன்பூத்தன்ன வான் கலம் பரப்பி—விண் மீன்கள், இரவில் ஒளிவிட்டுக் காட்சி தருவதுபோல் வெள்ளிக் கலங்களைப் பரப்பி, மகமுறை மகமுறை நோக்கி—தாய் மகவைப் பார்க்குமாறுபோல உங்களைத் தாயன்பு பெறுக நோக்கி, முகன் அமர்ந்து—முகம் மகிழ்ச்சியால் மலர்ந்து, ஆணா விருப்பின் தான் நின்று ஊட்டி—குறையாத பேரன்போடு, தானே உடனிருந்து உங்களை உண்பித்து.

## 14-4 திரையன் அளித்த பரிசு

திரையன் அளிக்கும் விருந்தின் சிறப்பினை எடுத்துரைத்த புலவர் அடுத்து, அவன் அளிக்கும் பரிசில் பெருமை பற்றி விளக்கத் தொடங்கினார்.

நல்ல உடை கிடைத்து, வயிறார உணவும் கிடைக்கப் பெற்றவர்க்கு அடுத்த நாட்டம் நல்ல அணிகள் மீது செல்லும். மக்களின் இம் மன இயல்பு உணர்ந்தவன் திரையன். அதனால், பெரும்பாண! உனக்கும் உன் உடன் வந்திருக்கும் பெண்டிர்க்கும் ஏற்புடைய அணிகளை அணிந்து விடுவன். பாண! உன் தலையில் அழகிய தாமரை மலரைச் சூட்டுவன். என்ன! தாமரை மலரா? வலைஞர் குடியிருப்பை அடுத்துள்ள குளங்களில் காணாத தாமரை மலரா? விரும்பி

யிருந்தால் அங்கேயே ஒன்றைப் பறித்துச் சூடி வந்திருக்க மாட்டேனா? என்று எண்ணிக் கவலையுற வேண்டாம். நீ நினைக்கும் அத் தாமரை மலரில் வண்டுகள் மொய்க்கும்; அது தண்ணீரில் வளரும். ஆனால், திரையன் சூட்டும் தாமரை மலரில் வண்டுகள் மொய்க்கா; அது, செந்தழலில் இட்டு உருக்கி அடித்து வடித்த பொன்னால் ஆனது. அழகிய அப் பொற்றாமரை மலரைக் கருத்து நீண்ட உன் தலை மயிரிடையேசூட்டி விட்டால், அக்காட்சி, கருமேகத்திடையே பேரொளிவீசிக் காட்சி தரும் முழுத் திங்கள் போல் தோன்றி, உன்னை அழகின் திருவுருவமாக மாற்றி விடும்.

உனக்கும், உன் போலும் ஆடவர்க்கும் அவ்வாறு பொற்றாமரை மலர் சூட்டும் அவன், உன் உடன் வரும் பெண்டிர்க்கு, அவருடைய அடர்ந்து நீண்ட கரிய மயிரை, அழகுற வாரிப் பின்னலிட்டு, அப் பின்னலிடையே, பொன்னரி மாலை என்னும் பொன்னணியைப் பூட்டி விடுவன். கருத்து, நீண்ட பின்னலிடையே, மின்னலிடும் பொன்னரி மாலை கிடக்கும் காட்சி, கோடைக் காலத்து மாலைப் போதில், கடல் நீருண்டு கருத்து எழுந்து திரண்ட மேகம், கால் இறங்கிப் பெய்யத் தொடங்கும் போது அதனிடையே ஒளிவிடும் கொடி மின்னல் காட்சியை நினை வூட்டிக் கண்ணைப் பறிக்கும்.

இவ்வாறு உயர்ந்த அணிகளைச் சூட்டி, உங்களை ஒப்பனை செய்து முடித்ததும், நீங்கள் தன்னைக் காண காட்டிலும், மேட்டிலும், கானாற்றிலும் கால் கடுக்க நடந்து வந்துள்ளீர்கள்; இனியும் நடப்பது உங்களால் இயலாது என்பதை உணர்ந்து, உங்களுக்குச் சிறந்த ஊர்திகளை வழங்குவன். பொன் வேலைப்பாடு மிக்க அழகிய நெடிய தேர் ஒன்றைக் கொண்டு வந்து நிறுத்துவன்.

அதில், குதிரை நூல் வல்லவர்களால், குற்றம் அற்றவை, குணங்களால் சிறந்தவை எனப் பாராட்டப்

பெற்றனவும், திருமால் பள்ளி கொண்டிருக்கும் பாற்கடலில் பிறந்ததினால், ஏனைக் கடலில் பிறந்த சங்கைக் காட்டிலும் மிக்க வெண்ணிறம் வாய்ந்த சங்கின் நிறம் காட்டும் பிடரியும், மேனியும் கொண்டனவும், தன் உடன் பூட்டப் படும் குதிரையோடு ஒத்துத் தொழில் புரியும் பயிற்சி உடையவும் ஆகிய குதிரைகள் நான்கை, அத்தேரில் பூட்டி விடுவன். அடுத்து, தன்னோடு போரிட வந்தோர்களை வென்று, அவர்கள் புறமுதுகு காட்டி ஓடுங்கால் விட்டுச் செல்லக், கைப்பற்றிக் கொணர்ந்த குதிரைகளுள், விண்ணில் பறப்பதுபோல் விரைந்தோட வல்ல குதிரைகளைச் சேணம் பூட்டிக் கொண்டுவந்து வரிசையாக நிறுத்துவன்.

அரசவை தோறும் சென்று பாடிப் பாராட்டும் வாழ் வினராய இரவலரை, ஒரே அரசவையில் நெடிது நாட்கள் இருத்திக் கொள்வது முறையாகாது என்பதையும், அவர், அவன் அரசவையில் நலமே இருப்பினும், அவர் மனைகளில், அவரை எதிர்நோக்கியிருக்கும் அவர் சுற்றம், வறுமைக் கொடுமையால் துன்புற்றுப் போவர் என்பதையும் அறிந்தவன் திரையன். அதனால், உங்களுக்கு அளிக்க வேண்டியன எல்லாம் அளித்து, உங்களைத் தேரிலும், குதிரைகளிலும் ஏற்றி, அன்றே வழியனுப்பி வைப்பன். ஆகவே, பெரும்பாண! எதை எதையோ எண்ணி. இனியும் காலம் தாழ்த்திவிடாது, கச்சிக்கு இப்போதே புறப்படுவா யாக! என்றார்.

> ''மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்
> ஆடுவண்டு இமிரா அழல் அவிர் தாமரை,
> நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
> உரவுக் கடல்முகந்த பருவ வானத்துப்
> பகல் பெயல் துளியின் மின்னுநிமிர்த் தாங்குப்
> புனையிரும் கதுப்பகம் பொலியப் பொன்னின்
> தொடையமை மாலை விறலியர் மலைய
> நூலோர் புகழ்ந்த மாட்சிய, மால்கடல்

வளை கண்டன்ன வால்உளைப் புரவி
துணை புணர் தொழில நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியும் அமையான், செருத்தொலைத்து
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஒழித்த
விசும்புசெல் இவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்கும் அவன் பரிசில்''

(480—493)

**உரை:**

மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்—இருண்ட வானத்தின்கண் தோன்றும் முழுத் திங்களைப் போன்ற, ஆடு வண்டு இமிரா—பறந்து திரியும் வண்டுகள் மொய்க்காத, அழல் அவிர் தாமரை—தீயிலே இட்டு ஒளிவிடப் பண்ணிய பொற்றாமரை மலரை, நீடு இரும்பித்தை பொலியச் சூட்டி—நீண்ட கரிய மயிரிடையே அழகு பெறச் சூட்டி, உரவுக் கடல் முகந்த—அழித்தலும், ஆக்கலும் ஆகிய ஆற்றல் மிக்க கடல்நீரை முகந்து கொண்ட, பருவ வானத்து—கோடைக் காலத்துக் கரு மேகத்திலிருந்து, பகல் பெயல் துளியின்—பகற் போதில் பெய்யும் மழைத் துளிகளின் இடையே, மின்னு நிமிர்ந் தாங்கு—மின்னல் தோன்றினாற் போல, புனை இரும் கதுப்பகம் பொலிய—பின்னிவிட்ட கரிய மயிரில் அழகு பெறும்படி, பொன்னின் தொடை அமை மாலை—பொன்னால் செய்து தொடுக்கப்பட்ட பொன்னரி மாலையை, விறலியர் மலைய—ஆடு மகளிர் சூடிக் கொள்ள், நூலோர் புகழ்ந்த மாட்சிய—குதிரை நூல் வல்லார் புகழ்ந்த மாண்புடையவாய, மால்கடல் வளை கண்டன்ன—திருமால் பள்ளி கொள்ளும் திருப்பாற் கடலில் தோன்றிய சங்கைக் கண்டாற் போன்ற, வால் உளைப் புரவி—வெள்ளிய பிடரி மயிரை உடைய குதிரைகள், துணை புணர் தொழில—தன்னோடு

இணையாகப் பூட்டப்படும் குதிரையோடு ஒத்துத் தொழில் செய்வன, நால்குடன் பூட்டி—நான்கை ஒரு சேரப் பூட்டின, அரித்தேர் நல்கியும் அமையான்—பொன்னால் செய்த தேரைத் தந்தும், கொடைப் பணியில் மனநிறைவு கொள்ளானாய், செருத்தொலைத்து—பகையரசர் தொடுத்த போர்களை வென்று அழித்து, ஒன்னாத் தெவ்வர்—தன்னோடு ஒத்து வராத அப் பகைவர், உலை விடத்து ஒழித்த—தோற்ற போர்க் களத்தில் விட்டுச் சென்றனவும், விசும்பு செல் இவுளியொடு—விண்ணில் பறப்பதுபோல் பாய்ந்து செல்லுவனவுமாகிய குதிரைகளோடு, பசும்படை தரீஇ—புதிய சேணமும் கொடுத்து, அன்றே அவன் பரிசில் விடுக்கும்—அவன் அரசவை புகுந்த அன்றே பரிசில் அளித்து வழி அனுப்புவன்.

# 15. தொண்டை நாட்டு மலை மாண்பு

திரையன் அளிக்கும் பரிசில் பெறும் பெரும்பாணனும், அவன் சுற்றமும் திரையன் பால் விடை கொண்டு, தேர் மீதும், குதிரைகள் மீதும் அமர்ந்து தம் ஊர் நோக்கிப் புறப்பட்டுச் செல்ல, அவர்கள் செல்லும் இன்பக் காட்சியைக் கண்டு மகிழ்ச்சி பொங்கத் தன்னை மறந்து நிற்கும் திரையனைக் காணும் புலவர் உள்ளம், "இரவலர் வாழத் திரையன் வாழ்க! அவன் அப் பெரு நிலையில் வாழ, அவன் நாடு பல வளமும் பெற்றுவாழ்க!" என வாழ்த்தத் துடிக்கும். அதனால் அவன் நாட்டு வளத்தை, ஒரு நாள் இருந்து மறு நாள் அழிந்து விடாது முக் காலங்களிலும் தொடர்ந்து நிலை பெற வல்ல பொருள்களைக் கூறுங்கால், நிகழ் கால வினை முற்றால் கூறும் மரபு வழி நின்று, நிகழ் கால நிகழ்ச்சிகளாகப் பாராட்டத் தொடங்கி விட்டார்.

"இசையின் நுட்பம் அறியவும், இனிய இசையைத் தாளம் தவறாமல் எழுப்ப வல்லனவுமாகிய கின்னரப் பறவைகள் பாடித்திரிய, அவ்வின்னிசை கேட்கத் தெய்வங்களும் வந்து குழுமியிருக்க, சோலை மரங்களில், மயில் கூட்டம் மகிழ்ச்சி மிக்குத் தோகை விரித்து ஆட, மயில் ஆட்டம் கண்டு மகிழும் குரங்குகள் மரக்கிளைகளை ஆட்டி மலர்களை உதிர்க்க, உதிர்த்த மலர்க் குவியலை மந்திகள் வாரி, மரத்தடிகளைத் துப்பரவு செய்ய, அம் மரத்தடியில் மானும் புலியும், தம் பகை மறந்து இணைந்து படுத்து உறங்க, நாடு வாழ, முப் தீப் பேணி வளர்க்கும்

முனிவர் குழாம், காட்டு யானைகள், தம் வெண்கோடுகளால் முட்டிச் சாய்த்து முறித்துக் கொண்டு வரும் விறகு கொண்டு, இடைவிடாத் தீ மூட்டி வேள்வி இயற்ற, இந் நலங்களால் சிறப்புறும், அவன் வேங்கட மலையையும், அதைச் சூழ உள்ள நாடும், அம் மலையில், நீர்த்திவலைகள் நெடுந் தொலைவு தெறித்து வெண்ணிற ஒளி காட்டி, 'ஓ' எனும் ஒலி எழுப்பி, ஓய்வு இன்றி ஓடிக் கொண்டேயிருக்கும் அருவிகள் போல் என்றும் வாழும்'' என உளமார்ந்த வாழ்த்தை வழங்கி முடித்தார்.

வாழ்க திரையன்! வாழ்க பெரும்பாணன்! வாழ்க புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்!

''இன்சீர்க்
கின்னரம் முரலும் அணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலும் பரம் பயில் இறும் பின்.
கலை பாய்ந்து உதிர்த்த மலர்வீழ் புறவின்.
மந்தி சீக்கும் மாதுஞ்சு முன்றில்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறு இலங்கு அருவிய மலை கிழவோனே''

(493—500)

**உரை :**

இன்சீர்க் கின்னரம் முரலும்—இனிய, தாளத்தோடு இயைந்த இசை எழுப்பவல்ல கின்னரப் பறவைகள் பாடும், அணங்குடைச் சாரல்—தெய்வங்கள் வாழும் மலைச்சாரலில், மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பில்—மயில்கள் ஆடும் மரங்கள் அடர்ந்த சோலையில், கலை பாய்ந்து உதிர்த்த மலர் வீழ்புறவின்— முசுக்கலைகள் பாய்ந்து உதிர்த்த மலர்கள் வீழ்ந்து கிடக்கும் குறுங்

காட்டின். மந்தி சீக்கும் மாதுஞ்சும் முன்றில்—மந்திகள் அம்மலர்க் குப்பைகளை வாரும், மானும் புலியும் போலும் பகை விலங்குகள் மறந்து உறங்கும், செந்தீப் பேணிய முனிவர்— முத்தீயை இடைவிடாமல் வளர்த்து வந்த முனிவர்கள், வெண்கோட்டுக் களிறு தரும் விறகின் வேட்கும்—வெண்ணிறத் தந்தங்களையுடைய களிறு கொண்டு வந்து தரும் விறகுகளால் வேள்வி செய்யா நிற்கும், ஒளிறு இலங்கு அருவிய மலை கிழவோனே— புகழால் ஒளி பெறும் அருவிகளைக் கொண்ட திருவேங்கட மலைக்கு உரிமையுடையோனாகிய இளந் திரையன்.

## 15-1 பொருள் முடிவு

இனி 'அகலிரு விசும்பில்' என்று தொடங்கி 'மலை கிழவோனே' என முடியும் இப்பாடலை—

புலவு லாய்ப் பாண (22), யாம் அவண் நின்றும் வருதும் (28), நீயிரும் (28), திரையன் படர்கு விராயின் (37), கேள் அவன் நிலையே, கெடுகநின் அவலம் (39) கொடியோர் இன்று அவன் கடியுடை வியன் புலம் (41) சென்மோ இரவல சிறக்க நின் உள்ளம் (45); வியங்காட்டு இயலின் (82) பதம் மிகப் பெறுகுவிர் (105) அருஞ்சுரம் இறந்த அம்பர் (117) எயினக் குறும்பில் சேப்பின் (129), உடும்பின் வறைகால் யாத்தது வயின் தொறும் பெறுகுவிர் (133), முரண்டலைக் கழிந்த பின்றை (147) கோவலர்குடி வயின் சேப்பின் (166) பாலொடும் பெறுகுவிர் (168), புல்லார் வியன் புலம் போகி (184) கவின் குடிச் சீறூர் (191) மூரல் பெறுகுவிர் (196), வன்புலம் இறந்த பின்றை (206), மல்லல் பேரூர் மடியின் (254) வாட்டொடும் பெறுகுவிர் (256). தீஞ்சாறு விரும்பினிர் மிசையின் (262), வலைஞர் குடிவயின் சேப்பின் (274) தண்மீன் சூட்டொடு பெறுகுவிர் (282); ஒண் பூ

அடைதல் ஓம்பி (290) பிணையினிர் கழிமின் (296); மறை காப்பாளர் உறைபதி சேப்பின் (301) காடியின் வகைபடப் பெறுகுவிர் (310); நீர்ப்பெயற்று எல்லைப்போகி (319) பட்டினம் மருங்கின் அசையின் (336), கூர்நறாப் பெறுகுவிர் (345), துறை பிறக்கு ஒழியப் போகி (351), உழவர் தனி மனைச் சேப்பின் (355) தீம்பல் தாரம் முனையின் (361) கிழங்கு ஆர்குவிர் (362), பண்மாநீளிடைப் போகி (368) நாடு பல கழிந்த பின்றை (371), பள்ளி அமர்ந்தோன் ஆங்கண் (373), செவ்வி கொள்பவரோடு அசை இ (390) இன்னியம் இயக்கினிர் கழிமின் (392), விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர் (411) கச்சி யோனே கைவண் தோன்றல் (420); பணிந்த மன்னர் (428), செவ்வி பார்க்கும் செழுநகர் முற்றத்து (435), பொன் துஞ்சு வியனகர் (440) சுற்றமோடு இருந்தோன் குறுகி (447), மருக! (454), மன்ன மறவ!(455) செல்வ! செரு மேம் படுந! (456) நின் பெரும் பெயர் ஏத்தி வந்தேன்; வாழிய நெடிது என (461) கழிப்பு (462) பழிச்சி (463) நின்ற நின்னிலை தெரியா அளவை (464) சிதர்வை நீக்கி (468). உடீஇ (470) கரப்புடை அடிசில் (476) ஊட்டி (479) சூட்டி (482) விறலியர் மலைய (486) புரவி பூட்டி (489). பசும் படைதரீஇ (492) அவன் அன்றே பரிசில் விடுக்கும் (493), (அவன் யார் எனில்) மலை கிழவோன் (500) என பொருண் முடிவு செய்க.

# பெரும்பாணாற்றுப்படை

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழித்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததன்
உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சைப்
பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
உருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன இருள்தூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பின்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி இடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதரும்
தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!
பெருவறங் கூர்ந்த கானம் கல்லெனக்
கருவி வானம் துளிசொரிந் தாங்குப்

பழம்பசி கூர்ந்தவெம் இரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு
யாமவ ணின்றும் வருதும் நீயிரும்
இருநிலங் கடந்த திருமறு மார்பின்

முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்

வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேற் றிரையற் படர்குவி ராயின்
கேளவன் நிலையே கெடுகநின் னவலம்
அத்தஞ் செல்வோர் அலறத் தாக்கிக்

கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
உருமும் உரறா தரவுந் தப்பா
காட்டுமாவும் உறுகண் செய்யா வேட்டாங்கு
அசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்

சென்மோ இரவல சிறக்கநின் உள்ளம்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவின் அன்ன முழுமர உருளி
எழூஉப் புணர்ந்தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்றம் மழைசுமந் தன்ன

ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்
வேழங் காவலர் குரம்பை ஏய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிருப்பிடி முழந்தா ளேய்க்கும்
துளையரைச் சீறுரல் தூங்கத் தூக்கி

நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகஉடை மகடூப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பின் ஏட்டிலை மிடைந்த

படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்

பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
எல்லிடைக் கழியுநர்க் கேம மாக
மலையவும் கடலவும் மாண்பயந் தரூஉம்
அரும்பொருள் அருத்துந் திருந்துதொடை நோன்றாள்
அடிபுதை யரண மெய்திப் படம்புக்குப்

பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணகன் எறுழ்த்தோள்

கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்

தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியங் காட்டியவின்
நீளரை இலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசுங்காய் புடைவிரிந் தன்ன

வரிப்புற அணிலொடு கருப்பை யாடாது
யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்திலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி

ஈன்பிண வொழியப் போகி நோன்காழ்
இரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோல்
உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
இருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்ப லெயிற்றியர்

பார்வை யாத்த பறைதாள் விளவின்
நீழன் முன்றி லிலவுரற் பெய்து
குறுங்காழ் உலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி

வாரா தட்ட வாடூன் புழுங்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமகன்
ஓடாத் தானை யொண்டொழிற் கழற்கால்
செவ்வரை நாடன் சென்னியம் எனினே
தெய்வ மடையில் தேக்கிலைக் குவைஇநும்

பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
அகழ்சூழ் பயம்பின் அகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன

வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாள்
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையும்

நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணும்
அருஞ்சுரம் இறந்த வம்பர்ப் பருந்துபட
ஒன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவாய் எஃகம்

வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனகர்
ஊகம் வேய்ந்த உயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையும் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்கும் கணைக்காற் பந்தர்த்

தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயில்
கொடுவில் எயினக் குறும்பிற் சேப்பின்

களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைகால் யாத்தது வயின்றோறும் பெறுகுவீர்
யானை தாக்கினும் அரவுமேற் செலினும்

நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினும்
சூன்மகள் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
செல்நா யன்ன கருவிற் சுற்றமொடு

கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி
இல்லடு கள்ளின் தோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்

சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉ
பகன்மகிழ் தூங்குந் தூங்கா இருக்கை
முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்

கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்
அதளோன் துஞ்சுங் காப்பின் உதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி யெருப்படு வரைப்பின்

நள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகை அன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ

நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வரும் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
அளைவிலை உணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்

எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர்
தொடுதோல் மரீஇய வருவாழ் நோனடி

விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
உறிக்கா ழூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்
மேம்பா லுரைத்த வோரி யோங்குமிசைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைத்த படலைக் கண்ணி

ஒன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
அந்நு ணவிர்புகை கமழக் கைமுயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்

இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்

தெழுகாடோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்
குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்

பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரிணர் வேங்கை வீகண் டன்ன

அவரை வான்புழுக் கட்டிப்பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்

உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
அரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்

கறையணற் குறும்பூழ் கட்சிச் சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோல்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவன் அளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்

காரேறு பொருத கண்ணகன் செறுவின்
உழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்
முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்
களைஞர் தந்த கணைக்கா ணெய்தற்
கட்கமழ் புதுப்பூ முனையின் முட்சினை

முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக்
கொடுங்கால் மாமலர் கொய்து கொண் டவண
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவின் கண்ணி
ஈருடை இருந்தலை யாரச் சூடிப்

பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்
இரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்

புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவலெறி உலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனி
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன

பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
தூம்புடைத் திரடாள் துமித்த வினைஞர்
பாம்புறை மருதி னோங்குசினை நீழற்
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடும்

துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கின்
குழுமுநிலைப் போரின் முழுமுதல் தொலைச்சிப்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பும் நீக்கிப் பைதறக்

குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்
தண்பணை தழீஇய தளரா இருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்குல்

ஏணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்
தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்

தளர்நடை வருத்தம் வீட அலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்து
அமளித் துஞ்சும் அழகுடை நல்லில்
தொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா

வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவீர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்து
அணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்கு

எந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை
விசய மடூஉம் புகைசூழ் ஆலைதொறும்
கரும்பின் தீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த

குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்
இளையரு முதியருங் கிளையுடன் துவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்

செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழும்
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்கும்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பின்

அவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
எல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீர் அரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு நளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் தலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉம்
நீத்துடை நெடுங்கயந் திப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ அடைத லோம்பி
உறைகால் மாறிய ஓங்குயர் நனந்தலை
அகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமையத்துப் பிணையினிர் கழிமின்
செழுங்கன் றியாத்த சிறுநாட் பந்தர்ப்
பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாளர் உறைபதிச் சேப்பின்
பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட

சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தம்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி அளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த

தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது

கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவனர்
ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பையயத் தோன்றும்
நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்

வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின்

நெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்கும்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்குல் நுண்டுகி லுடங்க

மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பையய

முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய

வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பின்
ஈர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நென்மா வல்சி தீற்றிப் பன்னாள்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்

கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி

உரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்
குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்

தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பின்
தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழில் தாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுள்மருப் பேய்க்கும்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்

திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
தீம்பல் தார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயல்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்காய்

ஆறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி இளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவர் உடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉம்
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியர் பாகொடு பிடித்த
இழைசூழ் வட்டம் பால்கலந் தவைபோல்
நிழல்தாழ் வார்மண லீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழில்தொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகிழ் இருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவாய் அமைத்த சுரும்புசூழ் சுடர்நுதல்
நறவுப்பெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரல் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயின்
அருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநும்
கருங்கோட் டின்னியம் இயக்கினிர் கழிமின்
காழ்மோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளம்

கடுஞ்சூல் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்
திண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்

கொடையும் கோலும் வழங்குநர்த் தடுத்த
அடையா வாயில் மிளைசூழ் படப்பை
நீனிற உருவின் நெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த்
தாமரை பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்

சுடுமண் ணோங்கிய நெடுநகர் வரைப்பின்
இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய

மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்
அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்
அந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப

ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவின் ஐவர் போல
அடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத் தார்த்துக்

கச்சி யோனே கைவண் தோன்றல்
நச்சிச் சென்றோர்க் கேம மாகிய
அளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப

நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோரும்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோரும்
கல்வீழ் அருவி கட்டுப்டர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்னர்
இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை

வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகும் இரியல் மாக்கள்
ஒருமரப் பாணியில் தூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்

செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடிப் படுக்கும்
கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து
இறையுறை புறவின் செங்காற் சேவல்

இன்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டுநர்க் கருளி

இடைத்தெரிந் துணரும் இருடீர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்து
உரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்

புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா உரவுவாள் தடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக

மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர்க் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்

தண்டா ஈகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை


நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா உலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவி யன்ன அவிர்நூற் கலிங்கம்

இரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோன் அட்ட பல்லூன் கொழுங்குறை
அரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
தெரிகொ ளரிசித் திரளெடும் புழுக்கல்

அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் மரபுடை யடிசில்
மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்து
ஆனா விருப்பிற் றானின் றூட்டி

மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கும்
ஆடுவண் டிமிரா அழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
உரவுக்கடல் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னுநிமிர்ந் தாங்குப்

புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியும் அமையான் செருத்தொலைத்து
ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழித்த
விசும்புசெல் இவுளியோடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்குமவன் பரிசில் இன்சீர்க்
கின்னர முரலும் அணங்குடைச் சாரல்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்
மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே.





இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெறத்தக்க வகையில் நல்ல தமிழ் அறிஞராக, வரலாற்றுத் திறனாய்வாளராக செந்தமிழ்ப் பேச்சாளராக, இலக்கியப் படைப்பாளராக, பாதை மாறாத பகுத்தறிவுவாதியாக, அப்பழுக்கற்ற அரசியல் தலைவராக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராக என பல்திறன் படைத்த நற்றமிழ்ப் புலவராக விளங்கியவர்.

புலவர் கா. கோவிந்தனார் அவர்கள் "தமிழுக்கும், தமிழ்ப் புலவர்கட்கும், தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்றத் தன்னையே அர்ப்பணித்தவர்" என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்று, திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தாரின் 'புலவரேறு' பட்டம், தமிழக அரசின் 'திரு. வி. க. விருது' மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் "தமிழ்ப் பேரவைச் செம்மல்' போன்ற சிறப்புகளையும் பெற்ற புலவர் அவர்களின் தமிழ்ப்பணி பொன்விழா கண்ட பெருமையினையுடையது.

M.K. Color Process, Chennai-600 005 Phone: 8541478